தமிழ் நாடக வளர்ச்சி

விடுதலை இயக்கமும் திராவிட இயக்கமும்

இரா. குமரவேலன்

தமிழ் நாடக வளர்ச்சி

விடுதலை இயக்கமும்
திராவிட இயக்கமும்

✲

கலைமாமணி
முனைவர் இரா. குமரவேலன்

✲

தமிழரசி
நூல் வெளியீட்டாளர்
74, இளங்கோ நகர் இணைப்பு
விருகம்பாக்கம், சென்னை-600 092

தமிழ் நாடக வளர்ச்சி
விடுதலை இயக்கமும் திராவிட இயக்கமும்

முனைவர் இரா. குமரவேலன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.

முதற்பதிப்பு : 1992

உரிமை : திருமதி கு. தமிழரசி, எம்.ஏ., (பிஎச்.டி.)

பதிப்பகம் : தமிழரசி, நூல் வெளியீட்டாளர்,
74, இளங்கோ நகர் இணைப்பு,
விருகம்பாக்கம், சென்னை-600 092.

விலை : ரூ. 60

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் சிறந்த நூல்
வெளியீட்டிற்கான திட்டத்தின் கீழ்
நிதியுதவி பெற்று இந்நூல் வெளியிடப்படுகிறது.

Tamil Nataka Valarchi
Viduthalai Iyakkamum Dravida Iyakkamum

Author : **Dr. R. KUMARAVELAN,** M.A., M.Litt., Ph.D.
Prof. of Tamil, Pachaiyappa's College,
Madras-600 030.

Published by : **TAMILARASI,** Publishers,
74, Elango Nagar Annexe,
Virugambakkam, Madras-600 092.

First Edition : 1992 *Price* : **Rs. 60/-**

காணிக்கை

என்
அன்பிற்குரிய
அத்தை
திருமதி
லோகாம்பாள்
அவர்களுக்கு

தமிழக அரசின்
தமிழ் வளர்ச்சி – பண்பாட்டுத் துறைச் செயலர்
நாவேந்தர் முனைவர் ஔவை நடராசன் அவர்களின்

அணிந்துரை

பளிங்காடி

நாடகம் கலைகளின் கதம்பம்,

இசைக்கலை, இயற்கலை, ஒப்பனைக்கலை,
உரையாடற் கலை, ஓவியக்கலை முதலிய
பல கலைகளின் பண்பாட்டு மெருகு குறையாமல்
திகழும் ஒரு பல்கலைக்கழகம் நாடகம்.

முனைவர் திரு. இரா. குமரவேலன் அவர்கள்
இளம்பருவத்திலிருந்தே கொள்கைப்பிடிப்பும்,
ஆய்வு நினைப்பும் தம் இரு விழிகளாகக் கொண்டு
வாழ்பவர்.

அதட்டல், அதிகாரம், ஆரவாரம் ஆகிய மூன்றையும்
எந்நாளும் எள்ளளவும் விரும்பாதவர்.

நாடக ஆய்வில் தாம் தலைசிறந்தவராக
முதன்மை பெற்றதோடன்றித் தம்மோடு சார்ந்த பலரையு
நாடகத்துறை ஆய்வில் செலுத்தி, நாடகக்கலைக்கு
இலக்கிய உலகில் ஆய்வுத்தடம் கண்டறிந்து நிறுவிய
தலைமைப்புலவர் என்று ஆசிரியரைக் குறித்தால்
அது மிகையாகாது.

'நள்ளிரவுச் சத்தம்' என்று நையாண்டி செய்யப்பட்ட
நாடகத்துறைக்கு உணர்வும் உயிரூட்டிக்
கொள்கை பரப்பும்
வாயிலாக நாடக அரங்கை மாற்றிய பெருமை
அறிஞர் அண்ணாவையே சாரும்.

விடுதலைப் போராட்ட நாளில், விடுதலை உணர்வை
நாட்டு மக்கள் நெஞ்சத்தில் வித்திடுவதற்கும் வளர்ப்பதற்கு
நாடகக்கலை பெரிதும் துணைநின்றது.

'கலெக்டர் கடவுள் அல்ல ;
கைது செய்யும் கான்சுடேபிளும் தெய்வமல்ல'
என்று நாடக நடிகையர் மேடையிலிருந்து
நாடகப் பாடலாக அஞ்சாது முழங்கிய நிகழ்ச்சியை
முனைவர் குமரவேலன் கூட்டத்தில் குறிப்பிடுவதைக்
கேட்டிருக்கிறேன்.

அளப்பருந் திறமையைத் தம் ஆன்ற புலமைக்குள்
அடக்கி வைத்திருக்கும் முனைவர் குமரவேலன்
தம் மங்கலத் திருமண வாழ்வின் வெள்ளி நினைவை
உள்ளங்கவரும் நாடக ஆய்வு நூலாக வெளியிடும்
கருத்தை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன் !

'வதுவை நாளினும் இனியன்' என்ற வகையில்
இனி வளரும் ஆண்டு ஒவ்வொன்றிலும் இத்தகைய வெளியீடு
வரவேண்டுமென்று பெரிதும் விரும்புகிறேன் !

உரைவேந்தர் ஔவை அவர்கள் ஐம்பத்தைந்து
யாண்டுகளுக்கு முன்னர் 'மருணீக்கியார்' என்னும்
பெயரில் நாடகமெழுதி மன்றேறி நடிக்க விரும்பினார்
என்பது பலர் அறியாத செய்தியாகும். அன்னையார்
திருமதி ஔவை லோகாம்பாள் அவர்களுக்கு
இந்த நூலைக் கையுறையாக முனைவர் குமரவேலன்
வழங்குகின்றார்.

உரைவேந்தர் இன்றிருந்தால் இந்நூற்றிறம் கண்டு
மருகர் புலமையால் மனம் மகிழ்ந்திருப்பார்கள் !

இருபதாம் நூற்றாண்டின் நாடக வளர்ச்சியைக்
காட்டும் பளிங்காடியாகத் திகழும் இப்பனுவலைத்
தமிழுலகம் பெரிதும் வரவேற்கும் என்பது என் துணிபு !

அன்புள்ள

ஔவை நடராசன்

சில சொற்கள்

* தமிழ் நாடக ஆய்வில் கடந்த முப்பது ஆண்டுக் காலமாக ஈடுபட்டு வருகிறேன்.

நாடகம் தொடர்பாக இரண்டு நூல்களையும் அறுபதற்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறேன்.

இன்னும் நிறைய எழுத வேண்டும் என்று ஆர்வம் கொண்டிருந்த போது சென்னைப் பல்கலைக்கழகம் பம்மல் சம்பந்த முதலியார் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்த ஓர் அரிய வாய்ப்பினை அளித்தது.

"தமிழ் நாடக வளர்ச்சியில் இயக்கங்களின் பங்கு" என்னும் பொதுத்தலைப்பில்
23—3—90 அன்று விடுதலை இயக்கம் பற்றியும்
24—3—90 அன்று திராவிட இயக்கம் பற்றியும்
பேசினேன். அதன் விளைவே இந்த நூல்!

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும், தமிழ் இலக்கியத்துறைக்கும், முனைவர் பொன். கோதண்டராமன் (பொற்கோ) அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி!

பச்சையப்பன் கல்லூரி நூலகம், சென்னை ஆவணக் காப்பகம், மறைமலையடிகள் நூலகம், தந்தை பெரியார் நூலகம், அண்ணா அறிவாலயம் ஆகியன இந்த ஆய்விற்குப் பெரிதும் உதவின. அவற்றின் நூலகர்களுக்கும் பொறுப்பாளர் களுக்கும் நன்றி!

தமக்கே உரிய இனிய நடையில்
அணிந்துரை வழங்கியுள்ள
தமிழக அரசின்
தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறைச் செயலர்
முனைவர் ஔவை. நடராசன்
அவர்களுக்கு என் இதய நன்றி !

இந்த நூல் வெளிவருவதற்கு
முதற் காரணமாகவும் உந்தாற்றலாகவும்
விளங்கியவள் என் மனைவி
திருமதி தமிழரசி, எம்.ஏ.

இந்த நூலை வெளியிட முன்வந்த பதிப்பகம்
'தமிழரசி'. அதன் உரிமையாளர்
செல்வி. மல்லிகை.

இவர்கள் இருவர்க்கும் என் நன்றி !

செய்திகள் தொகுப்பதிலும்
மெய்ப்புகள் திருத்துவதிலும்
துணைநின்ற நண்பர்கள்
முனைவர் மு. தங்கராசு
முனைவர் இராம. குருநாதன்
ஆகியோரை
நன்றியோடு நினைவு கூர்கிறேன் !

சில நாடகங்களின் பெயர்களும்,
நாடகாசிரியர்கள் சிலரின் பெயர்களும்
விடுபட்டுள்ளன ;
அடுத்த பதிப்பில்
அவை சேர்க்கப் பெறும்.

சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய
அலமு அச்சகத்தினர்க்கு என் நன்றி உரித்தாகும் !

தமிழுலகம் இந்த ஆய்வு நூலை
விரும்பி வரவேற்கும் என்று நம்புகிறேன் !

அன்பன்,

இரா. குமரவேலன்

உள்ளுறை

1. விடுதலை இயக்கம்

முன்னுரை 1
விடுதலை இயக்கம் 3
விடுதலை இயக்கம் தோன்றுவதற்கு முன் ... 9
டம்பாச்சாரி விலாசம் 9
தாசில்தார் நாடகம் 17
பிரம்மசமாஜ நாடகம் 21
பிரதாபசந்திர விலாசம் 28
விடுதலை இயக்க நாடகங்கள் 41
தெருக்கூத்து 41
முதல் நாடகம் 47
பாடல்கள் 59
பாவலரின் 'கதர்' 65
மது 74
விடுதலை வீரம் 84
ஒரு சுதந்தரக் கனவு 90

2. திராவிட இயக்கம்

முன்னுரை 101
புத்தொளி 112
விடிவெள்ளி 121
உதயசூரியன் 138
ஒளிக்கதிர்கள் 148
1. ப. கண்ணன் 148
2. ஏ. கே. வேலன் 156
3. சி. பி. சிற்றரசு 165
4. தில்லை வில்லாளன் 171
5. எஸ். எஸ். தென்னரசு 178
6. கே. ஜி. இராதாமணாளன் ... 181
ஒளித்திரள் 185
முடிவுரை 191

தமிழ் நாடக வளர்ச்சி

விடுதலை இயக்கமும் திராவிட இயக்கமும்

விடுதலை இயக்கம்

முன்னுரை

நாடகம் ஓர் அரிய கலை. கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் கவின்கலை. கற்பனைச் சிறப்பாலும் காட்சித் திறனாலும் காண்பார் உள்ளங்களில் உணர்ச்சி பெருகச் செய்யும் உயர்கலை. நுழைபுல மிக்கார்க்கு நுவலுந்தொறும் மகிழ்ச்சி தரும் நுண்கலை. கல்லாத பாமரர்க்கும் கருத்தூட்டும் காட்சிக்கலை. வாழ்க்கை நெறியையும் வரலாற்றுப் பெருமையையும் பறைசாற்றும் வளர்கலை.

ஏறத்தாழ இருபத்தைந்து நூற்றாண்டுகளாகத் தமிழ கத்தில் மாந்தர்க்கு வழிகாட்டிவரும் இக்கலையின் வளர்ச்சி ஏற்றமும் இறக்கமும் கண்டு வந்திருக்கிறது. இதனை நுணுகி யாராய்ந்து உண்மைகளை அறிஞருலகம் எடுத்துச் சொல்லவேண்டும், நாடகக் கலை ஆக்கமும் ஊக்கமும் பெற வேண்டும் என்னும் பெருநோக்குடன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அறக் கட்டளையினை நிறுவியிருக்கிறார்கள். நிறுவிய பெருமக்களுக்கும், சென்னைப் பல்கலைக்கழகத்துக் கும், 1990-ஆம் ஆண்டு ஆய்வுச் சொற்பொழிவு நிகழ்த்தும் வாய்ப்பினை எனக்களித்த தமிழ் இலக்கியத் துறைத் தலை வர்க்கும், துணை வேந்தருக்கும், ஆட்சிக் குழுவினர்க்கும், ஏனையோர்க்கும் என் இதயங் கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் இத்தகைய ஆய்வு களுக்கெல்லாம் முன்னோடியாக இருந்த பெருந்தகையாவார். அவர் 'நாடகத் தமிழ்' என்னும் அரிய நூலையும், 'நாடக மேடை நினைவுகள்' என்னும் நாடக அனுபவத் தொடர் கட்டுரை நூலையும், 'யான் கண்ட நாடகக் கலைஞர்கள்' என்னும் நூலையும் வழங்கியிருக்கிறார்கள். ஏறத்தாழ நூறு நாடகங்கள் படைத்து நாடக ஆய்வுப் பணிக்கும் வழிகாட்டிய அப்பெருமகனாரை நெஞ்சில் நினைத்துப் போற்றுவோமாக !

தமிழ் நாடகம் காலந்தோறும் பல தடைக்கற்களைத் தகர்த்தெறிந்து படிப்படியே வளர்ந்து வருகிறது. நாடகம் சந்தித்த எதிர்ப்புகள் எண்ணிலடங்கா ! ஆயினும், அவற் றையெல்லாம் மீறி வளர்கின்ற ஆற்றல் அதற்கு இருக்கிறது. தொய்ந்து கிடக்கின்ற காலங்களில் நாடகம் வீழ்ந்துவிட்ட தாகக் கருதுவதற்கில்லை, மீண்டும் எழுச்சி பெற்று வீறு நடை போடுதற்கு அது பதுங்கியிருக்கிறது என்றுகொள்ளலே பொருந்தும்.

'நாடகம் வீழ்ந்துபட்டதோ?' என்று கருதிய நேரத்தில் சமுதாய மறுமலர்ச்சி நாடகங்கள் தோன்றின. 'நாடகம் விடுதலைக்கு என்ன செய்யக் கூடும் ?' என்று கருதிய நேரத்தில் நாடக மேடைகள் புரட்சிக் களங்களாக மாறின. 'நாடகத்திற்கு என்ன ஆற்றல் இருக்கிறது ?' என்று எண் ணிய நேரத்தில் அது மாபெரும் ஆற்றல் மிக்க கருவி என் பதை மெய்ப்பித்துக் காட்டியது.

இந்திய தேசிய விடுதலை இயக்கமும், தென்னகத் தேசியத் திராவிட இயக்கமும் நாடகத்தைப் பயன்படுத்திக் கொண்ட பாங்கு இந்த நிலையில் எண்ணி ஆராயத்தக்கதாகும்.

விடுதலை இயக்கம் : பின்னணி

தேசிய இயக்கமான 'இந்தியத் தேசிய காங்கிரசு' 1885இல் ஏ. ஓ. இயூம் என்னும் ஆங்கிலேயரால் தொடங்கப் பெற்ற காலந் தொடங்கி 'விடுதலை இயக்கக்' காலமாகக் கொள்ளலாம்.

தேசிய இயக்கப் பணிகளில் நாடகம் ஆற்றிய பங்கினை ஆய்வதற்கு முன்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகமும் கலையுணர்வும் அரசியல்-சமுதாயப் போக்கும் இருந்த நிலைகளைக் குறித்துச் சிறிது எண்ணிப் பார்க்க வேண்டியது நம் கடமை !

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆங்கிலேயர் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வந்த காலம், வணிகக் குழுவாக இருந்த ஆங்கிலேயர் நிருவாகம், விக்டோரியா மகாராணியாரின் ஆட்சியின் கீழ் வந்துவிட்ட காலம், கவர்னர் செனரல்களும், கவர்னர்களும், ஆங்கிலேய அதிகாரிகளும் அடக்குமுறைக் கொடுமைகளைக் கட்டவிழ்த்துவிடத் தயங்காத காலம், ஆங்காங்கே சமஸ்தானங்கள் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்டித் தன்னுரிமையோடு வாழ்ந்து வந்த காலம், அங்கும் இங்குமாகப் புரட்சிக் குரல்கள் கேட்கத் தொடங்கிய காலம், அதே நேரத்தில், மக்கள் நலப் பணிகளை, ஆங்கிலேய நிருவாகம் தனக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனும் நாடு முழுவதும் நிறைவேற்றிக் கொண்டிருந்த காலம் !

பத்தொன்பதாம் நூற்றாண்டு, தொட்க்கப் பத்தாண்டிலேயே வேலூர்ப் புரட்சியைச் சந்தித்தது (1806). பின்னர், 1857இல் சிப்பாய்க் கலகத்தின் மூலமும் ஆங்கில எதிர்ப்பை முழங்கியது !

ஐம்பத்தாறு தேச மன்னர்களும் குழப்பமில்லாத ஆட்சியைத் தரமுடியாத காலத்தில், எங்கிருந்தோ வந்த அந்நியர் தம் முரட்டு அதிகாரத்தால் மக்களுக்குப் பயன்படத் தக்க நல்ல பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இதனால், கற்றவர்களும் மற்றவர்களும் அடிமை நிலைபற்றிக் கருதாமல் ஆங்கில அரசுக்கு ஆலவட்டம் சுழற்றினர் !

சென்ற நூற்றாண்டின் இடைப் பகுதியில் சென்னையில் பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, கிறித்துவக் கல்லூரி முதலியன தொடங்கப் பெற்றன. பெண் கல்வி வளர்ச்சிக்காகத் தனியே பள்ளிகள் அமைந்தன. 1854இல் புதியதொரு கல்வித் திட்டம் உருவாயிற்று. 1857இல் சென்னையில் பல்கலைக் கழகம் அமைக்கப் பெற்றது.

1856இல் தமிழகத்தில் இரயில்பாதை போடப் பட்டது, 1861இல் உயர் நீதிமன்றம் அமைந்தது, 1876க்கு மேல் சென்னைத் துறைமுகம் கட்டப்பட்டது, 1871இல் முதன் முதலாக மக்கட் கணக்கெடுப்பும் நடைபெற்றது.

இவ்வாறு பல துறைகளில் ஆக்கப் பணிகள் நிகழ்ந்தன. நூற்றுக் கணக்கானவர்கள் பட்டங்கள் பெற்றனர், அரசு பணிகளில் செயலாற்றினர்.

சமய ஆன்மீகத் துறைகளில் இந்த நூற்றாண்டின் நிலை மிகவும் உயர்ந்து விளங்கியது. இராமகிருட்டின பரமஹம்சரும், விவேகானந்த அடிகளாரும் வடக்கே சமய ஒளி காட்டிய அதே காலத்தில் தயானந்த சரசுவதி, இராசாராம் மோகன்ராய் முதலானவர்கள் சமயச் சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். தெற்கே பல இடங்களில் மடங்கள் ஆக்கப் பணிகளைச் செய்து வந்தன. வடலூர் இராமலிங்க அடிகளார் சமரச சுத்த சன்மார்க்க நெறியினைப் பரப்பினார்.

ஆங்கிலேயர் 'வாரிசுரிமைச் சட்டம்' ஒன்று கொண்டு வந்து பலருடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்தனர். குறிப்பாக, 1855இல் சரபோஜி மன்னர் தஞ்சையில் வாரி சின்றி இறந்தபோது அவர் சொத்துக்கள் ஆங்கில அரசால் பறிமுதல் செய்யப்பட்டன.

தஞ்சையில் மராத்திய ஆட்சியும், மதுரையில் நாயக்கர் ஆட்சியும், பாளையக்காரரர்களின் ஆதிக்கமும், இராமநாத புரத்தில் சேதுபதிகளின் தன்னாட்சியும் படிப்படியே வலிமை இழந்தன.

1801இல் கருநாடகத்தோடு தமிழகமும் ஆங்கிலேயரின் முழு ஆளுகைக்கு உட்பட்ட மாநிலங்கள் ஆயின.

கன்னிமாரா நூலகம், அருங்காட்சியகம் முதலியன இந்தக் கால கட்டத்தில் உருவாயின.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பூலித் தேவனும் (1764), வீரபாண்டியக் கட்டபொம்மனும் (17–10–1799) ஆங்கிலேயர்க்குப் பணியாமல், வரியும் திறையும் கட்டா மல், வீரத்தோடு எதிர்த்துப் போரிட்டுத் தம்முயிர் இழந் தனர். இதன் விளைவாக, 1801ஆம் ஆண்டில் – பத் தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டில் பாளை யக்காரர்களும் குறுநிலத் தலைவர்களும் ஒன்றுசேர்ந்து கலகம் விளைத்தனர். ஆங்கிலேயருக்கு எதிரான இந்தக் கலகத்தைத் 'தென்னிந்தியக் கலகம்' (South Indian Rabellion) என்று வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுவர். 2–2–1801இல் சிறையைத் தகர்த்துத் தமிழ் வீரர்கள் ஊமைத்துரையை விடுவித்தனர். மருது பாண்டியர்கள் அவ ருக்குத் துணைநின்றனர். அதே ஆண்டு மார்ச் 31இல் பாஞ்சாலங்குறிச்சியில் காலின் மெக்காலேயைத் தலைமை யாகக் கொண்ட ஆங்கிலப் படையைத் தமிழ் வீரர்கள் முறியடித்தனர். ஆனால், அடுத்த ஏப்ரல்-மேத் திங்களில்

நடந்த போரில் — இரண்டாவது முறையாக ஆறே நாளில் கட்டப்பட்ட — பாஞ்சாலங்குறிச்சி முற்றுகையிடப்பட்டுத் தாக்குதலுக்கு ஆளானது. ஊமைத்துரை தப்பி மருது பாண்டியரிடம் அடைக்கலம் பெற்றார். 1801 சூனில் மருதுபாண்டியர் விடுதலை அறிக்கையொன்றை வெளியிட்டார் ; இந்த அறிக்கையினால் ஆங்கில அரசுக்கும் ஆதிக்கத்திற்கும் எதிர்ப்பாக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். அக்டோபரில் காளையார்கோவில் வீழ்ந்தது, ஊமைத்துரை பிடிபட்டார், அவர் நவம்பர் பதினாறில் தூக்கிலிடப்பட்டு வீரமரணம் அடைந்தார். மருது சகோதரர்களுக்கும் அதே நிலை ஏற்பட்டது. இந்த முதல் தென்னிந்தியக் கலகம் இந்திய விடுதலைப் போரின் ஒன்றுபட்ட முதன் முயற்சி என்று பெயர் பெறத் தக்கது. பல காரணங்களால் இது வெற்றி பெற இயலாமற் போயிற்று.

1806இல் படை வீரர்களிடையே கொண்டுவந்த ஆடைச் சீர்திருத்தம் காரணமாக ஒரு கலகம் வேலூரில் நடை பெற்றது.

1857 பிப்ரவரி 26இல் 'சென்னை சுதேசி சங்கம்' என்னும் அமைப்பு உருவாயிற்று. ஜி. சுப்பிரமணிய அய்யர், சேலம் விசயராகவாச்சாரியார், இலட்சுமிநரசு செட்டி ஆகியோர் இதனைத் தொடங்கி மக்களின் குறைகளை அரசுக்கு அறிவித்துத் தேவையான நன்மைகளைச் செய்ய முற்பட்டனர். இது 1884இல் சென்னை மகாசனசபையுடன் இணைந்தது.

1885இல் காங்கிரசு தொடங்கப் பெற்றது. காங்கிரசின் முதல் மாநாட்டில் முதல் தீர்மானத்தை முன்மொழிந்தவர் ஜி. சுப்பிரமணிய அய்யர் ஆவர்.

1887இல் சென்னையில் அகில இந்தியக் காங்கிரசு மாநாடு பக்ருதீன் தயாப்ஜி தலைமையில் கூடியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்திலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் அறிஞர் பெருமக்களும், சீர்திருத்தச் செம்மல்களும் தோன்றி நாட்டுப் பணியும், சமுதாயப் பணியும் மொழிப் பணியும் ஆற்றியிருக்கின்றனர்.

தியாகையர் (1767–1847), கோபாலகிருட்டின பாரதியார் (1785–1875), இராமலிங்க அடிகளார் (1823–1874) வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839–1898), அண்ணாமலை ரெட்டியார் (1861–1890), பாம்பன் குமர குருதாச அடிகள் (1853–1929) முதலானோர் இறைப் பணியையும் இசைப் பணியையும் ஒருங்கே மேற்கொண்டனர்.

ஆந்திரத்தில் வீரேசலிங்கம் பந்துலுவும் (1848–1919), வங்கத்தில் இரவீந்திரநாத தாகூரும் (1861–1941), குசராத்தில் அண்ணல் காந்தியடிகளும் (1869–1948), மராட்டியத்தில் கோகலேயும் (1866–1915) தோன்றிச் சமுதாய, அரசியல், இலக்கியப் பணிகளைச் செய்தனர்.

திருமணம் செல்வகேசவராயர் (1864–1921), திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, (1815–1876) மாயூரம் வேதநாயகம் பிள்ளை (1826–1889), கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை (1876–1954), மறைமலை அடிகளார் (1876–1960), நாமக்கல் கவிஞர், தேசியகவி சி. சுப்பிரமணிய பாரதியார் (1882–1921), திரு. வி. கலியாணசுந்தரனார் (1883–1953), மோசூர் கந்தசாமி முதலியார் (1887–1945), மணி திருநாவுக்கரசு முதலியார் (1888–1931), புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் (1891–1964), கவியோகி சுத்தானந்த பாரதியார் (1897–1990), உ. வே. சாமிநாதையர் (1855–1942), வ. உ. சிதம்பரனார் (1872–1936), மு. இராகவையங்கார் (1878–1960), நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் (1878–1959), பண்டிதமணி

கதிரேசன் செட்டியார் (1881—1953), ந. மு. வேங்கடசாமி நாட்டார் (1884—1944), கா. சு. பிள்ளை (1888—1945), எஸ். வையாபுரி பிள்ளை (1888—1956), ரா. பி. சேதுப் பிள்ளை (1896—1961) ஆகியோருடன் நல்லூர் ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை, விபுலானந்த அடிகளார் முதலான இலங்கை அறிஞர்களும் உட்பட எண்ணற்ற தமிழறிஞர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி அருந்தமிழ்ப் பணியினை ஆற்றியவர்கள் ஆவர்.

கோபாலகிருட்டின பாரதியார், காசி விசுவநாத முதலியார், ப. வ. இராமசாமி ராசு, பெங்களூர் டி. அப்பாவு பிள்ளை, பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை (1855—1897), தவத்திரு சங்கரதாசு சுவாமிகள் (1867—1922), பரிதிமாற் கலைஞர் (1870—1903), பம்மல் சம்பந்த முதலியார் (1873—1964), தெ. கிருட்டினசாமிப் பாவலர் (1890—1934) முதலான பலர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாடகத் துறையில் பல சாதனைகளைப் புரிந்தவர்கள் ஆவர்.

மூதறிஞர் இராஜாஜி (1878—1972), தந்தை பெரியார் (1879—1973), வ. உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவம், வ. வே. சு. அய்யர், தீரர் சத்தியமூர்த்தி, ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலான பலர் அரசியலில் தீவிரமாகப் பணியாற்றிய பெருமக்கள் ஆவர்.

தமிழகத்தில் இந்து, மெயில், சுதேசமித்திரன் முதலான நாளிதழ்கள் தோன்றியதும் இக்காலத்திலேயே என்பது நினைவு கொள்ளத் தக்கது.

ஆக, பத்தொன்பதாம் நூற்றாண்டு உலக அளவிலும், இந்திய அளவிலும், தமிழக அளவிலும் சான்றோர்கள் பலரை ஈன்ற கால கட்டமாக விளங்கியது எனலாம்.

விடுதலை இயக்கம் தோன்றுவதற்கு முன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் புராண, இதிகாச நாடகங்களையே பெரும் பகுதி காண்கிறோம். இராமாயண பாரதங்களிலிருந்தும், ஸ்காந்தம் முதலான புராணங்களிலிருந்தும், நாட்டுப்புறக் கதைகளிலிருந்தும் பல பகுதிகள் நாடகங்களாக இயற்றப்பட்டன. நூற்றுக் கணக்கில் தோன்றிய இந்த நாடகங்கள் மேடைகளிலும், தெருக்கூத்து அடிப்படையிலும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நடிக்கப்பட்டன. இவை தனியே ஆராய்தற்குரியன.

தென்னாட்டைப் பொறுத்தவரை சைதாபுரம் காசிவிசுவநாத முதலியாரே முதன் முதல் சமுதாயச் சீர்திருத்த நாடகத்தைப் படைத்தவர் எனலாம். இதுவரை பக்தி ஒன்றையே மூலக் கருவாகக் கொண்ட நாடகங்கள் நடிக்கப்பட்டு வந்தன ; அந்த நிலையை மாற்றி மக்கள் உணர்வினை — சமுதாய உணர்வினை — ஒழுக்க உணர்வினைக் கொண்டதாக அமைந்த நாடகங்களைப் படைத்த முதல் நாடகாசிரியர் இவரே யாவார்.

காசி விசுவநாத முதலியார் டம்பாச்சாரி விலாசம், தாசில்தார் நாடகம், பிரம்மசமாஜ நாடகம் ஆகிய மூன்றனை இயற்றியுள்ளார்.

டம்பாச்சாரி விலாசம்

டம்பாச்சாரி விலாசம் 1867இல் வெளி வந்தது. அஃது அச்சில் வருவதற்கு ஏறத்தாழப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே மேடையில் நடிக்கப்பட்டது. எனவே அதன் காலம் 1857 எனலாம். தாசில்தார் நாடகம் 1857 நவம்பர் 7ஆம் நாள் எழுதப் பெற்ற முன்னுரையைக் கொண்டதாக விளங்குகிறது. எனவே, இதன் முதற்பதிப்பு 1857இலேயே வெளி வந்தது எனலாம். பிரம்மசமாஜ நாடகம் 1871இல் வெளியானது.

பன்மொழி வல்லவரான காசி விசுவநாத முதலியார் (Causi Viswanatha Moodaliar) சென்னை சைதாபுரத்து (இப்போதைய சைதாப்பேட்டை) வாழ்ந்த தியாகராச முதலியாரின் மகனாவார். இவர் பிறந்த ஆண்டு 1806. ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் வாழ்ந்தவர் இவர் முதலில் மொழிப்பெயர்ப்பாளராக இருந்து, பின்னர் 'டிஸ்ட்ரிக்ட் முன்சீப்' ஆக உயர்ந்தவர். தாசில்தார் நாடக முகவுரையில்,

> "யான் 1832ஆம் ஆண்டு முதல் சித்தூர் ஜில்லா கோர்ட்டு, புரொவின்ஷயல் கோர்ட்டு, கடப்பை ஜில்லா கோர்ட்டு, சதர்க் கோர்ட்டு — இதுகளில் திரான்ஸ்லேட்டர் உத்தியோகத்திலிருந்து கடைசியில் பல்லாரி ஜில்லா கோர்ட்டுக்கு 1853இம் வருஷத்தில் சரகத்து முன்சீபாக நியமகமாகி, அவ்விடத்திலிருந்து இந்தக் கோயம்பத்தூர் ஜில்லா சேவூர் சரகத்து முன்சீபாக மாற்றப்பட்டு இவ்விடத்தில் இரண்டரை வருஷமாய் அலுவல் பார்த்துக்கொண்டு இருக்கிறேன்"

என்று எழுதியிருக்கிறார். எனவே, இவர் தொடக்கத்தில் பல ஆண்டுகள் நீதிமன்றங்களில் மொழி பெயர்ப்பாளராக இருந்து, 47ஆம் வயதில் முனிசீபாக உயர்ந்திருக்கிறார் எனலாம். இவர் 1866இல் உடுமலைப் பேட்டையில் (நாடக நூலில் உடுமலைக்கோட்டை என்றிருக்கிறது) முன்சீப்பாக இருந்து ஓய்வு பெற்றார்.

இவர் இந்த மூன்று நாடகங்களையே அன்றிக் 'கூலிக்கு மாரடிக்கும் கூத்தாடிச்சி நடிப்பு' என்னும் நூல் எழுதியதாகவும் கூறுவர். ஆனால், இது பிரம்மசமாஜ நாடகத்தின் ஓர் உட்பகுதியாக அமைந்திருக்கிறது. வேதப்பொருள் விளக்கம், புநர்விவாக தீபிகை ஆகியவற்றையும் இவர் இயற்றியிருக்கிறார் என்பதும் அந்த நாடகக் குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது.

இவருக்குச் சோமசுந்தர முதலியார் என்னும் மகன் இருந்தனர். இவரே தமது சொந்த அச்சகமான 'ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ்'ஸில் தம் தந்தையாரின் தாசில்தார் நாடகத்தை இரண்டாவது பதிப்பாக 1868இல் (அவர் ஓய்வு பெற்ற பின்) வெளியிட்டார்.

தமிழ் நாடக வரலாற்றில் இந்த நாடகத்திற்குக் கிடைத்துள்ள அளவிற்குச் 'சாத்துக்கவிகள்' வேறொன்றற்குக் கிடைத்திருக்கிறது என்று சொல்ல முடியாது. அக்காலத்தில் வாழ்ந்த தமிழறிஞர்களுள் பலர் இந்த நாடகத்தைப் பலபடப் புகழ்ந்துள்ளனர்.

தொல்காப்பியம் வரது முதலியார், ஐந்தாம் வேதமாகிய ஸ்ரீமகாபாரதத்தைக் கீர்த்தனையாகப் பாடிய வேலூர் சுப்பராய முதலியார், புதுவை பொன்னுசாமி முதலியார், சென்னை மாநகரம் சதுர்வேத சித்தாந்த சபாப் பிரசங்கசாலைக்குத் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தும் தரங்காபுரம் அஷ்டாவதானம் கதிர்வேல் கவிராஜ பண்டிதர், யூனிவேர்சிட்டியென்னும் சென்னைச் சகலசாஸ்திர சாலைத் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தும் இயற்றமிழாசிரியராகிய திருத்தணிகை விசாகப் பெருமாளையர், காஞ்சிபுரம் சபாபதி முதலியார், இயற்றமிழாசிரியர் அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார், சேமங்கலம் நாராயண முதலியார், புரசப்பாக்கம் பொன்னம்பல முதலியார், சேலை பொன்னம்பலக் கவிராயர், திருநீர்மலை கோபாலகிருஷ்ணபிள்ளை, சென்னைக் கவர்ன்மெண்ட் நார்மல் ஸ்கூல் தமிழ்த் தலைமைப் புலவர் கோமளபுரம் இராசகோபால் பிள்ளை, காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியாரது சென்னைப் பலகலைச்சாலையில் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தும் ஆ. வித்துவான் சுப்பராயப் பிள்ளை, மேற்படி முதலியார் பல்கலைச் சாலையிற் தமிழ்ப் புலமை நடாத்தும் கூவம் ராஜா திரிபுராந்தக முதலியார், ஸ்ரீமத் ராமாயண பாரதப் பிரசங்கியாகிய

தரங்காபுரம் சண்முகக் கவிராயர், பச்சையப்ப முதலியார் பலகலைச் சாலையில் தமிழ்ப் புலமை நடாத்தும் கூவம் ராஜா சுப்பராய முதலியார், கிரந்தகர்த்தாவிற்குச் சிறிய தந்தையும் அசெஸ்மெண்டாபீசு மாநேசராகவிருந்த ஐயா சாமி முதலியாருக்குக் குமாரரும் சென்னைச் சதுர்வேத சித்தாந்த சபைத் தலைவராகிய உமாபதி முதலியாருக்குச் சகோதரரும் ஆகிய சிற்றம்பல முதலியார், காஞ்சிபுரம் செல்வப் பெருமாள் கவிராஜ பண்டித திலகர், புதுப்பாகை சிதம்பரப் பிள்ளை, சதர்க்கோர்ட்டு திரான்சுலேட்டர்களி லொருவராகிய காவாந்தண்டலம் சுப்பராம முதலியார், இராயப்பேட்டை தி. சீனிவாச பிள்ளை, புதுவை முத்தமிழ்ப் புலமை விநாயக தேசிகர் குமாரர் அருணாசல தேசிகர், புதுவை முத்து வினைதீர்த்த முதலியார், இயற்றமிழாசிரியர் அ. வீராசாமி செட்டியார், புரசப்பாக்கம் பொன்னம்பல முதலியார், பாரிப்பாக்கம் முனியப்ப முதலியார், மஹா வித்துவத் ஜனசேகரர் திரிசிரபுரம் கோவிந்த பிள்ளை, ஸ்ரீபாத் மோத்தரபுராணம் பாடிய விலக்ஷணகவியாகிய புதுவை இராமானுஜ நாவலர், நூலாசிரியர் குமாரரும் சென்னை ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ் புரொப்ரயிட்டருமாகிய சைதா புரம் சோமசுந்தர முதலியார் ஆகியோர் இந்த நாடக நூலுக்குச் 'சாத்து கவிகள்' வழங்கியுள்ளனர். (இச் சாத்துக் கவிகளின் ஆய்வே பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் முத்தமிழ் இருந்த நிலையைத் தெளிவுபடுத் தும்). இந்தப் பட்டியல், 'டம்பாச்சாரி விலாச' நாடகத்தின் பெருமையை நன்குணர்த்தும்.

சென்னை சிந்தாத்தரிப்பேட்டையில் வாழ்ந்து வந்த ஒரு பணக்காரரின் மகன் தாசி வலையில் விழுந்து சிக்கிச் சீரழிந்துபோன வரலாற்றையே ஆசிரியர் ஒரு நாடகமாகத் தீட்டிப் பிறருக்கு அறிவுரை வழங்குகிறார்,

செல்வனாகப் பிறந்தவன் டம்பாச்சாரி. எல்லா நற்குணங்களும் வாய்ந்த குணபூஷணி அவன் மனைவி. அவனுக்குக் குழந்தைகளும் உள்ளனர். நல்ல நண்பர்கள் பலர் இருந்தும்கூட, தீயவர்களின் நட்பினால் ஒழுக்கக்கேடானாகிறான். சூதாடுதல், மதுவருந்துதல், வேசியை நாடி அலைதல், ஆடம்பரமாகத் திரிதல் என்று தன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்கிறான். அவனைக் கும்பகோணத்து ஐயர் ஒருவர் மதனசுந்தரி என்னும் தாசியிடம் அழைத்து வருகிறார். அவளுடைய தாய் அவனுக்கு வசியமருந்து கொடுக்க, அங்கேயே மயங்கித் தன்பொருளை எல்லாம் இழக்கின்றான் டம்பாச்சாரி. அவளுக்கு நகை முதலியவற்றை அளவின்றி வாங்கித் தருகிறான். அவள் வீடொன்று கேட்கக் கடன்வாங்கிப் பெரிய மாளிகை கட்டித் தருகிறான்.

செல்வம் முழுவதும் தீர்ந்து பிறகு, கடன் கொடுத்தார் வந்து தொல்லை தந்தனர். கோர்ட்டிலிருந்து 'வாரண்டு' உத்தரவு வந்தவுடன் அவனது நிலைமையறிந்த மதனசுந்தரி அவனை வீட்டை விட்டே வெளியேற்றுகிறாள். நண்பர்கள் அனைவரும் கைவிடுகின்றனர். 'இன்சால்வென்ட்' கொடுத்து வெளிவந்த அவன் மீண்டும் அவளை நாடி வருகிறான். அவளும் தாய்க் கிழவியும் ஆட்களை வைத்து அவனை அடித்துத் துரத்துகின்றனர். ஊர்ப் பெரியவர்கள் இவனுக்கெதிராகத் தீர்ப்புச் சொல்லினர். இந்தக் கட்டத்திலேயே அவனுக்குப் புத்தி வந்தது. மனைவி மக்களோடு சேர்கிறான். திருவொற்றியூரில் தியாகேசர் அப்பர் சுவாமிகள் என்னும் துறவியாக வந்து அவனுக்கு 'உபதேசம்' செய்கிறார். எல்லாம் இழந்த அவனுக்கு அவர் தந்தையார் செல்வங்களைப் புதையலாக விட்டுச் சென்ற இடத்தைத் தெரிவிக்கிறார். மீண்டும் அவன் பழையபடி செல்வனாகிறான். மதன சுந்தரி இதனையறிந்து அவனைப் பழைய உறவு கொண்டாடி அழைக்

கிறாள். அடிகளால் அறிவு தெருட்டப்பட்ட அவன் அவளை விரட்டுகிறான். மனைவி மக்களோடு இன்ப வாழ்வு நடத்துகிறான்.

நானூறு பக்கங்களில் அமைந்துள்ள இந்தப் பெரிய நாடகத்தில் ஆடவரும் மகளிருமாக நிறையக் கதைமாந்தர்கள் வருகின்றனர். கட்டியக்காரன் வருகையோடு நாடகம் தொடங்குகிறது.

''பாரில் விலைமாதரைப் பரிபாலனம் செய்
பராக்கிரமம் மிகுந்த தீரன்
பார விரயங்களோடு பணிகளும் அணிகளும்
பரத்தையர்க்கு ஈயும் வீரன்.''

என்னும் தொடக்கமே கதையின் கருவினைத் தெளிவாகக் காட்டுகிறது. குடிகேடன், ஆயிரம்புளுகன், ஜகஜ்ஜாலப் புரட்டன், தலைப்பாகை மாற்றி, இன்ஸால்வென்ட் மாஸ்டர் முதலானவர்கள் இவனுக்கு வாய்த்த நண்பர்கள். இவனை நாடிவரும் பலருள் ஒருவர் கதிர்வேல் கவிராயர். பொருளுக்காக யாரை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பாடுவார் :

''தங்கள் பேர் டம்பர். இங்கு வந்திருக்கிறவர்களெல்லாம் சுத்த வம்பர்: நாமோ கவியில் கம்பர்: லக்ஷ்மநரசு செட்டியார் கவுன்சில் மெம்பர் ; தெய்வலோகத்திருப்பவர் உம்பர் ; கோட்டையில் அடிக்கிறது தம்பர் ; கடையில் விற்கிறது அம்பர் ; கதவில் போடுவது நம்பர் ; கெடைமேல் ஏறி ஆடுபவர் தொம்பர் ''

என்று தம் தமிழ்ப் 'புலமை'யை வெளிப்படுத்துகிறார் கவிராயர். பொன்னும் பொருளும் பரிசாகப் பெற்றுச் செல்கிறார். தாசி, தாய்க் கிழவி, கும்பகோணத்து ஐயர் ஆகியோர் சூழ்ச்சி நடக்கிறது. அவன் கெட்டழிகிறான். தாசியோடு திருவொற்றியூர் செல்வதற்குப் பணம் தேவைப்பட்டது. புல்லையச் செட்டியாரிடமிருந்து பணத்தையும்,

ஷேக் மீரான் லெப்பையிடமிருந்து நகைகளையும் பட்டுச் சேலை முதலியவற்றையும் கடனாக வாங்கிறான். அனைத்தையும் அவளுக்குத் தரும் அவனை நாடிப் பண்டாரங்கள் வந்து பாடுகின்றனர். அவனது பண்பினை அறிந்த அவர்கள் 'கிரத்தையார் மாலை', 'மோகானந்தக் களிப்பு', 'சுகானந்த எக்காலக் கண்ணி' ஆகியவற்றைப் பாடி மகிழ்விக்கிறார்கள், பரிசு பெற்றுச் செல்கிறார்கள். பொருளை இழந்த அவனைத் தாய்க்கிழவி சினத்தோடு,

''தந்ததற்கும் வந்ததற்கும் சரியாய்ப் போச்சுதடா
தலைவாசல் மிதியாமல் தப்பித்துக் கொள்ளடா
சொந்தம் பாராட்டி நின்றால் சும்மா இருக்கேன்டா
துடைப்பைக்கட்டை முறியும் சொன்னேன்
நீபோடா''

என்று கூறி விரட்டுகிறாள். பின்னர் டம்பன் திருந்தும் கட்டங்கள் செம்மையாக அமைகின்றன.

ஆசிரியர் பாத்திரங்களுக்கு ஏற்றபடி மொழிநடை அமைக்கிறார் ; பாட்டுக்கள் மிகவும் சரளமாகத் தங்குதடையின்றி வருகின்றன. தமிழ், தெலுங்கு, வடமொழி, ஆங்கிலம், இந்தி அனைத்துச் சொற்களும் இடையிடையே கலந்துவருகின்றன. உரையாடலில் தெளிவு இருக்கிறது.

'' இந்தக் காலத்திலே ஆனந்தரங்கம் பிள்ளையையும், காளிங்கராய முதலியாரையும், தஞ்சாவூர் ரெங்கைய நாயகரையும், காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியாரையும், கோமளீஸ்வரர் கோயில் சீனிவாசம் பிள்ளையையும் தியாகம் செய்வதில் சிறந்தவர்களாகச் சொல்வார்கள். ஆனாலும் டம்பாச்சாரிக்கு வருமா ? ''

என்று கதைமாந்தர் வாயிலாக அக்காலப் பெருமக்களின் கொடைப் பண்பை எவ்வளவு நயமாகப் பாராட்டுகிறார் ஆசிரியர்.

நாடகத்தின் பல இடங்களில் நகைச் சுவை மிளிர்கிறது. பழமொழிகளைப் பரமலோபன் முதலான மாந்தர்கள் அள்ளித் தெளிக்கின்றனர். பல இடங்களில் அறிவுரைகள் மிகுதியாகச் சொல்லப்படுகின்றன. இத்தகைய நாடகங் களுக்கு இவை தேவையே.

இந்த நாடகம் சென்ற நூற்றாண்டிலும், இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆயிரக்கணக்கான முறை மேடையில் வெற்றிகரமாக நடிக்கப்பட்டிருக்கிறது. இவ் வளவு புகழ் வாய்ந்த இந்த நாடகத்தை,

> ''எனவே, சொற்கட்டு, கவிதைவளம், வசனவளம், நாடக உத்தி முதலிய அம்சங்களைக் கருத்திலே கொண்டு பார்த்தால் டம்பாச்சாரி விலாசத்தின் இலக் கியத் தரமும் அந்தஸ்தும் தாழ்வானவை தான்'' (ரகுநாதன், சமுதாய இலக்கியம், ப. 168)

என்று ஆய்வாளர் ஒருவர் குறிப்பிடுவர். ஆனால் இது முழு உண்மையன்று. ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் நாட்டு மக்கள் விரும்பிக் காண்கிற நாடகமாக இது விளங்கியுள்ளது. பாலாமணி நாடகக் கம்பெனிக்கு இந்த நாடகத்தால் பேரும் புகழும் கிடைத்துள்ளது. இதில் சி. எஸ். சாமண்ணா அய்யர் என்பவர் ஒருவரே பதினொரு வேடங்கள் புனைந்து மேடையில் தோன்றிப் பாராட்டுகளைப் ('இந்தியாவின் சார்லிசாப்ளின்') பெற்றிருக்கிறார். பம்மல் சம்பந்த முதலியார் உள்ளிட்ட பலர் இந்த நாடகத்தைப் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

தாசில்தார் நாடகம்

''ஆகிலும் சிலர் ஒரு எருமையானது தண்ணீர் குடிக்கப்போன குட்டையைக் கலக்கிச் சேறாக்கித் தன்னுடம்பையெல்லாம் சேற்றைப் பூசிக்கொண்டு, நடக்கிற வழியெல்லாஞ் சேறாக்கி, வழியிற் போகிற வர்கள் வருகிறவர்கள் பேரிலும் சேறைப் பூசித் தன்னைக் கட்டுகிற கொட்டத்தில் — கட்டுத்தறி, புல் இதுகளையெல்லாம் சேறாக்கி — கட்டில் புல்போட வந்த தன் எஜமானனுக்குங் கொஞ்சம் சேறுபூசி வைப்பதுபோலக் கிடைத்த உத்தியோகத்தில் பண ஆசையினால் லஞ்சம் வாங்க ஆரம்பித்துத் தங்களுடைய பேர்களையும் துரைத்தனத்தாருடைய பேர்களையும் கெடுப்பது மல்லாமல், அநேக அக்கிரமங்களுக்கு உடன்பட்டு அநேக ஜனங்கள் அநியாயமும் துன்பமும் கஷ்டமும் அடையும்படி செய்து வருகையால் அவைகளைப் பல விவகாரங்களிலும், அவரவர் நடத்தைகளிலுமறிந்தும் அனுபவமுடைய அநேகராலும் நொந்தவர்களாலும் சொல்லக் கேட்டு முணர்ந்தவனாயிருக்கிறேன்...... மாறு பாடான நடக்கைகளை விவரமாகவும் காட்சியளவாகவும் அறியும்படி இந்நாடகஞ் செய்யத் துணிந்தேன்''

என்று 'தாசில்தார் நாடக'த்தின் முதற்பதிப்பின் முகவுரையில் (1857) ஆசிரியர் பேசுகிறார். பின்னர், ''மழை விட்டும் தூவானம் விடவில்லை'' என்பதுபோல 1859ஆம் வருஷத்துக்குமுன் ஏற்பட்ட அந்த அனுபவம் மேலும் தொடர்வதாகக் கூறுகிறார் இரண்டாம் பதிப்பில் (1868).

''தாய்தனது மாபிரிய மானசிசு வானது
தவழ்ந்து விளை யாடுகையிலே
வாயில்வரு தேமழலை காதில்நுழை போதுமன
மாமகிழ் வுறா திகழ்வளோ ?

சேயனைய பாவலர்கள் பேதையெனு நானுளறு
சீர்சுவை யிலாத கவியைக்
காய்வதொரு காலுமிலை ஆரவரு ளேபுரிவர்
காசினி யின்மீ தினிலரோ ! ''

என்னும் அவையடக்கப் பாடல் ஆசிரியரின் கவிப்புலமையை — ஓசை நயத்தோடு பாடும் ஆற்றலைத் தெரிவிக்கின்றது.

நாடகத்தை எழுதுவதற்கான காரணத்தை முதலில் வரும் மங்களப் பாடலே உணர்த்துகிறது.

''இந்த நெடிய தேசத்திலு
மெளிய குடிகள் பொருள்தின்னத்
தந்திர மறியுந் தாசீல்
தார்நாடகம் சொலவே ஆ ஆ (ஜெய மங்களம்)

''கோவில் வருமா னங்களையே
கொள்ளை யடிக்கும் தருமகருத்
தாவின் மனதுக்கிசை தாசீல்
தார்நாடகம் சொலவே ஆ ஆ (ஜெய மங்களம்)

''மட்டி லகால மரணமதில்
மருட்டி யுருட்டிக் குடிகள்பணம்
தட்டிப் பறித்துக் கொளுந்தாசீல்
தார்நாடகம் சொலவே ஆ ஆ (ஜெயமங்களம்)

தாசில்தார்களின் கொடுமையை இந்த மங்களப் பகுதி காட்டு கிறது ; இதன் விரிவே நாடகம். அந்தக் காலத்தில் தாசில் தார் பதவி பெற்ற விதத்தை ஆசிரியர் ஒரு பகுதியில் சொல் கிறார் :

''. . . . . . தேசத்துக் குடிகளிடத்தில் சர்க்கார் தீர் வைகள் வசூல் செய்யக் கணிசமான குடும்ப சம்பந்த முள்ளவனாகவும், நன்னடக்கைக்குரியவனாகவும், தக்க கல்வித் திறமுடையவனாகவும் இருக்கிற ஒருவனைச் செவ்வையாய் விசாரித்துத் திருப்திகரமாகத் தெரிந்து

கொண்டு நியமிக்கப்படு முன்னமே பேஷக்காரராயிருக் கும்போதோ அல்லது அமீனாவாயிருக்கும்போதோ வருகிற போகிற துரைகளுக்கும் கொழுத்த மேஜாடும், கோழிக் குஞ்சும் முட்டையும், குடியானவன் கழுத்தை யொடித்து வாங்கிக் கொடுத்துத் தயவு சம்பாதித்தோ அல்லது ஹெட் சிரஸ்தா முதலாகிய பேர்களுக்கு இஷ்டம்வர நடந்தோ — ஏதோ ஒரு விதத்தில் அவர் களால் சிபார்சு செய்வித்துக் கொண்டு நியமிக்கப் பட்டு, — லஞ்சம் வாங்கவும், அநேகவிதப் புரட்டுகள் செய்யவும் மாத்திரங் கற்றறிந்த மகா சமர்த்தராகிய இராஜமானிய இராஜபூஜித மகாராஜ ரரீஜஸ்ரீ மேலும் மகாராஜராஜஸ்ரீ குடியண்டை— பண்மண்ட — அது தண்ட — எமகண்ட தாசில்தார் தாஷ்டீக பந்துலு''

இதுதான் தாசில்தார் அந்தப் பதவி பெற்ற தவறான வழி.

ஏழை மக்களை அடித்துத் துன்புறுத்திக் கொள்ளை யடித்துக் கொடுமைப்படுத்துகிறான் தாசில்தார்.

தன் மீது 'குடிகாரன்' என்று குற்றஞ்சாட்டிய தர்ம கர்த்தா பற்றித் தாசில்தாரிடம் குருக்கள் குறை கூறுகிறார். தீபம் ஏற்றவும் நைவேத்தியம் செய்யவும் பொருள்தர மறுக் கிறார் தருமகர்த்தா. இந்தக் காலத்தில் தமிழ்நாட்டுக்குச் சொந்தமில்லாத விநாயகர் எதற்கு என்று சொல்லிப்பெயர்த் தெடுத்து வீட்டின் படியாக்கிக் கொண்டாராம் அவர் ; உற் சவருக்கு ஏன் நாலு கைகள் என்று கூறி, அவற்றில் இரண்டை வெட்டித் தமக்குத் தம்பலப் படிக்கம் செய்து கொண்டா ராம், கோயிலில் கூரை இருக்கும்போது மரங்கள் எதற்கு என்று வெட்டி எடுத்துக் கொண்டாராம் தருமகர்த்தா. மதிற்சுவர் இறைவனுக்கு ஏன் என்று இடித்துவிட்டாராம். இவ்வாறு தருமகர்த்தா பற்றிக் குறைகூறும் குருக்கள் இறுதி யில், ''கோயில் பாத்திரங்கள் அனைத்தும் உங்கள் வீட்டில்

இருப்பது உங்களுக்கே தெரியுமே'' என்று தாசில்தாரிடம் சொல்லி, ''அதனால் நான் சாராயம் குடிப்பதில் தவறில்லை'' என்று வாதாடுகிறான். தன்னைப் பற்றிய குட்டு வெளிப்பட்டவுடன் தாசில்தார் ''பரவாயில்லை, இதை வெளியே யாருக்கும் சொல்லாதீர்கள்'' என்று மூடி மறைத்து அவனை விட்டு விடுகிறார்.

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இமயகிரி என்னும் ஊரில் ஒரு பிராமணனின் பிணம் குளத்தில் மிதந்தது. காவலர் உதவியுடன் அதை வைத்தே பணம் சம்பாதிக்கிறான் தாசில்தார். அவனைக் கொன்றவர்கள் யார் என்பதை அறிந்தும், ஊரில் உள்ளவர்கள் பலர் மீது பழி சுமத்தி — அவர்களை விடுவிப்பதாகக் கூறி நிறையப் பணத்தைச் சேர்த்துக் கொண்டு — கடைசியில் பக்தியில் ஆழ்ந்து வேதம் ஓதிக் கொண்டிருந்த பிராமணன், வேத பாடத்தில் கவனம் செலுத்தியவனாய்க் காலிடறிக் குளத்தில். வீழ்ந்திறந்தான், மரணம் தற்செயலாக நிகழ்ந்தது என்று பொய்யாக எழுதி அந்த வழக்கை முடித்து விடுகிறான் தாசில்தார்.

இறுதியில் ஒரு வழக்கில் அவன் சிக்கிக் கொள்கிறான். காலில் விலங்கு பூட்டிய நிலையில் அவனுக்கு அறிவு தெளிவடைகிறது. 'தினவர்த்தமானி' வடிவில் இறைவன் தாசில்தார் திருந்தி வாழ உதவி செய்கிறான்.

இவ்வாறு அக்காலத்தே அலுவல்கள் புரிந்த தாசில்தார், கணக்கர், மணியம் உள்ளிட்ட பலரின் ஊழல்களை அச்சமின்றி வெளிப்படுத்திக் காட்டுகிறார் காசி விசுவநாத முதலியார். அவருடைய சமுதாயச் சீர்திருத்தப் பணியில் இஃது இரண்டாவது கட்டம்.

பிரம்மசமாஜ நாடகம்

1871இல் காசி விசுவநாத முதலியாரின் 'பிரம்ஹசமாஜ நாடகம்' வெளியிடப்பட்டது. இராசாராம் மோகன்ராயின் பிரம்மஞான சபையில் ஈடுபாடு கொண்டிருந்த ஆசிரியர் அந்தக் கொள்கையில் தீவிரப் பிடிப்புடையவராக விளங்கி னார். எனவே, அதுவரை எவரும் முயலாத அளவிற்கு பிரம்மசமாஜக் கொள்கையின் அடிப்படையில் நாடகத்தை இயற்றினார்.

ஆசிரியர் இந்த நாடகத்திற்கு ஆங்கிலத்தில் முன்னுரை எழுதி யிருக்கிறார். சமாஜக் கொள்கைகளை விளக்கி நீண்ட தமிழ் நூன்முகம் ஒன்றும் எழுதியுள்ளார். அதில் விதவை மறுமணம் முதலான பல சீர்திருத்தக் கருத்துகளை வேத, உபநிடத, ஒழுக்க நூற் சான்றுகளுடன் விளக்கியுள்ளார். நூல் உள்ளேயும் மிகப்பல மேற்கோள்கள் பல நீதி நூல்களி லிருந்து காட்டப்பட்டுள்ளன. மற்ற இரண்டு நாடகங் களைப் போல நாடகக் கட்டமைப்பு இதில் மிகுதியாக இல்லை.

''அருமை வேதியர்க்கும் அருங்கலை ஞானிகட்கும்
தருமப் பச்சையப்பனுக்கும் சர்வபாட சாலைக்கும்
குருராம்மோகன் ராயருக்கும் குறிக்குமவர் கோட்பாட்
[டிற்கும்
பெருகும் பெங்கால் பாபுகட்கும் பிரம்ஹ சமாஜத்
[திற்கும்''

மங்களம் என்று நாடகம் தொடங்குகிறது.

கட்டியக்காரன் வந்து, பி.ஏ., பி.எல். படித்த விவேக சிரோமணியின் வருகையை அறிவிக்கிறான். அவன் நல்ல வன், படித்தவன், பிரம்ம சமாஜக் கொள்கையன், தரும குணம் உடையவன்.

''காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியாரைப் போலாவது, டவுட்டன் துரையைப் போலாவது, கோவிந்த நாய்கரைப் போலாவது கல்வி விர்த்தி செய்கிற விஷயத்தில்''

கொடையுள்ளம் கொண்டவனாக இருக்க வேண்டுமென்கிற கொள்கை உடையவன் விவேகன்.

விவேகன், சேவக சுப்பாநாயக்கனுடன் பேசித் தந்தை இருப்பிடம் அறிகிறான். தந்தை வீண்புத்தி விசுவாசியோடு மகன் விவேகன் நீண்ட உரையாடல் நிகழ்த்துகிறான். 'விக்கிரக ஆராதனை 'கூடாது' என்பதற்குப் பல நூல்களிலிருந்து ஆதாரங்களை அள்ளி வீசுகிறான். இறுதியில் உண்மை தெரிகிறார் தந்தை. அதனால்,

போதும் போதுமடா தம்பி—நீபோதித்த
போதனைக் குட்பட்டேன் நம்பி !

வேதவே தாந்த உண்மை அறிந்துகொண்டேன்
விக்கிரக ஆராதனை யான்இனி அண்டேன் !
(போதும்)

கண்ட கோயில்களில் கையெடுப்பது மில்லை
கால நியமங்கள் முடிப்பதோ வெகுதொல்லை
சுண்டர்போல் யான் தொழுவேனோ இனிக்கல்லை
துட்டையழித்தேன் நம்பி வீணர் சொல்லும் சொல்லை
(போதும்)

திருப்பதி பழனிக்கு உண்டிசெலுத்த மாட்டேன்
சிவ பூசையில் தீபங்காட்டி மணியாட்டேன்
விருப்பமாக வீண்பத்தியில் மன நாட்டேன்
விபூதி ருத்திராட்ச வேடமினிக் காட்டேன் ! (போதும்)

காசி ராமேச்சுர தலங்களுக்கினி யோடேன்
காவடி யெடுத்தென்றன் காலோய நானோடேன்
பூசை கணிதஞ்செய்யப் புட்பங்களைத் தேடேன்
புராண பொய்க்கதைகளை யொருக்காலு நாடேன் !
(போதும்)

என்று பாடுகிறான் வீண்புத்தி. விவேகனின் மகளுக்கும் திருமண ஏற்பாடு நடக்கிறது. குறைந்த வயதில் பெண் களுக்குத் திருமணம் செய்யக் கூடாது என்பதை வற்புறுத் துகிறான் விவேகன். வீண்புத்தியோ தன் மூத்த மனைவி ஏகாட்சியின் தமையன் மக்கள் இழுதை அல்லது கட்டைத் தடியன் ஆகியோருள் ஒருவனுக்கு அவளை மணமுடிக்க வேண்டும் என்கிறான். கட்டைத் தடியன் பரணியிற் பிறந்தவன். ''டீபு சுல்தான் பரணி நட்சத்திரத்தில் தான் பிறந்தான்'' என்று சோசியன் சொல்கிறான். நாள், நட் சத்திரம், சகுனம் அனைத்துப் பொருத்தங்களும் பார்த்துத் திருமணம் ஏற்பாடாயிற்று. ஆனால், மணமண்டபத்தில் மணமகன் கட்டைத் தடியன் இறந்து போகிறான். பின் எட்டாம் துக்கம் நிகழ்கிறது. கூலிக்கு வந்தவர்கள் மாரடித்து அழுகிறார்கள்.

ஒரு நாள் நாகரிகன் வருகிறான்., அவன் அந்தப் பெண் ணிற்கு மறுமணம் செய்விக்க வேண்டும் என்கிறான். நாட் டாண்மைக்காரரும் பிறரும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். என்றாலும் பிரம்மசமாஜக் கொள்கையை விரித்துரைத்துத் திருமணத்தை நிறைவேற்றுகின்றனர்.

நாடகம் முடியும் நிலையில் பிரம்ம சமாஜக் கொள்கை கள் பலவற்றையும் விளக்கமாக விவேகனும் பிறரும் எடுத் துரைக்கின்றனர். பரம பாகவதர், பண்டார சந்நிதிகள், கிறித்தவ போதகர், சூனியவாதிகள், ஆனைகண்ட குருடர், மலையாளசாமி, சூனியக்காரன், இரசவாதி முதலானவர் களுக்கு விளக்கம் தரப்படுகிறது. அதில் ஒன்று,

''கடவுளொன் றென்பது மெய்யே — புராணக்
கட்டுக்கதைக ளெல்லாம் பொய்யே !

மடமறு வேதவேதாந்தங் கணிதம் சாற்றும்
மற்றச் சமயமத வாதிகளும் போற்றும் (கடவுள்)

ஒன்றதற் கொப்பில்லை யென்பதுவே திடம்
ஒன்றைப் பலவாக எண்ணுவதே மடம்
என்றும் ஒன்றைநாடித் தொழுவதேநற் றடம்
எவற்றையும் அவ்வொன்றே நடத்துவதத னடம் !
(கடவுள்)

முத்தொழி லீசன் குணங்களேழும் மூர்த்தி
முப்பத்து முக்கோடி தேவரென்பது நாஸ்தி
சத்துச் சித்தானந்த மென்பதுவே ஆஸ்தி
சகலத்தையு மீன்ற காயென்பதே நேர்த்தி ! (கடவுள்)
பலநதி யொருகடல் பாய்வதுபோல் நித்தியம்
பலசமயமு மீற்றில் சேர்வதொன்றில் சத்தியம்
கலைபலவு மொன்றை ஓதுவது பத்தியம்
கடவுளர் பலவென்று சொல்லுவது பைத்தியம் !
(கடவுள்)

இவ்வாறு 'கடவுள் ஒன்றே' என்பது குறித்துப் பாடப்படுகிறது. இவ்வாறே பலருக்கும் மறுமொழியாகப் பல கருத்துகள் பாங்காக உரைக்கப்படுகின்றன.

காசி விசுவநாத முதலியாரின் டம்பாச்சாரி விலாசத்தின் தாக்கம் அக்காலத் தமிழ் நாடகங்களில் மிகுதியாக இருந்தது

> ''தமிழ் நாடகமானது சுமார் 100 வருடங்களுக்கு முன்பு மறுமலர்ச்சி யடையத் தொடங்கின காலத்தில் அதை ஆதரித்துத் தமிழ் நாடகங்கள் எழுதி அச்சிட்டவர்களில் முக்கியமானவர்களுள் ஒருவர் காசிவிசுவநாத முதலியார் என்பவர்''

என்றும்,

> ''பெரும்பாலும் கதாநாயகனுக்கும் கதாநாயகிக்குமே பல வர்ண மெட்டுக்களுள்ள பாட்டுகள் நாடக ஆசிரியர் எழுதியிருக்கிறார். இந்த வர்ண மெட்டுக்களைத் தக்கபடி அமைப்பதற்கு நாடக ஆசிரியருக்கு

உதவி புரிந்தவர் காலஞ்சென்ற திரு. தாயுமானஸ்வாமி முதலியார் என்பவராம்''

என்றும்,

''இந்த நாடக ஆசிரியர் காலத்தில் ஒரு வள்ளுவன் டம்பாச்சாரி வேடத்தில் மிகவும் பெயர் பெற்றிருந்தானாம். வள்ளுவன் டம்பாச்சாரி வேடம் போடுகிறான் என்ற கேள்விப் பட்டால் நாடகம் பார்க்க ஏராளமான மக்கள் கூடுவார்களாம் ''

என்றும் இந்த நாடகம் பற்றி எழுதியிருக்கிறார் பம்மல் சம்பந்த முதலியார்.

இந்த நாடகத்தின் வெற்றியைக் கண்டு காலப்போக்கில் ஆசிரியர் எழுதாத பல 'ஆபாசமான சம்பாஷணை'களையும் காட்சிகளையும் சேர்த்துப் பிற்காலத்தில் நடிக்கத் தொடங்கினர். காவலர்கள் அதைத் தடை செய்யும்படியான சூழ்நிலையும் வந்தது. பாலாமணி மதன சுந்தரியாகவும், கோகிலாம்பாள் டம்பாச்சாரியாகவும் நடித்துப் பேரும் புகழும் ஈட்டியுள்ளனர். பாலாம்பாள், வடிவாம்பாள் முதலானவர்களும் இந்த நாடகத்தில் நடித்திருக்கின்றனர்.

வசூல் குறைகின்ற போதெல்லாம் 'டம்பாச்சாரி' நாடகம் நடத்துவது வழக்கம். 'பாலாமணி ஸ்பெஷல்' இதற்காகவே தஞ்சை யிலிருந்து குடந்தைக்கு விடப்பட்டது என்பர். பாலாமணிச் சாந்து, பாலாமணிப் புடவை என்றெல்லாம் பொருள்கள் விற்கப்பட்டன.

டம்பாச்சாரி விலாசம் பல பதிப்புகள் பெற்றது. 1907இல் வெளியிடப்பட்ட நூலின் முகப்பில் ''டம்பாச்சாரி விலாசம்/இஃது/சைதாபுரம்/காசிவிசுவநாத முதலியார்/அவர்களா

லியற்றப்பட்டதை/டம்பாச்சாரி/நாதமுனி செட்டியாரால் சேர்க்கப்பட்டதுடன்/காரைக்கால்/முகமது சமாதனி அச்சுக் கூடத்திற்/பதிப்பித்த பிரதிக்கிணங்க/நூதன விசித்திர படங்களுடன்/பிழையரப் பரிசோதித்து/ம. திருவேங்கட முதலியாரால் சென்னை ஸ்ரீமாதவ விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது/1907/விலை ரூ. 1'' என்று குறிக்கப் பட்டுள்ளது. 400 பக்கங்கள் கொண்ட இந்த நூலின் இறுதிப் பக்கத்தில் 'நூதன பெரிய டம்பாச்சாரி விலாசம் முற்றிற்று' என்று காணப்படுகிறது.

இந்த டம்பாச்சாரி நாடகம் திரைப்படமாகவும் வந்தது. எனவே, தமிழ் நாடக மேடையில் ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் வெற்றிகரமாக நடந்த ஒரே சமுதாய நாடகம் என்ற பெருமையை இந்த நாடகம் பெறுகிறது.

பிரம்ம சமாஜ நாடகத்தின் ஆங்கில முன்னுரையில் ஆசிரியர் காசிவிசுவநாத முதலியார்,

> ''It is my object that my view should be known to the majority of my countrymen in a popular and attractive shape and as the drama can answer this best, I have adopted it''

என்று கூறுவது நாடகத்தின்மீது அவர் கொண்ட நம்பிக்கையையும் ஈடுபாட்டையும் காட்டுகிறது. இது 'டம்பாச்சாரி' மூலம் அவர் பெற்ற அனுபவம் எனலாம்.

சமுதாயக் கேடுகளைச் சுட்டிக் காட்டுவது மட்டுமல்லாமல், அவற்றை நீக்குவதற்குரிய வழிமுறைகளையும் ஆசிரியர் ஒவ்வொரு நாடகத்திலும் விளக்கத் தவறியதில்லை. தாசில்தார் நாடகத்தில்,

> ''கெண்டை மீனை வரால் மீன் தின்ன, வரால் மீனை வாளை மீன் தின்பதுபோல, குடிகளுடைய குடி

கள் கெட மாறுபாடுகள் செய்து தாசில்தார் வலிக்கும் வகையெல்லாம் அறிந்து பறிக்கத்தக்க திறமுடைய சிரஸ்தா''

என்று கூறும் ஆசிரியர்,

''இவர்களுக்கெல்லாம் நல்ல சம்பளங்க ளேற்படுத் திக் கல்வியை விர்த்தியாக்கித் தக்கவர்களை வைத்து அந்தந்தத் தப்பிதங்களைக் குறித்து நல்ல கண்டனை தண்டனை செய்துவந்தால் லஞ்சமும் அக்கிரமங்களும் பறக்காதா !''

என்று நம்பிக்கையோடு வழி கூறுவதைப் பார்க்கிறோம்.

அந்தக் காலத்துப் படித்த மக்களிடையே இருந்த 'ராஜ விசுவாசம்' இவருக்கும் இருந்தது. கண்டிக்க வேண்டிய வற்றைக் கண்டிக்கும் ஆசிரியர் ஆளுபவர்களை — ஆங்கிலே யர்களை — அக்கால வழக்கிற்கேற்பப் பாராட்டுகிறார்.

''துரைத்தனம் கேளீர் — லார்டாரீசு — துரைத்தனம் [கேளீர்
பெருத்த புவியில் சோதி இரத்தின மணிமகுடம்
தரித்த விக்டோரியா திருத்தமுடன் அரசு
விருத்திசெயு மிந்நாட்டில் தரித்திரா மிகுகுடிகள்
வருத்தமதனை நீக்கக் கருத்துக் கொள் பிரபுமகன்''

என்றும்,

''இரத்தினமுடி பெற்ற விக்டோரியா வாழி
இசைபாடும் பார்லைமென்டி றெவர்க்கும் வாழி
கருத்திலுய ரான்ரேபிள் கம்பெனியார் வாழி
கவர்னர் ஜெனரல் லார்ட்டு கானிங்கும் வாழி

அருந்தியோ டாளும் லார்டாரீசும் வாழி
ஆனசதர் கோர்ட்டதி காரிகளும் வாழி
பொருத்தமுறு குடிகளும் புலவர்களும் வாழி
புகலும் நற்றாசீல்தார் புவிமீது வாழி''

என்றும் பாடல்கள் அமைந்துள்ளன. இவ்வாறே மூன்று நாடகங்களிலும் ஆசிரியர் விக்டோரியா ராணியாரையும், ஆங்கில அதிகாரிகளையும் புகழ்ந்து பாடியுள்ளமை அறியத் தக்கது.

விடுதலை இயக்க நாடகங்களை நாம் இந்தப் பின்னணி யிலேயே நோக்க வேண்டும்.

டம்பாச்சாரியின் பாணியில் அமைந்த வேறு இரு நாடகங் கள் இங்கே குறிக்கத்தக்கன.

ஊதாரிப் பிள்ளை விலாசம்

அவற்றுள் ஒன்று, ''ஊதாரிப் பிள்ளை விலாசம்'' என்பது. 146 பக்கங்கள் கொண்ட இந்த நாடகம் 1898இல் வெளிவந்தது.

> ''இஃது மரியதாஸ் என்பவரால் இயற்றிய ஏட்டுப் பிரதியைச் சென்னை இராசகோபாலையரின் பெண்கள் கலாசாலையில் பரதநாட்டியவாசிரியர் புதுவை ச. ஜமீன் உபாத்தியாயர், பரத சங்கீத சுயபோதினி, வீணாசிரியராகிய சென்னை டி. சிந்து ராயலு பிள்ளை இவர்களைக் கொண்டு, வசனம் இராகம் தாளம் அமைத்து, சென்னைப் பட்டணம் அ. மரியான்பிள்ளை புத்திரர்களாகிய அப்பாதுரை பிள்ளை, அன்புபிள்ளை ஆகிய இருவராலும் சென்னை விக்டர் அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டது, 1898''

என்னும் முகப்புப் பக்கத்தைக் கொண்டது இது. அடுத்து ஆங்கில முகப்பு ஒன்றும் காணப்படுகிறது.

திரவிய சம்பன்னன் என்னும் செல்வனின் இளைய மகன் ஊதாரிப் பிள்ளை. இவன் துற்புத்தி சொக்கப்பன், குண்டு ருட்டுக் குப்பன், சொக்கட்டான் சுப்பன், குடிகார கோவிந் தன், கடுதாசி கந்தப்பன் ஆகிய தீய நண்பர்களின் சேர்க்கை யால் தாசி வைபோகவல்லியைச் சார்ந்து பொருளெல்லாம் இழக்கிறான். இறுதியில் தவிடு தின்று பன்றி மேய்க்கும் நிலைக்கு ஆளாகி, இயேசுவின் அருளால் திருந்துகிறான் என்று கதை சொல்கிறது.

டம்பாச்சாரி கதைக்கும் ஊதாரிப்பிள்ளை கதைக்கும் வேறுபாடு அதிகமில்லை. எனவே, இதை எழுத நேர்ந்த காரணத்தை ஆசிரியர் சொல்ல வேண்டிய நிலை நேர்ந்தது. அதனால் அவர் இதன் முன்னுரையில்,

> ''நாடக விலாசங்களாகப் பாடி நடித்துக் கேட்போர் பார்ப்போர் நேத்திர சுரோத்திரானந்த மடையும்படி வழங்கும் நூற்கள் சிலவே. அதிலேயும் தமிழ்ப் பாஷைக் குரியோராகிய இந்து சமயத்தார்க்குள்வழங்கி வரும் டம்பாச்சாரி விலாசத்தில் எண்ணெய் தேய்த் தல் முதலிய பாகங்கள் அருவருப்பைத் தரத்தக்கதும், நமது சமயத்துக் கொவ்வாததும், கிறிஸ்தவர்கள் பார்க் கவும் கேட்கவும் படிக்கவும் கூடாதாயிருக்கின்றமை யால், கிறிஸ்தவர்க்கும் அத்தகைய விலாசமொன் றிருப்பது பெருங்குறைவாயிருந்ததை நீக்கும் பொருட்டு நமது சுவிசேஷத்தில் லூக்காவென்பவரெழுதிய 15-ஆவது அதிகாரத்தில் சேசுநாதசுவாமி திருவாய்மலர்ந் தருளிய ஊதாரிப் பிள்ளையின் உவமையை விலாச மாக்கித் தந்தனர்''

என்று குறிப்பிட்டுள்ளனர். இதனால் இந்த நாடகத்தின் தோற்ற வரலாறு விளங்குகிறது. இதுவும் சிந்தாத்திரி பேட்டையில் நடப்பதாகச் சொல்லப்படுகின்ற ஒற்றுமை காணத்தக்கது.

''வாக்கியமிகுமா சென்னை மாநகர் சிந்தாத்திரை மரியே
விற்பன மிகும் கெம்பீரி — மனத்திலுறும் வினைதுயர்
[தீர்த்தாளும்
அற்புத சிந்தாத்திரை மரியே மரிஆயி மாசகாயி நேரி
[தோத்திரம்-தோத்திரம்-ஜெயாஜெயா''

என்றும்,

''அதிக வயிறு பசிதாகத் தாலையா — பன்றிக்
களிக்கும் தவிடெடுத்துச் தின்றேனையா
பதியினில் ஒருக்காலும் செய்யேனையா — சாதம்
பரிவுட னீந்து பாதுகாரு மையா ! ''

என்றும் வருகின்ற பாடல்கள் இந்த நாடக நூலின் இனிய சந்தநயமிக்க பாடல்களுக்குச் சான்றுகளாம்.

பிரதாப சந்திர விலாசம்

இந்த நூற்றாண்டின் மற்றொரு குறிப்பிடத்தக்க நாடகம் ப. வ. இராமசாமி ராஜு அவர்களின் 'பிரதாப சந்திர விலாசம்' ஆகும். 'ஒரு ஜனசமூக நாடகம்' என்னும் குறிப்போடு வெளியிடப்பட்டுள்ள இந் நாடகம் 1877ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

உப்பளத்தில் உயரதிகாரியாகப் பணிபுரிந்த திண்டிவனம் அரங்கசாமிராஜு என்பவரின் மகனாக 1852இல் பிறந்தவர் இவர். பச்சையப்பன் கலாசாலையிலும், பிரசிடென்சி கல்லூரியிலும் பயின்று பி.எ. பட்டம் பெற்றவர். சென்னைப் பச்சையப்பனின் உதவிப் போதகாசிரியராகச் சில காலமும் பின்னர்க் காஞ்சி பச்சையப்பனில் தலைமைப் போதகாசிரியராகச் சில காலமும் இருந்து, பின் அரசு அலுவல் பார்க்கச் சென்றவர். சென்னை சுங்கவரி அலுவலகத்தில் இம்போர்ட் மேனேஜர் ஆக இருந்து, பின்னர் இன்ஸ்பெக்டர் ஆப் கஸ்டம்ஸ் என்னும் பதவிக்கு உயர்ந்தவர். 1882இல் லண்டன் மாநகரம் சென்று பார்-அட்-லா சேர்ந்தார்.

அங்கு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், லண்டன் பல்கலைக் கழகக் கல்லூரி ஆகியவற்றில் தமிழ்-தெலுங்கு ஆசிரியராகவும் இருந்தார். எப்.ஆர்.எச்.எஸ்., எம்.ஆர்.எ.எஸ். ஆகிய பெருமைகளையும் பெற்றார். ஆங்கிலம், வடமொழி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் பெற்றிருந்த புலமையினால் பல அரிய நூல்களை எழுதினார். வடமொழியில் இவர் எழுதிய ''ஸ்ரீமத் ராமநாத ராஜாங்கள மகோத்யானம்'' என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. 1897 ஜூலை 17இல் மறைந்த (வயது 45) இவர் பெயரை என்றும் நினைவில் கொள்ள வைப்பது இவருடைய பிரதாப சந்திர விலாசம் நாடகமாகும்.

இவர் காலத்துக்கு முன்வந்த நாடகங்களைப் போல் அல்லாமல், இஃது அங்கம், காட்சி ஆகிய பிரிவுகளை உடையதாக விளங்கியது. கதையில் கட்டுக்கோப்பு உள்ளது. அது மட்டுமன்றி, மிகுதியான அளவிற்கு உரைநடையைப் பயன்படுத்திய முதல் தமிழ் நாடகம் என்னும் பெருமை இதற்குண்டு. ஆயினும் இதில் 147 விருத்தங்களும், 57 தருக்களும், 47 பிறவகைப் பாடல்களும் ஆக 251 பாடல்கள் உள்ளன. 35 இராகங்களில் இந்தத் தருக்கள் அமைந்துள்ளன.

டம்பாச்சாரி விலாசமும், ஊதாரிப் பிள்ளை விலாசமும் வேசியரால் கெடும் பணக்காரர்களைக் காட்டின, இதுவும் அத்தகையதே எனினும் தீய நட்பு, குடிப் பழக்கம் முதலானவற்றையும் கட்டுக் கோப்பான கதைவழி சொல்கிறது. இதனை,

> ''நம்முடைய நாட்டில் அனேகர் இயற்கையாய் நல்லறிவைப் படைத்து, கல்வி கற்றுத் தேர்ந்து, அவரவர் அதிர்ஷ்டத்திற்கும் முயற்சிக்கும் தக்கபடி மதிப்புள்ள ஸ்திதிக்கு வந்தும், அற்ப வயதிலேயே தங்காலத்தை முடித்து, மனைவி மக்களை வருத்தத்

தில் மூழ்த்தி, பந்து மித்திரர்களுக்கெல்லாம் தீராத கிலேசத்தை உண்டாக்கி விட்டுப் போகின்றனர். இந்த விபரீதத்திற்குப் பெரும்பாலும் காரணமாதோவென்று ஆராயப்புகின், இந் நூலில் வெளியிட்டு மறுத்திருக்கும் துன்பங்களேயாம். அந்தோ ! வேசையர் முதலிய மாதர்களோடும், ஒயின் பிராந்தி முதலிய சாராய வர்க்கங்களோடும், தம் வாழ்நாளை நமனார்க்குக் கொள்ளை கொடுக்கும் துரதிர்ஷ்டப் பிராணிகளின் தொகை எண்ண முடியுமோ ? ஆகையால், என் சக்தி புத்திகளுக்குத் தக்கபடி யான் லோகோபகாரமாக நினைத்து இயற்றிய இந்த நூலை நடுவு நிலைமையுற்ற மேலோர் நன்கு மதிக்கின், அது யான் இதை இயற்றும் விஷயத்தில் செய்த முயற்சிக்கு ஓர் பயனாகும்.''

என்று தம் முகவுரையில் ஆசிரியர் கூறுகிறார்.

வித்தியாசாகரர், நிபுண கோசரர், குணாலயர், சுதேச மித்திரர், சமயோசிதர், லவுகீகர் ஆகியோர் பிரதாப சந்திரனின் நல்ல நண்பர்கள். விசுவாச காதகன் நாடகத்தில் வரும் தீயவன். அவனோடு பாவாடை ஜித்தர், திருவேங்கடத்தானு, இடிமுழுங்கி, ஸண்டே மாஸ்டர், குசும்பா மாஸ்டர் ஆகியோர் தீயோராக வருகின்றனர். முத்தையர், சட்பட், பமல் முதலானோர் ஏவலர்கள்.

ஷோக் சுந்தரம், மத்தாப்பு சுந்தரம் ஆகியோரின் வலையில் விழுந்த பிரதாப சந்திரன் விரைவிலேயே திருந்தி, மனோன்மணி என்னும் நல்லாளை மணந்து கொள்கிறான்.

நாடகத்தில் பல்வேறு மொழிகள் கலந்து உறவாடுகின்றன. சென்னை மாநகரத்தில் அன்று எந்தெந்த மொழிகள் வழங்கினவோ அத்தனையும் ஆசிரியரின் நாடக மொழி

நடையில் கலந்துள்ளன. இவரது 'ஜனரஞ்சகமான' நடைக்கும் பின்வரும் பாடல்களைச் சான்றாகக் காட்டலாம்.

''எண்ணாத பொருளிருந்து மெக்ஸ்பென்ஸுக் கில்லை
[யென்றே
பிண்ணாக்கைத் தின்னும் டர்ட்டி பீஸ்டுகள்போ
லல்லாமல்
கண்ணாட்டி மாராம் டான்சிங் கரல்களைக் கூடி நாமும்
அண்ணாத்தை மாரே யின்று ஹாபியா யிருப்போம்
[வாரீர்''

என்பதொன்று. ஆங்கிலமும் தமிழும் கலந்த மணிப்பிரவாளம் இது! விசுவாச காதலன் குசும்பா மாஸ்டரிடம் குசலம் வினவுகிறான்,

'' மின்னலைப் பழிக்கு மேனி மின்னல் கொடியு மன்றிக்
கன்னலி னினிய வேசி கனகாங்கி சொர்ண வல்லி
கின்னரி கிருஷ்ண வேணி கிளிமொழி பத்மா பாலா
தன்னிக ரில்லா ஞானா சகலரும் க்ஷேமந் தானா ? ''

வேசியரின் பட்டியல் இந்தப் பாடலில் வெளிப்படுகிறது. பிரதாப சந்திரனுக்கு இடிமுழங்கி உபதேசம் செய்கிறான் :

'' நமதிளமைக்கா லத்தில் நலமான பிளஷர்க ளெல்லாம்
குமரிக ளோடி ருந்து குலாவியே யனுப வித்தல்
அமைதியாம் சுகமென் பார்க ளப்புறந் துன்ப முற்றால்
உமனையும் படைத்த தெய்வம் ஒயினையும் படைத்த
[தண்ணே!''

எவ்வளவு சரளமாகத் தமிழ்ச் சொற்களோடு ஆங்கிலம் கலந்து உறவாடுகிறது ? இவை நகைச்சுவை கருதிச் சேர்க்கப்பட்டவை என்று கூறத் தேவையில்லை.

நூற்றுக்கு மேற்பட்ட பழமொழிகள் நாடக உரையாடலுக்கு வளம் சேர்க்கின்றன. இனிய தமிழ் நடை நாடகத்தின் பல இடங்களில் உள்ளமையை மறுக்கவியலாது. ஒரு

பக்கம் கலப்புத் தமிழ் ; இன்னொரு பக்கம் இனிய தனித் தமிழ்.

''குயிலின முரச மாகக் குடையெனத் திங்க ளோங்கக்
கயலெனும் கொடியைக் கொண்டே கன்னலாம் வரிவி
[லேந்தி
மயலுறுங் குவளைக் கண்ணார் வன்படை யெனவே சூழப்
பயிலுமம் மதனார்க் கேற்ற பருவமு மீதா மன்றே''

என்று ஒரு பூஞ்சோலையில் இருந்தபடி, பிரதாப சந்திரன் வசந்த காலத்தைக் குறித்துப் பாடுவது இதற்கு எடுத்துக் காட்டு.

முன்பு தான் செய்த தவற்றை நினைத்துப் பிரதாப சந்திரன் ''அதெல்லாம் என்ன? ஒரு விகாரம், தள்ளிவிடும்'' என்று புலவரிடம் கூறுகிறான். அவரோ,

> ''மகாபிரபு, ஒரு விகாரத்தோடு போவானேன். மனிதருக்கும் மூன்று விகாரங்களுண்டு. ஒரு பெண் எதிர்ப்பட்டால் தோன்றல் ; அவள் மேல் மோகங் கொண்டால் திரிதல்; அவள் வலையிலகப்பட்டால் கெடுதல் – இது தெரியாதா ? ''

என்று தம் இலக்கணப் புலமையோடு விகாரங்களை அடுக்கு வது சுவையான கட்டம்.

பிரதாப சந்திரன் விரும்பும் மனோன்மணி தன் தோழியர் அம்புஜம், மரகதம் ஆகியோரோடு உரையாடும் காட்சி (அங்கம் 12, காட்சி 1) சாகுந்தலத்தில் சகுந்தலை பிரியம் வதை அநசூயை உரையாடலை நினைவுபடுத்துவதாக அமை கிறது.

இந்த நாடகத்தில் பல ஆய்வுக்குரிய செய்திகள் உள்ளன. அவை தனி ஆய்விற்கு உரியவை. அவற்றுள் இரண்டுமட்டும் இங்கே குறிக்கப்படுகின்றன.

முதலாவது, சுதேசமித்திரர் பாத்திரம். நாட்டுப்பற்றுடைய இவர் ஆங்கில ஆட்சியை விரும்புபவர். முதல் களத்தில் பாரத தேசம் பற்றி மிக அருமையான வருணனையைத் தருகிறார். இவரது உரையைக் கேட்டு அனைவரும் மகிழ்கின்றனர். அப்போது குணாலயர்,

''ஆசைசேர் தந்தை தாயர் அன்புகூர் மனைவி மக்கள்
நேசர்கள் பலரோ டின்று நெருங்கிய சுற்றத் தார்மேல்
பாசமுற் றிருத்த லிந்தப் பாரினி லியற்கை யாகும்
தேசாபி மான மொன்றே தெய்வீக வுணர்ச்சி யண்ணே''

என்று கூறுவது நினைவில் கொள்ளத் தக்கது

''ஆங்கிலேயர் ஆட்சியில் எல்லாம் கிடைக்கிறது, நமக்கென்ன குறை?'' என்று கேட்கிறார் லவுகீகர். சுதேசமித்திரரோ,

''என்ன குறையுண்டென் றிப்படி நீர்கேட்டா
லென்சொல்லுவேன் நான் அண்ணே''

என்று தொடங்கிக் குறைகளைப் பட்டியலிடுகிறார் :

''மகாராஜ ரிங்கிலீஷ் மகிபர் துரைத்தனத்தில்
மனக்குறை யின்றியே யண்ணே
சகல சுகங்களுஞ் சரியா யனுபவித்துஞ்
சாற்றுங் குறைகள் உண்டே அண்ணே''

என்று கூறி, அக்குறைகளையும் அவரே கூறுகிறார் :

''இமைய வரைமுதலா இலங்கை வரையிலுள்ள
இந்துக்க ளெல்லோரு மண்ணே
தமையொரே ஜாதியாய்த் தகைமையுடனே யெண்ணுந்
தன்மை மறந்தாரே அண்ணே''

இப்படித் தொடங்கி ஒற்றுமையின்மையையும், வேறு பல வற்றையும் அடுக்கிச் சொல்லுகிறார். அதற்கெல்லாம் காரணம் நாட்டுப்பற்று இன்மையே என்று இரங்குகிறார்.

''ஆண்மைக் குரியசு தேசாபி மானத்தை
அறியாரே கனவிலு மண்ணே''

என்று நொந்து கொள்கிறார். சிற்றுளி பாறையைத் துளைத்துப் போதல் போலத் தேசாபிமானிதான் மாற்றாரைத் திருத்த முடியும் என்கிறார்.

நாட்டில் பலர் ''இராமன் ஆண்டாலென்ன, இராவணனாண்டாலென்ன'' என்று கருதுபவர்கள். இந்தக் கருத்துடைய லவுகீகரின் சொற்களை மறுத்துப் பிரதாப சந்திரன் பேசும்போது,

''ஐயையோ இப்பேர்க் கொத்த அநியாயக் கொள்கை [யுள்ளோர்
செய்யுமாத் துரோகத் தாலே தேசமும் பாழாய்ப் [போச்சு''

என்று நாட்டை நினைத்துப் பேசுகிறான்.

இஃதொருபுறமிருக்க நாடகத்தில் வரும் கல்வி கேள்விகளிற் சிறந்த வித்தியாசாகரர் ஆங்கில மொழியின் பெருமைகளைப் புகழ்ந்து ''நன்மைகள் கேளீர் — இங்கிலீஷின் — நன்மைகள் கேளீர்'' என்று பாடுகிறார்.

இந்தக்கால நாடகங்களின் ஆய்வினால் நாம் அறிந்து கொள்ளும் சில முடிவுகள்:

1. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இதிகாச-புராண-நாட்டுப்புறக் கதை நாடகங்களே மிகுதி.

2. சமுதாய நோக்குடைய சீர்திருத்த நாடகங்களைப் படைத்து ஒரு திருப்புமுனையை உண்டாக்கியவர் சைதாபுரம் காசி விசுவநாத முதலியார் ஆவார்.

3. சமுதாயத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியையே கற்பனை கலந்து படிப்பினை தரும் நாடகமாக அவர் வடித்தார்.

4. தாசில்தார் நாடகமே முதன்முதல் அரசு ஊழியர் களின் கையூட்டு நடவடிக்கையைப் படம்பிடித்துக் காட்டிய முதல் தமிழ் நாடகம்.

5. புதிய இயக்கக் கொள்கை ஒற்றனை அடிப்படையா கக்கொண்டு அமைந்தது பிரம்ம சமாஜ நாடகம்.

6. கைம்மைத் திருமணம், இளவயது மணம், மூடத் திருமணம், கடவுட் சிலை வழிபாடு, பல கடவுள் கொள்கை முதலானவை பற்றிய ஆய்வு நாடகமாகவும் அமைந்தது பிரம்மசமாஜ நாடகம்.

7. மொழி பெயர்ப்பாளராகவும் டிஸ்ரிடிக்ட் முனிசிப்பா கவும் இருந்த அதிகாரி ஒருவர் நாடக மேடைக்குத் தொண்டு செய்ய முனைந்த வகையில் முன்னணியில் நிற்பவர் காசி விசுவநாத முதலியார் ஆவார்.

8. மேனாட்டில் பயின்று, உயர் பதவியில் பணியாற்றி, நான்கைந்து மொழிகளில் புலமை பெற்று, ஆங்கில நாடகங் களின் அமைப்பு முறைப்படி, செய்யுளைக் குறைத்து, உரை நடையை மிகுதிப்படுத்திச் சிறந்த பண்பாட்டு 'ஜனசமூக' நாடகத்தை எழுதியவர் ப. வ. இராமசாமி ராஜு ஆவர்.

9. தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நூற்றுக் கணக்கான முறை நடிக்கப்பெற்றுச் சிறந்து விளங்கிய நாட கம் டம்பாச்சாரி விலாசம். அவரவர்கள் அதனை மாற்றி யும், கூட்டியும், குறைத்தும், சிதைத்தும், பலபடியாக நடித்திருக்கிறார்கள். அதுபோல, அச்சிலும் பன்முறை புதுப்புது வடிவங்களில் வெளியாகியிருக்கிறது அந் நாடகம்.

10. டம்பாச்சாரி விலாசத்தின் குறைபாடுகள் மிகுதி என்பதனால் அதற்கு மாறாகக் கிறித்துவ நெறியைப் பரப்புவதற்கு எழுதப்பட்ட நாடகம் ஊதாரிப் பிள்ளை விலாசம்.

11. இக்கால நாடகாசிரியர்கள் நாடு முன்னேற வேண்டும், மக்களிடையே ஒழுக்கம் வேண்டும், இறையுணர்வு ஓங்கவேண்டும், மூடநம்பிக்கை ஒழிய வேண்டும் என்னும் கொள்கையுடையவர்கள்.

12. நாடகாசிரியர்கள் அனைவரும் ஆளும் ஆங்கிலேய அரசின்மீது நம்பிக்கையும், பற்றும், மதிப்பும் கொண்டவர்களாக விளங்கினர். நாடகங்களில் கவிக் கூற்றாகவும், கதைமாந்தர் வாயிலாகவும் விக்டோரியா அரசியாரையும், ஆளுநர்கள், அதிகாரிகள் முதலானோரையும் மனமாரப் பாராட்டி யிருக்கிறார்கள்.

13. இந்த நூற்றாண்டிலேயே மூதல் கவிதை நாடகமாக மனோன்மணீயம், முதல் ஷேக்ஸ்பியர் மொழிபெயர்ப்பு நாடகம், முதல் வடமொழி தமிழாக்க நாடகம், முதல் விடுதலை இயக்க (காங்கிரசு) நாடகம் முதலியன தோன்றின.

14. இந்த நூற்றாண்டில் வேம்பம்மாள் (சீதா கல்யாணம், பிரகலாத விலாசம்), இலட்சுமியம்மாள் (சாகுந்தலம்) ஆகிய பெண்மணிகள் நாடகம் எழுதியுள்ளனர்.

15. பெங்களூர் அப்பாவுப் பிள்ளை, ஏகை சிவ சண்முகம் பிள்ளை ஆகியோரின் இராமாயண நாடகங்கள் இக்காலத்தில் சிறப்பாக நடைபெற்றன.

16. வேலாயுத முதலியாரின் 'ஆறாதார விலாசம்' என்னும் தத்துவ நாடகம் தோன்றியது, பிரபோத சந்திரோதயம், சங்கற்ப சூரியோதயம் ஆகியனவும் வெளிவந்தன.

17. சோகி நாடகம், ஒட்ட நாடகம், கார்காத்த நாடகம் என்னும் சாதி பற்றிய நாடகங்களும் இந்த நூற்றாண்டில் தோன்றின.

18. ஊதாரிப் பிள்ளை விலாசம், ஞானசௌந்தரி நாடகம், வேதசாட்சியாகிய தேவசகாயப் பிள்ளை வாசகப்பா முதலிய கிறித்தவ நாடகங்கள் இந்த நூற்றாண்டில் வெளி வந்தன.

19. முகமது இபுராகிமின் அப்பாசு நாடகம் (1873), வண்ணக் களஞ்சியப் புலவரின் அலிபாதுஷா நாடகம், தையார் சுல்தான் நாடகம் ஆகிய இசுலாமிய நாடகங்கள் வெளியாயின.

20. கட்டபொம்மன், மருது பாண்டியர்கள், ராஜா தேசிங்கு முதலானவர்களைப் பற்றிய வரலாற்று நாடகங்கள் இந்தக் காலகட்டத்தில் தோன்றின.

21. 1891இல் புதிய நாடகங்களை அரங்கேற்ற பம்மல் சம்பந்த முதலியாரால் சுகுண விலாச சபை தோற்றுவிக்கப் பட்டது.

22. தமிழின் முதல் அவல நாடகம் 'கள்வர் தலைவன்' பம்மல் சம்பந்தனாரால் 1894இல் இயற்றப்பட்டது.

23. தமிழில் கீர்த்தனை நாடகம், விலாச நாடகம், உரைநடை நாடகம், செய்யுள் நாடகம் ஆகியன இந்த நூற்றாண்டில் படிப்படியே வளர்ந்தன. தெருக் கூத்துகளும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

24. நாடக உரையாடல்களில் இனிய தமிழொடு ஏனைய மொழிகளும் கலந்து இயல்பான வழக்கு மொழி பயின்று வந்தது.

25. மேனாட்டு நாடகத்தின்/நாகரிகத்தின் தாக்கம், உள்நாட்டுச் சமுதாய மாற்றம், சமூக அரசியல் கருத்தோட்டம் ஆகியன பல படைப்புகளில் இடம் பெற்றன.

இத்தகைய பின்னணியிலே விடுதலை இயக்க நாடகங்களும், திராவிட இயக்க நாடகங்களும் மெல்ல மெல்ல வளரத் தொடங்கின.

ஆங்கிலேயர்க்குத் துதிபாடும் நாடகப் பாங்கு சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது.

கவிதை, கீர்த்தனை, செய்யுள் ஆகியவற்றில் இடத்தை உரைநடை பிடித்துக்கொண்டது.

சமுதாயக் கொள்கைகளில் மேலும் முன்னேற்றம் காணப்பட்டது.

விடுதலை இயக்கம் வலுப்பட்டது, அதனைத் தொடர்ந்து பார்ப்பனரல்லாதாரின் திராவிட இயக்கமும் வளரத் தலைப்பட்டது.

ஆரிய எதிர்ப்பும், சாதி சமய எதிர்ப்பும், நிலக் கிழார் எதிர்ப்பும், காங்கிரசு எதிர்ப்பும், கடவுள் எதிர்ப்பும், இந்தி வடமொழி எதிர்ப்பும் உருவாயின.

பகுதி : இரண்டு

விடுதலை இயக்க நாடகங்கள்

தமிழ் மொழியில் விடுதலை இயக்கத்தின் தாக்கம் பல் வேறு துறைகளில் ஆழமாகப் பதிந்திருந்தது. குறிப்பாக, விடுதலை இயக்கத்தால் தமிழ் நாடகமும், தமிழ் நாடகத் தால் விடுதலை இயக்கமும் பயன்பெற்றன. மக்களிடையே விடுதலை உணர்வினை ஊட்டவும், அவர்களைப் போராட் டங்களுக்கு ஈர்க்கவும், இயக்கக் கொள்கைகளைப் பரப்ப வும் நாடகம் ஒரு சிறந்த கருவியாகத் தேசியவாதிகளுக்குப் பயன்பட்டது. அதே நேரத்தில் வெறும் புராண இதிகாசக் கற்பனைக் கதைகளினால் மூழ்கியிருந்த நாடகமேடை விடுதலை பெற்று, புதிய கொள்கைகளுக்கும் கோட்பாடு களுக்கும் வழிகாட்டுவதாக அமைந்தது. தமிழ் மொழிக்கும் நாட்டுப்பற்றுடைய நாடகங்கள் கிடைத்தன. வீரம் என் னும் பெருமித உணர்வு ஓங்கி நிற்கவும், விடுதலை என்னும் தேசிய உணர்வு பொங்கிப் பெருகவும் நாடகமேடை களை மாக விளங்கியது. அடிமைப் பெருநாட்டை ஒரு சுதந்தரத் திருநாடாக்கும் முயற்சியில் நாடகாசிரியர்களும், நாடகக் கலைஞர்களும், இசைவாணர்களும் கைகோத்துப் பணிபுரிந் தனர். சுதந்தர வேட்கை வேள்வித் தீயாக வளர்ந்து தேசியக் கனலாகச் சுடர்விட்டு ஒளிர்ந்தது.

முன்னோட்டம் – தெருக்கூத்து

வீரபாண்டிய கட்டபொம்மன் பாஞ்சாலக்குறிச்சி பாளை யக்காரனாக இருந்து ஆங்கிலக் கம்பெனியாரை எதிர்த்துத் திறைகொடா இயக்கம் நடத்தி, அவர்களின் வீரத்துக்கு அறைகூவல் விடுத்துத் தன்னந் தனியனாகச் செய்த மாபெரும்

கிளர்ச்சி தென்னாட்டு மறவர்களிடையே புதிய எழுச்சியை உண்டாக்கிற்று.

மக்கள் அவன் வீரத்தைப் பாராட்டினர், அவனது சுதந்தர உணர்வை மதித்தனர். அவனது ஆற்றலைப் போற்றினர். அவன் ஆங்கிலேயரை எதிர்த்த வரலாறு அவர்களுக்கு வீரகாதை யாயிற்று. புரட்சி கீதமாயிற்று. எழுச்சிக் காவியமாயிற்று. இன்பக் கதைப் பாட்டாக மலர்ந்தது.

மாபெரும் படைநடத்த அந்தக் காலத்தில் மக்களிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பொருள் சேர்க்கவேண்டிய நிலை வந்ததால், கட்டபொம்மன் சில நேரங்களில் வன்முறையில் ஈடுபட நேர்ந்தது. அதன் விளைவாக ஒரு சாராரிடையே அவனுக்குக் கெட்ட பெயர் வந்தது. ஆனாலும், அவனது தியாகவுணர்வு தூக்குக் கயிற்றை முத்தமிட்டுக் கயத்தாற்றில் பிணமாகத் தொங்கிய வரலாறு நாட்டுப்புற மக்களின் நெஞ்சங்களில் — நாடி நரம்புகளில் — வீரப்பண் பாடியது. குருதி நாளங்களைப் புடைக்கச் செய்தது. நாட்டுப்புறக் கவிராயர்கள் அவன் வரலாற்றை எளிய முறையில் பாடி வைத்தனர், ஆனால், அதுவே மக்களிடையே உணர்ச்சி வெள்ளத்தைப் பெருக்கெடுத்தோடச் செய்தது. கட்டபொம்மன் பாடல்கள் பிற்காலத்தே தெருக் கூத்துக்கேற்ற கதையாயிற்று. புராண இதிகாசங்களிலிருந்து மாறுபாட்டினை விரும்பிய சுவைஞர்களுக்கு — அருச்சுனனையும், கர்ணனையும், துரியோதனனையும், இராமனையும், இராவணனையும், கந்தனையும், சூரனையும் கூத்தில் கண்டவர்களுக்கு — கட்டபொம்மன் கதைக் கூத்து ஒரு புதுவரவாக — வரலாறாக அமைந்தது.

நாடெங்கும் உள்ள சிற்றூர்களில் கட்டபொம்மனின் வீர வரலாறும், கதைப் பாடலும் ஒலித்துக்கொண்டே இருந்தன. மக்கள் நெஞ்சத்திலே சுதந்தரக் கனலை அணைய

விடாமல் நீறுபூத்த நெருப்பாக — நிலையாக வைப்பதற்குக் கட்டபொம்மன் கூத்துத் துணையாயிற்று.

பின்னர் ராஜா தேசிங்கு வரலாறும், இத்தோடு சேர்ந்து வட தமிழ் நாட்டிலும் தென் தமிழ் நாட்டிலும் ஒருசேர எழுச்சிக்கு வித்திட்டன எனலாம்.

பூலித்தேவன், கட்டபொம்மன், ஊமைத் துரை, பெரிய மருது, சின்ன மருது, ராஜா தேசிங்கு, திப்பு சுல்தான் முதலானோரின் வீர வரலாறுகள் ஒருபுறம் ஆங்கிலேயர் மீது எதிர்ப்புணர்ச்சியைப் பட்டி தொட்டியெங்கும் ஏற்படுத்தின. இன்னொருபுறம் பாளையக்காரர்களை எதிர்த்துப் போட்டியிட்டுப் பின் தானும் தனித் தலைவனாக விளங்கி, ஆங்கிலேயரால் தூக்கில் மாட்டப்பட்ட கான் சாகிபின் வீரமும் மக்களிடையே எழுச்சியை உண்டாக்கிற்று.

கட்டபொம்மனின் கதை தமிழகத்தில் பல வடிவங்களில் வழங்கி வருகிறது. கதைப்பாடல், வில்லுப்பாட்டு, கதைக்காவியம், கூத்து, மேடை நாடகம் என்றெல்லாம் எத்தனையோ வடிவங்கள் !

''கட்டபொம்மு கூத்து'' அடைக்கலபுரம் சிதம்பர சுவாமியால் இயற்றப்பட்டது. இதனை அறிஞர் நா. வானமாமலை அழகாகப் பதிப்பித்திருக்கிறார். அசல் நாட்டுப்பாடல் மரபில் — பாட்டும் உரை நடையும் ஆக விரவிச் செல்கிறது கூத்து.

> ''வெள்ளையர் போராட்டத்தில் உயிர் நீந்த கட்டபொம்முவையும் ஊமைத் துரையையும் மக்கள் நினைவில் வைத்திருந்தனர். இரவில் கும்மியடித்து அவர்கள் வீரத்தைப் பாடினர். இவ்வாறு பாடியவர்கள் கட்டபொம்மு சாதியைச் சேர்ந்த கம்பளத்தார் மட்டுமல்ல, எல்லோரும் பாடினார்கள் ''

என்கிறார் பதிப்பாசிரியர்.

வெள்ளையர் காலத்தில் கட்டபொம்மு நாடகத்தை நடிக்கவும் பாட்டைப் பாடவும் தடையிருந்தது. அதனால் இடையிடையே காலவர் செவிகளில் கட்டபொம்மனைத் தாக்கிப் பாடுவதுபோல் — வெள்ளையரைப் புகழ்ந்து பாடுவதுபோல் இசைப்பதுண்டு. இவ்வாறு காவலரை ஏமாற்றி விட்டு இக்கூத்து நாடகத்தை அக்காலத்தில் நடித்தனர்.

வீரம் இந்தக் கூத்து நாடகத்தின் அடிநாதம். ஆங்கிலேய எதிர்ப்பு ஊரெங்கும் அணையாமல் காத்தன பாடல் வரிகள் :

''ஊமைத் துரை யென்றன் பேரைச் சொன்னால்
ஊக்கம் பிறக்குமே மற்றவர்க்கு
கட்டபொம் மென்று பேரைச் சொன்னால்
கண்டவர் நெஞ்சம் திடுக்கிடுமே.''

என்று பாடுகிறான் ஊமைத் துரை. இவ்வாறு வீரக் களஞ்சியமாக அமைந்தது கூத்து.

கட்டபொம்மன், ஊமைத் துரை பிறப்பு முதல் நாடகம் வீறுநடை போடத் தொடங்குகிறது. ஆங்கிலேயருக்குக் கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சியில் தன்னிச்சையாக ஆட்சி நடத்துவது குறித்து இரகசிய ஓலைகள் போகின்றன. அவர்கள் சினங்கொண்டு இவனைத் தேடி வருகின்றனர். கட்டபொம்மனோ பல்வேறு இடங்களுக்கு அவர்களை வரச் சொல்லி அலைக்கழிக்கிறான். கடைசியாக, சாக்ஷன் மேஷர் துரைக்குப் பேட்டி தருகிறான். கடுமையான வாக்குவாதம் நடக்கிறது

''எங்கட் களித்திடும் கப்பங்களை
ஏழுவருடம் ஏனளிக்க வில்லை ?''

என்று சாக்ஷன் துரை கேட்கிறான். கட்டபொம்மன்,

'' வானம் பொழிய முப்போகம் விளையுது
மன்னவன் காணிக்கு ஏது பணம் ?
கால மழையிலே முப்போகம் விளையுது
கொற்றவன் காணிக்கு ஏதுபணம் ?
மாரிகள் பெய்தும் பெய்யாமலும் போவதை
மாற்றுதற்கோ கப்பம் வாங்குகிறீர் ? ''

என்று வினவுகிறான். பேச்சு முற்றிச் சண்டை மூள்கிறது. கட்டபொம்மு ஊமைத்துரையுடன் தப்புகிறான். பின்னர், அவன் செல்லுமிடமெல்லாம் துரத்தி வருகிறார்கள் சின்ன மெக்காலேயும் பெரிய மெக்காலேயும். கட்டபொம்முக் காகப் பாதர் வெள்ளை தான் மணமுடித்த சில நாளில் போருக்குப் புறப்படுகிறான். அப்போது தான் அவன் மனைவி,

''போகாதே போகாதே என்கணவா
பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்''

என்று பாடுகிறாள். தன் மனைவி சொன்ன சொற்களை மீறிப் புறப்படுகிறான் பாதர் வெள்ளை,

''உண்ட வீட்டிற்கு ரண்டகஞ் செய்து
உலகிலே உயிர் வாழலாகுமோ ?
ஆறிலுஞ் சாவுபின் நூறிலுஞ் சாவு என்ற
ஆன்றோர் பழமொழி கேட்டிலையோ ?
மாறிப் பேசாதே பேசினாலுனை
வாளுக் கிரையாக வைத்திடுவேன் ! ''

என்று ஆவேசமாகச் சொல்கிறான் வெள்ளையன். போகிற வழியில் அவன் சுந்தரலிங்கத்திடம்,

''சண்டைக்கு வந்தவன் காலன்துரை
சாகத் துணிந்தவன் பாதர்வெள்ளை''

என்று முழங்குகிறான். கட்டபொம்முவை வணங்கிவிட்டு விடை பெறுகிறான். அப்போது கட்டபொம்மு,

"மல்லிகை முல்லைப் புஷ்ப மணஞ்செறி கொண்டையிட்டு
கல்லினிற் ஜொலிக்கு முத்துக் கடுக்கனு மிலங்கக் கையில்
வல்லபம் பிடித்து நின்ற மைந்தனே உலக மீதே
வெல்வதும் தோற்பதும் விதிவச மாகை யாலே"

என்று அவனுக்குத் தொடர்ந்து அறிவுரை கூறி அனுப்பி வைக்கிறான். ஆனால், சண்டையில் காலன்துரையின் குண்டு களால் உயிரிழக்கிறான் வெள்ளையன். அப்போது வெள் ளையம்மாள் ஒப்பாரி வைத்துப் புலம்புகிறாள். கட்ட பொம்மு கொண்ட துயருக்கு அளவில்லை,

"தம்பி தம்பி ஊமைத்துரை
சங்கடம் நேர்ந்ததைப் பார்த்தனையா?
கோடி தவங்கள் செய்தாலும்
கொற்றவன் போலக் கிடைத்திடுமோ?"

என்று துடிக்கிறான் பொம்மன். புதுக்கோட்டைத் தொண்டமான் கட்டபொம்மனை ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுத்து விடுகிறான். கட்டபொம்மன் கயத்தாற்றிலே தூக்கிலிடப்படுகிறான். இறுதிப்பாடலில்,

"தெய்வீகக் கட்டபொம்மு தீரம் வாழி
ஏர்வாய்த்த ஆங்கிலேய அரசும் வாழி"

என்று பாடப்படுகிறது. ஆங்கிலேயரை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்திய கட்டபொம்மனது தீரத்தை வாழ்த்தும் அதே நேரத்தில் 'ஆங்கிலேய அரசும் வாழி' என்று பாடப் படுகிறது. இவ்வாறு வாழ்த்துப் பாடாவிட்டால் இந்த நாடகத்தையே நடத்த முடியாமற் போய்விடும். எனவே, கூத்து அனுமதிக்கப்படவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் இந்த வகையில் பாடுவது அன்றைய வழக்கமாக இருந்திருக்க வேண்டும்.

விடுதலை இயக்கத்தின் முதல் நாடகமாமகக் கருதத் தக்கது 1894ஆம் ஆண்டு எழுதப்பட்ட 'ஶ்ரீ ஆர்ய சபா' என்னும் நாடகம். ''இஃது இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் விஷயமாக ஓர் தமிழ்ப் பண்டிதரால் இயற்றப்பட்டது'' என்னும் முகப்புப் பக்கத்தைக் கொண்டதாக இருக்கிறது. பின்னாளில் இந்திய விடுதலைப் போராட்டத்தை முனைப் போடு செய்த காங்கிரசு இயக்கம் தொடங்கப்பெற்ற பத் தாண்டுக் காலத்திற்குள் இந்தியா முழுவதும் பரவிவிட்டது. இருப்பினும் சிற்சில இடங்களில் மக்களுக்கு அதன் நோக்கம், குறிக்கோள், செயற்பாடுகள் ஆகியன புலப்படாமலேயே இருந்தன. அவற்றைத் தெளியவைக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் இயற்றப்பட்டதே இந் நாடகம்.

இத்தகைய கருத்தமைந்த நாடகம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இஃது ஒன்றுதான் வெளியானது. பின்ன ருங் கூடக் கொள்கை விளக்க நாடகமாக எவருந் துணிந்து எழுதவில்லை. எனவே, இந்த நாடகம் வரலாற்றுச் சிறப் புடையதாக விளங்குகிறது.

நூலாசிரியர் என்ன காரணத்தாலோ தம் பெயரை முதற் பதிப்பில் வெளியிடத் தயக்கம் காட்டியிருக்கிறார். நூலில் அப்படியொன்றும் ஆங்கில அரசை எதிர்க்கும் நோக்கமோ, இந்திய விடுதலை பற்றிய குறிப்போ இல்லை. இருப்பினும் ஆசிரியர் ''ஓர் தமிழ்ப் பண்டிதர்'' என்னும் போர்வைக் குள் தம்மை மறைத்துக் கொண்டார். ஆயினும் முதல் காட்சியில் விதூடகன் மனைவி உரையாடலில் ''செய்தவர் எந்த மகாபுருஷர்? அறிய, பிரியப் படுகிறேன்!'' என்று கேட்க,

" பொன்னிநன் னாட்டின் நல்ல பூசுரர் குலத்துத் தோன்றித்
தொன்னெறிப் பட்டோர் வாழும் தொண்டை நாடதனை [மேவிப்
பன்னிய தமிழோ டாரியம் பயன்செய்யும் ஆங்கி லேயம்
பன்னியே யறிந்த சீர்க்கோ பால வேதியன்செய் தானே "
(ப. 6)

என்கிறான் விதூடகன்.

இதனால் நூலாசிரியர் பொன்னி பாயும் தஞ்சையைச் சேர்ந்தவர் என்பதும், அவர் ஒரு பிராமணர் என்பதும், பின் தொழில் நோக்கத்தோடு தொண்டை நாட்டுக்கு- அதாவது சென்னைத் திருவல்லிக்கேணிக்கு வந்தவர் என் பதும், தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியவற்றில் தேர்ந் தவர் என்பதும், இயற்பெயர் 'கோபாலன்' (கோபாலாசார் யன்) என்பதும் அறியப்படுகின்றன.

ஆசிரியர் தாம் இந்த நூல் எழுதியதற்கான காரணத்தை முகவுரையில் தெளிவுபடுத்துகிறார் :

''கல்வி கேள்விகளில் வல்லவர்க்கும் கல்லார்க்கும் மற்றெல்லார்க்கும் விநயமாய்ச் சொல்லுவதொன்று :

சென்ற பத்து வருஷங்களாய் இவ் விந்தியாவில் எல்லாப் புறத்தும் உலாவிவரா நின்ற இந்தியன் நாஷ னல் காங்கிரெஸ் என்னும் சபையின் நோக்கங்களும் காரியங்களும் கற்றறிந்தார் பலரும் அறிவரேனும், அதன் நோக்கங்களையும், செய்கைகளையும் அறிந்து கொள்ளாதவர் பலர் நம் தேசத்தில் உளரன்றோ ? அன்னோர் அச்சபையின் வரலாறுகளை ஒருவாறு அறி யலாம் படிக்கும், ஏனையோர் ஒழிவான வேளைகளில் உல்லாசமாய்ப் பொழுதுபோக்கலாம் படிக்கும் இருக்கு மாறு, இச் சென்னையின் கண் உள்ள பல நண்பர் பலமுறை தூண்டி உற்சாகப்படுத்தினமையாலும், இங் கிலீஷ் முதலிய பல பாஷைகளில் உள்ளன போல் நம்

பாஷையிலும் அரசு முறை விஷயங்களை உட்கொண்ட நாடகங்கள் ஜனங்கட்கு இன்பம் பயக்குமென அன்னோர் கூறியதனாலும் இச் சிறுநூல் இயற்றப்பட்டது.

இதன் கண் நாடகத்திற்குரிய இலக்கணங்களெல்லாம் நன்கமையா வென்னிலும், இவ்வகை நூலை நன்கியற்ற வல்லோர் நம் நாட்டில் பலருளராதலின், அவர்கள் இத்தகைய செய்கையின் முயல, இஃது ஓர் ஞாபகக்குறி ஆகலாம்''

இந்த முகவுரை ஆசிரியர் நாடகம் எழுதியதன் நோக்கத்தை நன்கு உணர்த்துகிறது.

இந்த நாடகம் ஐந்து அங்கங்களைக் கொண்டது. ஓவ்வொர் அங்கத்திலும் இரண்டிரண்டு களங்கள் உள்ளன. அங்கம் ஓவ்வொன்றிற்கும் பக்க எண்கள் தனித் தனியே தரப்பட்டுள்ளது. நாடக நூலில் மொத்தம் 110 பக்கங்கள் உள்ளன.

ஆசிரியர் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவராக இருக்க வேண்டும். ஏனெனில் முதலங்கம் முதற் களத்தில் சூத்திரதாரன் தோன்றும் போது, ''நக்ராக்ராஸ் தேகலீந்த்ரே'' என்னும் திருமால் வாழ்த்து தெலுங்கில் அமைந்துள்ளது. பின் அதன் தமிழ்மொழி பெயர்ப்பும் தரப்படுகிறது.

'' சங்கொடு திகிரி அங்கையிலேந்தித் தண்டுழாய் மணியணிந்
[தெழின்மெய்

தங்குமா மலராளுட னெழுந்தருளித் தாசனே னிடர்
[கெடத் தரணி

எங்கும் நல்லறமே யோங்கி எந்நாளும் இன்புறச் சேவை
[தந்தருளாய்

பங்கய நயனன் பன்னக சயனன் பதந்தனை நினைந்திடு
[வேனே''

என்று பாடுகிறார். பின்,

''கற்றவர்க டாயே கமலா சனன்தேவீ
நற்றவர்கள் கொண்டாடு நாயகமே — வெற்றிபெற
நாடகத்தை நற்றமிழில் நானியற்ற நாளுமென்றன்
வாடகத்தி லேமகிழ்ந்து வா''

என்பது கலைமகள் வாழ்த்தாக வருகிறது. இவ்விரண்டு பாடல்களும் ஆசிரியர் இனிய தமிழில் பாடல்கள் இயற்ற வல்லவர் என்பதைக் காட்டுகின்றன.

ஆனால், நாடகத்தின் நடை எப்படிச் செல்கிறது என் பதற்கு வேறொரு சான்று காட்டலாம். நாடகத்தைப் பற்றிச் சூத்திரதாரன் பின்வருமாறு பேசுகிறான் :

''நாடகமென்றால் சாமான்யமன்று. முற்காலத்து கீர்வாண பாஷையில் காளிதாசன், பவபூதி, முராரி ப்ரப்ருதிகளாலும், ஆங்கிலேய பாஷையில் ஷேக்ஸ்பியர் முதலிய சில கவிவாணராலும் செய்யப்பட்ட நாடகங் களில், எந்த எந்த சந்தர்ப்பங்களில் எவ்வித வார்த்தை களை ப்ரயோகிக்க வேண்டுமோ, நடைநொடி பாவ னைகளைக் காட்ட வேண்டுமோ அவ்வாறான ஸரஸ சாதுர்ய மாதுர்ய வசனங்களாலும் செய்கைகளாலும் சபையோரை ரஞ்சிப்பித்து அழியாப்புகழை யடைந் தனர்''

சூத்திரதாரனின் இந்தப் பேச்சு ஆசிரியரின் மொழிநடைக் கொள்கையைத் தெளிவாக்குகிறது.

ஆனால் இப்படி வடசொற் கலந்து எழுதும் ஆசிரியர் அடுத்த நொடியில் அவையடக்கமாகப் பேசும்போது,

> ''இம் முயற்சி திடனிலாத முடவனொருவன் இடமகன்ற கடலைக் கிட்டி, புணையொன்று பெற்று, துணையென்று பற்றி, அணையேற எண்ணினதற்கு இணையாக இருக்கின்றது''

என்று அழகிய தமிழில் கூறுகிறார். 'பிரதாப சந்திர விலாசத்தில்' வரும் சுதேசமித்திரர் போல இங்கே வரும் சூத்திர தாரனும் மக்களின் ஒற்றுமை குறித்துப் பேசுகிறான்.

> ''ஜனங்கள் அமரிக்கையாய்த் தங்கியிருப்பது வெகு ஆச்சரியம்.
>
> இந்தத் தேசத்தில் ஜனங்கள் இவ்வளவு ஒற்றுமையாய்ச் சேருவதில்லையே, இதேது நல்ல காலமாயிருக்கிறது''

என்பது மக்கள் பற்றிய கணிப்பாக இருக்கிறது.

நாடகத்தில் வரும் சூத்திரதாரன் இயல்பும் பணியும் யாது என்பதனை ஆசிரியர் முதற்களத்தில் விளக்குகிறார் :

> ''சூத்ரதாரன் என்பதற்கு நூலைப் பிடிப்பவன் என்பது பொருள். அதாவது மாடமாளிகை, கூடகோபுரம் முதலிய கட்டடம் கட்டுவோன் முன்னால் அளவு நூலைப் பிடித்து ஒழுங்கு பார்த்து, பின்பு அவ்வளவுப் படி கட்டி முடிப்பது போல, ஒரு நாடகச் சங்கதிகளை ஸங்க்ரகித்து முற்படக் கூறி, பின்பு அதன் விபரத்தைப் பாத்திர மூலமாய் ஆட்டிக் காட்டுபவனல்லவா சூத்ரதாரனென்று சொல்லப்படுபவன்''

இந்த விளக்கமும் இதற்குமுன் நாடகாசிரியர்கள் பற்றி ஆசிரியர் கூறிய விளக்கமும் இவருக்கு இருந்த நாடகப் புலமையைத் தெரிவிக்கின்றன. ஆசிரியருடைய அழகிய நடைக்கு இன்னும் ஒரு சான்று,

> "கரும்பு கோணலானாலும் அதன் ருசி கோணுமோ? கொம்பு கோணினாலும் அதன் கூர்மை கோணுமோ? வில்லு கோணினாலும் அதன் வேகமும் வேலையும் கோணுமோ? என் சொல்லு கோணலானாலும் அதன் பொருள் கோணாது தெரியுமா?"

இந்த விதூடகன் கூற்று ஆசிரியரின் உவமை நயத்திற்கும் சான்றாகிறது.

முதலங்கத்தின் இரண்டாங் களத்திலேயே ஆசிரியர் தம் பிரச்சாரத்தைத் தொடங்கி விடுகிறார். வேதபுரத்தில் ஓர் அழகிய மண்டபம். அங்கே,

> "காங்க்ரெஸ் காங்க்ரெஸ் என்று எங்கே பார்த்தாலும் ஏக அமளியா இருக்கிறதையா? அதென்ன? அதன் சங்கதி என்ன ஐயா?"

என்று தொடங்குகிறார்.

விசுவேசுவர சாஸ்திரிகளின் இந்த வினாவிற்கு விளக்கம் தருகிறார் ப்ரமைகாந்தி பட்டாச்சாரியார். சட்ட நிருபண சபையில் அதிக உறுப்பினர் இந்தியர்க்குக் கிடைத்தமை பற்றியும், தாசில்தார் மாஜிஸ்ட்ரேட்டுகளின் அதிகாரங்கள் நீக்கப்பட்டது பற்றியும், வேறு பல நன்மைகள் பற்றியும் அவர் விளக்குகிறார். அது மட்டுமல்லாமல் "இங்கிலிஷ் படிப்பதனாலே உத்யோகம் செய்து பணம் சம்பாதிப்பது மாத்திரமன்று. அதனால் இன்னும் எத்தனையோ நன்மைகளை அடையலாம்" என்று தொடங்கி அம் மொழியின் பெருமைகளைக் கூறுகிறார்.

இரண்டாம் அங்கம் பரத்புரத்தில் ஒரு கடையில் நடப்பதாக அமைகிறது.

'' காங்கிரஸின் சபையைப் போலக்
காணவும் சபைவே றுண்டோ ?
காங்கிரஸை நடத்து வோர்போல்
கனவான்கள் வேறு முண்டோ ?
காங்கிரெஸின் பயனே போலக்
கருதவும் பயன்வே றுண்டோ?
காங்கிரஸென் சொல்லா லெல்லாக்
கஷ்டமும் போகும் தானே ! ''

என்கிறார் சின்னக்கண்ணி ராவுத்தர். அடுத்த காட்சியில் வர்த்தனபுரி என்னுமிடத்தில் வாசாலகர் என்பவரின் அலுவலகம். இதில் 'பிரதிநிதி ஸ்தாபனம்' பற்றியும், அரசி விக்டோரியாவின் பெருமை பற்றியும் பேசப்படுகின்றன.

''தேசம் புகழும் செல்வி விக்டோரியா
செங்கோன்மை யென்ன சொல்வேன் ? ''

என்பது இராணியின் செங்கோலாட்சியை வியந்து பேசுகிறது.

ஹிதகரர்,

''எந்தத் துரைத்தனத்தில் இப்படிப்பட்ட நன்மைகள் உண்டாகி யிருந்தன ? பாரும். தபால் ஸ்தாபனமென்ன, ஒரு தந்தி ஸ்தாபனமென்ன ? ரெயில் வந்து போகிற அதிசயத்தைப் பாரும் ? இவைகள் எல்லாம் என்ன சாமான்யமான காரியங்களா ? எந்த ராஜாக்கள் காலத்தில் இவைகள் உண்டாயிருந்தன ? இவைகளை யெல்லாம் யோசிக்காமல் வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று இங்கிலீஷ் துரைத்

> தனத்தில் என்ன நன்மை உண்டாகியிருக்கிறதென்கிறீர் ? ''

என்று கூறி மகிழ்கிறார். இவ்வாறு பல செய்திகளைச் சொல்லியும் அநுகூலர் மனம் நிறைவடையவில்லை. கடைசியாக, ஹிதகரர், ''இந்த எழவுக்குத்தான் பேப்பரை வாங்கிப் படியுங்கள் என்றால் படிக்கிறதில்லை. பொது நன்மையை நாடிச் செய்யும் சபைகளுக்கு வாருங்கள் என்றால் வருகிறதில்லை'' என்று அலுத்துக் கொள்கிறார்.

மூன்றாவது அங்கம் முதற் காட்சி ஒரு பூந்தோட்டத்தில் மாலை நேரத்தில் நிகழ்கிறது. அடுத்த காட்சியில் சைவ-வைணவ வாதமிடுகின்றனர் இரண்டு நாடக மாந்தர்கள். இதனைக் கண்டு வெறுப்படைந்த வாசாலகர்,

> ''மதம் மதமென்று மிதமில்லாமல் மதங்கொண்டு அதங்கொண்டு போராடுவதால்தான் இதமிழந்து, பதமிழந்து நிதமும் நைந்து அதமாகிறார்கள்''

என்று அவர்களைக் கண்டிக்கிறார்.

நான்காம் அங்கம் முதற்காட்சி தனாலயர் வீட்டில் நடைபெறுகிறது. வடநாட்டு ஜமீன்தார்களோடு தென்னகத்து ஜமீன்தார்களை ஒப்பிட்டு,

> ''ஆரம்ப சூரர்கள். ஏதாவது ஒன்றைச் செய்ய ஆரம்பித்தாலும் பிறகு போகப் போக ஊக்கமழிந்து எடுத்த காரியத்தை விட்டு விடுகிறார்கள்.... அதனால்தான் ஐரோப்பியர்களுக்கு இவர்களிடத்து மதிப்பு இல்லை, பயமும் இல்லை.''

என்று பேசுகிறார் ஸமர்த்தர். தாதாபாய் நௌரோஜீயின் பெருமை இந்தக் காட்சியில் பேசப்படுகிறது.

இவ் வங்கத்தின் இரண்டாம் காட்சி நான்கு பக்கங்கள்; முழுவதும் ஆங்கில உரையாடல். ஜேக், ஜான், கில் என்னும் மூவர் இதில் பங்கேற்கின்றனர். ஜேக் இந்தியருக்கு எதிராகப் பேசுகிறான், ஜான் இந்தியருக்கு ஆதரவாகப் பேசுகிறான்.

ஐந்தாவது அங்கம் முதற்காட்சி வாசாலகருடைய வீட்டில் நடைபெறுகிறது. அதன் இரண்டாம் காட்சி 'காங்கிரஸ் கமிட்டி ஆபீஸில்' நிகழ்கிறது. மாநாட்டில் கொண்டுவர வேண்டிய தீர்மானங்கள் அதில் முடிவு செய்யப்படுகின்றன, அவற்றின்மீது விவாதங்கள் நடக்கின்றன.

சட்ட நிருபண திருத்தம் பற்றியும், ஜூரிகளில் இந்தியர் இருக்க வேண்டியது பற்றியும், மக்களை வாட்டும் வரி உயர்வு பற்றியும் முதலில் பேசுகின்றனர். பின், ஐ.சி.எஸ். தேர்வு, உயர் பதவிகளுக்குப் போட்டித் தேர்வு, புரவின்சியல் சிவில் சர்வீசில் மாற்றங்கள், ரெவின்யூ மேஜிஸ்ட்ரேட்டுகளின் அதிகாரம், தகுதி வாய்ந்தவர்களை மட்டும் ஜட்ஜுகளாக நியமித்தல், உயர் கல்வி, தரும சொத்துக்களைச் சிறந்த முறையில் நிருவகித்தல், ஆலோசனை சபையை ஒழித்தல், அரசு செலவில் தங்கள் மதத் தொடர்பான துறை வைத்திருப்பதை நீக்குதல் என்பன பற்றியெல்லாம் தீர்மானங்கள் கொண்டுவரப்படுகின்றன.

இந்த நாடகத்தில் ஆங்கில ஆட்சி போற்றப்படுகிறது; இராணி பாராட்டப்படுகிறாள். இருப்பினும் உரிமைகளுக்காகக் காங்கிரசு போராடுகிறது — மக்கள் நலனுக்காகவே அது இயங்குகிறது என்னும் கருத்து மிகவும் சிறப்பாக வலியுறுத்தப்படுகிறது.

''தேசாபி மான மறிவு ஐக்ய முதலானநற்
செம்மைகள் எடுத்துரைத்துச்
சென்னை முதலான பல நன்னகர் சிறக்கத்
திறங்கொள் ஆங்கிலேய அரசே !

தேசாரு மறிவூட்டி நெறிகாட்டி நலமீட்டித்
திகழ்கூட்டிப் புகழ்நாட்டியே
செயநீட்டிப் பயம்வீட்டிப் பரமேட்டி யருள்ஆட்டு
திறவாட்டி பெருமாட்டியே !
வாசாம கோசர குணானந்த சாகரீ
மகிமையுறு கருணாகரீ !
வளர்கின்ற சீகரி ! சேகரி எனயாரும்
வாழ்த்தும் விக்டோரியம்மே !
பேசா தரங்கொண்ட இந்துஜன பூஷணீ !
பெண்மணி மனோன்மணிமிகப்
பேணவரு கண்மணி யுன்வாழ்வு பெருகிட இறைவன்
பேரருள் செய்வானாகவே ! ''

என்னும் இரட்டையாசிரிய — பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் விக்டோரியாவின் பெருமை கூறி வாழ்த்துவதாக அமைகிறது.

ஆரிய சபா நாடகம் சென்ற நூற்றாண்டின் இறுதியில் — சம்பந்த முதலியார் நாடகம் எழுதத் தொடங்கிய பிறகு — சுந்தரம் பிள்ளை மனோன்மணீயம் தீட்டிய பிறகுதோன்றிய நாடகம் ஆகும். அவர்கள் இலக்கிய நாடக வளர்ச்சியை நோக்கினார்கள்; மேடை நாடக வளர்ச்சியை நோக்கினார்கள்; ஆனால், இவ்வாசிரியரோ, காங்கிரஸ் இயக்கவளர்ச்சி ஒன்றையே நோக்கினார்.

நாடகத்தில் பாடல்கள் குறைவாக இருப்பது கருதத்தக்கது, பதினைந்து விருத்தங்களும், பன்னிரண்டு இசைப் பாடல்களும், ஒரு வெண்பா, ஒரு வஞ்சிப்பா ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. காங்கிரசு பிரச்சாரத்திற்கு உரை நடையே போதுமென்று ஆசிரியர் கருதியிருக்கலாம்.

நாடகத்தில் வளமான செந்தமிழ் நடையும் உண்டு; வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையுமுண்டு, ஆரவார மான அடுக்குமொழியும் உண்டு, ஆங்கிலம் மட்டுமே உள்ள ஒரு காட்சியும் உண்டு.

> ''ஒரு வகையில் பன்மொழிகளின் ஜலதரங்கமாக அமைந்த இந் நாடகத்தில் சுவைமிக்க சத்தான செழு மையான தமிழ்நடையும் ஆங்காங்கு காணப் படுவது திறனாய்வாளரைத் திணற அடிக்கிறது.''

என்னும் கருத்து ஓரளவு உண்மையே. ஆனால், அந்தக் காலத்தில் எவர் தமிழ்த் தூய்மையைக் கருதினவர் என் பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சுந்தரம் பிள்ளை உட்பட அனைவரும் வடமொழி கலந்த நடையையே பின் பற்றினர் என்னும்போது மொழித் தூய்மையை இங்கே எதிர்பார்ப்பது பொருந்தாது.

ஆரிய சபா நாடகம்,

1. முதல் தேசியத் தமிழ் நாடகம்; தேசிய இயக்கம் பற்றிய தமிழ் நாடகம்.

2. அன்றைய காங்கிரசின் கொள்கை விளக்கமாக அமைந்ததே அன்றி விடுதலையுணர்வு இதில் அறவே இல்லை. சுயராஜ்யம், சுதந்தரம், சுயாட்சி ஆகிய கொள்கைகள் தோன்றுவதற்கு முன்னர் நாடகம் எழுதப்பட்டதே அதன் காரணம்.

3. ஆசிரியர் கூறுவது போலப் பிற்கால நாடகாசிரியர் களுக்குக் கொள்கை விளக்க நாடகம் தீட்டுதற்கு 'இது ஞாபகக் குறி' யாக விளங்குவது ஆகும்.

4. நாடகத்திற் கதையொன்று மில்லை ; ஆனால் கருத்துக்கள் மனம் கவரத்தக்க வகையில் சொல்லப்பட்டுள்ளன.

5. நாடகத் துறையில் ஒரு புதிய நெறியை இந் நாடகம் உருவாக்கியுள்ளது.

6. பிரம்ம சமாஜ நாடகத்திற்குப் பின் ஒரு முழுநீளப் பிரச்சார நாடகம் இதுவே.

7. இந்திர சபா, பத்மினி சபா என அக்கால நாடகங்களுக்குப் பெயரிடுவது மரபு. அந்த முறையைப் பின்பற்றியே ஆசிரியர் இதற்கு 'ஸ்ரீ ஆர்ய சபா' என்று பெயரிட்டுள்ளார்.

1906ஆம் ஆண்டு கல்கத்தா காங்கிரசு மாநாட்டில் தான் முதன்முதலாக விடுதலை என்னும் குறிக்கோள் வெளியிடப் பட்டது. சுயராஜ்யம் இந்தியருக்கு அளிக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கை அப்போதுதான் எழுந்தது. இதுவே ஆங்கில அரசுக்கு ஆத்திரமூட்டியது. திலகர், லஜபதி, விபின் சந்திர பால் முதலானோர் சிறைப்படுத்தப்பட்டனர். திலகர் ஆறு ஆண்டுகாலம் நாடு கடத்தப்பட்டார்.

1907ஆம் ஆண்டு சூரத் மாநாடு நடந்தது. இந்த மாநாட்டில் காங்கிரசார் இரு பிரிவினராயினர். திலகர் முதலானோர் தீவிர வாதிகள் குழுவினராகவும், கோகலே முதலானோர் மிதவாதிகள் குழுவினராகவும் பிரிந்தனர்.

சுதந்திர உணர்வு நாடெங்கும் பரவியது; தேசியத் தலைவர்கள் பலர் ஆங்காங்கே உருவாயினர்.

1919இல் ஜாலியன்வாலாபாக் படுகொலை நிகழ்ந்தது; முதல் உலகப்போரும் முடிவுக்கு வந்தது.

1920இல் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம் நடத்தினார். அன்றுமுதல் அடிகள் காட்டிய வழியில் நாடு நடக்கத் தலைப்பட்டது.

1927இல் சைமன் கமிஷன் அமைக்கப்பட்டது. 1928இல் அக்குழு வந்தபோது எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அப்போது நிகழ்ந்த தடியடியில் லாலா லஜபதி ராய் தாக்குண்டு இறந்தனர்.

1929இல் லாகூர் காங்கிரசு மாநாடு பண்டித நேரு தலைமையில் நடந்தது.

1930இல் தண்டி யாத்திரை நடந்தது, தமிழகத்தில் வேதாரண்யம் வரை உப்புச் சத்தியாக்கிரகம் வெற்றிகர மாக நடைபெற்றது.

அந்நியப் பொருள்கள் 'பகிஷ்காரம்' செய்யப்பட்டன, கதராடையே அணிய வேண்டும் என்னும் கருத்து எங்கும் பரவியது. இராட்டை கொண்டு சொந்தமாக நூல் நூற்று ஆடை தரிக்க வேண்டும் என்று காந்தியடிகள் வற்புறுத்தி னார். அந்நியருக்கு இந்தியா வணிகச் சந்தையாக ஆகக் கூடாது என்றெல்லாம் கருத்துகள் ஒலிக்கப்பட்டன. ஆங்கி லேயர் அரசு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. அதன் விளைவு எங்கும் மக்கள் பொங்கி எழுந்தனர். எல்லா இடங்களிலும் போராட்டமும் குமுறலும் கிளர்ச்சிகளும் நடந்த வண்ணம் இருந்தன. இந்த நிலையிலேயே தமிழ கத்தில் விடுதலைப் பணி வேகமாக நடைபெற்றது.

1906ஆம் ஆண்டு கல்கத்தா மாநாட்டில் 'சுயராஜ்ய' முழக்கம் எழுப்பப்படும் வரை காங்கிரசின் குரல் உரிமைக் குரலாக ஒலிக்க வில்லை. எனவேதான், 1906 சனவரி 29ஆம் நாள் இந்தியா வந்த வேல்சு இளவரசர் ஆகிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்க்குப் பாரதியார் ''வேல்ஸ் இளவரச ருக்குப் பரத கண்டத்தாய் நல்வரவு கூறுதல்'' என்னும் பாடலைப் பாடினார். ஒருவரை வரவேற்கும் இயல்பான மரபு இது. 1907இல் திலகர் தீவிரவாதியாகிச் 'சுயராஜ் யம் எனது பிறப்புரிமை' என்று கூறியதிலிருந்து தான் பாரதி யார் அவ்வணியினைச் சேர்ந்து விடுதலை இயக்கப் பாடல் களைப் பாடினார். எனவே, 1906ஆம் ஆண்டின் தொடக் கத்தில் — கல்கத்தா, சூரத் மாநாடுகளுக்கு முன் — பாரதி வேல்ஸ் இளவரசரை வரவேற்றுப் பாடியதில் தவறொன்று மில்லை. இதனை நாம், 'சுருதிபேத' மாகவோ, தொழு கைக்கு எடுத்துவந்த கூடைக் கனியில் ஓர் 'அழுகிய கனி'

யாகவோ — அறிஞர் கா. திரவியம் (தேசியம் வளர்த்த தமிழ், ப. 28) கருதுவதுபோல் — கருதத் தேவையில்லை.

இந்தப் பின்னணியில் 1907க்குப் பின் தமிழக மேடை நாடகத்தில் ஒரு புதிய எழுச்சி உண்டாயிற்று. 1921 வரை வாழ்ந்த பாரதியார் ஏடுகள் வாயிலாகவும், தனி நூலாகவும், எழுதித் தந்த சுதந்தரப் பாடல்கள் நாட்டில் எங்கும் முழங்கின; கவிஞர் பலர் இயற்றிய வேறு பாடல்களும் மேடைகளில் பாடப் பெற்றன. தமிழ் நாடக மேடைகளையும் அப் பாடல்கள் ஈர்த்தன.

தேசியக் கலைஞர்கள் விடுதலைப் பாடல்களை அச்சமின்றி ஆவேசக் குரலில் பட்டி தொட்டிகள் எங்கும் தயங்காமல் — தடியடிகட்குக் கொஞ்சமும் தளராமல் — பாடினர்.

நாடகங்களில் விடுதலைப் பாடல்கள் — விடுதலை வீரர்களைப் பற்றிய எழுச்சிமிக்க பாடல்கள் — பாமரரையும் போருக்குத் துள்ளி எழச்செய்யும் பாடல்கள் இடம்பெற்றன. அது புராண நாடகமாயினும், இதிகாச நாடகமாயினும், வரலாற்று நாடகமாயினும், எச்சமயக் கொள்கை பற்றிய நாடகமாயினும் விடுதலைப் பாடல்களை இடையிடையே கலைஞர்கள் பாடினர். அடக்குமுறை மிகுதிப்பட, கலைஞர்களும் மிக்க ஆவேசத்துடன் இப்பாடல்களைப் பாடத் தொடங்கினர். பாரதியார் பாடல்களிலிருந்து அந்தந்த நாடகாசிரியர்கள் பாடிய பாடல்கள் வரை இடத்திற்குத் தக்கவாறு அவை பாடப்பட்டன; எந்தவிதத் தொடர்புமில்லாமலும் மக்கள் விருப்பத்தை யறிந்து அவை பாடப் பட்டன.

தமிழகக் கலைஞர்கள் தாம் வேறு எவருக்கும் — எந்த மாநிலத்தவர்களுக்கும் விடுதலையுணர்வில் பின்தங்கியவரல்லர் என்பதைத் தம் செயல்களால் காட்டினர்.

மதுர பாஸ்கரதாஸ், பூமி பாலகதாஸ், ராஜா சண்முக தாஸ், இலட்சுமணதாஸ், இசக்கிமுத்து வாத்தியார், ரங்க ராஜ் வாத்தியார், சந்தானகிருஷ்ண நாயுடு,கோவை அய்யா முத்து, ஆதிமூலம் முதலான பலர் இத்தகைய விடுதலைப் பாடல்களை எழுதித் தந்தனர். பாரதியார்,பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், சுத்தானந்த பாரதியார், எஸ். டி. சுந்தரம் முதலானவர்களின் பாடல்களும் மேடையில் பயன் படுத்தப்பட்டன.

''ராட்டினத்தைச் சுற்றிப்பசி யோட்டுவோமே-சுய
ராஜ்யக் கொடியை நிலை நாட்டுவோமே !
நாட்டினின் பாரதவீரம் காட்டுவோமே—இந்
நாளில் நம் அடிமைத்தனம் ஓட்டுவோமே !
எழிலாரு மஹாத்மா காந்தி
இயம்பிய மந்திர மேந்தி
வந்தே மாதரம் அல்லாஹு அக்பர்
மகாத்மா காந்திக்கு ஜே ஜே ஜே என்று''
(ராட்டினத்தை)

என்னும் பாடல் கதர் பக்தி நாடகத்தில் இடம்பெற்ற பாடலாகும்.

''விரிகடல் நீருக்கு வரி கொடுத்தால் — நாளை
வெயில் மழை காத்துக்கும் வரிவிதிப்பார் ''

என்றும்,

''பகதூர் பகத் சிங்கம்—தேச
பக்தி மான்கள் தங்கம்
சுகதேவ் ராஜகுரு
தோழமை இயங்கும் ! ''

என்றும் தொடங்கும் பாடல்கள் மேடைகளில் முழங்கப் பட்டன.

''கொக்கு பறக்குதடி பாப்பா — அதன்
குறிப்பை உணர்ந்துகொள்ளாய் பாப்பா ''

என்று உருவகமாக ''வெள்ளைக் கொக்குகள் — வெள்ளைப் பரங்கியர்'' என்ற நிலையில் பாடப்பட்டது.

''காந்தியோ பரம ஏழை சன்யாசி
கடவுளின் பிரதிநிதி யான விசுவாசி ''

என்றும்,

''கதர்க்கப்பல் கொடி தோணுதே''

என்றும்,

''ஆடு ராட்டே சுழன்றாடு ராட்டே — சுய
ஆட்சியைக் கண்டோமென்றாடு ராட்டே ''

என்றும் தொடங்கும் பாடல்கள் பற்பல அக்காலத் தமிழ் நாடக மேடைகளில் முழங்கி மக்களிடையே உணர்ச்சி வெள்ளத்தைப் பெருக்கெடுக்கச் செய்தன.

அந்தக் காலத்து ஆயலோட்டும் வள்ளி — புராண காலத்து வள்ளியாக மட்டுமில்லை,நாட்டைக் கொள்ளையடிக்க வந்த வெள்ளையர்களை விரட்டும் வள்ளியாகவும் இருந்தாள். அவள் பரண் மீதேறிக் கிளிகளையும், கொக்குகளையும், குருவிகளையும் விரட்டுவது மரபு. ஆனால் அவர்கள் அந்தக் காலத்தில் பாடும் பாடல்கள் ஆங்கிலேயரை விரட்டும் விடுதலை முழக்கங்களாகவே ஒலித்தன. வள்ளி திருமணம் மட்டுமல்ல, வேறு நாடகங்களிலும் இவ்வாறே தேசிய விடுதலைப் பாடல்கள் பாடப்பெற்றன.

எஸ். எஸ். விசுவநாத தாஸ், எம். எம். சிதம்பரநாதன், கே. எஸ். அனந்தநாராயண அய்யர், எம். பி. அப்துல் காதர், எஸ். ஜி. கிட்டப்பா, கே. பி. சுந்தராம்பாள், பி. யு. சின்னப்பா, டி. எம். காதர் பாட்சா, பி. எம். கமலம், டி. ஆர். கோமளம், எஸ். ஆர். ஜானகி, எம். ஆர். கமல வேணி, அவ்வை தி.க. சண்முகம் உட்பட எண்ணற்ற கலைஞர்கள் விடுதலை இயக்கப் பாடல்களைத் தமிழ் மேடை நாடகங்களில் பாடி மக்களை எழுச்சி கொள்ளச் செய்தனர்.

இவர்கள் பாடிய விடுதலை இயக்கப் பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பட வேண்டும். இவை தனி ஆய்வுக்கு உரியன.

பிரச்சார நோக்கத்திற்காக 'ஆரிய சபா' போன்ற நாடகம் எழுதுவது வேறு; ஆனால், தொழில் முறையிலேயே நாடகம் நடத்தி யாவர்க்கும் விடுதலை இயக்கக் கருத்துகளை எதிரொலிப்பது வேறு. இது மிகவும் போற்றுதற்குரிய நிலையாகும்; செயலாகும். தம் வாழ்க்கை, தம் கலைத் தொழில், தம் எதிர்காலம் முதலியன பாதிக்கப்படும் என்று சிறிதும் நினையாமல் இத்தகைய நாடகங்களை எழுதியவர்களும் நடித்தவர்களும் தமிழகத்தில் பலர் இருந்தனர். அவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் தெ. கிருட்டின சாமிப் பாவலர் என்னும் டி. கே. பாவலர்.

பாவலர் எழுதிய 'கதரின் வெற்றி' என்னும் குடும்பக் கதை பொதிந்த முழுநீளத் தேசிய நாடகம் 1922இல் அரங்கேறியது. அன்றைய அரசாங்கம் இந்த நாடகத்தை நடத்தவிடாமல் தடை செய்த காரணத்தால் பின்னர்ச் சிறிது மாற்றம் பெற்றுக் 'கதர் பக்தி' என்னும் பெயரில் உலா வந்தது. நாடக நூல் 1931இல் வெளி வந்தது.

1938இல் இந்தி எதிர்ப்பு இயக்கம் உருவாயிற்று. அதனை அடுத்துத் தனித் தமிழ் இயக்கம் தோன்றியது. எனவே, அதுவரை தமிழ் மக்கள் ஆங்கிலத்தையோ, வட மொழியையோ அறவே வெறுக்கவோ, தமிழ் மொழியொடுகலந்து பேசுதலை தவறென்று தள்ளவோ நினைக்கவில்லை. இந்தச் சூழலில் நாடகம் எழுதிய பெருமக்கள் தம் நாடகத்திலும் பிறமொழிகளைக் கலந்தனர், தம் பதிப்புகளிலும் அவற்றைச் சேர்த்தனர்.

ஆங்கிலேய ஆட்சியினை எதிர்த்தவர்கள், ஆங்கில மொழியை எதிர்க்கவில்லை. சென்ற நூற்றாண்டு நாடகங்

களைப் போல இவர்களும் ஆங்கிலத்தையும் ஆங்கிலவழிக் கல்வியையும் ஏற்றிப் போற்றினர். காந்தி, நேரு முதல் அனைவரும் அயல்நாடு சென்று ஆங்கிலம் பயின்று தலைவர் களாக விளங்கியமை அதற்குக் காரணமாகலாம்.

இந்த நூற்றாண்டின் தொடக்க கால நாடகங்களில் — சென்ற நூற்றாண்டு நாடகங்கள் சிலவற்றைப் போல — ஆங்கில முகப்பு அமைந்திருந்தது. 'கதர் பக்தி' நூலாக வந்தபோது முதலட்டையில் The Love of Khaddar by T. K. Pavalar, என்னும் ஆங்கிலச் சொற்கள் பொறிக்கப் பட்டிருக்கின்றன.

பாவலர் தமிழ் நாடக மறுமலர்ச்சியானவர்களுள் ஒரு வராவார். தென்பட்டினத்தைச் சேர்ந்த பொன்னுசாமி கிராமணி என்பவரின் மகன் கிருட்டினசாமிப் பாவலர். வளமான குடுமபத்தைச் சேர்ந்தவர். தம் குடும்பத் தொழிலை விட்டுத் தந்தையாரையும் பிரிந்து நாடகத் துறை யில் முழுமூச்சுடன் ஈடுபட்டவர். இவரது இளவல் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பணிபுரிந்த தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆவர். 20—8—1890இல் பிறந்த பாவலர் அறிஞர் கோ. வடிவேலு செட்டியாரிடம் தமிழ் பயின்றார். பின், முத்தியாலுப் பேட்டை உயர்பள்ளியின் தலைமைத் தமிழாசிரியராகவும் விளங்கினார்.

சதாவதானி, பாவலர், சங்கத்வனி, பிரசங்க சிந்தாமணி முதலான பட்டங்களைப் பெற்றவர் இவர், இஃதொன்றே இவரது புலமைக்கு விளக்கமாகும்.

அந்தக் காலத்துத் தேசியத் தலைவர்கள் அனைவரோடும் நெருங்கிய தொடர்பு கொண்டு விடுதலைப் பணியில் தம்மை இணைத்துக் கொண்டார் பாவலர்.

முதலில் சுகுண விலாச சபையின் உறுப்பினராக விளங்கிய பாவலர், பின் 'பால மனோகர நாடக சபா' என்னும் ஒரு நாடகக் குழுவைத் தொடங்கினர்.

தொடக்கத்தில் வள்ளி திருமணம், கோவலன், நல்ல தங்காள், அரிச்சந்திரன், பர்த்ருஹரி முதலிய புராண நாடகங்களை நடத்தினார். பின்னர், எம். எஸ். சச்தானந்தம் பிள்ளையின் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் நாடகாசிரியாராகவும், பயிற்சியாளராகவும், பாவலர் பாய்ஸ் கம்பெனி உரிமையாளராகவும் விளங்கினார். இந்தக் கால கட்டத்திலேயே பாவலர் தேசிய உணர்வு மிக்க நாடகங்களை இயற்றினார்.

வளர்ந்த நடிகர்களின் ஒழுக்கக் கேடுகள் காரணமாகச் சங்கரதாசரும், கிருட்டினசாமிப் பாவலரும், சச்சிதானந்தம் பிள்ளையும் இத்தகைய பாலர் குழுக்களை நடத்தினர் எனினும், காலப்போக்கில் மெல்ல மெல்ல 'பாலர் சபை' என்னும் அமைப்புமுறை தமிழகத்தில் கைவிடப்பட்டது.

கதரின் வெற்றி, தேசியக் கொடி, பதிபக்தி, கவர்னர்ஸ் கப், பம்பாய் மெயில் முதலியன இவரது நாட்டு விடுதலையுணர்வுடைய சமுதாயச் சீர்திருத்த நாடகங்கள் ஆகும்.

பாவலர் பற்றிய செய்திகள் பலவற்றை ம.பொசி. தம் ''கிருட்டினசாமிப் பாவலர் வாழ்க்கை வரலாறு'' நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

'கதரின் வெற்றி' என்னும் நாடகம் 1922ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது. இதனைப் பாவலரின் பால மனோகர சபை நடத்தியது. அரசாங்கம் இதனைத் தடை செய்த நிலையில், பாவலர் ஆளுநர் வெலிங்டன் பிரபுவைத் தொடர்பு கொண்டு தம் செல்வாக்கால் அனுமதி பெற்று நடத்தினார்.

இந்த நாடகம் 'கதர் பக்தி' என்னும் பெயரில் நூலாக 1931இல் வெளிவந்த போது ''மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியின் சொந்தக்காரர் எஸ். எம். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் கேட்டவண்ணம் எழுதியது'' என்ற குறிப்போடு வெளிவந்தது. ஐந்து அங்கங்கள் கொண்ட இந் நாடகம் 112 பக்கங்களில் அச்சானது.

தி. க. சண்முகம் இதில் கதாநாயகனாக நடித்திருக்கிறார். துரைக்கண்ணு என்னும் நடிகர் பாயாசம் பைத்தியம் பிடித்த வேலைக்காரனாகப் பங்கேற்றார்.

நாடகத்தின் முதற் காட்சி திவான் பகதூர் பட்டம் பெற்ற இராமசாமி முதலியாருக்கு நடந்த விருந்து பற்றியது. ஆங்கில அரசுக்கு ஆதரவாக இருந்து, பெரும் பொருள் செலவழித்து இப்பட்டம் பெற்றார் அவர். காங்கிரசை 'ஒத்துழையாமைக் கட்சி' என்னும், காந்தியை 'ஒரு பைத்தியக்காரன்' என்றும் அவர் வருணிக்கிறார். தீவிர நாட்டுப் பற்றுடைய இளைஞன் கோவிந்தன் 'அடிமைக்கு ஒரு பட்டம் வேண்டுமா ?' என்று வினவுகிறான்.

> ''பச்சையப்ப முதலியார் என்ன பட்டம் பெற்றார். நூற்றுக் கணக்கான வருஷம் ஆகியும் அவர் பெயர் இன்னும் ஓங்குகிறது'' என்கிறான்.

ஆதிக்கம் புரியும் ஆங்கில ஆட்சியை ஆதரிக்கக்கூடாது, அது தரும் பட்டத்தையும் உதறித் தள்ள வேண்டும் என்னும் கொள்கையுடையவன் கதாநாயகன் கோவிந்தன் (கதரின் வெற்றியில் அவன் பெயர் சுந்தரம்).

அடுத்த காட்சியில் பொதுமகள் சுந்தராம்பாள் வீட்டருகே கதர் விற்பனை நடக்கிறது. கோவிந்தனது பிரச்சாரத்தைக் கேட்டு அவள் கதர் அணிய முடிவெடுக்கிறாள். காங்கிரஸ் கொள்கையை முழு மனத்தோடு ஏற்கிறாள்.

மூன்றாவது காட்சியில், திவான் பகதூரின் மகன் ராகவ முதலியார் அவர்களுக்குச் சொந்தமான வங்கியின் காசாளர் முனிசாமி முதலியாரோடு சூழ்ச்சி செய்கிறான்.

நான்காவது காட்சியில் கோவிந்தன் திவான் பகதூர் மகள் காமட்சியுடன் பேசிக் கொண்டிருக்கும்போது (கதரின் வெற்றியில் மரகதம் என்று பெயர்),

> ''நீ என்னைக் காதலிப்பது உண்மையானால் இன்று முதல் இந்தப் பரதேச ஆடைகளை உடுப்பதில்லை என்று பிரமாணம் செய்து கொடு''

என்று கண்டிப்பாகச் சொல்கிறான். முதலில் பல காரணங் களைச் சொல்லி மறுத்த காமாட்சி இறுதியில் மனம் மாறி அதற்கு ஒப்புதல் தருகிறாள்.

அடுத்த காட்சியில் சுந்தராம்பாள் தான் தூய வாழ்க்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கிறாள் :

> ''நல்ல காலமாக முத்துலெட்சுமி அம்மாள் மசோதா கொண்டுவந்து சட்டமாக்கினார்கள்''

என்று தேவதாசி ஒழிப்புமுறை குறித்துப் பேசுகிறாள். காந்தியடிகளும் பிற தலைவர்களும் சிறையில் இருப்பது குறித்தும் மனம் வருந்துகிறாள். இராகவனும் முனிசாமி யும் பாங்கியைக் கொள்ளையடிப்பதற்குச் சூழ்ச்சி செய் கின்றனர்.

இரண்டாவது அங்கம் முதற் காட்சியில் அரசுக்கு எதி ராக மறியல் செய்த கோவிந்தன் காவலரால் தாக்கப்படு கிறான். அவனை அப்புறப் படுத்தியபின் சுந்தராம்பாள் மறியலில் இறங்குகிறாள். பெண்ணானதால் காவலர்கள் அவளை விட்டு விடுகின்றனர். அடிக்கடி வீட்டிற்கு வந்து போய்க் கொண்டிருக்கும் கோவிந்தனைத் தன் வீட்டிற்கு

வரக் கூடாது என்று விரட்டுகிறார் முதலியார். காமாட்சி இதனால் பெரிதும் வருந்துகிறாள். அதுமட்டுமல்லாமல் அவள் தந்தை அவளைக் காசாளர் முனிசாமிக்கு மண முடித்து விடுவதாகவும் அச்சுறுத்துகிறார்.

அடுத்த காட்சியில் வங்கி ஆடிட்டர் வரதராசுலு நாயுடு கொலை செய்யப்படுகிறார். பழி கோவிந்தன் மீது விழுகிறது. துப்பறியும் சந்தானகிருஷ்ணன் ஒருபுறமும், போலீஸ் இன்ஸ்பெக்டர் இராமனாதன் ஒரு புறமும் கொலையாளியைக் கண்டுபிடிக்க முனைகின்றனர் (அந்தக் கால வழக்கப்படி பாவலரின் அனைத்து நாடகங்களிலும் இவர்களே துப்பறிபவராகவும், இன்ஸ்பெக்டராகவும் வருவர்). அடுத்த காட்சியில் காமாட்சியிடம் பேசிவிட்டுச் சென்ற கோவிந்தனைக் கைது செய்கின்றனர் காவலர்கள்.

அடுத்து, திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு சூதாடும் வீட்டில் இராமநாதனுக்கும் செங்காங்கடை பார்த்தசாரதி என்னும் கயவனுக்கும் ஆயிரம் இலட்சம் என்று இலஞ்சம் கொடுத்து இராகவன் செயல் படுகிறான். சந்தானத்தை ஒழிக்க அவர்கள் முற்படுகிறார்கள்.

அடுத்த அங்கத்தில் துப்பறியும் சந்தானத்தின் அலுவலகம் வெடிவைத்துத் தகர்க்கப்படுகிறது. வேலைக்காரன் 'பாயசம்' அவனைக் காப்பாற்றி விடுகிறான்.

நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்து மிகவும் துயரடைகிறாள் சுந்தராம்பாள். வேலையாள் வழி சந்தானம் காப்பாற்றப் பட்டதை அறிந்தவுடன் மகிழ்கிறாள்.

நான்காவது காட்சியில், கட்டாயத் திருமணத்தை விரும்பாத காமாட்சி தனிமொழியாக அதுபற்றிப் பேசி, இறுதியில் தன் கதராடையில் தூக்குபோட்டுக் கொள்ளவும் முயல்கிறாள்.

அடுத்த காட்சியில், பார்த்தசாரதி சந்தானத்தை அடையாற்றில் உள்ள ஒரு மாளிகையில் சிறைப்படுத்துகிறான்.

நான்காவது அங்கம் முதற் காட்சியில் சந்தானம் அங்கிருந்து தப்புகிறான். அடுத்து இராகவனும் முனிசாமியும் மேலும் பணம் திரட்ட சூழ்ச்சிகள் செய்கின்றனர்.

மூன்றாவது காட்சியில், காவலர்கள் திருமண மண்டபத்தில் நுழைந்து தாலி கட்டும் நேரத்தில் முனிசாமியைக் கைது செய்கின்றனர். நிகழ்ச்சிகள் விரைவாகச் செல்கின்றன.

ஐந்தாவது அங்கத்தின் தொடக்கத்தில், பாழடைந்த வீட்டில் இராமநாதன் மனமுடைந்து நஞ்சுண்டு சாகிறான். பார்த்தசாரதி தூக்கிச் சென்று கடலிற் போட்டுவிடவேண்டும் என்று அடைத்து வைத்திருந்த சுந்தராம்பாளையும் சந்தானத்தையும் காவலரோடு வந்து காப்பாற்றுகின்றான் கோவிந்தன்.

உண்மைகளை அறிந்த அரசு கோவிந்தனை விடுவிக்கிறது. அன்று, நீதிமன்றத்துக்கு எதிரில் சுந்தராம்பாள் 'வந்தே மாதரம்' என்று முழங்கி அவனை வரவேற்கிறாள். அவனுக்குக் கதர்மாலை சூட்டுகிறாள். அந்த நாளிலேயே பலரும் அவன் முன்னிலையில் இனிக் கதரே கட்டுவதாக உறுதி மொழிகின்றனர்.

அடுத்து, போலீஸ் கமிஷனர் வீட்டில் காந்தி-இர்வின் ஒப்பந்தம் பற்றியும், இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் காந்தியடிகள் கலந்து கொண்டது பற்றியும் பேசுகின்றனர்.

மனம் மாறிய திவான் பகதூர் முதலியார் கோவிந்தனுக்குத் தன் மகள் காமாட்சியை மணமுடித்து வைக்கிறார். தம் பட்டத்தைத் துறந்து கதராடை அணியவும் முற்படுகிறார். அனைவரும் மகிழ்கின்றனர்.

> ''கோவணாண்டியின் பெருமை இப் போதன்றோ எனக்கு விளங்கியது. துப்பாக்கி மருந்தில்லாமலே இந்தப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் சமாதானம் பேசி விட்டாரே! அவர் சொற்படி நாம் எல்லோரும் நடந்து கொண்டால் நமது நாட்டில் பஞ்சமேது? வறுமை ஏது? நோய்கள் ஏது? அடிமைகள் என்ற தாழ்மை அகன்றிடாதோ?

என்று பேசுகிறார் காமாட்சியின் தந்தை.

'கதரின் வெற்றி' என்னும் பெயரிலும், 'கதர் பக்தி' என்னும் பெயரிலும் 1922 முதல் நடந்த இந்த நாடகம் 'ஒரு துப்பறியும் தேசிய நாடகம்' என்று விளம்பரப் படுத்தப் பட்டுள்ளது.

இந்த நாடகத்தில் வெளிநாட்டு ஆடைகள் விற்கும் கடையின் முன் மறியல் செய்யும் காட்சியில் காவலர் மிகக் கடுமையாகத் தொண்டர்களை அடித்துத் துன்புறுத்துவதாக நடத்தப்படும். இதனாலேயே காவலர்கள் இதற்குத்தடை விதித்தனர். பல இடங்களில் பாதி நாடகத்திலேயே நிறுத்தும்படி காவலர்கள் கூறியதுண்டு.

> '' சீரான இந்தியாவில்
> பேர்போன தொழில்களெல்லாம்
> செத்துக் கிடக்குமிந்தச்
> சீர்குலைந்த நாளையிலே
> சேர்ந்த நாட்டின் பெருமை
> செப்புவேன் கேள் அருமை
> தீருமே நம் வறுமை! ''

என்பது கதர் இராட்டையின் சிறப்பைக் கூறும் பாவலரின் பாடல்.

காவலர்கள் இந்த நாடகத்தைத் தடை செய்தது குறித்துப் பாவலர் அண்ணல் காந்தியடிகளுக்கு எழுதினார்.

அவரை நன்கறிந்த அடிகள் ''காவல் துறையினர் விரும்பாத காட்சிகளை நீக்கிவிட்டு நாடகத்தை நடத்தலாம்'' என்று தெரிவித்தார்.

காந்தியடிகள் கருத்துபடி சில நாடகக் காட்சிகள் நீக்கப் பட்டுக் 'கதர் பக்தி' என்று பெயர் மாற்றப்பட்டு இந்த நாடகம் தொடர்ந்து நடத்தப்பெற்றது.

அண்ணல் காந்தியடிகளின் கதர்க் கொள்கையை இதை விடச் சிறப்பாக வேறு எவர்தான் தரமுடியும்?

1924—25ஆம் ஆண்டில் லண்டனுக்கு அருகிலிருந்து வெம் பிளி என்னும் இடத்தில் ஒரு கண்காட்சி நடைபெற்றது. 'எம்பயர் ஸ்டேடியத்தில்' ஜார்ஜ் மன்னர் அரசரான வெள்ளி விழாவினை ஒட்டி நடைபெற்ற இப்பொருட்காட்சி யில் கலந்து கொண்டு பாவலர் தம் 'கதரின் வெற்றி' என் னும் இந்த நாடகத்தை நடத்திக் காட்டினார். இது குறித்து,

> ''இந்தியாவில் வளர்ந்திருந்த ஏகாதிபத்திய எதிர்ப் புணர்ச்சியை நன்கு வெளிப்படுத்தும் 'கதரின் வெற்றி' போன்ற தேசிய நாடகங்களையும் வெள்ளையர் மத்தி யிலே சிறுவர்களைக் கொண்டு பாவலர் நடத்தினார் என்றால், அவரது தேச பக்திக்கு — தீரத்துக்கு இணை சொல்ல இன்னொரு நாடகக் கலைஞர் அந்நாளிலு மில்லை, பின்னாளிலுமில்லை எனலாம்''

என்று கூறுகிறார் ம.பொ.சி.

விடுதலை இயக்கத்தின் ஒப்பற்ற வழிகாட்டியும் தலைவரு மாக விளங்கிய அண்ணல் காந்தியடிகள் மதுவில் தீமைகளை யும் கொடுமைகளையும் விளக்கி அதனை விலக்க வேண்டி யதன் தேவையைப் பேச்சாலும் எழுத்தாலும் தெரிவித்து வந்தார். அதன் விளைவாகக் கள்ளுக்கடை மறியல்களும் போராட்டங்களும் நிகழ்ந்தன. காங்கிரசின் கொள்கை களில் ஒன்றாக மதுவிலக்கும் கருதப்பட்டது. அதனை வலியுறுத்தும் வகையில் பாவலர் எழுதிய தேசிய நாடகம் 'பதி பக்தி' என்பது.

1932ஆம் ஆண்டில் சிந்தாத்திரிப்பேட்டை கந்தன் நூற் பதிப்புக் கழகம் "Pathi–Bhakti : A National Social Drama – By T. K. Pavalar" என்னும் முகப்போடு இந்த நூலை வெளியிட்டது.

பதிபக்தி நாடகத்துக்கு முகவுரை எழுதும் பாவலர் இதனை இயற்றி வெளியிட்டதன் காரணத்தைக் கூறுகிறார். அது,

> "இந்த நாடகத்தைச் சுமார் ஏழு வருடங்களுக்கு முன் (அதாவது 1924) எழுதினேன். ஆனால் அப் போது எழுதிய கதைக்கும் இப்போது அமைந்துள்ள கதைக்கும் எவ்வளவோ மாறுதல் உண்டு. காந்தி யடிகள் தீண்டாமை, கதர், மதுவிலக்கு என்னும் மூன் றையும் வற்புறுத்தி வன்மையான பிரசாரம் நடத்திய அதுபோது அம்மூன்றற்கும் ஒவ்வொரு நாடகம் எழுது தல் வேண்டும் என்ற அவாவுடன் முதன் முதலாகக் 'கதரின் வெற்றி' என்னும் நாடகத்தை எழுதினேன். இரண்டாவதாக, கதர்ப் பிரச்சாரத்தையும், மது விலக்குப் பிரச்சாரத்தையும் மனங்கொண்டு இந்

'பதிபக்தி' நாடகத்தையும் முடித்தேன். அந்த நாடகம் அச்சில் வராக்குறையால், சில நாடகக் கம்பெனியார் தங்கள் இஷ்டப்படியெல்லாம் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் மறைத்தும் நடிக்க முற்பட்டனர். இங்ஙனமாக, பால நடிகர் கம்பெனிகளில் மிகப் புராதனமானதும், நன்முறையில் நாடகங்களை நடித்துக் காட்டுவதில் நற்கீர்த்தி வாய்ந்துள்ளதுமான மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியின் சொந்தக்காரர் திருவாளர் எஸ். எம். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தமது கம்பெனி பால்யர்கள் நடிக்க இந்த நாடகத்தைப் புதிய திருத்தங்களுடன் எழுதித் தருமாறு கேட்டனர். அவர்தம் விருப்பத்தின்படி இந்த நாடகம் முற்றும் புதிய திருத்தங்களுடன் எழுதப்பட்டதாகும்....''

என்று 1931ஆம் ஆண்டு வெளிவந்த பதிப்பின் முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்த முன்னுரையின்படி நாடகம் 1924ஆம் ஆண்டு இயற்றப்பட்டது என்பதை அறிகிறோம். அதாவது கதரின் வெற்றியை எழுதி, அரங்கேற்றிய இரண்டாவது ஆண்டில் இஃது எழுதப்பட்டது. முதல் நாடகத்தின் நோக்கம் கதர், இரண்டாவது நாடகத்துக்குக் கதரோடு மதுவிலக்கும் நோக்கமாயிற்று.

தேசியக் கொள்கைகளை மிகவும் வன்மையாக இதில் எடுத்துக் காட்டியிருக்கிறார் பாவலர். அங்கம், களம் பிரிவுகளோடு நூறு பக்கங்களில் அமைந்துள்ள இந்த நாடகம் மிகவும் சிறப்பான கதையமைப்புக் கொண்டது.

பதிபக்தியின் கதாநாயகன் ராஜசேகரன்; சம்பந்தன் என்பவன் அவன் தோழன். ராஜசேகரனின் மனைவி லீலாவதி; மகள் சரசுவதி. ராஜசேகரன் நல்லவனாயிருந்தும் குடிப் பழக்கத்துக்கு அடிமையாகிறான். அதன் விளைவாக அவனது பகைவனான கங்காதரன் அதனைப் பயன்

படுத்திக் கொள்கிறான். ஒரு நாள் கங்காதரன் சம்பந்தனைச் சுட்டுவிடக் குடிவெறியில் இருந்த ராஜசேகரன்தானே அச் செயலைச் செய்துவிட்டதாகக் கருதி வருந்துகிறான். பின், தன்னைக் காவலர் சிறையிலிடுவர் என்று எண்ணி இலங்கைக்கு முசுலீம் வேடத்தில் ஓடி விட்டான். அங்கே தணிகாசல முதலியாரின் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும்போது ஒரு புதையல் கிடைக்கிறது. அதனை அப்படியே முதலாளியிடம் ஒப்படைக்க அவனுக்குப் பாராட்டும் பதவி உயர்வும் கிடைக்கின்றன. இங்கே அவன் மனைவி லீலாவதி கைராட்டை சுழற்றி உழைத்துப் பிழைக்கிறாள். அவளையும் குடும்பத்தையும் இலங்கை முதலாளி தணிகாசல முதலியார் — ராஜசேகரனின் சிற்றப்பா, ஒரு காலத்தில் ராஜசேகரனின் தந்தையால் ஏமாற்றப்பட்டவர்— காப்பாற்றி வருகிறார்.

லீலாவதியை மணக்க முடியாமல் வருந்திய கங்காதரன் இப்போது அவளைக் கற்பழிக்க முனைகிறான்; அப்போது ஊமையாக நடித்துக் காப்பாற்றுகிறான் துப்பறியும் சந்தானம். அதுமட்டுமல்லாமல் கங்காதரன் செய்த கொலையைத் துலக்கி, அவனையும், அவனிடம் இலஞ்சம் வாங்கிக் கொண்டு உதவிய போலீஸ் இன்ஸ்பெக்டர் இராமநாதனையும் காவலரிடம் ஒப்படைக்கிறான். லீலாவதியின் 'பதி பக்தி' அவளையும் அவள் கணவன் ராஜசேகரனையும் குடும்பத்தையும் காப்பாற்றுகிறது.

இந்தக் கதையைப் பாவலர் வெறும் சமூக நாடகமாகவே எழுதியிருக்கலாம்; அந்தக் காலத்தில் இந்த நிலையிலும் நாடகம் வெற்றி பெற்றிருக்கும். ஆனால், இதில் தேசியத்தைக் கலந்து ஒப்பற்ற நாடகம் ஆக்கிவிட்டார் பாவலர்.

வேலையாள் நாராயண சிங் ராஜசேகரின் குடிப் பழக்கம் பற்றி நாடகத்தின் தொடக்கத்தில் லீலாவதியுடன் கூறுவது எண்ணிப் பார்க்கத் தக்கது.

> ''அவுங்களுக்கு நாளுக்கு நாளு பசியின்றதே பூடுது.. அதனாலே தானே நம்ப காந்தி மஹாராஜா குடி அடியோட கூடாதுன்னு சொல்லுறாரு. பாருங்க, குடியிலே பணமாத்தமா போவுது? அறிவு கெட்டுப் போவுது. உடம்பு மெலிஞ்சி போவுது. கடைசியிலே உயிருக்கே ஓலையும் வைச்சிடுது. பாவம்! இந்தப் பாழான குடியாலே எத்தனை குடும்பம் அழிஞ்சுது! அழியுது! இத்தே எல்லாம் நெனெச்சி நம்ப எஜமான நினைக்கும்போது எனக்கு எங்கியும் இல்லாத அழ வருது''

வேலைக்காரனின் இந்தப் பேச்சு, குடியினால் விளையும் தீமையினை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

குடிப்பழக்கம் இன்னவருக்குத்தான் வரும் என்பதில்லை. உயர்சாதி — கீழ்ச்சாதி என்னும் பேதமில்லாமல், ஏழை-பணக்காரர் என்னும் வேறுபாடில்லாமல் குடிப் பழக்கம் மனிதனைக் கெடுக்கிறது. குப்பண்ண சாஸ்திரிகளுக்கும் இந்தப் பழக்கம் ஒட்டிக் கொள்கிறது. அவர் முதலில் தயங்கிப் பின் உறுதியாக,

> ''நேக்கு அந்தப் பட்ட சாராயம்னா கொஞ்சம் பழக்கம்.... நேக்கு கொஞ்சம் திராக்ஷ ரசமுன்னு சொல்றாங்களே ஓயின் அதுலே ரெண்டு கிளாசு.... ஒரு முட்டை போதும்.... ஒரு கன்றுகுட்டி நாக்கு (எருமை).... வறுத்து....''

கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார். சமுதாயம் எந்த நிலையில் கெட்டிருந்தது மதுவினால் என்பதனை இந்தக் காட்சி நன்கு எடுத்துக் காட்டுகிறது.

தன் நண்பன் சம்பந்தனைக் கங்காதரன் சுட்டுவிட, அவனைத் தானே கொன்றதாகக் கருதி ஓடுகிற ராஜசேகரன் இலங்கை புறப்படுவதற்கு முன் ஒரு தனி மொழியில் — இரண்டரைப் பக்கங்கள் - குடிப்பழக்கம் பற்றிப் பேசுகிறான் :

''ஏ குடியே! உனக்கு கோடி நமஸ்காரம் புரிகின்றேன். என்னை வருத்தியது போல், என்னை அழித்தது போல், என்னைப் பகைவனாக எண்ணியவர்களையும் இனி நீ இப்படி செய்யாதே ! அந்தோ ! அந்தோ ! கற்றறி மடையன் என்றால் எனக்கே அந்தப் பெயர் பொருந்தும். உணவையும் உயிரையும் அழிக்கவல்லது குடிப் பழக்கம் என்பது தெரிந்தும், அருளே உருவாய் இந்திய மக்களது துயரம் தமது துயரம் எனக்கொண்டு, அத்துயரினை அடியுடன் ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு சிறையிலும், வெளியிலும் மழையிலும்கிடந்து பாரத நாட்டின் க்ஷேமத்திற்காக உழைக்கும் உலகம் போற்றும் புண்ணியர் மகாத்மா காந்தி யடிகளும் அவருடைய அடியவர்களும் செய்துவரும் மதுவிலக்குப் பிரச்சாரத்தைச் சிறிதும் மனம் கொள்ளாமற் போனேனே ! ஐயோ ! அந்தப் புண்ணியர்கள் வார்த்தையைக் கேட்டிருந்தால் எனக்குக் குடிப்பழக்கமே வந்திராதே ! ஆஹா ! குடி என்றும் சாராயம் என்றும் எண்ணும்போதே, என்முன் ஆயிரங்கோடி எம தருமர் எதிர்நிற்பதுபோல் தோன்றுகிறதே ! ஏ, குடியே ! எள்ளளவும் பொய் பேசாத என்னைப்பொய் யனாக்கினாய் ! மலை போன்ற செல்வத்தைத் தரைமட்ட மாக்கினாய் ! பதிவிரதையைப் பழிகூற வைத்தாய் ! உண்மை நண்பனைச் சந்தேகிக்கசெய்து என் உணர்வைக் கெடுத்து, அவனுயிரையும் கொல்லச் செய்து கொலைப் பழியை எனக்கு முடிசூட்டினாய் ! இன்னும் நீ என்னதான் செய்யாய் ! . . . . ஏ,பஞ்சமா

> பாதகங்களுக்குத் தாயான பாழுங்குடியே ! என்னைக் கெடுத்த அளவோடாவது நின்றுவிடு ! உலகில்உள்ள மற்றவரையாவது மிகுதியாக விடு ! ''

இந்த அனுபவக் கூற்றின்மூலம் குடியினது கொடுமையினை மிகவும் வன்மையாக எடுத்துரைக்கிறான் ராஜசேகரன். மது விலக்குப் பிரச்சாரம் நாடகத்தில் பொருத்தமாக அமைந் திருக்கிறது.

கதர் பற்றியும் இந்த நாடகம் பேசுகிறது. கணவனைப் பிரிந்த லீலாவதி,

> ''நல்ல வேளையாக நான் மகாத்மா காந்தியடிகள் சொற்படி நூல் நூற்கக் கற்றுக்கோண்டேன்.. நம்முடைய வறுமையை இந்த ராட்டன்றோ வாட்டு கிறது.''

> 'ஒவ்வொருவருடைய மானத்தைக் காப்பது ஆடை, நாம் ஆடைக்கும் அந்நிய தேசத்தை எதிர்ப்பார்த் தால் அதைவிட அவமானம் வேறென்ன இருக்கிறது?''

என்று ராட்டை பற்றியும் கதராடை பற்றியும் பேசுகிறாள்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் துயரங்கள் குறித்தும் நாடகத்தில் ஒரு கட்டம் வருகிறது. இலங் கைக்குச் சென்று தொழில்புரியும் ராஜசேகரன் அங்கிருக்கும் இந்தியக் கூலியாட்கள் பற்றி,

> ''பாரத நாட்டினின்றும் வறுமைப் பிணியை ஒழிக்க வந்த என் ஏழைச் சகோதரர்கள், இங்கு என்ன லாபத்தை அடைகிறார்கள். வயிறார உண்டு சுகமாக வாழ்வதற்கும் இங்கு இடம் இல்லையே.. இதனால் தானே கோகலே முதல் காந்தியடிகள் ஈறான பெரி

> யோர்கள் கூலிகள் ஏற்றத்தைத் தடைசெய்ய அரும் பாடு பட்டனர்''

என்று வருந்துகிறான். நாடகத்தில்,

''நானோர் தொழிலாளி — ஒரு
நாய்க்குறும் சுகமேனும்
வாய்க்கும் வழியில்லை
ஏனோ புவிவாழ்வு ''

என்னும் ஜீவாவின் பாடல் இந்தக் காட்சியில் பாடப்பெறும்.

நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் காட்சியில் நீதிபதி பேசும் உரையாடல் முழுதும் ஆங்கிலத்திலேயே அமைந் திருப்பதும் கருதத்தக்கது.

இந்த நாடகத்தைப் பற்றி ஆராயும்பொழுது ஒரு செய் தியை நாம் இங்கே நினைக்க வேண்டியுள்ளது. குடிப் பழக்கம் பற்றி இவ்வளவு வன்மையாக மறுத்துப் பேசும் நாடகாசிரியர் பாவலர் 'மதுவிறக்கும்' தொழிலில் ஈடுபட் டிருந்த 'சான்றார்' அல்லது 'கிராமணி' குலத்தைச் சேர்ந் தவர் ஆவர்.

மற்றொரு செய்தி, பாவலருக்குக் குடிப்பழக்கம் இருந்தது என்னும் கருத்து. அவ்வை தி. க. சண்முகம் அவர்கள் பாவலரின் குடிப் பழக்கத்தைப் பற்றி,

> ''அந்தக் காலத்தில் ஒரு கம்பெனியிலிருந்து மற் றொரு கம்பெனிக்குப் பையன்களைக் கடத்திக்கொண்டு போவது சாதாரணமாக நிகழ்ந்து வந்தது. இந்தத் திருப்பணிக் கென்றே சில தரகர்களும் நிரந்தரமாக இருந்து வந்தார்கள். நாங்கள் சைதாப்பேட்டைக்கு வந்த நாளிலிருந்தே பாவலரின் தரகர்கள் எங்களுக்கு வலைவீசத் தொடங்கினார்கள். ஒரு நாள் எங்க

ளுக்கு நாடகமில்லாத நாளில் அப்பாவுடன் சென்னைக்குப் போய் பாவலர் கம்பெனியில் நாடகத்தைப் பார்த்து வந்தோம். பாவலர் குடிப் பழக்கம் உள்ளவர். எங்கள் தந்தையாரோ கேட்கவே வேண்டியதில்லை. இருவரும் மிக விரைவில் தோழமை கொண்டு விட்டார்கள் ''

என்று கூறுகிறார். ஒரு வேளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் பாவலர் குடிப் பழக்கத்தைக் கைவிட்டிருக்கலாம்.

பாவலரது பிற நாடகங்களில் குறிப்பிடத்தக்கது, 'தேசியக் கொடி' ஆகும். நாகபுரி என்னும் நகரத்தில் ஆங்கிலேயர் வாழ்ந்த ஒரு தெருவில் தேசியக் கொடியைப் பறக்கவிடக் கூடாது என்று அக் காலத்தில் காவலர்கள் தடை செய்தனர். அதனால், தேசியத் தொண்டர்கள் கைகளில் தேசியக் கொடியினை எடுத்துக் கொண்டு நாள்தோறும் அத் தெருவழியே சென்றனர். பல நாள்கள் நடந்த இந்தப் போராட்டத்தில் எண்ணற்ற தொண்டர்கள் ஈடுபட்டுச்சிறை சென்றனர். இந்த நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்துப் பாவலர் புனைந்த ஒரு கற்பனைக் கதை 'தேசியக் கொடி'. இந்த நாடகம் நடத்துவதிலும் காவலர்கள் பாவலருக்குத் தொல்லைகளை விளைவித்தனர்.

'கதர் பக்தி' நாடக முன்னுரையில் பாவலர் தாம் 'தேசபக்தி' என்னும் நாடகத்தை எழுதி வருவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த நாடகம் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை. இந்திய தேசியத் தலைவரான லாலா லஜபதி ராயின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு 'பஞ்சாப் கேசரி' என்னும் நாடகத்தையும் பாவலர் எழுதியிருக்கிறார். இவையே அன்றி, 'கவர்னர்ஸ் கப்', 'பம்பாய் மெயில்', 'கமல சேகரன்' முதலிய நாடகங்களையும் பாவலர் படைத்திருக்கிறார்.

தேசிய நீரோட்டத்தில் இணைவதற்கு முன் பாவலர் சில புராண நாடகங்களையும், புதுமைக் கதை நாடகங்களை யும் தீட்டி யிருக்கிறார். அவற்றுள் ஒன்று 'விஜய விலோ சனை' என்பது.

தொடக்க காலத்தில் எழுதப்பட்ட விஜய விலோசனை நாடக முன்னுரை அவரது நாடக ஆர்வத்தைப் புலப்படுத்து வதாக அமைந்துள்ளது,

> " நாடகமே நாட்டகத்துச் சிறப்பையுண்டுபண் ணுவது என்னும் உண்மை அறிந்த அறிஞர் பலர் இக்காலத்துப் பல நாடகங்களை எழுதி வெளியிட் டாங்கு யானும் இதற்கு முன்னர் பிரகலாதன், சாவித் திரி, கமலேசன் முதலிய நாடகங்களை எழுதி வெளி யிட்டேன். எனினும் எனது நண்பருட் சிலர், ஒரு புதுவகைக் கதை எழுதும் வண்ணம் என்னை வற் புறுத்தியதாலும், நாடகத் தமிழை நல்லன்புடன் போற்றி வளர்க்கும் சென்னை சுகுணவிலாச சபையார், நல்லதோர் நாடகம் எழுதுவதற்குப் பரிசு கொடுப் பதாகப் பத்திரிகையில் வெளியிட்டிருந்ததாலும், இதனை ஒருவாறு எழுதி வெளியிடலானேன். இந் நாடகமும் ஒருவித சிரமமுமின்றி, இடையே எதையும் விடாமல் மூன்று மணி நேரத்துள் நடிக்க உபயோக மாம் வண்ணம் எழுதப்பட்டது .... தெ. கிருஷ்ண சாமி பாவலர் 5, உலகப்ப மேஸ்திரி வீதி, சிந்தாதரிப் பேட்டை, சென்னை "

இந்த முன்னுரை வழி ஆசிரியர் கதரின் வெற்றி எழுது வதற்கு முன் பிரகலாதன், சாவித்திரி, கமலேசன் (கமல சேகரன் ?) முதலிய நாடகங்களை எழுதினமை அறியப்படு கிறது. சுகுண விலாச சபையார் இந்த நாடக நூல் வெளி யான 1916ஆம் ஆண்டில் ஒரு நாடகப் போட்டி நடத்தி

நாடகத்தை வளர்த்துள்ளமையும் தெரிய வருகிறது. பாவலர் இந்த நாடகத்தைப் பம்மல் சம்பந்த முதலியார் அவர்களுக்கே காணிக்கை யாக்கியிருக்கிறார் :

> " To Rao Sahib Mr. P. Sambanda Mudaliar Avl. who is devoting his life for the good of his country-men. This volume is, by his kind permission respectfully dedicated by the author "

1916இல் வெளிவந்த இந்த நாடகப் பதிப்பில் 'சதாவதானி தெ. கிருஷ்ணசாமி பாவலர்' என்று காணப்படுகிறது. எனவே, ஆசிரியர் தம் 26 வயதிற்கு முன்னதாகவே 'சதாவதானி' என்னும் பட்டத்தைப் பெற்றிருக்கிறார் என்றும், 'பாவலர்' ஆக விளங்கியிருக்கிறார் என்றும் அறிகிறோம். அன்றுதொட்டே ஆசிரியர் தம் பெயரை இறுதிவரை 'தெ. கிருஷ்ணசாமி பாவலர்' என்றே குறிப்பிட்டிருக்கிறார். என்றும் 'தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர்' என்று குறிப்பிட்டதில்லை. ஆங்கிலத்திலும் 'டி. கே. பாவலர்' என்றே எழுதியிருக்கிறார். இருப்பினும் ம.பொ.சி., அவ்வை சண்முகம் உட்பட அறிஞர்கள் பலரும் 'தெ.பொ.' என்று குறிப்பிட்டுள்ளமை அவர் கருத்துக்கும் எண்ணத்திற்கும் மாறுபட்டது என்பது வெளிப்படை.

விடுதலை இயக்க நாடகம் என்று கூறினால் முதலில் — முன்னணியில் நிற்கும் ஒரு பெயர் பாவலர் பெயரே என்பதில் ஐயமில்லை. அவரது நாடகப் பணியும், புனைதிறமும், ஆற்றலும், கதைவளமும், மேடையேற்றும் பாங்கும் ஈடு இணையற்றவை.

வெ. சாமிநாத சர்மா 1924இல் 'பாணபுரத்து வீரன்' என்னும் நாடக நூலை வெளியிட்டார். இது 1921ஆம் ஆண்டிலேயே 'நவ சக்தி' இதழில் தொடராக வெளிவந்து, பின் நூலாகியது.

அந் நாளைய அரசு இந்த நாடகத்தைத் தடை செய்தது. அதனால் ஆசிரியர் சில மாற்றங்களைச் செய்து தர, அதுனைத் 'தேசபக்தி' என்ற பெயரில் அவ்வை சண்முகம் சகோதரர்கள் தம் நாடகக் குழுவின் வழி அரங்கேற்றினர். அக்குழுவின் வெற்றி நாடகங்கள் வரிசையில் இதுவும் ஒன்று.

ஈசான புர நீதி மன்றத்தில் வாலீசன் 'ராஜத்துரோகம்' செய்த குற்றச்சாட்டுக்காக வாக்கு மூலம் தருகிறான். அவனது நீண்ட பேச்சு சுதந்தரக் கனல் கக்கும் பிரகடனமாக விளங்குகிறது. அதில் அவன்,

> ''நாட்டுக்கு உழைப்பதே ஒருவனது பிறவிப் பயன். தேசபக்தி என்னும் சுடர் இல்லாவிட்டால் மனிதன் தீய பண்புகளுக்கு அடிமையாவான், தேசபக்தி குற்றமானால் விடுதலை தந்தாலும் மீண்டும் அதே குற்றத்தைச் செய்வதே கடன்''

என்றெல்லாம் வீறுணர்ச்சியுடன் பேசுகிறான் அவனுக்கு; மரணதண்டனை அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது.

இரண்டாவது அங்கத்தில் பாணபுரத்துப் புரேசன் அடுத்த தலைவனாக அறிமுகமாகிறான். நண்பன் நாகநாதனுடன் தன் நாட்டின் நிலைகருதி வருந்துகிறான். அவன் ஈசானபுரம் செல்வதற்கு முனையும்போது அவன் மனைவி சுதர்மையிடம் விடை பெறுகிறான். காதல் பேச்சின் இறுதியில் அவன், ''யாரை மறந்தாலும் பாணபுரத்தை

மறக்காதீர்கள்'' என்று அவனுக்குக் கூறுகிறாள். தலைவனுக்கு ஏற்ற மாண்புடைய தலைவியாக அவள் விளங்குகிறாள்.

ஈசானபுரத்துக்குள் நுழைந்த புரேசன் அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கண்டு வருந்துகிறான். வாலீசன் தூக்குத் தண்டனை பெற்றது அவனுக்கு அதிர்ச்சியைத் தந்தது. அசத்தியம், அதருமம், அநீதி ஆகியவற்றின் வடிவமாகத் திகழும் அதிரத மன்னனை எள்ளி நகையாடுகிறான். இறுதியில் வாலீசன் சாகும்போது 'புரேசன்' என்று அவன் பெயரைக் கூறி இறந்ததாக அவனிடம் சொன்னபோது அவன் உணர்ச்சிவசப்படுகிறான்.

அடுத்த கட்டமாகப் பாணபுரத்துக்கும் ஈசானபுரத்துக்கும் போர் மூளுகிறது. புரேசனின் மனைவி சுதர்மையும் மகள் அனலையும் சிறையில் தள்ளப்படுகின்றனர். அதற்காக அவ்விருவரும் அச்சமோ கவலையோ கொள்ளவில்லை என்பது குறிக்கத்தக்கது.

களத்தில் தோல்வியுற்ற புரேசன் தலைமறைவாகிறான். காட்டுக்குகை ஒன்றில் இருக்கும்போது சிலந்தி பன்முறை தோல்வி யடைந்து கடைசியில் ஏழாவது முறையாக வெற்றி பெறும் நிலையைக் கண்டு உறுதி கொள்கிறான். ஸ்காட்லாந்து வீரன் ராபர்ட் புருசின் நினைவை இக் காட்சி தருகிறது.

இராவணனுக்கு வீடணன் போல் அதிரதனுக்குத் துருபதன் அறிவுரை கூறுகிறான். பாணபுரத்துக்கு நன்மைகள் பலவற்றைச் செய்திருப்பதாக அரசன் தரப்பில் கூறப்படுகிறது. சுதந்தரம் தராமல் நன்மைகள் செய்வதால் பயனில்லை என்று அமைச்சன் துருபதன் தெரிவிக்கிறான். ''உணவு தர மறுத்துப் பெரிய மாளிகை தருகிறேன் என்றால் எவர் அதனை விரும்புவர்?'' என்று வினா எழுப்பு

கிறான். 'ஆரிய சபா' முதலிய நாடகங்களில் குறிப்பிட்டபடி ''ஆங்கிலேயர்கள் பல நன்மைகளைச் செய்தனர் என்று அவர்கள் ஆட்சியை ஏற்றுப் போற்றிய நிலை'' இந்தக் கால கட்டத்தில் மாறிவிட்டது என்பதையே இது காட்டுகிறது. ''சுகம் எங்களுக்கு வேண்டாம், சுதந்தரமே வேண்டும்'' என்பது இக் காட்சியின் கருத்தாக அமைகிறது.

புரேசன் கடைசியில் தன் வீரர்களை ஒன்று திரட்டிக் களத்திற்குச் செல்கிறான். மனோன்மணீய நாடகத்தில் ஜீவக வழுதியின் வீரவுரை போலப் புரேசன் வீரவுரை ஆற்றுகின்றான். ''சுதந்தரம் நமது உரிமை'' என்பதை விளக்கிப் பேசுகிறான். சத்தியத்தின் மீதும் தருமத்தின் மீதும் ஆணையிட்டுத் தன் படைவீரர்களைப் போர்முனைக்குச் செலுத்துகிறான்.

இறுதியில் பாணபுரம் வெற்றி பெறுகிறது. ஈசான புரத்தையும் பாணபுரத்தோடு சேர்த்து ஆட்சி செய்யவேண்டும் என்று அதிரதனுடன் இருந்த துருபதன் கூறியும் அதனை ஏற்க மறுக்கிறான் புரேசன். ஈசானபுரத்தை அந்த நாட்டு மக்களிடமே ஒப்படைக்கின்றான். பாணபுரம் சுதந்தர நாடாகிறது. அந்த நாட்டில் அனைவர்க்கும் ஒரே சட்டம், ஒரே நீதி, ஒரே மதிப்பு வழங்க ஏற்பாடு செய்யப் படுகிறது.

இந்த நாடகத்தைச் சாமிநாத சர்மா உருவக அடிப்படையில் அமைத்திருக்கிறார். நேரடியாக இந்திய விடுதலை பற்றி இந்த நாடகம் பேசாமல் உருவகமாகவே பேசுகிறது. கிழக்கிந்தியக் கம்பெனியாக வந்து பின் இந்தியாவைத் தம் ஆட்சிக்குட்படுத்திக் கொண்டனர் ஆங்கிலேயர், ஆகவே அவர்களைக் குறிக்கும் வகையில் 'ஈசானபுரம்' உருவாக்கப் பட்டது. பாணர் போற்றும் பழமைபெற்ற பாரதநாடு 'பாணபுரம்' ஆயிற்று. பன்முறை தோற்றும் இறுதியில்

வெற்றி கண்ட காட்சி புருசு என்பானை நினைவுபடுத்து கிறது, அந்த அடிப்படையில் விடுதலை வீரன் 'புரேசன்' என்னும் பெயர் பெற்றான். பாணபுரத்துச் சுதந்தர வெற்றி என்பது பாரதநாட்டுச் சுதந்தர வெற்றியை உணர்த்துவதாக அமைந்தது.

இந்த நாடகத்தில் பாரதியாரின் ''என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்'', ''விடுதலை விடுதலை விடுதலை'', ''ஆடு வோமே பள்ளுப் பாடுவோமே'' முதலிய பாடல்கள் இடை யில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ''இந்த நாடகத்தில் தான் முதன் முதலாகப் பாரதியார் பாடல்கள் பாடப் பெற்றன'' என்று அவ்வை சண்முகம் கூறுவர்.

தேசபக்தி நாடகத்தின் அரங்கேற்றத்தில் புதுமை செய்யக் கருதிய அவ்வை சண்முகம் கலைவாணரோடு சேர்ந்து 'காந்தியடிகள் வில்லுப்பாட்டு'க் கவிதையெழுதி அதன் இடையில் சேர்த்தார். 1931 மே 19இல் நாடகம் அரங் கேறியது.

''தேச பக்தியே
முக்தியாம்
தெய்வ சக்தியாம்''

என்னும் பாடலுடன் மேடை நாடகம் தொடங்கியது. இந்த நாடகத்தில் வாலீசனாக எஸ். வி. சகஸ்ரநாமமும், புரேசனாக அவ்வை சண்முகமும், நாகராசனாகப் பகவதி தியும், சுதர்மையாக முத்துசாமியும், அதிரதனாக புளி மூட்டை இராமசாமியும், சேமவீரனாக எம். ஆர். சாமி நாதனும், தூக்குதண்டனை நிறைவேற்றும் காவலனாக டி. என். சிவதாணுவும் நடித்தனர்.

திருவல்லிக்கேணியில் இந்த நாடகத்தை நடத்த முனைந்த போது காவலர்கள் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும்

என்றனர். அவற்றுள் சிலவற்றைப் பற்றி அவ்வை சண் முகம் குறிப்பிடுகின்றார். அவை :

(1) வாலீசன் சொற்பொழிவாற்றும்போது சி.ஐ.டி. குறிப்பெடுப்பது போல் காட்சி வரும். அப்போது,

> "இதோ குறிப்பெடுக்கிறாரே இவரும் நம் நாட்டி னர்தாம். .... இந்த நாட்டில் பிறந்து இந்த நாட்டில் வளர்ந்து இந்த நாட்டு உப்பையே தின்று கொண்டிருக்கும் இந்த மனித உருவம் தம் சொந்தச் சகோதரர்களையே அன்னிய நாட்டானுக்குக் காட்டிக் கொடுக்கும் துரோகச் செயலைச் செய்து கொண் டிருக்கிறது. பாவம், என்ன செய்வது ? வயிற்றுப் பிழைப்பு ! "

என்கிறான் வாலீசன். சி.ஐ.டி. யாக நடித்த கலைவாணர் கைகால்கள் உதறச் சிறப்பாக நடித்ததனால் இதனைத் தடை செய்தனர் காவலர்.

(2) புரேசன் மிதவாதி ஒருவரோடு பேசும்போது,

> "தாய்நாட்டை அன்னியருக்குக் காட்டிக் கொடுக் கும் சண்டாளர்கள், தம் தாயை மாற்றாரிடம் கூட்டிக் கொடுக்கும் கொடுமையைச் செய்கிறார்கள் என்று ஏன் சொல்லக் கூடாது ? "

என்பான். இதில் மிதவாதியாகக் கலைவாணர் சிறப்பாக நடிப்பார். அந்த நடிப்பும் வினாவும் காவலர்க்குச் சினத்தை வரவழைத்தன.

(3) இறுதியில் வரும் சண்டைக் காட்சியில் அனைவரும் வெவ்வேறு படைக் கருவிகளைக் கொண்டுவரும்போது கலை வாணர் பெரிய கைராட்டை ஒன்றைக் கையில் தாங்கி ஒரு

தொண்டர் படைத் தலைவராகச் செல்வார். இதற்கும் காவலர் அனுமதி தர மறுத்தனர்.

காவலரின் கருத்துகளை ஏற்று இக் காட்சிகள் மாற்றப் பட்டு நாடகம் தொடர்ந்து நடிக்கப்பட்டது. ஆயினும் சில நாள்கள் கழித்து இவை மீண்டும் சேர்க்கப்பட்டன என்று தெரிவிக்கிறார் அவ்வை சண்முகம்.

1937இல் ராஜாஜி முதல்வராக இருந்தபோது 'தேச பக்தி'க்கும் 'கதரின் வெற்றி'க்கும் தடை விதிக்கப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின்னர்த் தடை நீக்கப்பட்டது.

இவ்வாறு பாணபுரத்து வீரன் ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் தமிழக மேடைகளில் உலா வந்தது.

வெ. சாமிநாத சர்மா இந்த நாடகமே அன்றி, இலட்சுமி நாதன் (1915), லவகுசன், ஜீவபாலன், பேய்ப்பித்து முதலான நாடகங்களையும் இயற்றியிருக்கிறார்.

விடுதலை இயக்கத்தின் உச்சகட்டப் போராட்டத்தின் போது தோன்றிய ஒரு நாடகம் 'கவியின் கனவு'. இதனைக் கலைமாமணி எஸ். டி. சுந்தரம் தீட்டினார். சுதந்தர வேட்கையைத் தட்டியெழுப்பும் சிறந்த விடுதலை இயக்க நாடகங்களுள் இதுவும் ஒன்று.

ஆசிரியர் சுந்தரம் 1942ஆம் ஆண்டில் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் பெற்றார். அப்போது சிறையில் உருவாகி, 1944இல் அரங்கேற்றப்பட்ட நாடகம் இது. ஏறத்தாழ இரண்டாயிரம் முறை நடிக்கப் பெற்ற சிறந்த நாடகம் 'கவியின் கனவு'.

அரசன் ஆத்மநாதன் இறக்கிறான், அவனது தம்பி வீரசிம்மன் ஆட்சி பீடம் ஏறுகிறான். அவனும் ராணி ஊர்வசியும் தன்னலக்காரர்கள். ஆத்மநாதனின் நண்பராக விளங்கியவர் கவிஞர் ஆனந்தன். அவர் மீது ஆசைகொண்ட ஊர்வசி முன்னொருகால் சினங்கொண்டு கவிஞரின் மனைவி வாணியை ஆற்றில் தள்ளி மடியுமாறு செய்தவள். பின், அரசனை மயக்கினாள். அவன் அரசனே தவிர, ஆட்சி அனைத்தும் ராஜகுரு என்னும் சர்வாதிகாரியின் கையில் இருந்தது.

கவிஞர் மகள் சாந்தி, வளர்ப்பு மகன் மணிவண்ணன். மக்களிடையே சுதந்தர உணர்வையும் எழுச்சியையும் கவிஞர் உருவாக்கியது கண்ட ராஜகுரு வெறுப்படைந்தான். ஆட்களை ஏவி 'விரோதி, ராஜதுரோகி' என்று குற்றம் சாட்டிச் சிறையில் அடைக்கிறான். குழந்தைகளைப் பிரிந்ததால் கவிஞர் பித்தம் பிடித்தவரானார், ஆனந்தன் தீட்டிய நாடகம் ' கனவு '.

பதினைந்து ஆண்டுகள் கழிகின்றன. இளவரசி மேனகையின் பிறந்த நாளின்போது விழா நடக்கிறது. அப்போது பழஞ்சுவடியில் கிடைத்த கனவு நாடகம் நடிக்கப்பெறுகிறது. இந்தப் புரட்சி நாடகம் கண்டு ஊர்வசி அதிர்ந்து போகிறாள். வாணியைக் கொன்ற தன் பழைய சதிச் செயல்களின் வடிவமாக இந்த நாடகம் அமைந்ததெனத் திகைக்கிறாள். இளஞ்சேனாதிபதி சுகதேவனும் அவன் தங்கை கனிமொழியும் கலைஞர்களை ஆதரிக்கின்றனர்.

ராஜகுருவின் நச்சுப் பார்வை சாந்தியின் மீது படிகிறது. எனவே, சுகதேவனை எல்லைப்படைக்கு அனுப்பி அவனை அவளிடமிருந்து பிரிக்கிறான்.

அரச மாளிகையில் மணிவண்ணனும் சாந்தியும் இருக்கின்றனர், மேனகா மணிவண்ணனை விரும்புகிறாள். இவர்கள் திருமண ஏற்பாடு நடக்கிறது. மணிவண்ணனுக்கு அதில் விருப்பமில்லை. கனிமொழி இருவரையும் அரண்மனையிலிருந்து மீட்கவேண்டும் என்று சுகதேவுக்குத் தெரிவிக்கிறாள். அவனால் எதுவும் செய்ய முடியவில்லை.

மன்றத்தில் திடீரென வந்த கனிமொழி தன் கையிலிருந்த மாலையை மணிவண்ணனுக்குப் போட்டு மாலை மாற்றிக் கொள்கிறாள். சினம் கொண்ட அரசி கனிமொழியைச் சிறையில் அடைக்கிறாள், மணிவண்ணனும் சிறை செல்கிறான். சுகதேவன் சாந்தியை ராஜகுருவிடமிருந்து மீட்கிறான். ராஜகுரு தப்பி விடுகிறான்.

சிறையில் மணிவண்ணனும் கனிமொழியும் 'கனவு' நாடகத்திலிருந்து ஒரு பாடலைப் பாடுகின்றனர். அதைக் கேட்டுக் கவிஞர் ஆனந்தன் மனம் தெளிவடைகிறான். அவர் சாந்தியின் தந்தை என்பது வெளிப்படுகிறது. மேனகா தற்கொலை செய்து கொள்கிறாள், காரணம் சர்வாதி

காரியே என்று கடிதம் எழுதித் தந்தைக்கு அனுப்பி விடுகிறாள்.

அரண்மனை இரகசியங்கள் வெளிப்படுகின்றன, மணிவண்ணன் முன்னாள் மன்னன் ஆத்மநாதனின் மகன் என்பது புலப்படுகிறது.

சர்வாதிகாரி மக்களைத் தன் பக்கம் திருப்பிக் கவிஞர் ஆனந்தன் ஏதோ ராஜ ரகசியம் வைத்திருக்கிறார் என்று கூறுகிறான். கவிஞர் அதனைத் தெளிவுபடுத்துகிறார். அதில் ஒன்று, மணிவண்ணன் ஆத்மநாத மன்னன் மகன் என்பது, மற்றது, குகைக் கோயிலில் இருக்கும் நீதிநூல்கள் என்பது. இவை நாட்டின் செல்வம், இரகசியங்கள் என்கிறார் கவிஞர். சர்வாதிகாரி தற்கொலை செய்து கொள்கிறான்.

தீமை அழிகிறது. மணிவண்ணன்-கனிமொழி, சாந்தி-சுகதேவன் திருமணங்கள் நடக்கின்றன.

கதையின் போக்கில் பெரும்புரட்சி தென்படவில்லை; ஆயின் உரையாடல்களின் ஒவ்வொரு பகுதியும் புரட்சிகரமாக அமைந்து, விடுதலை வேட்கையை ஊட்டுவனவாக உள்ளன,

> ''விடுதலை வந்துட்டுதுன்னே பாட்றான், வீரமாப் பாட்றான், விடாமல் பாட்றான், வீடுவீடாப் பாட்றான்....''

என்பது கவிஞன் பற்றிய கருத்து.

> ''ஆயுதப் புரட்சி வேண்டுமென்று அரைக் கணத்தில் முடிவெடுத்து விடுவேன். ஆனால் அந்தப் புரட்சிக்கு ஏற்ற துணிச்சல் நாட்டு மக்களுக்கில்லை''

என்கிறான் கவி. தான் எழுதிய 'கனவு' நாடகத்தைக் கவி ''என் உயிரின் விருப்பம், ஆத்மாவின் துடிப்பு'' என்கிறான்.

கவிக்குச் சிறைவாசம் என்று ஓலை வருகிறது. அப்போது ஒரு வீரன்,

> ''''நீர் அபாயகரமாக வாழ்பவராம்! சிந்தனைச் செம்மலாம்! சுதந்தர வீரராம்! ஆகையால் சிறையில் சாக வேண்டியவராம்!''

என்று சொல்கிறான். இதனால் சுதந்தர வீரர்க்கு நேரும் கதி சொல்லப் படுகிறது.

சுகதேவன் வீரர்களைக் கூட்டிச் சொற்பொழிவு ஆற்றுகிறான். அதில்,

> ''மக்களாய்ப் பிறந்தோம், மடிவது திண்ணம்! தாய்த் திருநாட்டைத் தகர்த்திடும் எதிரிகள் மாய்ந்திடும் வரை நாம் மறப்போம் சுகத்தை! மானமொன்றின்றி மாற்றார் கொடியில் ஈனமுற்றிருக்க எவனே விரும்புவான்? தாய், பிறன் கைப்படச் சகிப்பவனாகி, நாயென வாழ்வதை விழைவது நன்றோ?''

என்று நீண்ட உரையாற்றிச் சுதந்தர வேட்கையை வெளிப்படுத்துகிறான். சுதந்தர வேட்கையை ஊட்டும்,

> ''தாயெனவே நமைப்பாலிக்கும்
> தாயகமே தாரக மென்போம்
> வாழி நேச தேசம் வாழி நலஞ் சூழ''

என்னும் பாடலைக் கேட்டவுடன் கவிஞரின் பித்தம் தெளிகிறது.

நாடு விடுதலை பெறுகிறது. கவிஞர் மக்களை நோக்கிப் பேசுகிறார்:

''சுதந்தரம் பெற்றது பெரிதல்ல — அதைக் கட்டிக் காப்பது தான் கடினமான காரியம். சுதந்தரம் ! நம் வாழ்வின் ஜீவன் ! நாகரிகத்தின் சின்னம் ! சுயமரியாதையின் ஆத்மா ! வீரத் தியாகிகளின் வெற்றிப் பரிசு ! இதைக் கண்ணும் கருத்துமாகக் காப்பது நம் கடமை .... சுதந்திரம் நம் உயிரின் உயிர் ! உணர்வின் உணர்வு ! அந்த உணர்வு தான் நம்மையும் நம் சந்ததிகளையும் காக்கும் ஜீவ சக்தி ! வாழ்க சுதந்திரம் ! வளர்க நம் நாடு ! வாழ்க நல் உலகம் ! ''

இந்தப் பகுதி நாடகம் பார்ப்பவர்களின் நெஞ்சில் பதியும்— சுதந்தர வேட்கையை ஊட்டுவிக்கும் தன்மையுடையது.

இருபத்தாறு காட்சிகளில் அமைந்த 'கவியின் கனவு' நாடகம் உரையாடல்களால் எழுச்சிமிக்க நாடகமாக அமைந்துவிட்டது. சுதந்தரக் கனலை நாடெங்கும் எழுப்பி வரலாறு படைத்தது.

இந்திய விடுதலைக்குப் பின் எஸ். டி. சுந்தரம் எழுதிய ''வீர சுதந்தரம்'' வாஞ்சி, லஜபதி, பகத்சிங், குமரன் ஆகியோரின் எழுச்சி மிக்க வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிறந்த நாடகமாகும்.

விடுதலை இயக்கப் போராட்டத்தின் போது இயற்றப் பட்டு மேடை ஏறிய மற்றொரு நாடகம் கோவை அய்யா முத்துவின் 'இன்ப சாகரன்'. நாட்டு விடுதலையே கருத் தாகக் கொண்ட இந்த நாடகம் 1936இல் மேடையில் நடிக்கப்பட்டது. ஒரே சமயத்தில் தொடர்ந்து 175 நாள் கள் மேடையில் சிறப்பாக நடந்த வெற்றி நாடகம் இது.

கவியோகி சுத்தானந்த பாரதியார் ஏறத்தாழ ஐம்பது நாடகங்களை எழுதியவர். இவரது நாடகங்கள் பல சுதந்தர உணர்வுடையனவாக அமைந்தன. விடுதலை இயக்கக் கவிஞராக விளங்கிய இவரது படைப்புகள் மற்றவர்களது படைப்புகளைப் போல மேடைகளில் மிகுதி யாக நடிக்கப்படவில்லை.

விடுதலை இயக்க உணர்வுடையோர் பலர் இந்திய விடு தலைக்குப் பிறகும் பல நல்ல நாடகங்களை எழுதிக் குவித் தனர். இவை, அரும்பாடு பட்டுப் பெற்ற சுதந்திரத்தின் பெருமையினை நினைவு கூர்வதாக அமைந்தன. தடை செய்யப்படுமோ என்ற அச்சமின்றி இந் நாடகங்கள் தீட்டப் பட்டன. அவற்றுள் சில :

எஸ். டி. சுந்தரத்தின் 'வீர சுதந்திரம்'.
சக்தி கிருஷ்ணசாமியின் 'வீரபாண்டிய கட்டபொம்மன்'.
தமிழ்வாணனின் 'புலித்தேவன்'.
டி.கே.எஸ். குழுவின் 'செக்கிழுத்த சிதம்பரனார்'.
கண்ணதாசனின் 'சிவகங்கைச் சீமை'.
பாலசஞ்சீவியின் 'தண்ணீர் விட்டோ வளர்த்தோம்'.
ரா. வே.வின் 'முதல் முழக்கம்'.
தே. ப. பெருமாளின் 'சுதந்தர தீபம்'.

இத்தகைய நாடகங்கள் இன்னும் சில உள. இவை விடுதலை உணர்வின் அடிப்படையில் அவ்வப்போது எழுதப்பட்டு வருகின்றன. இவற்றுள் சில மேடையில் வெற்றிகரமாக நடத்தப்பெற்றன. இவை தனி ஆய்விற்குரியன.

விடுதலை இயக்க நாடகங்களின் ஆய்வின் முடிவுகளாகக் கீழ்கண்டனவற்றைக் குறிப்பிடலாம் :

— விடுதலை முழக்கம் 1907 முதல் ஒலிக்க ஆரம்பித்தது.

— அதற்கு முன்னர் உரிமைக்குரல் தெருக்கூத்து நாடகங்களில் ஒலித்ததே தவிர, மேடை நாடகங்களில் இல்லை.

— முதல் தேசிய நாடகமாக விளங்குவது 'ஆரிய சபா'. ஆனால், இந்திய விடுதலையைப் பற்றி இது பேசவில்லை. மேலும் சில உரிமைகளைக் கேட்பதோடு நின்றது.

— தேசிய நாடகாசிரியர் தெ. கிருட்டினசாமிப் பாவலரே தலைசிறந்த விடுதலை இயக்க நாடகாசிரியர் ஆவர். இவரது நாடகங்கள் விடுதலை வெற்றிக்குத் துணை நின்றன.

— கதரின் வெற்றி (கதர் பக்தி), தேச பக்தி (பாணபுரத்து வீரன்) ஆகியன தடை செய்யப்பெற்ற நாடகங்கள்.

— பாவலர் தம் நாடகங்களை இலண்டனிலேயே ஆங்கிலேயர் முன்னிலையில் நடத்தியவர்.

— நாடகாசிரியர்கள் சமூகக் கதைகளின் ஊடே விடுதலை வேட்கையை நயமாக உணர்த்தினர்.

— விடுதலை இயக்க நாடகங்கள் பல மேடையில் சிறந்த வரவேற்பைப் பெற்றன.

— பாவலரின் பால மனோகர சபை, டி. கே. எஸ். குழு, சக்தி நாடக சபை முதலியன தேசிய நாடகங்களை நடத்தின.

— விடுதலை உணர்வோடு கதர் அணிதல், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, பரத்தையர் தொடர்பு, சூதாட்டத் தீமை முதலியன பற்றியும் நாடகாசிரியர்கள் எழுதினர்.

— நாடகங்களில் எழுச்சி மிக்க பாடல்கள் இருந்தன, இவை மக்களை உணர்ச்சிவயப்படச் செய்தன.

— தடைகளுக்கு அஞ்சாமல், சிறைக்கும் அஞ்சாமல் கலைஞர்கள் இந்த நாடகங்களை நடித்தனர், பாடல்களைப் பாடினர்.

— இரண்டாயிரம் முறை நடிக்கப்பட்ட பெருமை 'கவி யின் கனவு'க்கு உண்டு. புராண நாடகங்களுக்கோ, இதிகாச நாடகங்களுக்கோ கூட இந்தச் சிறப்பு இல்லை.

— தமிழ் நாடக வளர்ச்சியில் விடுதலை இயக்க நாடகங் கள் இல்லாமல் இருந்திருக்குமானால் ஒரு காலகட்டத்தைத் தமிழ் நாடகவாணர்கள் பயன்படுத்திக் கொள்ளத் தவறினர் என்ற பழி வந்திருக்கும். அந்தக் களங்கம் தமிழுக்கு இல்லை.

— பிற மாநிலத் தேசிய உணர்வுக்குத் தமிழகம் பின்தங் கிடவில்லை என்பதை இந்த விடுதலை இயக்க நாடகங்கள் உணர்த்துகின்றன.

தமிழ் நாடக வளர்ச்சி

விடுதலை இயக்கமும் திராவிட இயக்கமும்

தமிழ் நாடக வளர்ச்சி

விடுதலை இயக்கமும் திராவிட இயக்கமும்

திராவிட இயக்கம்

முன்னுரை

தமிழக வரலாற்றில் கடந்த எழுபத்தைந்து ஆண்டுகள் பார்ப்பனரல்லாதார் வளர்ச்சியைக் குறித்து நிற்பன. எங்கும் எதிலும் பார்ப்பனர்களே என்னும் நிலை தமிழ்நாட்டிலும் பிற இடங்களிலும் காணப்பட்டது. உயர்ந்த பதவிகள் அவர்களுக்கே; வாய்ப்புகளும் வசதிகளும் அவர்களுக்கே; மதிப்பும் மரியாதையும் அவர்களுக்கே; பணமும் பாராட்டும் அவர்களுக்கே; கலையும் கல்வியும் அவர்களுக்கே என்னும் ஒரு நிலை இருந்தது.

சமுதாயத்தின் மக்கள் தொகைக் கணக்குப்படி ஏறத்தாழ மூன்று விழுக்காடே இருப்பவர்கள் இத்தனைச் சிறப்பாக வாழ்ந்திட, தமிழ் நாட்டுக்கே உரிய — மூவேந்தர் பரம்பரையில் வந்த — தொண்ணூற்றேழு விழுக்காட்டினர் இழிமக்களாக, வாழ்க்கையில் பின்தங்கியவர்களாக, வசதியற்றவர்களாக இருக்க வேண்டிய ஒரு கால கட்டம். இந்த ஒழுங்கற்ற நிலையை மாற்றியமைப்பதற்காக 1916ஆம் ஆண்டில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோன்றியது. இது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், பார்ப்பனரல்லாத ஏனையோர்க்கும் நற்பணியாற்றியது.

பார்ப்பனரல்லாதாரின் நலங்கருதி டி. எம். நாயரும், சர் பி. தியாகராயரும் அதே காலகட்டத்தில் நீதிக் கட்சி

யைத் தொடங்கினர். 1916இல் சி. நடேச முதலியார் முதன்முதலாகத் 'திராவிட மாணவர் விடுதி' என்பதனைத் தொடங்கினார். பார்ப்பனரல்லாதோர் தமிழ் நாட்டுக்கு உரியவர்கள்; பிராமணர்கள் தம்மை உயர்ந்தவர்களாகக் கருதிக் கொண்டு ஏனையவரைத் தாழ்த்துபவர்கள்; தமிழரை மதியாதவர்கள்; உயர்குடி மக்களாகத் தம்மைக் கருதுபவர்கள்; தமிழர்க்கு எதிரானவர்கள்; வந்தேறிகளாகிய அவர்கள் முன்னரே உள்ள தமிழரைப் பல்வேறு துறைகளில் ஏய்த்துப் பிழைக்கிறார்கள் என்றெல்லாம் இவ்வியக்கத்தினர் கருதினர். அதற்கேற்பவே தமிழகத்தில் பல நிகழ்ச்சிகள் நடந்து வந்தன.

நாடெங்கும் தீண்டாமை தலை விரித்தாடியது; கோயில் முதலானவற்றில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைவது கண்டிக்கப்பட்டது; பார்ப்பனர் இருக்கும் தெருக்களில் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது; பொதுக் குளங்களிலும் கிணறுகளிலும் தண்ணீர் எடுப்பதற்குக் கூட உரிமை தரப்படவில்லை; உயர்ந்தவர்கள் வாழும் தெருக்களில் செருப்புகளைக் கையில் எடுத்துக் கொண்டு, துண்டினைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு, தலைகுனிந்து நடக்க வேண்டும். இவ்வாறெல்லாம் இருந்த நிலை கண்டு பார்ப்பனரல்லாத படித்த பெருமக்கள் பொருமினர்; வருந்தினர்; வாடினர்; எழுச்சி கொண்டனர்; இயக்கம் கண்டனர்.

தமிழில் 'திராவிடன்' இதழும், தெலுங்கில் 'ஆந்திர பிரகாசிகா' இதழும், ஆங்கிலத்தில் 'ஜஸ்டிஸ்' இதழும் இவர்களுடைய கருத்துகளைப் பிரதிபலித்தன. பின்னர்க் 'குடியரசு' தொடங்கப் பட்டது. நாடெங்கும் மக்கள் இவர்களுக்கு ஆதரவாகக் கிளர்ந்தெழுந்தனர்.

இதன் விளைவாக 1920ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்ட நீதிக் கட்சி பெருவெற்றி பெற்றுத் தமிழ்நாட்டில்

ஆட்சி அமைத்தது. ஏ. சுப்பராய ரெட்டியார் முதல் வரானார்; கே. வி. ரெட்டியும், இராமராய திங்கரும் அமைச்சர்கள் ஆனார்கள். 1923இல் டி. என். சிவ ஞானம் முதல்வராக இருந்தார். 1926ல் டாக்டர் சுப்ப ராயனின் சுயேச்சை ஆட்சி நடைபெற்றது. 1930இல் பி. முனியசாமியும், 1932இல் பொப்பிலி அரசரும் சென்னை மாகாணத்தின் முதல்வர்களாக விளங்கினர்.

1937 வரை நீதிக் கட்சியின் ஆட்சி தொடர்ந்தது. பதி னேழு ஆண்டுகள் நீடித்த நீதிக் கட்சி பார்ப்பனரல்லாத தமிழருக்கும் பிறருக்கும் நல்ல சிறப்பான தொண்டுகளை ஆற்றியது.

1921ஆம் ஆண்டில் இவர்கள் ஆட்சியில் பெண்களுக்கு வாக்குரிமை தரப்பட்டது; தேவதாசி முறை என்னும் கொடுமை டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியார் முதலானோ ரின் முயற்சியால் ஒழிந்தது; தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நிலங்கள் இருக்க வேண்டும் என்ற கருத்தில் அவர்களுக்கு நிலப்பட்டாக்கள் தரப்பட்டன. கோவில்கள், பொதுச் சொத்துக்கள் முதலானவற்றை ஒழுங்குபடுத்த அறநிலையப் பாதுகாப்புச் சட்டங்கள் உருவாயின.

1921ஆம் ஆண்டு செப்டம்பர் 16இல் புகழ்பெற்ற கம் யூனல் ஜி. ஓ. நிறைவேற்றப்பட்டது. இதனால் வகுப்பு வாரி அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. பார்ப்பனரல்லாதாரின் விழிப்புணர்ச்சி காரணமாக ஏறத் தாழ எழுபத்தைந்து ஆண்டுகளில் படிப்படியாக அவர்கள் முன்னேற முடிந்தது. இந்தக் கால கட்டத்தில் மற்ற மாநிலங்களில் காங்கிரசு இயக்கம் ஆட்சியில் இருந்ததும் இங்கே நீதிக் கட்சி இருந்ததும் எண்ணிப் பார்க்கத் தக்கது

நீதிக் கட்சியினர் பணக்காரர்களாக (பனகல் அரசர் பொப்பிலி அரசர் முதலானவர்கள்) இருந்ததால் காலப்

போக்கில் அஃது ஏழைமக்களுக்கு எதிரானது என்ற எண்ணம் உருவாயிற்று, நாட்டில் ஆங்கில அரசுக்கு எதிர்ப்பும் விடு தலை ஆர்வ உணர்வும் பெருகிவந்த அந்தக் காலத்தில் — வடக்கே காந்தியடிகள், திலகர், லஜபதி, விபின் சந்திர பால், நேரு முதலானவர்களும், தெற்கே பாரதி, வ.உ.சி., சத்தியமூர்த்தி, வ.வே.சு. அய்யர், ராஜாஜி முதலானவர் களும் ஆங்கில அரசினை எதிர்த்துச் சுதந்திர வேட்கையோடு கிளர்ச்சிகளைத் தொடர்ந்து செய்துவந்த அந்தக் காலத்தில் — நீதிக் கட்சியினர் ஆங்கிலேய ஆட்சிக்கு வரவேற்பு தரு பவர்களாக இருந்தனர். இதனால் படிப்படியாக நீதிக் கட்சி செல்வாக்கு இழக்கலாயிற்று. இதன் விளைவு 1937இல் காங்கிரஸ் தமிழக ஆட்சியைக் கைப்பற்றியது. இரண்டாண்டுக் காலம் ராஜாஜி தலைமையிலான ஆட்சி தமிழகத்தில் அமைந்தது. ஆனால், இந்தக் கட்டத்தில் தமிழகத்தில் ஒரு முக்கியமான திருப்பம் ஏற்பட்டது. அதுவே இந்தி மொழியை விருப்பமில்லாத தமிழ் மக்கள் மீது வலிந்து திணிப்பதற்குக் காங்கிரசாட்சி முனைந்ததாகும். காந்தியடிகளே கூறினாலும்கூட அந்த மொழியை ஏற்றுக் கொள்ளத் தமிழர்கள் விருப்பப்பட வில்லை. அதனால் 1938இல் ஒரு பெரும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்தது.

1925ஆம் ஆண்டு காஞ்சிபுரம் காங்கிரசு மாநாட்டில் அதிலிருந்து விலகிய தமிழகத்தின் தனிப் பெருந் தலைவர் தந்தை பெரியார் தலைமையில், பேரறிஞர் அண்ணா தள பதியாக இருக்க ஒரு பெரிய இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. அதில் எண்ணற்ற தமிழர்கள் — மகளிர் உட்பட — சிறையேகினர். மறைமலையடிகள், நாவலர் பாரதியார் உள்ளிட்ட தமிழறிஞர்களும் இதில் ஈடுபாடு காட்டினர்.

இதுவரை தமிழை ஒரு மொழியாக — ஒரு கருவியாகக் கருதியவர்கள் அதனைத் தெய்வமாக, தாயாக, உயிராகக்

கருதத் தலைப்பட்டனர். காங்கிரசு ஆட்சி அல்லது பார்ப்பன ஆட்சி தமிழர்க்கும் தமிழுக்கும் எதிரான ஆட்சி என்பது உறுதி செய்யப்பட்டது. இந்தித் திணிப்பு, பார்ப்பனரல்லாதாரை மேலும் ஒன்று சேரவைத்தது.

இதற்கிடையில் இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்தது. 1939 போர் தொடங்கியபோது இங்கிலாந்து இந்தியாவை ஒரு பொருட்டாக மதித்துத் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் போரில் ஈடுபட்டது. அதனால் காந்தியடிகள் கண்டனம் தெரிவித்தார். இந்தியாவில் இருந்த மாநில அரசுகள் தம் ஆட்சிகளைக் கலைத்து விட்டன. 1940இல் தனிநபர் அறப்போர் நாடு முழுவதும் நடைபெற்றது. 1942இல் போர் முடிந்த கையோடு 'வெள்ளையனே வெளியேறு' இயக்கமும் நடந்தது. எண்ணற்றோர் சிறைப்பட்டனர். இப்படி விடுதலைப் போராட்டம் பல்வேறு கட்டங்களாக நடைபெற்று வந்த அதே நேரத்தில் தெற்கே 1944ஆம் ஆண்டு நீதிக் கட்சி மாநாட்டில் 'திராவிடர் கழகம்' என்ற பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் பணியின் விளைவாக — 1947ஆம் ஆண்டு முதல் 1967இல் நடைபெற்ற தேர்தல் வரை காங்கிரசே வெற்றி பெற்றும் தமிழக முதல்வர்களாகப் பார்ப்பனரல்லாதோரே வரும் சூழ்நிலை உருவாயிற்று. இடையில் இரண்டாண்டுகள் ராஜாஜி இரண்டாம் முறையாக முதல்வராயிருந்தார். மற்றபடி ஓமந்தூரார், பி. எஸ். குமாரசாமிராஜா. பெருந்தலைவர் காமராசர், பெரியவர் பக்தவத்சலம் ஆகியோர் இந்த இருபதாண்டுக் காங்கிரசாட்சியில் முதல்வர்களாக இருந்தனர். அதற்குப் பின்னரும் (1967 முதல் 1990 வரை) பார்ப்பனரல்லாதோரே தமிழக முதல்வர்களாக இருந்தனர்; இருந்து வருகின்றனர் என்பதும் நினைக்கத் தக்கது.

1949ஆம் ஆண்டு சிற்சில சூழல்களால் தந்தை பெரியாரிடமிருந்து விலகிய பேரறிஞர் அண்ணா அவர்கள் தி.மு.க. என்னும் ஓர் இயக்கத்தைக் கண்டார். 1957இல் மும்முனைப் போராட்டம் நடத்தி மாபெரும் வெற்றி கண்ட இந்தக் கழகம் அவ்வாண்டு முதல் தேர்தலில் போட்டியிடத்தொடங்கியது. 1967இல் வரலாறு காணாத வெற்றியடைந்து தமிழக ஆட்சியைக் கழகம் கைப்பற்றியது. பேரறிஞர் அண்ணா முதல்வரானார். அன்று தொடங்கி இன்றுவரை திராவிட இயக்கங்களின் அமைப்புகளே ஆட்சியை நடத்தி வருகின்றன.

இந்த அரசியல் பின்னணியில் உருவான சமுதாய-பண்பாட்டுக் கூறுகள் சில உண்டு. அவை :

1. ஆரியர் வேறு, திராவிடர் வேறு என்னும் கருத்து.

2. ஆரியர் தமிழரை இழிவாகக் கருதுபவர்கள்.

3. சாதி சமய வேறுபாடுகளால் நாட்டைச் சீர்குலைப்பவர்கள் ஆரியர்களே.

4. சமுதாயத்தில் மூட நம்பிக்கை பெருகுவதற்கு அவர்களே காரணம்.

5. சங்க இலக்கியம் முதலானவை உயர்ந்தவை, இராமாயணம், பாரதம், புராணங்கள் முதலியவை தாழ்ந்தவை, வாழ்வைக் கெடுப்பவை.

6. வடமொழி ஆரியர் மொழி, தமிழைவிடத் தாழ்ந்தது, சிறுபான்மையினர் பேசுவது.

7. தமிழர் தலை நிமிர்ந்து வாழத் தனித் திராவிடம் வேண்டும். (பிரிவினைத் தடைச் சட்டம் வந்தபோது இது கைவிடப்பட்டது).

8. ஜமீன்தார்கள் கொடுமை இழைப்பவர்கள்.

9. இந்தியை எதிர்க்க வேண்டும், தமிழே நம் தாய்.

10. சமுதாயம் முன்னேறக் கோயில், கடவுள், மதம், சாதி, சடங்கு, நம்பிக்கைகள் தடைகளாக உள்ளன. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் கொள்கையே உகந்தது.

11. பெண் கல்வி, பெண் உரிமை, பெண் முன்னேற்றம், கைம்மை மறுமணம், திருமணச் சீர்திருத்தம் வேண்டும்.

12. கலைகளில் புரட்சி வேண்டும், பகுத்தறிவு பெருக வேண்டும்.

இன்ன பிற கொள்கைகளும் கோட்பாடுகளும் உருவாயின. இதன் விளைவுகள் திராவிட இயக்கத்தாரால் இயற்றப்பட்ட நூல்களில் — குறிப்பாக நாடகங்களில் — மிகுதியாகக் காணப் பட்டன.

இந்த வரலாற்றுப் பின்னணியில் திராவிட இயக்கத்தா ரின் நாடகங்கள் ஆராயப்பட வேண்டும். இதுவே 'உய்த் துணர் முறைத் திறனாய்வின்' அடிப்படை ஆகும். வேறு பல புறக் கூறுகள் வழி இக்காலத் திராவிட இயக்கத்தவரின் நாடகங்களை ஆராய்வது பொருந்தாது.

''நாடகம் ஒரு வலிமை மிகுந்த கலை'' என்பதை விடு தலை இயக்கம் ஓரளவு உணர்த்தியது. ஆனால், அதனை ஒரு போர்க் கருவியாகவும், கருத்துப் பரப்புக் கலையாகவும், மாற்றார் கருத்துகளுக்கு ஒரு கேடயமாகவும், சமுதாயச் சீர்திருத்தக் களமாகவும், பகுத்தறிவு நிலையமாகவும் ஆக்கிக் கொண்டது திராவிடர் இயக்கம்.

நாடகத்தையும், இலக்கியத்தையும், திரைப் படத்தை யும் கொள்கை பரப்புச் சாதனங்களாகத் திறம்படப் பயன்

படுத்திக்கொண்ட இயக்கம் திராவிட இயக்கமே. இக் கலைகளைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சியினைப் பிடித்த இயக்கம் இது; அதனைத் தொடர்ந்து இன்றுவரை இழக்காமல் நிலைபேறுடையதாக ஆக்கிக் கொண்டது இது. எனவே, திராவிடர் இயக்கம் தமிழ் நாடக வளர்ச்சியில் கொண்ட பங்கு பெரிது, அதனை ஆராய்வதும் இன்றியமையாதது.

நாடகம் பற்றிய கருத்துகள்

11—2—1944இல் 'தமிழ் மாகாண நாடகக் கலை அபிவிருத்தி மாநாடு' ஒன்று ஈரோடு சென்ட்ரல் தியேட்டரில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் கொடியேற்றினார்; இசை நாடக ஒளி எம். கே. தியாகராச பாகவதர் மாநாட்டைத் திறந்து வைத்தார்; சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் தலைமைப் பேருரை நிகழ்த்தினார். தவத்திரு சங்கரதாசு சுவாமிகளின் படத்தினை நாடகமணி எம். என். எம். பாவலரும், எம். கந்தசாமி முதலியாரின் படத்தினை முத்தமிழ்க் கலா வித்துவ ரத்தினம் அவ்வை தி. க. சண்முகமும் திறந்து வைத்துப் பேசினர். மாலையில் நடந்த நிகழ்ச்சியில் பலர் கலந்து கொண்டு நாடகம் பற்றிப் பேசினர். நவாப் டி. எஸ். இராசமாணிக்கம், சி. ஆர். மயிலேறு, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், கே. டி. சந்தானம், கி. ஆ. பெ. விசுவநாதம், எம். எம். சிதம்பரநாதன், பி. எஸ். சிவபாக்கியம், பேரறிஞர் அண்ணா முதலானோர் பேசினர். நடிகர் டி. எஸ். சிவதாணு நன்றி கூறினார்.

இந்த மாநாடு ஒரு பொது மாநாடாகவே நடைபெற்றது. என்றாலும் திராவிட இயக்கத்தாருக்கு அது பேருக்கத்தைத் தந்தது என்றே சொல்ல வேண்டும்.

1944ஆம் ஆண்டு தான் திராவிடர் கழகம் தோன்றிய ஆண்டு. எனவே இந்த ஆண்டில் நடந்த இந்த மாநாட்டுப் பேச்சுக்களில் அதன் தாக்கம் இருந்ததனை அறிய முடிகிறது.

''நாடகம் என்ற சொல் 'நடை' என்ற தமிழ்ச் சொல்லின் கருத்தைக் கொண்டது''

என்றும்,

> ''புராணங்களிலே புளுகுகள் உள்ளன. இராமாயணம், பெரிய புராணம், பாரதம் போன்றவைகள் புராணப் புளுகுகள் என்பதிலே சந்தேகம் இல்லை. இதைவிட அதிகமான புளுகுகள் ஆங்கிலத்தில் இலியட்டிலும் ஒடீசியிலும் உள்ளன''

என்றும் தம் வரவேற்புரையில் கூறினார் சர் ஆர். கே. சண்முகம். அவரே தம் முடிவுரையில்,

> ''வாழ்க்கையைச் சித்திரிக்க வேண்டியது தானே நாடகத்தின் கருத்து .... கருத்து மாறுவதுபோல் நாடகங்களும் புதிது புதிதாக மாற வேண்டும். வாழ்க்கையை விளக்கும் நாடகங்கள் ஆயிரக்கணக்கிலே வெளியிட இடமிருக்கிறது''

என்று நாடகத்தில் மாற்றம் தேவைப்படுவதைப் பற்றிப் பேசினார். இறுதியாக,

> ''சீர்திருத்த நாடகங்கள் நடத்தப்பட வேண்டும். நண்பர் அண்ணாதுரை 'சந்திரோதயம்' என்ற நாடகம் எழுதி நடத்திக் கொண்டு வருகிறார். அதைப் போல, ஒன்று போதுமா? நூற்றுக் கணக்காக எழுதி நடிக்க வேண்டும். யாரும் நடிக்க முன்வரா

> விட்டால் நண்பர் அண்ணாத்துரை எழுதும் நாடகத்தில் நான் நடிக்கிறேன்.''

என்று, ஒரு காலத்தில் மத்திய நிதி அமைச்சராக இருந்த சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் பேசியிருக்கிறார் என்றால் திராவிட இயக்கத்தினரின் நாடக ஆற்றல் எத்தகையது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

இந்த மாநாட்டில் பேசும்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடகத்தின் நிலைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். அவரது நாடகக் கொள்கை விளக்கமாகவும் அது விளங்கியது,

> ''கலை மக்கள் உள்ளத்திற்குக் களிப்பூட்டும் கருவியாக இருப்பின், அதனிடம் எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால், கலை ஒரு இனம் மற்றோர் இனத்தை அடக்கியாள உபயோகமாகும் வலையாக இருக்கிறது. எனவே அந்த வலையின் பின்னால் எத்தனை பெரிய சக்தி இருந்தாலும், ஒன்று வலையைச் சின்னாபின்னப் படுத்துவது, அல்லது அந்த முயற்சியிலே நாங்கள் சின்னாபின்னமானாலும் கவலையில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.''

என்று பேசித், தொடர்ந்து,

> ''எலும்பு பெண்ணுருவான அருட்கதைகளைபற்றிப் பாடியும் ஆடியும் வந்தது போதும், நமது பெண் மக்கள் எலும்புருவானது தவிரப் பலன் எதுவுமில்லை. இனிப் பெண்கள் எலும்புருவாகும் பரிதாப வாழ்வைச் சித்திரிக்கும் நாடகங்களை நடத்துங்கள். கண்ணைப் பெயர்த்தெடுத்து அப்பிய கண்ணப்பர் கதையை ஆடியது போதும். இனிக் கோயில் கட்டிக் கும்பாபி

> ஷேகம் செய்பவன், ஊரில் கொள்ளையடிக்கும் விஷயத்தை விளக்கும் நாடகத்தை நடத்திக் காட்டுங்கள். வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டுங்கள். ஏழையின் கண்ணீர், விதவையின் துயரம், மதத் தரகர்களின் மமதை ஆகியவற்றை விளக்கும் அறிவு வளர்ச்சி நாடகங்களை நடத்துங்கள் ''

என்று முழங்கினார்.

திராவிட இயக்கத்தைச் சேர்ந்த பூவாளூர் அ. பொன்னம்பலனார் (போட் மெயில் பொன்னம்பலனார்),

> ''பழமையிலே மோகம், மூடநம்பிக்கையிலே காதல், மதச் சேற்றிலே மயக்கம், புராணக் குப்பையிலே மோகம், கடவுள் அவதாரக் கதைகளிலே — லீலைகளிலே குருட்டு பக்தி நிறைந்து கிடக்கிறது. இதை அறிவு வளர்ச்சிப் பிரச்சாரத்தினாலேயே அகற்றலாம்''

என்று அந்த மாநாட்டில் பேசினார். இந்த மாநாட்டில் ஒலித்த கருத்துகள் அந்தக் காலத்தில் மலர்ந்து வந்த புதுப் போக்கினை உணர்த்துவதாக உள்ளன.

புரட்சிக் கவிஞர்

திராவிட இயக்க நாடகங்கள் பற்றிச் சிந்திக்கும் போது முதலில் நினைவுக்கு வரும் பெயர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களது பெயரே ஆகும். அவரே முதன் முதல் 1939இல் வீரத்தாய் என்னும் கவிதை நாடகத்தை எழுதினார். இது 'பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி'யில் வெளிவந்தது.

பாரதிதாசன் தீட்டிய முதல் முழுநீளப் புரட்சி நாடகம் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்பதாகும். இது 1939ஆம் ஆண்டு ஈரோடு குடியரசு பதிப்பகத்தின் வெளியீடாக வந்தது. தமிழகத்தைப் பொறுத்த வரை ஒரு காப்பிய அல்லது இலக்கிய எதிரணிக் தலைவனைக் கதாநாயகனாக்கி எழுதப்பட்ட முதல் நாடகம் இதுவே. அது மட்டுமல்லாமல் தமிழகத்தின் மூலை முடுக்கிலெல்லாம் சங்கரதாசு சுவாமிகள், நவாப் டி. எஸ். இராச மாணிக்கம், கன்னையா கம்பெனியார் முதலான பல்வேறு நாடகக் குழுவினர் புராண இதிகாச நாடகங்களை நடத்தி வந்த போது, அவற்றிற்கு மாறான 'இரணியன்' நாடகம் வெளி வந்தது. அது திராவிட இயக்கத் தோழர்களால் மேடையில் நடிக்கப் பெற்றது. அதுவும் காவலர்களின் தடையை மீறி நடத்தப்பட்டது. அதனால், நடித்த தோழர்கள் சிறைக்குச் செல்ல நேர்ந்தது. பின், அவர்கள் வெளியே வந்தபோது பாராட்டுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

இந்த நாடகம் 'பிரகலாதா' நாடகத்தைச் சங்கரதாசு சுவாமிகள் சிறப்பாக நடத்திவந்த காலத்தும், நவாப்

டி. எஸ். இராசமாணிக்கம் பிள்ளை 'தசாவதாரம்' நாடகத்தை வண்ணக் காட்சிகளோடு நடத்திவந்த காலத்தும் அவற்றிற்கு எதிராகவும் முரணாகவும் இயற்றப்பட்டது.

9–9–1934ஆம் நாளில் இந் நாடகம் மேடையில் நடிக்கப்பட்டது. குத்தூசி குருசாமி இரணியனாகவும், திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் பிரகலாதனாகவும் அதில் நடித்திருக்கின்றனர். முதல் நாடகம் தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்றது. புரட்சிக் கவிஞர்,

> ''சுயமரியாதை இயக்கங் கண்டாரும், பார்ப்பனரல்லாத மக்கட் குழைப்பதே தன் கடனெனக் கொண்டாரும், 'ஜஸ்டிஸ்' என்ற நீதிக் கட்சியின் தலைவரும், தற்போது தமிழுக்காகச் சிறையிலிருப் போருமாகிய தமிழர் திலகம், அறிவின் அம்சம், புரட்சியின் சிகரம் பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கட்கு இந் நூல் ஏற்புடைத்து ''

என்று இந்நூலின் இரண்டாம் பதிப்பினை உரிமையுரை செய்திருக்கின்றார்.

ஏறத்தாழ நூறு பக்கங்கள் கொண்டது நாடக நூல். இதில் முகவுரைக் குறிப்புகள் என்ற பகுதியில் நாற்பது வரலாற்று நூல்களிலிருந்து 'ஆரியர்கள் எத்தன்மையர் ?' என்பதற்குச் சான்றுகள் தந்துள்ளார் ஆசிரியர். நாடகம் பதினைந்து காட்சிகளை யுடையது. நூலில் இணைப்பாக இருபத்திரண்டு பாடல்கள் உள்ளன. உட்பிரிவுகளுக்கு அங்கம் என்றோ, காட்சி என்றோ, களம் என்றோ பெயரிடாமல் 'அத்தியாயம்' என்று தலைப்பு தரப்பட்டுள்ளது வியப்புக்குரியது. புதினம் போலக் கருதி அக்கால வழக்கத்தில் இப்படி எழுதியிருக்கிறார் போலும்.

கவிஞரின் தொடக்க கால நூல் இது. 1934இல் நடிக்கப் பட்டது. அவர் தனித்தமிழ் ஆர்வலராகச் செயல்படுவதற்கு முன் இயற்றப்பட்டது. எனவே, இதில் வட சொற்கள் மிகுதி. தொடக்கமே

> ''பிரகலாதா ! என்ன ரமணீயமான ஸ்ருங்கார வனம் ! ''

என்று அமைந்துள்ளது.

முதற் காட்சியிலேயே பிரகலாதன் சித்ரபானுவைச் சிங்கார வனத்தில் சந்திக்கிறான். அவள் தமையனே அவளைப் பிரகலாதனுக்கு அறிமுகம் செய்து கூட்டிக் கொடுக்கிறான்,

> ''நீலோற்பல நேத்திரம்! மின்னல் ஒளியை ஒழுகவிடும் மந்தகாசம்! மலர்க்கொடியிடை! . . . . அந்தி மாலைப் பொழுது! இன்பத் தென்றல்! இடையில் நீயும் அவ்வனிதையும்! இளம்பருவத்தின் துடிதுடிப்பு! முக்கியமாகச் சொல்லவேண்டுமானால் காதல் திருவிழாவின் துவஜாரோகணம்!''

இவ்வாறு பேசுகிறான் காங்கேயன், தன் தங்கையைப்பற்றி பிரகலாதனிடம் ! ஆரிய நாகரிகம் எவ்வளவு மோசமானது என்பதை இக் காட்சி உணர்த்துகிறது.

அடுத்த காட்சியில் அவள் தந்தை கஜகேது ஆரிய சம்பிர தாயங்களைச் சொல்லி ''அவை கடவுளால் வகுக்கப்பட் டவை'' என்றும், பிரகலாதன் சித்ரபானுவைக் கலியாணம் செய்து கொண்ட விஷயம் எவருக்கும் தெரியாதிருக்க வேண் டும் என்றும் கூறுகிறான்.

தன் மகனைப் பற்றித் தாய் லீலாவதி கவலைப்படும் போது, தந்தை இரணியன் உடன் வருந்துகிறான். ஆரியர் களால் அவனுக்குக் கேடு நிகழலாம் என்று கருதுகிறான்.

ஆசிரியர்கள் செய்யும் அட்டகாசம் பற்றி அவனுக்கு ஒரு தூதுவன் வந்து சொல்கிறான். அவன், ''முளையிலேயே நமது பெரியோர்கள் ஆரியப் பூண்டைக் கிள்ளி எறியாத தால் கோடரி கொண்டு பிளக்க வேண்டிய சிரமம் ஏற்பட்டு விட்டது'' என்று பேசுகிறான்.

பிரகலாதனுடன் நள்ளிரவில் அரண்மனைக்குள் நுழைந்த சித்ரபானு அந்தப்புரத்தில் உறங்கும் இரணியனின் மார்பை நோக்கி ஈட்டி வீசுகிறாள். காவலர்கள் அவளைப் பிடித்து வருகின்றனர். அரசன், ''அவள் பெண், அவளைக் கொல்ல வேண்டாம்'' என்று மன்னித்து அனுப்புகிறான். அவளோ, இரணியன் தன்னை ''வாய்க்கு வராத வார்த்தைகளால் திட்டினான்'' என்று பொய்கூறி மகனிடம் வெறுப்பு உண் டாகும்படி செய்கிறாள்.

அடுத்த காட்சியில் சித்ரபானு சேனாதிபதியிடம் காதல் மொழி பேசுகிறாள். அவனிடம் இரணியனைக் கொன்று சக்கரவர்த்தியாகும்படி ஆசை மூட்டுகிறாள். அவனும் அவளிடம் மயங்குகிறான்.

இரணியன் ஆரியரது புரட்டை அம்பலமாக்குகிறான். ஆரியரோ நாராயணன் தோன்றி இரணியனை அழிக்கப் போவதாகப் பேசி வருகிறார்கள். இவ்வாறு பேசிய நான்கு ஆரியர்களும் சேனாதிபதியிடமிருந்து தப்புகின்றனர்.

இரணியனுக்கு முன்னால் பிரகலாதன் நாராயணன்புகழை ஓதுகிறான். இரணியன் வெகுண்டு பேசுகிறான்.

சூழ்ச்சியால் இரணியனைக் கொல்கின்றனர் ஆரியர். எப்படி ?

> ''இரணியன் : அடே, வஞ்சகனே ! ஆரியப் பேடி களின் அடிமையே ! நீ சொல்லும் நாராயணன் எங்கே யிருக்கிறான், காட்டுவாயா ?

பிரக : அவன் எங்குமிருப்பான். இதோ இருக்கும் இந்தத் தூணிலுமிருப்பான், துரும்பிலுமிருப்பான்.

இரணியன் : இந்தத் தூணிலுமா ? ''

என்று கோபத்தால் தூணை உதைக்கிறான் இரணியன். சிங்கத்தோல் போர்த்த காங்கேயன் தூணிற்குப் பின்னாலிருந்து வெளியே வருகிறான்.

''காங் : அடா நாராயணன் நாமே ! எமது பக்தர்களை ரக்ஷிக்கவும் உன்னைச் சிக்ஷிக்கவும் தூணிலிருந்து ப்ரஸன்னமானோம் ''

என்று கூறுகிறான். இரணியனுக்குப் பின்னால் இரண்டு ஆரியர்கள் அவனைத் தாக்க வருகின்றனர். 'கடகட' வென்று சிரித்த இரணியன்,

''அடே, நான் தூணை உதைத்தேன்! நாராயணனாகிய நீ வந்தாய் ! உன்னை உதைத்தால் உன்னிடமிருந்து தூண் வெளி வருமா ? பார்க்கிறேன் ? ''

என்று சொல்லிக் காங்கேயனை உதைக்க, அவன் போர்த்திய சிங்கத் தோல் கழன்று விழுந்தது. அவன் கீழே விழுந்து இறக்கிறான். இதற்குள் பின்னால் வந்த ஆரியர்கள் இருவர் இரணியனை முதுகில் குத்தி விடுகின்றனர்.

லீலாவதி உடனே தற்கொலை செய்துகொண்டு மடிகிறாள். பிரகலாதன் சேனாதிபதியைக் கொல்ல முனைகிறான், ஆனால் அவன் பிரகலாதனைக் கொன்று விடுகிறான். பிரகலாதனின் மடியில் இருந்து கடிதம் ஒன்று விழுந்தது. அதில் சித்ரபானு சேனாதிபதி தன்னை அடைய விரும்பியதால் அவனை ஒழிக்கவேண்டும் என்று ஒரு குறிப்பு இருந்தது. அதனால் சினம் கொண்டான் சேனாதிபதி. அங்கே ஆண் வேடத்திலிருந்த சித்ரபானுவின் மீசை ஒரு

பக்கம் கழன்று விழுந்ததால் அவளை அறிந்து அவளையும் கொல்கிறான் சேனாதிபதி. இரணியன் வீழ்ச்சிக்குத் தானும் காரணமாயிருந்தது குறித்து வருந்துகிறான் சேனா திபதி. இறுதியில் அவன் பேசும் நீண்ட பேச்சின் ஒரு பகுதி :

''அண்ணலே மறைந்தாயோ ! இனி உன் வீரப் பேச்சை எங்குக் கேட்பேன் ? வீரப் பார்வை யாரிடம் உண்டு ? தமிழ் வளர்த்த தமிழா ! தமிழறிந்த தமிழா! தமிழரைக் காத்த தமிழா ! தமிழ் மக்கட்கு இடையூறு நேர்ந்தால் இனி யாரிடம் முறையிடுவது? அந்தோ பேடித்தனம் நிறைந்த ஆரியர் உன்னைப் பின்னிருந்து குத்தியதைப் பார்த்தும் இந்தப் பாவி சும்மா விருந்தேனே ! . . . . எ, தமிழ்ப் பெருமக்களே! எனக்குத் தண்டனை இடுங்கள் ! ஆரியரை நம்பாதீர்கள் ! உங்கள் அறிவை, உங்கள் ஆண்மையை, ஆரியரின் சூழ்ச்சியிலே எள்ளத்தனையும் ஈடுபடுத்தாதீர்கள் ! ஆரியர்களை அகற்றுங்கள் ! தமிழர் நாட்டைத் தமிழ்நாடாக்குங்கள் ! உங்கள் தமிழ்ச் சக்ரவர்த்தி உங்களுக்காக மாண்டான். ஆரியர் அக்ரமத்திலிருந்து உங்களை மீட்கவே மாண்டான். அவன் மாண்டதற்கு ஆரியர் சொல்லும் வேதம், மந்திரம், கடவுள் அவதாரம் காரணமே அல்ல. இவையனைத்தும் அயோக்கியர்களின் பொய்யுரைகள். அந்தோ ! வீரத் தமிழன் மாண்டதற்குக் காரணத்தை — அவன் சரித்திரத்தை உண்மையாக எழுதவும் கவிஞர்கள் அஞ்சுவரோ ? இன்று வீரத்தால் உகுத்த சக்ரவர்த்தியின் ரத்தத்தின்ஒவ்வொரு துளியும் இன்றைக்கு இல்லாவிடினும் ஒரு காலத்தில் வீரத் தமிழரை, சுய மரியாதையுடைய தமிழரை உண்டாக்கும் என்ற நிச்சயத்தோடு, இதோ நான் விடை பெற்றுக் கொள்கிறேன்!''

என்று கூறித் தன் கையிலிருந்த கட்டாரியால் குத்திக் கொண்டு இறக்கிறான் சேனாதிபதி.

நாடகம் முழுவதும் ஆரியர்களின் வஞ்சகத்தையும் கொடு மையையும் கவிஞர் வன்மையாகக் கண்டிக்கிறார். ஆரியர் கள் சிலர் தமிழ் நூல்களைத் தீயிட்டுக் கொளுத்துகின்றனர். அதனைக் கேட்டவுடன் இரணியன்,

''ஆ ! தமிழ்எனில் தமிழரின் உயிர் — அதை
அனலிட்டு மறைத்திட முனைந்திட்டாரா ஆரியர் (ஆ)

பூதலத்திலே தமிழர் புனிதம் விளக்குமந்தப்
புத்தகத்தை அகப்பொருள் வித்தகத்தை இழப்பதோ? (ஆ)

ஆரியத்தை ஆரியரின் காரியத்தையே பரப்பச்
சீரியற்கை தமிழ்மொழிவேரைவெட்ட நினைத்தாரோ?
வீரியத்தை இழந்தபின் மேதினியில் வாழ்வதுண்டோ?

வெற்றித் தமிழ்மொழி மெச்சிப் புகழ்பெற
வெட்டிப் பலியிடு துட்டப் பயல்களை'' (ஆ)

என்று ஆவேசமாகப் பாடுகிறான். இங்குத் தமிழ் உணர்ச்சி பொங்கி வழிகிறது.

பாரதிதாசரின் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' திராவிட இயக்க வரலாற்றில் ஒரு பொன்னேடு. தமிழ் நாடக வளர்ச்சியில் ஒரு திருப்புமுனை ! இந்த நாடகத்துக்குப் பின் எண்ணற்ற நாடகங்கள் ஆரியரின் சூழ்ச்சியை விளக்கும் வண்ணம் தோன்றின. ஏனைய புராண இதிகாசக் கதை மாந்தர்கள் அனைவரும் இத்தகைய ஆராய்ச்சிக்குள்ளானார்கள் ! இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித், கம்சன், வாலி முதலான மாந்தர்களின் வீர வரலாறுகள் திராவிட இயக்கத்தாரால் எழுதப்பெற்றன. வரலாற்றுப் பின்னணியில் அண்ணாவும் பிறரும் ஆரியரை

எதிர்த்து நூல்கள் எழுதப் பாவேந்தரின் 'இரணியன்' நாடகமும், தந்தை பெரியாரின் இராமாயண புராணங்களின் ஆய்வும் அடிப்படையாக விளங்கின என்றால் மிகையாகாது.

பாரதிதாசன்,

ஆரிய பத்தினி மாரிஷை
கோயில் இரு கோணங்கள்
ஐயர் வாக்குப் பலித்தது
சமணமும் சைவமும்
வஞ்ச விழா

முதலான பல ஓரங்க நாடகங்களில் ஆரியரின் கொடுமைகள் குறித்து எழுதியுள்ளார்.

சேர தாண்டவம்
படித்த பெண்கள்
நல்ல தீர்ப்பு
பிசிராந்தையார்
கழைக்கூத்தியின் காதல்
சௌமியன்
குடும்ப விளக்கும் குண்டுக் கல்லும்

முதலான முழுநீள நாடகங்களையும் பாரதிதாசன் எழுதியுள்ளார். இவற்றுள் சேர தாண்டவமும் பிசிராந்தையாரும் சங்க இலக்கியப் பின்புலம் உடையவை.

முழுநீள நாடகங்களாகவும், ஓரங்க நாடகங்களாகவும் ஏறத்தாழ ஐம்பது நாடகங்களைத் தீட்டியவர் பாரதிதாசன். இவரது நாடக வளம் பற்றித் தனியே ஆராயப் படுதல் வேண்டும். "தமிழ் நாடக வரலாற்றில் பாரதிதாசன்" என்று டாக்டர் தா. வே. வீராசாமி அவர்கள் எழுதிய நூல் இங்குக் குறிக்கத்தக்கது. டாக்டர் ச. சு. இராமர்

இளங்கோவின் அச்சில் வராத ''பாரதிதாசன் நாடகங்கள்'' ஆய்வேடும் சிறப்புடையது.

கூர்மையான — நெஞ்சில் தைக்கக் கூடிய — நேரடியாகத் தாக்கக் கூடிய உரையாடல்களைப் பாரதிதாசனின் நாடகங்களில் காண்கிறோம்.

ஆரியரைச் சாடும்போதும், வேறு அக்கிரமங்களைச் சாடும்போதும் ஈவு இரக்கமின்றிக் கொஞ்சமும் விட்டு வைக்காமல் கடுமையாக எழுதும் இயல்புடையவர் புரட்சிக்கவிஞர் !

எந்த நாடகத்திலும் இந்தப் பகுதி தேவையில்லை என்றோ, இந்தச் சொல் வீணானது என்றோ சொல்ல முடியாதவாறு செறிவுடன் உரையாடல் எழுதுவது அவர் திறன் !

அவருடைய காப்பியங்களும் நாடகமாக ஆக்கப் பட்டிருக்கின்றன ; நடிக்கப் பட்டுமிருக்கின்றன. எஞ்சிய நூல்கள் கூட நாடகமாக்கத் தக்கன.

புரட்சிக் கவிஞர் தமிழ் நாடகங்களில் புதுமை ஊட்டியவர் ! எதிர்காலத்திற்குப் புதுவழி காட்டியவர் ! தமிழ் நாட்டுப் பண்பாட்டினை நன்கு நிலைநாட்டியவர் !

சந்திரோதயம், வேலைக்காரி, ஓர் இரவு, சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து ராஜ்யம், காதல் ஜோதி, நீதி தேவன் மயக்கம் முதலியன அறிஞர் அண்ணா எழுதிய நாடகங்களில் குறிப்பிடத் தக்கன. இவையே அன்றி எண்ணற்ற ஓரங்க நாடகங்களை அண்ணா தீட்டியுள்ளார்.

திராவிட இயக்க நாடக வரலாற்றின் விடிவெள்ளியாகத் திகழ்பவர் பேரறிஞர் அண்ணா அவர்களே ஆவர்.

1943இல் அண்ணா 'சந்திரோதயம்' நாடகத்தை எழுதினார். அப்போதிருந்தே அது மேடையில் நடிக்கப்பட்டது. மடாதிபதிகளின் ஆணவத்தையும் அகம்பாவத்தையும் தோலுரித்துக் காட்டும் சமுதாயச் சீர்திருத்த நாடகம் 'சந்திரோதயம்' ஆகும். அண்ணாவே வேடம் புனைந்து நடத்திய இந்த நாடகத்தைக் கண்டு ஆர்வத்துடன் பாராட்டிப் பேசாதவர்கள் எவருமிலர். அவ்வை சண்முகம் முதலான தொழின்முறை நடிகர்களே அந்த நாடகத்தைப் பலபடப் பாராட்டியிருக்கிறார்கள்.

அண்ணா அவர்களின் வெற்றி வியப்புக்குரியதன்று; அவர் தொட்டதெல்லாம் பொன்னாகும் எழுத்து வேந்தர்; கருத்தும் சொல்லும் போட்டி போட்டுக் கொண்டு ஒளிரும் வண்ணம் எழுதும் படைப்புச் செல்வர் !

அனைத்துத் துறைகளிலும் அண்ணா வெற்றி பெற்றதற்குக் காரணம் அவர்தம் நாடகத் திறனே ஆகும். அடிப்படையில் அவர் ஒரு நாடகாசிரியர். அதன் பின்பே அவரைப் புதின ஆசிரியர், சிறுகதை ஆசிரியர், இதழாசிரியர், கவிஞர், ஓவியர், கட்டுரை ஆசிரியர், சொற்பொழிவாளர், அரசியல் தலைவர், சட்டமன்ற நிபுணர், அரசியல்

ஞானி, தேர்ந்த அமைச்சர் முதலான பெருமைகள் அவர்க்குரியவாகும்.

எந்த நிலையிலும் அவரிடம் நாடகத் தன்மை இருத்தலை அவர் எழுத்துக்களைக் கூர்ந்து கவனித்தவர்கள் உணரலாம்; அவர் பேச்சினை நேரில் கண்டவர்கள் அறியலாம்; அவரது மற்ற துறைகளில் நாட்டமிருப்பவர்கள் காணலாம். அவர் கூட்டத்திற்கு வருவதிலிருந்து, பொடி போடுவதிலிருந்து, வேட்டியைப் பேசிக்கொண்டே இலாவகமாகக் கட்டுவதிலிருந்து, குறும்பாகப் பேசும்போது கண்களில் மின்னும் ஒளியிலிருந்து, அமர்ந்திருக்கும் பாங்கிலிருந்து அவரை ஒரு நாடக வேந்தர் என்று அறிந்து கொள்ள முடியும். அவருடைய சிறுகதை, புதினம், கட்டுரை, பேச்சு, கடிதம் அனைத்திலும் நாடக வீச்சுக்கள் உண்டு.

அவர் எழுதுவது அந்திக் கலம்பகம் ஆனாலும், பாவையின் பயணம் ஆனாலும், ஆரிய மாயை ஆனாலும், மாஜி கடவுள்கள் ஆனாலும், பணத் தோட்டம் ஆனாலும், கடிதங்கள் ஆனாலும் அனைத்திலும் நாடகக் கண்ணோட்டமே மிகுதியாக இருப்பதை அண்ணாவின் இலக்கியத்தில் தோய்ந்தவர்கள் நன்கு அறிய முடியும் !

அண்ணாவின் வாழ்வின் வெற்றிக்குக் காரணம் இந்த நாடகப் பண்பே ! அதனைப் புரிந்து கொண்டு பின்பற்றிய ஒரே நபர் டாக்டர் கலைஞர் ஆவார் !

'சந்திரோதயம்' 23—4—1943 அன்று ''சந்திரோதயம் — சந்தோஷ உதயம்'' என்னும் விளம்பரத்தோடு திராவிடர் நடிகர் கழகத்தாரால் ஈரோட்டில் நடிக்கப் பெற்றது. பின், திருச்சியிலும், திருவத்தி புரத்திலும், சிதம்பரத்திலும், ஈரோட்டிலும் ஆகப் பல இடங்களில் இது நடிக்கப்பட்டது.

புத்துலகச் சிற்பி துரைராஜ் வைதிகராக விளங்கும் சிங்காரவேலர் என்னும் செல்வச் சீமானின் பொருளைக் கொள்ளையடித்தார் என்று பொய்கூறி வஞ்சக வாஞ்சிநாத சாஸ்திரிகள் ஊரைவிட்டுத் துரத்துகிறார். சிங்காரவேலரின் மகள் சந்திரா ஒரு முதிய நிலக் கிழாருக்கு மனைவியாக்கப் படுகிறாள்; ஆனால் ஒரே திங்களில் கைம்மைக் கோலம் பெறுகிறாள்.

எதிர்பாராமல் துரைராசனுக்கு வேற்றூரில் ஒரு மடாதிபதி பதவி கிடைக்கிறது. அவன் விரும்பாமலேயே அப்பதவி அவனிடம் திணிக்கப்படுகிறது. முதலில் மறுத்த அவ்வன், இரண்டு நாள்களில் மடத்துப் பொருள்களையெல்லாம் ஏழை எளியவர்களுக்கு வாரி வழங்குகிறான்; கல்விக்கூடங்களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் அவற்றை அள்ளியிறைக்கிறான். எஞ்சியிருக்கும் கொஞ்சம் பொருளை எடுத்துக் கோண்டு மாயேந்திர பூபதி என்னும் பெயரில் சொந்த ஊருக்கே வந்துவிடுகிறான்.

சிங்காரவேலரைச் சித்திரவதை செய்து பொருள் பறித்துக் கொண்டிருந்த சாஸ்திரியின் உண்மை உருவத்தை — அவரைத் திரை மறையில் இருக்கச் செய்து — வெளிப்படுத்துகிறான் மாயேந்திரன். ஆத்திரமடைந்த சிங்காரவேலர் சாஸ்திரிகளைக் கொன்றுவிடுகிறார்.

தன் பழைய காதலைப் புதுப்பித்துக் கொள்ளவந்த சாம்பசிவத்துக்குச் சந்திராவை மறுமணம் செய்து வைக்கிறான் மாயேந்திரன். பின்பு தானே புத்துலகக் கழகத் துரைராஜ் என்பதை எடுத்துக் கூறி, சாஸ்திரிகளின் மரணத்திற்குத் தானே பொறுப்பு என்பதைக் காவல் துறைக்குத் தெரிவித்துவிட்டுத், தன் பொருள்களை யெல்லாம் கழகத்திற்கு என உரிமைப் படுத்தித், தான் நஞ்சுண்டு இறக்கிறான்.

இந்த நாடகத்தில் அறிஞர் அண்ணா துரைராஜ், புதிய மடாதிபதி, மாயேந்திர பூபதி என்னும் மூன்று வேடங்களில் வெவ்வேறு தோற்றத்திலும் பாங்கிலும் நடித்திருக்கிறார்.

'சந்திரோதயம்' ஜமீன்தார்களின் இரக்கமற்ற மனத்தைச் சுட்டுகிறது; மடங்களில் நடக்கும் கயமைகளைக் காட்டுகிறது; பிறரை அண்டிப் பிழைக்கும் வைதிகர்களின் வஞ்சகங்களை விவரிக்கிறது. மதம், சாதி, பழமைப்பித்து, ஜமீன்தார் நடவடிக்கை, மடாதிபதி — இவற்றால் விளையும் தீமைகளை எடுத்துக் காட்டி மக்களைப் புத்துலகத்துக்கு அழைத்துச் செல்லும் முதல் சமுதாய நாடகமாக விளங்கியது அண்ணாவின் 'சந்திரோதயம்'.

> ''உள்ளே ஆலயத்தில் பள்ளி கொண்டிருக்கும் ஆண்டவனுக்குப் பட்டுப் பீதாம்பரம் எதற்காக? அவன் குடியிருப்பதற்கு அவ்வளவு பெரிய மண்டபம் எதற்காக?.... ஆண்டவன் படைப்பில் ஏன் ஏற்றத் தாழ்வு என்று வினா அவனுக்கு (ஏழைக்கு) எழாதா?''

என்று ஏழையின் நிலைய எடுத்துக் காட்டி, அவன் சிந்திக்கத் தொடங்கினால் பணக்காரச் சீமான்களின் கதி என்னவாகும் என்று கூறி, அவர்களைத் திருந்துமாறு கூறுகிறான் புத்துலகச் சிற்பி!

பெரியார் முன்னிலையில், தொழிலதிபர் ஜி. டி. நாயுடு தலைமையில் இந்த நாடகம் (10—11—1943) நடந்தபோது, இதில் சி. வி. இராசகோபால், சி. வி. எம். அண்ணாமலை, ஈழத்தடிகள் முதலானோர் நடித்தனர். இதனைக் கண்டு களித்த அவ்வை சண்முகம்,

> ''இப்படியே தொடர்ந்து சில நாடகங்களில் அண்ணா அவர்கள் நடித்து விட்டால் பரம்பரை நடிகர்களான எங்களையெல்லாம் மிஞ்சிவிடுவார் போல் தோன்று

கிறது. நாடகத்தையே தொழிலாகக் கொண்ட நாங்கள் பல நாள்கள் பயிற்சிபெற்று, ஒத்திகைகள் நடத்தி, அதன் பிறகு நாடகங்களை நடிக்கிறோம். அத்தகைய வாய்ப்பும் வசதியும் இல்லாமல், பல்வேறு துறையில் பணிபுரிந்து வரும் திராவிடர் நடிகர் கழகத் தினர் இன்று நடிப்பதைப் பார்த்தால், எங்களைப் போல் நிரந்தரமாகவே இவர்கள் நாடகத் துறையில் ஈடுபடுவார்களானால் நாங்களெல்லாம் இந்தத் தொழி லையே விட்டுவிட வேண்டியதாக இருக்குமென நினைக் கிறேன்''

என்று கூறியிருக்கிறார்.

சந்திரோதயம் ஓர் அவல நாடகம், சமுதாயச் சீர்திருத்தத் தைப் பல கோணங்களில் காட்டிய சிறந்த நாடகம்.

அண்ணாவைப் புகழின் உச்சிக்கு அழைத்துச் சென்ற நாடகங்கள் வேலைக்காரியும் ஓர் இரவுமே யாகும். நடிப் பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களின் நாடகக் குழுவிற்காக அண்ணா அவர்கள் இவற்றைத் தீட்டித் தந்தார். இவையிரண்டும் பின்னர்த் திரைப்படங்களா கவும் வெளிவந்தன. ஆய்வாளர்கள் பலர் இவ்விரண்டு நாடகங்களைப் பற்றியும் எழுதியுள்ளனர். இருப்பினும் ஓரிரண்டு கருத்துக்களை இவண் பார்ப்போம்.

சமுதாய நோக்கில் மேடையில் நடிக்கப்பெற்ற நாடகங் களுள் தான் சொல்ல வந்த செய்திகளை மிகவும் வன்மை யுடனும் ஆணித்தரமாகவும் சொன்ன நாடகம் வேலைக்காரி தவிர வேறு எதுவுமில்லை என்று கூறலாம். இஃது ஒன்று.

ஏழைகளின் காவலனாக இருக்க வேண்டிய வட்டியூர் ஜமீன் தார் வேதாசல முதலியார் அவர்களின் காலனாகச்செயல் படுகிறார். அவரது கொடுமைகளுக்குப் பலியானவர்கள்

பலர். அவர்களுள் ஒருவர் சுந்தரம் பிள்ளை. தூக்கில் தொங்கிய சுந்தரம் பிள்ளையின் மகன் பழிவாங்கக் கத்தியைத் தீட்டுகிறான். அப்போதுதான் அவன் தோழன் மணி ''கத்தியைத் தீட்டாதே; புத்தியைத் தீட்டு'' என்று கூறிப் புதியதோர் திட்டம் வகுத்துத் தருகிறான்.

இறந்துபோன பரமானந்தன் என்னும் செல்வனாக ஆனந்தன் மாறி, கண்ணில்லாத அவன் தாயினை ஏமாற்றி, அவள் அனுமதியுடன் வேதாசல முதலியாரின் மகளையே மணந்து கொள்கிறான். வேலைக்காரியைக் காதலித்துத் தோல்வி கண்ட ஜமீன்தாரின் மகன் மூர்த்தி ஒரு மடத்தில் சேர்கிறான். அங்கிருந்த துறவியின் ஒழுக்கக் கேடு கண்டு மனம் பொறாமல் அவனை அங்கேயே கொலை செய்து விடுகிறான். வழக்குமன்றத்தில் ஆனந்தன் வட நாட்டு வழக்கறிஞனாக வந்து வாதாடி வெற்றி பெறுகிறான். துறவி ஒரு போலி; கொள்ளைக் காரன்; கயவன்; காமுகன்; அரசினரால் — காவலரால் தேடப்பட்டு வருபவன் என்ற உண்மை வெளிப்படுகிறது. இறுதியில் மூர்த்தி, தன் காதலி அமிர்தத்தை — வேலைக்காரியாக இருந்தவளை — மணக்கிறான். ஜமீன்தார் திருந்துகிறார்.

சாதிப்பற்று, பணத்திமிர், ஏற்றத்தாழ்வு, போலி வாழ்க்கை, கடவுள் உணர்வு, சமுதாயத்தில் பெண்கள் நிலை ஆகியன இதில் அலசப்படுகின்றன.

அளவான கதை, சுவையான உரையாடல், அடுத்தடுத்து உணர்ச்சிகளைத் தூண்டும் இடையறவற்ற கதைப்பின்னல், அங்கங்கு நகைச் சுவைத் துளிகள், சமுதாயத்தை உணர்த்தும் வலிவான கருத்துகள் அனைத்தும் சேர்ந்து நாடகத்தை உயர்த்துகின்றன.

வேலைக்காரி நாடகம் ஓர் அதிர்ச்சியோடு தொடங்குகிறது. ஆம் ! அண்ணாவின் நாடகத்தில் முதற்காட்சியில்

முதற் குரல் ''காளி, மகாமாயி, லோகமாதா'' என்று வரு கிறது. ஆனால், பக்தி அந்த அளவோடு சரி என்னும் உண்மையை அது விளக்குகிறது. ஜமீன்தார் மட்டுமா இப்படிப் பேசுகிறார், ஊருக்குள் நுழைந்தவுடன் ஆனந்தன் காளிகோயிலைப் பார்க்கிறான். உடனே வணங்கி, ''காளி, மகமாயி, மகேஸ்வரி, இத்தனை வருஷத்திற்குப் பிறகு அப்பாவைப் பார்க்க முடிஞ்சுதே அது உன் கிருபை!'' என்று கூறுகிறான். ''மகிமைவாய்ந்தவளப்பா இந்த மாகாளி'' என்கிறான் பக்கத்தில் இருந்த ஒருவன். இன்னொருவனோ, ''அவள் கண்கண்ட தெய்வமாச்சே'' என்கிறான். ஆனால், அவர்கள் பாராட்டும் காளி ஏற்கனவே சுந்தரம் பிள்ளையின் உயிரைக் குடித்துவிட்டாள் என்பது அவர்களுக்குத் தெரியாது.

அடுத்த காட்சியில், அதே ஆனந்தன், ''கடவுளே, சண்டாளத் தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா?'' என்று பொருமுகிறான்.

> ''இந்த வாளே வழக்கு மன்றம், இனி இந்தக்கையே சட்டம்''

என்று முடிவெடுக்கிறான் ஆனந்தன்.

தான் காதலித்த அமிர்தத்தைச் சரசா விரட்டும்போது கலங்கும் மூர்த்தி,

> ''பஞ்சவர்ணக் கிளியைப் பிடித்துக் கொஞ்சி விடலாம் என்று பனைமரம் ஏறும்போது பறந்தோடி விட்டது ஜாதி பேத மென்ற கூண்டுக்கு, தரித்திரக் கம்பிகள் வேறு; என்ன உலகம் இது?''

என்று வருந்துகிறான்.

காளி கோயிலில் பூசை செய்கிறார் வேதாசல முதலியார் என்பதைக் கேட்டவுடன் ஆனந்தன் ஆவேசம் கொள்கிறான். காளியை நோக்கி அடுக்கடுக்காக வினாக்களைத் தொடுக்கிறான்.

மணியும் ஆனந்தனும் பழிவாங்கும் முறைகளை ஆராய்கிறார்கள். முதலில், அடுத்துக் கெடுக்கும் படலம், பின்னர், பணம் பாழாகும் படலம்; அடுத்தது, மானம் பறிக்கும் படலம்; அதனையடுத்து, கண்குத்து படலம்; இப்படித் திட்டம் தீட்டப்படுகிறது. அதனை உடனே தொடங்க வேண்டும் என்று துடிக்கிறான் ஆனந்தன், ஆனால் மணியோ ஒரு தாளை நீட்டி ''இது இப்பொழுது தேவை, நீயே படித்துப் பார்'' என்கிறான். அதில் பெரிதாக எழுதியிருப்பது 'இடைவேளை' என்பது — இவ்வாறு புதுமையாக இடைவேளை விடுகிறார் நாடகாசிரியர்.

> ''அமிர்தம் ஒரு வேலைக்காரி தான். ஆனால் அற்புதமான ஜாலக்காரி; சிரித்துச் சித்திரவதை செய்யும் சொகுசுக்காரி; வெறும் அலங்காரி மட்டுமல்ல, பலேகைகாரி''

என்று ஆனந்தன் அமிர்தத்தைப் பற்றி மூர்த்தியிடம் கூறுகிறான். இது குடும்பத்தில் குழப்பத்தை உருவாக்குகிறது. மூர்த்தி வெளியேறுகிறான்.

ஓர் ஆசிரமத்தில் சேர்கிறான் மூர்த்தி. அங்கே அரிகரதாஸ் என்னும் துறவி; சுந்தர கோஷ் என்னும் ஒரு சீடன். சுந்தரகோஷ் சீடனல்ல, துறவியின் ஆசைநாயகி என்பதைக் கண்டுபிடித்து, ஆத்திரத்தில் துறவியைக் கொன்று விடுகிறான்.

வழக்கு மன்றத்தில் வடநாட்டு வக்கீல் வெளிப்படுத்தும் மர்மங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நாடகத்திற்குப் பொலி

லூட்டுகின்றன. தமிழ் நாடக உலகம் கண்டிராத புதுமையான வசனம் — உரையாடல் இந்தக் காட்சியை அணி செய்கிறது.

''வேஷமணியாத வேதாந்தி !
மோடி செய்யாத மாது !
ஜோடி இல்லாத மாடப்புறா !
சேடி இல்லாத ராஜகுமாரி !
இருக்கமுடியாதாம் ''

என்றும்,

''இந்த ஆசிரமத்திலே காதினிலே குண்டலம் ஆட,
கனத்த சாரீரம் பாட,
காய்ச்சியபால் தொண்டையில் ஓட,
கண்கள் கதியற்றுக் கன்னியரை நாட,
கடவுள் அருளுக்கு வழிகாட்டப்பட்டதாம் ''

என்றும்,

''சட்டம் ஓர் இருட்டறை !
அதிலே வக்கீலின் வாதம் ஓர் விளக்கு ''

என்றும் வரும் உரையாடல்கள் மனத்தில் நின்று நிலைப்பன.

பண்டாரப் பக்கிரி என்னும் பயங்கரக் கொள்ளைக்காரனே உள்ளங் கையிலுள்ள துப்பாக்கி வடுக்களை மறைக்க ஒரு கையில் நாமமும், ஒரு கையில் திருநீறுமாக அணிந்து காட்சியளித்தவன் என்பது வெளிப்படுகிறது,

''இப்படி ஊரை ஏமாற்றிப் பணத்தை மிச்சப்படுத்தி
என்னையா சுகத்தைக் கண்டீர் ?

தங்கத்திலே அரிசி செய்து சமைத்து, கோமேதகக் கூட்டும், வைர வறுவலும், முத்துப் பச்சடியும், மோர் குழம்பிலே கெம்புமா கலந்து சாப்பிட்டு வந்தீர்!''

என்று எழுப்பிய வினாவினைக் கேட்டவுடன், ஏற்கனவே திருந்திவந்த முதலியார் முற்றிலுமாகத் திருந்துகிறார். அவரது பணத்திமிரும், சாதித் திமிரும் ஒழிகின்றன.

இதைவிட ஒரு பொருளாதார — சமுதாயக் கருத்தை அழகாகச் சொல்ல முடியுமா ?

அண்ணாவின் நாடகங்கள் ஒவ்வொன்றும் ஓராயிரம் கருத்துகளை உதிர்க்கும் கருவூலம் !

ஓர் இரவு ! அண்ணாவின் நாடக வெற்றிப் பாதையில் இதுவும் ஒரு மைல் கல் ! ஒரே இரவில் எழுதப்பட்டது; இந்தச் சாதனையைச் செய்தவர்களுள் இவர் குறிப்பிடத் தக்கவர்.

மற்றொன்று; இந்த முழுநீள நாடகக் கதை — நாற்பத்தொன்பது காட்சிகளைக் கொண்ட கதை — முழுவதும் ஒரே இரவில் நடந்து முடிகிறது. இது போன்ற கதையும் இதுவரை தமிழில் இல்லை. இதுவும் ஒரு சாதனை.

நிலவு உதயமாகிறது. அல்லி மலர்கிறது. அப்போது தான் எத்தனை எத்தனை வேறுபட்ட காட்சிகள் ! ஒரு புறம் காதலன் காதலி விளையாட்டு, மாளிகையில்! மறு புறம், வீட்டுத் தலைவனைப் பிரிந்த தாயும் சிறுமியும் வேதனையில்! இன்னொரு புறம், குதிரைப் பந்தயம் பற்றிப் பேசும் சூதாட்டக்காரர்கள்! வேறோர் இடத்தில், வீட்டிலே இளம் விதவையை விட்டுவிட்டு, வயதான ஒருவன் இரண்டாந் தாரத்தோடு சினிமா பார்க்கப்போகிறான், மிதமிஞ்சிய மகிழ்ச்சியில்! வேறோர் புறம், சைவ-வைணவப் போராட்டம்! மற்றோர் பாதையில், கள்ளன் ஒருவனைப்

பிடித்துச் செல்லுகிறான் காவலர் தலைவன் — இவ்வாறு வேறுவேறு காட்சிகளைக் காட்டிய ஆசிரியர் எட்டாவது காட்சியில் தான் நாடகத்தின் தலைவனையும், தலைவியையும் அறிமுகப்படுத்துகிறார். இதுவரை எந்த நாடகத்திலும் வராத உத்திமுறை இது; பின்னர், இந்த உத்தியினை வேறு சிலர் பின்பற்றியிருக்கின்றனர். இந்த முதற் காட்சிகள் ஒவ்வொன்றிலும் அண்ணா பல்வேறு சமுதாய உண்மைகளையும் கருத்துகளையும் நயமாக உணர்த்தியிருக்கிறார். கதையை விடக் கருத்துக்கே முதலிடம் என்பதை இந்தக் காட்சிகள் நன்கு உணர்த்துகின்றன.

தேவர், மகள் சுசீலாவைத் தனக்கு மணமுடித்து வைக்க வேண்டும் என்று மிரட்டுகிறான் ஜெகவீரன்; அவளோ டாக்டர் சேகர் என்னும் நல்லவனைக் காதலிக்கிறாள். இதனை அறிந்தும் ஓர் இரகசியம் காரணமாக — அவளை வற்புறுத்தித் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளச் செய்கிறார் தேவர் — கதையின் முற்பகுதி இது.

நஞ்சு கலந்து குடிக்க நினைக்கிறாள் சுசீலா, மாடியில், அப்போது, கீழே ஜெகவீரனும் தேவரும் பேசிக்கொண்டிருக்கின்றனர். யாருமறியாமல் திருடன் ரத்னம் மாடிக்குச் செல்கிறான். ஒரு நயமான காட்சி இது. கன்னியின் துணிவு கண்டு களவாட வந்தவன் நடுங்குகிறான்.

> ''இங்கே கள்ளன்; கீழே காமுகன், உனக்கு என் உடைமை வேண்டும், அவனோ, என்னையே அபகரிக்க வந்திருக்கிறான். நீ கருந்தேள்; கீழே கருநாகம்''

என்கிறாள் சுசீலா. பின் அவனையே துணையாகக் கொண்டு நடித்துத் தப்பிக்க நினைக்கிறாள். ஆனால், அது மேலும் சிக்கலாகிறது. ஜெகவீரனை ஏமாற்ற ரத்னத்தைக் காதலனாக நடிக்கச் சொன்னாள் சுசீலா. அஞ்சிய அவனிடம் அவள்,

''காதல் சதி அல்ல, வலை! சிக்கினவர் தப்புவதில்லை! வானவில், ஆனால் இருக்கும் வரையில் அழகு அற்புதமாக இருக்கும். கைகூடினால் விருந்து, இல்லையோ அதுவே விஷம்! காதல் சந்திரன்போல் ஜோதியாகவும் இருக்கும், சில சமயம் நெருப்பாகவும் எரிக்கும் ''

என்று காதல் பற்றிய பாடத்தைச் சொல்லித் தருகிறாள். எதிர் பாராத விதமாகச் சேகர் வர நிலைமை குழப்பமடைகிறது. ரத்னம்—சேகர் மோதுகின்றனர்.

20ஆம் காட்சி முதல் 33ஆவது காட்சி முடிய திருப்பக் காட்சிகள். ரத்னத்தின் தாயும், தேவரின் பழைய காதலியுமான சொர்ணம் ஒரு ஜமீன்தார் வீட்டில் பணிபுரிவதும், அங்கு தேவரின் மனைவி பவானி விலாசினி என்ற பெயரில் ஜமீன்தாரோடு கொஞ்சுவதும், அதனால் சினமடைந்த தேவர் பவானியைக் கொல்வதும், அதனை ஜெகவீரன் நிழற்படமெடுத்து வைப்பதும், தேவரை மிரட்டுவதும் இக் காட்சிகளில் சொல்லப்படுகின்றன.

ரத்னம் சுசீலா வீட்டில் நடந்த கதையைத் தாய் சொர்ணத்திடம் சொன்னதைக் கேட்டுச் சேகர் உண்மை உணர்கிறான்; சுசீலா ரத்னத்தின் தங்கை என்ற செய்தியும் வெளியாகிறது.

''இரண்டு உலகம் இருக்கு. டாக்டர், இரண்டு இருக்கு! ஒண்ணை ஒண்ணு கேலி செய்துகிட்டு, விரோதிச்சிக்கிட்டு! காமம் குடி கொலை களவு கலகம் யாவும் இரண்டு உலகிலேயும் உண்டு. உங்க உலகத்துச் சமாசாரம் வெளியே சுலபத்திலே வராது. எங்க விஷயம் ஊர் பூராவும் பரவி விடும்!

நாங்க மொந்தையிலே இருக்கிற கள்ளு மாதிரி, பொங்கி வழியறது! உங்க உலகத்துக் கெட்ட நட

வடிக்கை, கார்க் போட்ட சீசாவிலே ஊத்தி அனுப்பு கிற ஓசத்தி சரக்கு மாதிரி ! ''

என்று இரண்டு உலகங்களைப் படம் பிடித்துக்காட்டுகிறார் அண்ணா, ரத்னத்தின் மூலம். சேகர்-ரத்னம் இருவரும் சேர்ந்து ஜெகவீரனிடம் உள்ள படத்தைப் பெற்றுக்கொள்வ தோடு, அவன் ரத்னத்தைக் கொன்றுவிட்டது போல நாடக முமாடி, ஒப்புதல் கடிதமொன்றையும் பெற்றுவிடுகின்றனர்.

இடையிலே, ஒரு காட்சி. சேரியில் உள்ள ஒரு வேசி வீட்டுக்கு ஒருவன் வருகிறான். வீட்டிலிருந்து அவன் கொண்டு வந்த தங்கச் சங்கிலியைப் பார்த்து — இரக்க முள்ள அந்தப் பெண் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை திருடிக்கொண்டு வந்து தனக்கு அதனைக் கொடுப்பது தவறு என்று உணர்த்தித் திருப்பி அனுப்புகிறான். கடைசியாக, அந்தக் காட்சியில் 'அவன் யார் ? ' என்ற வினா எழுகிறது. ''அவனா, ராமாயணக் காலட்சேபம் செய்கிறாரே, ரங்காச் சாரி, அவரு மகன் ! '' என்னும் பதில் வருகிறது ! அழகான சமுதாய நையாண்டிக் காட்சி இது !

நாடகத்தில் காட்சிகள் விரைவாக மாறுகின்றன. இவ் வளவு விறுவிறுப்போடு செல்லும் வேறு ஒரு கதையை நம் மால் சுட்டவியலாது. காட்சிகள் அடுக்கடுக்காக, ஒன்றன் பின் ஒன்றாக, கதையை விளக்கிச் செல்கின்றன. இத் தனைக்கும் காரணம், கதை ஒரே இரவில் முடிவதாக இருப்பதுதான் ! உரையாடல், கதையை ஒன்றாகப் பிணைத்து வைக்கும் பணியைச் செம்மையாகச் செய்கிறது.

இந்த நாடகத்தில் ஏற்றத் தாழ்வுகள், காதல் மோதல் கள், ஜமீன்தார்களின் ஒழுக்கக் கேடுகள், விதவையை நினைத் தால் சேர்த்துக் கொள்வது இல்லையேல் விரட்டுவது என்ற நிலைமைகள், சேரி வாசம் — மாளிகை வாசம் என்பதன் வேறுபாடுகள் என்று பற்பல செய்திகள் அலசப்படுகின்றன.

அண்ணா எழுதிய நாடகங்களுள் மிகவும் குறிப்பிடத் தக்கது ''சந்திர மோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்'' என்பது. அவர் எழுதிய சிறந்த வரலாற்று நாடகம் இது ! மாவீரன் சிவாஜி மராட்டிய மண்டலத்தை எழுப்பி — அதன் தலைவனாக — மன்னனாக மணிமுடி சூட நினைத்தபோது — காகபட்டரும் அவரது ஆரிய அடிவருடிகளும் ஏற்படுத்திய குழப்பங்களை இந்த நாடகம் சுவையாகச் சொல்கிறது. ஆரியரின் கொடுமையால் ஓர் அரசு — ஒரு வீரமிக்க சமுதாயம் வீழ்ந்து பட்டதை வேதனையோடு எடுத்துக் காட்டித் தமிழகத்துக்கு எச்சரிக்கை செய்கிறார் அண்ணா !

சூத்திரன் சிவாஜி நாடாளக் கூடாது என்று கூறிய ஆரியத் துறவி காகபட்டர் யாகம் செய்து அவனை 'க்ஷத்திரியன்' ஆக்கி விட்டார் ! அதனால் அவன் அரசாளும் தகுதி பெற்றான். ஆனால், அதற்காக அவன் தேடிய பணம் அனைத்தையும் இழக்க வேண்டி வருகிறது. நாடே ஆரியருக்கு அடிமையாகிறது.

சிவாஜி, அரசனாக்கப்படுகிறான். காகபட்டரால் ! அவன் காகபட்டர் காலில் விழப் போகிறான் ! உடனே, மாவீரன் சந்திர மோகன் பொங்கி எழுகிறான் :

''மராட்டியமே, மண்டியிடாதே !
வீரமே, வீழ்ச்சியுறாதே !''

என்று முழங்குகிறான். இறுதியாக,

''ஒரு வார்த்தை உங்களுக்கு. ஆரியருக்கு அடிபணியாதீர். அரசியலில் அவர்களுக்கு ஆதிக்கம் அளிக்காதீர் ! அறமும் தழைக்காது ! அரசும் நிலைக்காது ! அவர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள் ! ஆறு, பத்து, இருபது தலையுடன் ஆமை, வராக முகமுடை

> யான், அண்ணன் தம்பி மகனுடையான், அந்தப்புரத்திலே அறுபதினாயிரம் பேருடையான் என்று கூறி, கடவுளையே நிந்திக்கும் கயவர்கள் அவர்கள். அவர்களுடைய கபட வேடத்தை நம்பி மோசம்போகாதீர் ''

என்று அறிவுரை கூறுகிறான். நாடு கடத்தப்படுகிறான். சிவாஜி கடைசியில் தெளிந்த உள்ளத்தவனாய், சந்திர மோகனைச் சந்தித்து அவன் இந்துவைத் திருமணம் செய்து கொள்ளவே அப்படிச் சொன்னதாகக் கூறுகிறான்.

> ''சந்திர மோகன் ! என் அரசு ஆரம்பமாகும் போதே பொக்கிஷம் சூன்யமாகி விட்டது ! ஒரு கோடியே நாற்பத்து எட்டு லட்சமடா நான் கொட்டி அழுதேன் ! நம் தரணி இப்பாரத்தைத் தாங்காது. ஆகவே, வீரனே ! அஞ்சா நெஞ்சு படைத்த நீ, மக்களிடம் பரவியிருக்கும் மயக்கத்தைப் போக்கு ! வாளால் அரசுகளை அமைத்து விடலாம் ! ஆனால் அதுநிலைக்க அறிவு தேவை ! அந்த ஆயுதத்தை வீசு ! நாடு முழுவதும் வீசு ! பட்டி தொட்டிகளெல்லாம் வீசு ! மக்களை வீரர்களாக்கு ! சந்திர மோகனா, சகலரையும் சந்திரமோகன்களாக்கு ! ஜெயம் பெறுவாய் ! ''

என்று சிவாஜி தன் நிலையையும் நாட்டு நிலையையும் எடுத்துக் கூறி, மோகன் — இந்து திருமணத்தை முடித்து வைப்பதோடு நாடகம் நிறைவு பெறுகிறது.

ஆரியத்தை மிகவும் கடுமையாகத் தாக்கும் நாடகம் இது, வேறு அனைத்தும் இதில் பின்னணியிலே இருக்கின்றன.

திராவிட இயக்க மாநாடுகளிலும் வேறு பிற இடங்களிலும் இந்த நாடகம் நடிக்கப்பட்டிருக்கிறது. இதில் அண்ணா காகபட்டர் வேடந் தாங்கி நடித்துப் பெரும்புகழ் பெற்றிருக்கிறார்.

அண்ணா இந்த நாடகங்களே மட்டுமன்றி, 'காதல் ஜோதி', 'நீதிதேவன் மயக்கம்', 'கல் சுமத்த கசடர்', 'எதையும் தாங்கும் இதயம்', 'பாவையின் பயணம்' முதலான பல நாடகங்களையும் இயற்றியிருக்கிறார்.

ஐந்நூறு அல்லது ஆயிரம் பேர் மட்டுமே ஒருமுறை கண்டு நாடகங்களைச் சுவைத்த அந்தக் காலத்தில், மாநாடுகளில் அரசியல் விவாதங்கள் எல்லாம் முடிந்தபிறகு, ஏறத்தாழ இருபதினாயிரம் பேரை, நள்ளிரவு வரை காக்கவைத்து, நாடகங்களைக் காணுமாறு செய்து தமிழ் நாடக வரலாற்றில் பெரும்புரட்சி செய்தவர் பேரறிஞர் அண்ணா அவர்களே ஆவார்!

அதனாலே தான், கல்கி கிருஷ்ணமூர்த்தி அந்தக் காலத்த்தில் ஒரு விமரிசனத்தில்,

> "'இரண்டு வாரத்திற்கு முன்பு திருச்சிராப்பள்ளியில் 'ஓர் இரவு' நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. பார்த்ததன் பயனாக ''இதோ ஒரு பெர்னாட் ஷா தமிழ் நாட்டில் இருக்கிறார். கால்ஸ்வொர்தி கூட இருக்கிறார்'' என்று தெரிந்து கொண்டேன்.
>
> நாடகக் கதையும்,
> கதையை நாடகமாக அமைத்திருந்த பாங்கும்,
> கட்டுக்கோப்பும்,
> காட்சிகளின் அமைப்பும்,
> சம்பாஷணைகளும்
> அப்படியே ஒன்றுக்குமேல் ஒன்று சிறந்துவிளங்கி
> என்னைத் திணற அடித்துவிட்டன!......

நடிக்கக் கூடிய நாடகத்தை எழுதும் ஆற்றல் மிகவும் அரிது. அந்த ஆற்றல் திரு. அண்ணாத்துரை

யிடம் பூரணமாக அமைந்திருக்கிறது என்பதை ஓர் இரவு நாடகத்தில் கண்டு மகிழ்ந்தேன் ''

என்று எழுதினார். கல்கி எழுதியது, ''பெரும் உண்மை, வெறும் புகழ்ச்சியல்ல ! '' எனலாம்.

அண்ணா இத்தகைய பெரு நாடகங்களோடு நின்றுவிடாமல், காலத் தேவைக்கேற்பத் தம் ஏடுகளில் ஓரங்க நாடகங்களையும் படைத்திருக்கிறார்.

அண்ணாவின் நாடகங்களை நடித்துக் கே. ஆர். இராமசாமி பேரும் புகழும் பெற்றார் !

அண்ணாவின் சந்திரமோகனில் நடித்து அன்றைய கணேசன் 'சிவாஜி' கணேசன் ஆனார் !

அதே நாடகத்தில் சந்திர மோகனாக நடித்து எஸ். எஸ். இராஜேந்திரன் 'இலட்சிய நடிகர்' ஆனார்.

தன்னோடு இயக்கத்தில் பணியாற்றிய, மேடைகளில் சொற்பொழிவாற்றிய, கழக ஏடுகளில் எழுதிப் பணிபுரிந்த நெருங்கிய தோழர்களையெல்லாம் மேடையில் ஏற்றி நடிக்க வைத்தவர் அறிஞர் அண்ணா !

தனக்குப் பின்னால் அரசியலில் ஒரு படையை உருவாக்கியது போல், எழுத்துலகிலும் — மேடையிலும் ஒரு படையை உருவாக்கிவிட்டுச் சென்றார் அண்ணா !

அண்ணா !

உதிக்கின்ற சூரியனுக்கே ஒளிதந்த செம்மல் !

திராவிட இயக்கப் பணியில் அண்ணா விடிவெள்ளியாகத் தோன்றினார் என்றால் கலைஞர் மு. கருணாநிதி உதய சூரியனாக ஒளிர்ந்தார் எனலாம்.

அண்ணாவின் அரசியல் பணி காரணமாகவும், பன்முகத் தொண்டு காரணமாகவும், உடல்நிலை காரணமாகவும் அவரது நாடக ஈடுபாடு ஓரளவோடு நின்றுவிட்டது. கலையுலகத்தில் அவருக்குப் பெருவிருப்பம் இருந்த போதிலும் அவரது தொண்டு வேறு நிலைகளிலும் அன்று தேவைப்பட்டது. எனவே, ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குப் பின் அவர் எழுதுவதைக் கைவிட நேர்ந்தது.

ஆனால், கலைஞர் பள்ளி மாணவராக இருந்த காலத் தொடங்கியே எழுதிப் பழகியவர். 'முரசொலி' அவர் கைப்படைக் கலனாக விளங்கியது.

தமிழ் நாடகம், திரைப்படம், புதினம் முதலிய தாம் ஈடுபட்ட அனைத்துத் துறைகளிலும் தமக்கென ஓரிடத்தைப் பெற்றிருப்பவர் டாக்டர் கலைஞர்.

கலைஞரது நாடகப்பணி ஒரு பெரும் ஆய்விற்குரியது. இங்குத் திராவிட இயக்கத் தலைவர் – நாடகாசிரியர் என்ற அளவிலே சில குறிப்புகள் தரப்படுகின்றன.

''சாந்தா அல்லது பழனியப்பன்'' என்னும் இளமைக் கால நாடகத்தோடு அவரது நாடகப் பணி தொடங்குகிறது.

அதற்குப் பின் பல நாடகங்களை அவர் எழுதிக் குவித்தார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை :

தூக்குமேடை, இரத்தக் கண்ணீர், ஒரே முத்தம், மணிமகுடம், உதயசூரியன், பரப்பிரம்மம், காகிதப்பூ,

நானே அறிவாளி, திருவாளர் தேசியம் பிள்ளை, புனித ராஜ்யம், சிலப்பதிகாரம், சங்கத் தமிழ்

ஆகியன. பரதாயணம், சேரன் செங்குட்டுவன், சாக்ர டீஸ், அனார்கலி முதலான பல ஓரங்க நாடகங்களையும் கலைஞர் வடித்துத் தந்துள்ளார்.

'சாந்தா அல்லது பழனியப்பன்' கலைஞரின் முதல் நாட கம். இது 'நச்சுக்கோப்பை' என்னும் பெயரில் பின்னர் நடிக்கப்பட்டது. சிவகுரு என்னும் பாத்திரத்தில் காங் கிரசை எதிர்ப்பவராகக் கலைஞர் நடித்ததாகக் கூறுவர். இந்த நாடகம் இப்போது ஆய்விற்குக் கிடைக்கவில்லை.

தூக்குமேடை எம். ஆர். இராதா அவர்களால் நடிக்கப் பெற்றது.

கலைஞரின் 'மணிமகுடம்' மிகவும் குறிப்பிடத் தக்கது. அன்றிருந்த அரசு அவரைச் சிறையில் அடைத்த போதெல் லாம் ஏதேனும் எழுத்தோவியத்தோடு வெளியில் வருவது கலைஞரின் வழக்கம். அந்த முறையில் அவர் எழுதிய ஒரு நாடகம் 'மணிமகுடம்'. இது முரசொலி இதழில் 1955ஆம் ஆண்டு பொங்கல் மலரில் வெளியிடப் பெற்றது, ஆனால் முழுமையாக வெளிவரவில்லை. பின்னர் நூலாக வெளிவந்தது. எஸ். எஸ். இராசேந்திரன் நாடக மன்றத் தாரால் நூறு முறைக்கு மேல் நடத்தப்பெற்ற ஒரு வெற்றி கரமான நாடகம் 'மணிமகுடம்'.

மேரி காரல்லி என்பார் ஆங்கிலத்தில் எழுதிய 'டெம் பொரல் பவர்' என்னும் கதையினை ஓரளவு தழுவி எழுதப் பட்டது இந்த நாடகம்.

''காலம் : வாளும் வேலும் படைக்கலனாய் —பனை ஓலையே எழுத்துச் சுவடியாய் இருந்த பழைய கால

மல்ல — பாளையக்காரர்கள் உலவிய இடைக்காலமு மல்ல ! இடைக்காலம் நவீன காலத்திற்கு மாறிக் கொண்டிருக்கும் காலம் — அதையே பின்னணியாக வைத்திருக்கிறேன் ''

என்னும் ஆசிரியரின் முன்னுரையோடு நாடகம் தொடங்கு கிறது.

மணிமகுட புரியில் ஒரு குள்ளன் செய்தித் தாள் விற் கிறான், அவன் தன்னைக் கறுப்பு ரோஜா என்று பின்னர் அழைத்துக் கொள்கிறான். புதுமைப் பித்தன் ஒருவனும் புரட்சிக் கருத்துகளோடு அங்கே உலவுகிறான்.

ஏழைமக்கள் சேர்ந்து வாழும் ஒரு பகுதியை அழித்து விட்டு, அங்கே பார்ப்பனர்கள் கூறியபடி ஒரு கோயில் கட்டுவது என்று அரசன் முடிவு செய்கிறான். அந்தக் கொடிக்கால் நகரத்தை ஒரு கோயில் எழுப்புவதற்குப் பயன் படுத்தக் கூடாது என்பதே கதையின் மையக் கருத்து. இதனால் எப்படி புரட்சி வெடிக்கிறது என்பதைக் காட்டு வதே நாடகக் கதை :

உரையாடலுக்கு ஒரு சான்று :

''நாங்கள் வெளியேறுகிறோம் ! அமைச்சருக்குச் சிரமம் வேண்டாம். ஆண்டவனே ! நீ இருந்தால் கேள், இந்த அக்கிரமக்காரர்களை ! அய்யோ ! ஆயி ரம் வீடுகளை எரித்துவிட்டு, அங்கே நீ இருந்து சிரிக்கப் போகிறாயாமே ! அடுக்குமா, உனக்கு இந்த அநியாய சொல் ? சிரி, நன்றாகச் சிரி ! ஏழைகளின் கண்ணீரில் நீந்திக் கொண்டே சிரி ! ஏழைகள் சமுதாயமே, நீ அழு ! ஆண்டவன் சிரிக்கப் போகிறான் — அந்தரத் திலே இருக்க இடமின்றித் தொங்கும் அவனுக்கு அர சாங்கத்தார் ஆடம்பரமான ஆலயம் அமைக்கப் போகிறார்கள் ! ஆகவே, எதிர்க்க முடியாத ஏழையே!

ஏமாற்றப்பட்ட தோழனே ! நீ அழு ! அழு ! இளி ! அஞ்சு ! குனி ! பிதற்று ! புலம்பு ! ஒப்பாரி வை ! கண்ணீர் உனக்கு மட்டுந்தான் சொந்தம் — அதை யாரும் அபகரிக்க முடியாது ! ஆகவே, அழு, நண்பா அழு ! உனக்கு விடுதலையே கிடையாது ! இந்தச் சீமான்கள் இருக்கும் வரை ! இந்தக் குருநாதர்கள் இருக்கும்வரை ! உனக்கு விடுதலையே கிடையாது ! விடுதலையே கிடையாது ''

இவ்வாறு பல இடங்களில் கனல்கக்கும் உரையாடல்கள் கலைஞரது எழுத்து முத்திரையோடு நாடகத்தில் காட்சியளிக்கின்றன.

கலைஞரின் சிலப்பதிகார நாடகம் நாட்டிய நாடகமாக நடத்தப்பட்டது, 'பூம்புகார்' ஆகத் திரைப்படமாகவும் வந்தது.

கலைஞரது சங்கத் தமிழ் விளக்கக் கட்டுரை பின் ஒரு நாட்டிய நாடகத்திற்குக் கருப் பொருளானது. அதிலுள்ள ஏழெட்டுப் பகுதிகள் அதற்குப் பயன்பட்டது.

இரத்தக் கண்ணீர் என்ற பெயரில் கலைஞரின் நாடகம் ஒன்று திராவிடப் பண்ணையால் வெளியிடப்பட்டது. அஃது இன்று வேறு ஒரு பெயரில் (மகான் பெற்ற மகன்) வெளி வந்துள்ளது. இது பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரை கழகக் குரல் என்னும் இதழில் வந்துள்ளது. இது 1948இல் தொடர் கதையாகத் தொடங்கி, இடையில் நின்றுபோனது ! பின்னர் முழுமை பெற்றது. இதுவும் சிறை தந்த சிற்பம் ! பளபளக்கும் நூலோவியம் !

''இரத்தக் கண்ணீர் தழுவல் ஓவியம். ஆனால் முழுவதுமல்ல. ''

என்னும் முன்னுரையோடு 1953இல் இது நூலாக வெளி வந்தது.

'நுழை வாய்' என்னும் பகுதியில்,

" ...... அதோ பாளையக்காரர் பலதேவர் தலை குனிந்தபடி வாட்டமுடன் நிற்கிறாரே ! ஏன் ? அவரது குடும்பத்தில் ஏற்பட்ட அவமானகரகான ஒரு நிகழ்ச்சி அவரை அப்படிக் கலக்கி விட்டது. அத்தகைய நிகழ்ச்சிதான் என்ன ?

என்னோடு பழுதூருக்கு வாருங்கள் ; முழுக் கதையையும் சொல்கிறேன் ! "

என்று கூறி நம்மை நாடகத்துள் அழைத்துச் செல்லுகிறார் கலைஞர் மு.க.

இந்த நாடகம் ஒரு சாமியாரின் திருவிளையாடல்களை விளக்குகின்றது. பழுதூர் இளவரசன் சுகவேன் முத்தாயியை விரும்புகிறான் ; அவளோ முத்தனை விரும்புகிறாள், முத்தனைப் பழுதூர் இளையராணி பாளையக்காரரின் தங்கை அடிக்கடி பார்த்துப் பெருமூச்செறிகிறாள் — இப்படிச் செல்கிறது நாடகம் !

இரத்தக் கண்ணீர் நாடகத்தில் பல திருப்பங்பள் வருகின்றன. எந்தப் பக்கம் புரட்டினாலும் எழுச்சிமிக்க—உணர்ச்சி மிக்க வரிகள் ! சாமியார் செய்த வஞ்சகம், பழுதூர் இளையராணி பூங்காவனத்தை இளம் வயதில் ஏமாற்றி, முத்தனைப் பெற்றெடுக்கச் செய்து துரத்திவிட்ட கொடுமை, அவன் காதலித்த முத்தாயியைச் சுகதேவ், வெற்றி வேலன் முதலானவர்கள் கவர முனையும் சூழல், முத்தனுக்கு எதிரிநாட்டு ஒற்றன் என்னும் பெயர் சூட்டி தூக்கிடல், உண்மை தெரிந்தபின் பூங்காவனம் புலம்ப, அவளைக் காப்பாற்ற முடியாத நிலை. இறுதியில், முத்தாயி — அரண்மனைக்கு திரும்ப மறுக்கும் முத்தாயி —

"இன்று இல்லாவிட்டால் நாளை — உங்களுக்கு மட்டுமல்ல — உங்களைப் போன்ற உலுத்தர்களுக்கு — பதில் சொல்ல என் வயிற்றிலே வளருகிறது வாள்! போலி மதிப்பைப் பொசுக்கும் தீ! மக்களை ஏமாற்றி வாழும் மதயானைகளை மாய்க்கும் வேல்! என் வயிற்றிலே வளருகிறது — அது சொல்லும் — சூதுக் காரர்கட்குப் பதில்! சூழ்ச்சிக்காரர்கட்குப் பதில்! சூடான் பதில் — சுயமரியாதை பதில்!"

என்று பேசுகிறாள்.

முத்தாயியின் கனலும் புனலும் நிறைந்த கண்களுக்கு முன்னே நிற்க முடியாமல் பலதேவர் குடும்பமும் சாமியாரும் தலைகுனிகிறார்கள். நாடகத் தொடக்கத்தில் "பலதேவர் ஏன் தலைகுனிந்து நிற்கிறார்?" என்பதற்கான விளக்கம் இந்தக் காட்சியோடு நாடகமாக நிறைவேறுகிறது.

'ஒரே முத்தம்' கலைஞரின் மற்றொரு நாடகப் படைப்பு.

"இலங்கையில் நிகழ்ந்த ஒரு சரித்திரத்தின் சிறு சிதறலை அடிப்படையாகக் கொண்டது 'ஒரே முத்தம்'"

என்று குறிப்பிடுகிறார் கலைஞர் முன்னுரையில். தேவி நாடக சபை இதை அரங்கேற்றியது.

இந்த நாடகத்தில் சில புதிய உத்தி முறைகளை ஆசிரியர் பயன்படுத்தியிருக்கிறார்.

(1) ஒரு காட்சி முடியும்போது வரும் உரையாடலில் இறுதிச் சொற்கள், அடுத்த காட்சியின் தொடக்கத்தில் வேறொரு சூழலில் இன்னொருவர் பேசுவது போல அமைப்பது. ஏறத்தாழ 'காட்சிக்குக் காட்சி' அந்தாதி அமைப்பு.

(2) உரையாடல்களில் எண்ணற்ற உவமைகளை அள்ளி வீசுதல்.

(3) ஒரு பக்கத்தில் சிறிய வசனங்கள் ; இன்னொரு பக்கத்தில் நீண்ட வசனங்கள் அமைப்பது.

(4) உரையாடல்களில் ஒரு புதுமை. உயிராக விளங்கும் ஒரு முத்தாய்ப்புச் சொல்லை இறுதியாக்கி, ஒவ்வொரு தொடரின் (வாக்கியத்தின்) இறுதியிலும் அது இடம் பெறுமாறு நீண்ட உரையாடல் அமைப்பது. இந் நாடகத்தின் பல இடங்களில் அவ்வமைப்பு உள்ளது. கலைஞரின் வேறு நாடகங்களிலும் இந்த போக்கு உண்டு.

(5) முப்பது காட்சிகள் உள்ள இந்த நாடகத்தில், நகைச் சுவைப் பகுதி தனியாகப் பின்னிணைப்பாகப் பன்னிரண்டு பக்கங்களில் அமைந்துள்ளது.

பரப்பிரம்மம், உதயசூரியன், காகிதப்பூ, திருவாளர் தேசியம் பிள்ளை, புனித ராஜ்யம், நானே அறிவாளி முதலியவை பிரச்சார நாடகங்கள். மாற்றாரையும், மாற்றார் கருத்துகளையும் கடுமையாக்வும் நயமாகவும் தாக்கும் நாடகங்கள் இவை. இந்த நாடகங்களில் கலைஞரே பலமுறை நடித்திருக்கிறார்.

அரசியல் பிரச்சாரமும் நகைச் சுவையும் ஒன்றோடு ஒன்று கலந்து நடைபோடும் ஒரு நாடகம் 'உதய சூரியன்'. 1957ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் கழகம் கலந்துகொண்ட போது எழுதப்பட்டது :

> ''கடந்த தேர்தலுக்கு மட்டுமன்றி எந்தத் தேர்தல் நேரத்திலும் — தேர்தல் காலம் மட்டுமல்லாமல் — நாட்டு விடுதலை கிட்டும் வரையில் எவ்வமயத்திலும் நடத்தக்கூடிய வகையில் நாடகத்தின் அரசியல் கருத்துக்கள் அமைந்து விட்டன.''

என்று 'என்னுரை'யில் கூறுகிறார் கலைஞர்.

"சுதந்தர சூரியன் உதிச்சான்னு சொல்றாங்க! இப்ப இருக்கிற சூரியன் சுதந்தர சூரியனா எங்களுக்குத் தெரியலே! ஏன்னா, எங்க வாழ்க்கையிலே இன்னும் இருள் விலகலே! உண்மையான 'உதயசூரியனை' எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறோம்"

என்பது போல உரையாடல்கள் அரசியல் நோக்கில் அமைந்திருக்கின்றன.

கலைஞர் தமக்கு எதிர்ப்பு வரும்போதெல்லாம் அதனைச் சாதகமாக்கிக் கொள்ளும் திறன்வாய்ந்தவர். முதல் முறை 'பராசக்தி' படம் வந்தபோது 'தினமணி கதிர்' இதழ் அட்டைப் படத்தில் 'பரப்பிரம்மம்—கதை வசவு-தயாநிதி' என்று கிண்டலாகக் கேலிச் சித்திரம் வரைந்திருந்தது. பல்லாயிரக் கணக்கில் விற்பனையான அந்த இதழ் தந்த கேலிப் படத்தையே சாதகமாக — ஒரு விளம்பரமாகக் கொண்டு கலைஞர் 'பரப்பிரம்மம்' என்ற பெயரில் அடுத்த சில நாள்களில் ஒரு நாடகம் எழுதி அரங்கேற்றி விட்டார்!

இருபத்தொன்பது காட்சிகளைக் கொண்ட இந்த நாடகத்தில் திராவிடம், துரை, மூவேந்தன், தமிழரசி, மஞ்சளழகி, பரப்பிரம்மம், மதவாதி, தேசியம்பிள்ளை, டில்லியப்பர், குல்லாய், தியாகவல்லி, லஞ்சாபாய் ஆகியோர் பாத்திரங்களாக வருகின்றனர்.

இஃது உருவகமாக அமைந்த அரசியல் நாடகம். திராவிடம் துரையை விரும்ப, தில்லியப்பர் உதவியோடு திராவிடத்தை அடைய விரும்புகிறார் தேசியம் பிள்ளை. அவர் தம் மனைவி தியாகவல்லியை விட்டுவிட்டு லஞ்சாபாயோடு திரிபவர். திராவிடம்-துரை ஆகியோர்க்கு எதிராக இருப்பவர்கள் பரப்பிரம்மம், மஞ்சளழகி, மதவாதி முதலானோர் ஆவர்.

பரப்பிரம்மம் 1953இல் திராவிடப் பண்ணை வெளியீடாக—தொண்ணூற்றாறு பக்க நாடகமாக வெளிவந்தது.

இதழாசிரியராகவும் நகைச் சுவை நடிகராகவும் இருக்கும் ஒருவர் ஒரு காலத்தில் எல்லா அரசியல் தலைவர்களையும் கேலியாக எழுதியும், பேசியும், நாடகம் நடித்தும் கிண்டல் செய்து வந்தார். கலைஞரையும் அவர் தாக்கினார். எனவே அவருக்கும் அவருடைய பிரச்சாரத்திற்கும் எதிராக 'நானே அறிவாளி' என்னும் தலைப்பில் ஒரு நாடகத்தைத் தீட்டினார் கலைஞர். 'நானே அறிவாளி' என்று சொல்லு வதுபோல் அந்த எழுத்தாள-நடிகர் நடந்து கொண்டதால் கலைஞர் இந்த நாடகத்திற்கு இத் தலைப்பினைத் தந்தார். இருபத்து நான்கு காட்சிகளைக் கொண்டது இந்த நாடகம்.

நாரதர், பாதுஷா, ஏழை பங்காளன், நல்லதம்பி, அடக்கம், திருவள்ளுவர், உண்மை, நாரதர், கொம்பன், டாக்டர் அறிவானந்தம், தைரியம், தமிழ்த்தாய், சந்திரா, அம்மாமி முதலான பாத்திரங்களின் வழி அவருக்குத் தக்க பதில்களை நாடக வடிவில் தந்தார் கலைஞர்.

கலைஞர் எழுதிய மற்றொரு பிரசார நாடகம் 'திருவாளர் தேசியம் பிள்ளை' காங்கிரஸ் அரசியல்வாதிகள் இவரைக் கடுமையாகத் தாக்கிப் பேசியபோது இவர் நாடகம்கொண்டு விளக்கம் தந்தார். இதுவும் 'காகிதப்பூ' நாடகமும் இந்த நேரத்தில் வெளிவந்தவை.

எம். ஜி. ஆர். ஆட்சியில் இருந்தபோது நடந்த நிகழ்ச்சி களை மையமாக வைத்து எழுதப்பட்ட பிரசார நாடகம் 'புனித ராஜ்யம்' என்பது.

''அதிகார போதை தலைக்கேறி ஆணவக் கூத்து ஆடுகின்ற இன்றைய ஆட்சியாளரின் போலி வேடத்

> தைத் தோலுரித்துக் காட்டுகிறது புனித ராஜ்யம் என்ற இந்த நாடக நூல்!''

என்னும் பதிப்புரையோடு வெளிவந்துள்ளது இது (1979).

தமிழ் நாடக வளர்ச்சியில் கலைஞருக்கு ஒரு சிறந்த இடம் உண்டு :

(1) பல பிரச்சார நாடகங்களை எழுதிக் கழக மாநாடுகளிலும், தேர்தல் காலங்களில் பல்வேறு இடங்களிலும் தாமே பங்கேற்று நடித்துச் செயல்பட்ட சிறந்த எழுத்தாளர் கலைஞர்.

(2) சிலப்பதிகாரத்தை அழகு தமிழ் உரை நடையில் தமிழ் மேடையில் — திரைப் படத்தில் — உலவ விட்டவர்.

(3) தூக்கு மேடை, இரத்தக் கண்ணீர், ஒரே முத்தம், வெள்ளிக் கிழமை, மணிமகுடம் முதலிய நாடகங்களின்வழி சமுதாயச் சிக்கல்களை அழகிய நடையில் விளக்கிக் காட்டியவர்.

(4) தமிழ் நாடக உரையாடலில் ஒரு புதுமையை உருவாக்கியவர், அண்ணாவின் நடையை முதலிற் பின்பற்றிப் பின் தமக்கே உரிய தனிப்பாணியை வகுத்துக் கொண்டவர்.

(5) அண்ணாவைப் போல் தாமே வேடம் புனைந்து நாடகத்தில் நடித்துப் பங்கேற்றவர்.

(6) முழுக்க முழுக்க அரசியல் பிரச்சார நாடகங்களை இவரைப் போல் வேறு எந்தக் கட்சிக்காரர்களாலும் வெற்றிகரமாகச் செய்ய முடியவில்லை.

(7) இவரது நாடங்கள் பல பதிப்புகளைக் கண்டது, இவர் நாடகத் துறையில் பெற்றிருக்கும் சிறப்பைக் காட்டுவதாகும்.

(8) இவரது நாடகங்களில் சில திரைப் படங்களாகவும் வந்துள்ளன.

(9) 'பரதாயணம்' அண்ணாவின் நீதிதேவன் மயக்கம் போன்ற இலக்கியத் திறனாய்வு ஓரங்க நாடகமாகும்.

ப. கண்ணன்

கலைஞர் நாடகங்கள் தீட்டிய அந்தக் காலத்திலேயே அவரோடு நெருங்கித் தோழமை கொண்டிருந்த அவரது நண்பர் சலகண்டபுரம் ப. கண்ணன் அவர்களும் பல சிறந்த நாடகங்களை எழுதினார்.

> மின்னொளி, கன்னியின் சபதம், நந்திவர்மன், தமிழ் வாழத் தலைகொடுத்தான், பகைமை வென்றான், புரட்சிப் பாடகன், மான மறவன், வீரவாலி

முதலியன கண்ணன் தீட்டிய நாடகங்களாகும். சேலம் தென்றல் நூற்பதிப்புக் கழகத்தின் வாயிலாக இவரது நூல்கள் வெளியாயின. 'பகுத்தறிவு' என்னும் இதழின் ஆசிரியராக விளங்கிய இவர் பல திரைப் படங்களுக்கு உரையாடல்களைத் தீட்டியிருக்கிறார்.

'மின்னொளி' இவரது தொடக்க கால நாடகம். கிராமச் சீர்திருத்தத்தை நோக்கமாகக் கொண்டது. 1949இல் வெளியான இந்த நாடகத்தில் பழமைப் பாசி படர்ந்த சிற்றூர் ஒன்றனைச் சீர்திருத்த முனைகிறான் இளைஞன் செல்லத் துரை. அவனுக்கு எல்லா உதவிகளையும் செய்கிறாள் மின்னொளி. கிராமத்தில் அவர்கள் பணிக்குக் கடுமையான எதிர்ப்பு உண்டாகிறது. பழமைவாதிகளுக்கும் புதுமைச் சிற்பிகளுக்கும் இடையே கருத்து மோதல்கள் வலுக்கின்றன. இறுதியில் அறிவும் அன்பும் வெற்றி பெறுகின்றன. இந்தச் சிறிய நாடகம் 'பொன்னப்பன் மகள்' என்ற பெயரில் திருச்சி வானொலி நிலையத்தாரால் ஒலி பரப்பப்பட்டது.

'கன்னியின் சபதம்' என்னும் மற்றொரு சிறிய நாடகமும் முதலில் வானொலியில் ஒலி பரப்பப்பட்டு நூல் வடிவில் வந்தது.

> ''குற்றமற்ற தந்தையைக் கொலை புரிந்த மன்னனிடம் வஞ்சினம் கூறிச் சூளுரைத்துப் பழி வாங்கிய வீரமகள் மஞ்சினி. இவளும் ஒரு தமிழச்சி !''

என்று கூறுகிறது பதிப்புரை. இது சங்க இலக்கிய வரலாற்றிலிருந்து எடுக்கப்பட்ட கதைக் கூறு. 'அன்னி மிஞிலி'யின் வரலாறே கன்னியின் சபதமாக மாறியிருக்கிறது. 21 காட்சிகளில் — 56 பக்கங்களில் இக்கதை நாடகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கண்ணனின் 'நந்திவர்மன்' மற்றொரு வரலாற்று நாடகமாகும். இதனைத் 'தேவி நாடக சபை' 1957இல் கலைஞர் தலைமையில் அரங்கேற்றியது. இதுவும் வானொலி நாடகமாக (1954) ஒலித்தது. 47 காட்சிகள் கொண்ட இந்த நாடகம் 198 பக்கங்களில் நூலாக வெளிவந்துள்ளது.

பட்டத்தரசி சங்கா தேவியோடு நல்லாட்சி புரிந்து வருகிறான் நந்திவர்மன். இருவரும் தேர்ந்த கலைஞர்கள். இலக்கிய அன்பர்கள். பல்லவ நாட்டில் குழப்பம் விளைவிக்க, குறுக்கோட்டை மன்னன் பங்கயன் அமைச்சர் முதலானவர்களோடு கலந்து ஏற்பாடு செய்கிறான். நந்தியின் தம்பி சந்திரவர்மனைக் கைவசப்படுத்துகிறான் மைத்ரேயன். சங்கா சமணமதம், நந்தி சைவம். இதனையே காரணமாக்குகிறான், சந்திரவர்மன். பகைவரோடு சேர்ந்து ''மூட்டுவோம் தீயை, எரிப்போம் எண்ணத்தில் மாறுபட்டோரை. செங்கோலைக் கவர்ந்து கொண்டு தேசத்தை விட்டே ஓட்டுவோம் மன்னனை'' என்று கொதிக்கிறான்.

பல்லவனைக் கொல்லுமாறு ஒற்றன் வழி அனுப்பிய சளுக்கியன் பங்கயனின் ஓலை பொதுமகள் வித்தியாவதி கையில் சிக்குகிறது. சந்திரவர்மன் ஒற்றனைக் கொல்கிறான். பின் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அறம் பாடி அண்ணனைக் கொல்ல வேண்டும் என்று நினைக்கிறான் சந்திரவர்மன். கலம்பகம் பிறக்கிறது. அதனைக்கேட்கக் கூடாது என்கின்றனர் பிறர் ; ஆனால் அரசன் ஒப்பவில்லை.

> ''மொழி நலம் அறியாதவர்களின் மூட நம்பிக்கை; சீலாதித்தனே ! பெருஞ்சித்திரனார் பாடல் கேட்டுப் பிணமாகவில்லை வள்ளல் குமணன்! மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 'கல்லாடம்' என்ற நூல் அரங்கேற்றும் போது கடவுளே நூறுதரம் தலையசைத்து 'வெல்லமிது' என்று விளம்பினாராம் ! பாட்டுக்கு விஷத் தன்மை இருக்குமானால் கேட்டவரெல்லாம் செத்துக் கடவுளும் செத்திருத்தல் வேண்டும் ! தமிழ் வளர்த்த பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலனைக் கொன்ற குறைக்கு மனம் வெந்து மடிந்தானே தவிர, மாத்தமிழ் பாடல் கேட்டா மடிந்தான் ? காலமெல்லாம் தமிழ் வளர்த்த கோல முடிவேந்தர்களும் வள்ளல்களும் வேலுக்கும் வாளுக்கும் வெங்கொடுமைக் காலனுக்கும் பலியானார்களே தவிர, பைந்தமிழா பலிகொண்டது?''

என்று பதிலுரைக்கிறான். பாடல் அரங்கேறும்போது சிதை எரிகிறது. அரசன் இறக்கிறான். தானே மன்னன் என்ற செருக்கில் இருந்த சந்திர வர்மனைக் கொல்கிறான் சிறையிலிருந்து தப்பி வந்த நிருபதுங்கன், அவன் நந்தி வர்மனின் மகன். வஞ்சகக் கூட்டமே அழிகிறது.

இந்த நாடகம் இனிய தமிழிலே அமைந்தது.

'பகைமை வென்றான்' என்பது குலோத்துங்க சோழன் காலத்துப் பின்னணி கொண்ட கதை. நாற்பத்தைந்து காட்சிகள் கொண்ட இக்கதை கலிங்கத்துப் போரைப்பற்றிய செய்திகளைக் கொண்டது. சோழனுக்கும் இலங்கை வேந்தனுக்கும் இருந்த போரையும் இந் நாடகம் குறிக்கிறது. இலங்கேசன்-சுத்தமல்லி (சோழன் மகள்) காதலும் இதில் முக்கியப் பிணைப்பாக இருக்கிறது.

'பாண்டிய மகுடம்' மற்றொரு வரலாற்று நாடகம். இது வீர பாண்டியனும் சுந்தர பாண்டியனும் மதுரையில் இருந்தபோது விளங்கிய ஒற்றுமையின்மையை மையமாகக் கொண்டது. பிறநாட்டு ஆதிக்கம் தோன்றிப் பாண்டிய மண்டலத்தை அலைக்கழிக்கிறது. பாண்டியர்கள் ஆட்சி உட்பகையினால் கெடும் அதே நேரத்தில் மாலிக் காபூர் படையெடுப்பும் நிகழ்கிறது. சுந்தர பாண்டியன், மகாராணியார் நஞ்சுண்டு இறந்த நிலையில்,

> ''. . . . வீர பாண்டியா பார்! தேசத் துரோகத் தீவினையின் முடிவைப்பார்! தாயகத்தைக் காட்டிக் கொடுத்தோரின் முடிவைப் பார்! மகனை மன்னனாக்குவதற்கு மணாளனையும் கொல்லத் துணிந்த மகாராணியின் பயங்கர முடிவைப் பார்! மாவீரன் நீயிருக்க, தந்தையன்பும் உனக்கிருக்க, மடமையால் மனம்குமுறி, கொடுமை பல செய்திட்ட (தன்னைக் காட்டி) இந்தக் கோமகனைப் பார்! குருத் துரோகம் புரிந்த படுகோழையைப் பார்! மகுடத்திற்காகப் போராடி, மதிகெட்டு மானமிழந்து விட்ட எங்கள் ஈன நிலையைப் பார்! அந்நியனை அழைத்து வந்து அறமிழந்து, ஆஸ்திகளை இழந்து, கண்ணியத்தையும் இழந்துவிட்ட கபோதிகளைப் பாரடா, வீர பாண்டியா, பார்! பார்! பார்!''

என்று தம்பி வீரபாண்டியனிடம் அவல உணர்வோடு தன்னிரக்க நிலையில் பேசுகிறான்.

வேணாட்டரசன் இரவிவர்மன், ஷிராஸ் கோமன் ஆகிய இருவரும் பாண்டிய நாட்டைக் கவர்கின்றனர்.

பாண்டிய இளவரசர்கள் இருவரும் மீண்டும் படைதிரட்டி மோதத் தப்பிச் செல்கின்றனர்.

இறுதியாக, வீரபாண்டியன் அண்ணனிடம் கூறுகிறான் :

> ''சரிந்துவிட்ட சாம்ராச்சியத்தைப் புதுப்பிக்க வேண்டும்; பாண்டிய மகுடத்தைப் பாண்டியரே பூணவேண்டும். உள்ளம் இருக்கிறது, மாமலை போல் ! குருதியிலே உயிர்த்துடிப்பு இருக்கிறது, மின்னொளிபோல் ! அன்னியனது ஆதிக்கத்தால் அடியோடு அழித்திட முடியாது, தனித் தமிழ் மானத்தை ! சூழ்ச்சியாலே சூறையாடிவிட முடியாது, பரம்பரை பரம்பரையாக வளர்ந்து முறுக்கிய பாண்டிய வீரத்தை ! வாருங்கள், சென்று படை திரட்டுவோம் ! ''

அவனது அறிவுசார்ந்த பேச்சோடு அனைவரும் கலைந்து செல்கின்றனர். நாடகம் நிறைவுபெறுகிறது.

'வீரவாலி' நாடகம் பல ஆதாரங்களோடு இராமாயணத்தில் வரும் கிட்கிந்தைத் தலைவன் வாலியை ஒப்பற்ற வீரனாகக் காட்டுகிறது. இரணியன், இராவணன் முதலான நாடகப் புரட்சி வரிசையில் இதனையும் ஒன்றாகக் கருதலாம். இந்த நாடக நூலை ஆய்வு செய்து வருகிறார் திருமதி சசிகலா என்பவர்.

'புரட்சிப் பாடகன்' மற்றொரு சிறந்த நாடகம். இஃது ஓர் இசைத் துறை மறுமலர்ச்சி நாடகம். இதுவும் ஒரு புதுமை !

நாடகத்தில் வரும் கீதானந்தர் வடமொழிப் பற்றாளன், போலித் துறவி. செல்வர் மாணிக்கவாசகரின் மகள் சுசீலாவுக்குப் பாட்டு கற்பிப்பதாகக் கூறி, அவளைத் தன்னோடு சேர்த்துக் கொண்ட காமுகன். அவள் தமிழ்ப் பாடகன் சங்கரனிடம் தொடர்பு கொண்ட போது சினந்து விழுகிறான் துறவி :

''கோபம் ! தமிழ் தான் புரிகிறது, சுவை தருகிறது என்றால் எனக்குக் கோபம் எப்படி வராமலிருக்கும் ? என்ன தமிழ் ? எங்கே தமிழ் ? ஆண்டவன் அறிவானா தமிழ் ? நாலு வேதம் தமிழா ? பகவத் கீதை தமிழா ? இதிகாசங்கள் தமிழா ? பக்த லீலாமிர்த பாகவத புராணங்கள் தமிழா ? எல்லாவற்றிற்கும் மூலம் தேவ பாஷையல்லவா ? பக்திக்கு வித்து, பகவந்நாம சங்கீர்த்தனத்தின் கர்ப்பக்ரகம், நாதபிரம்மத்தின் ஓங்கார சொரூபமே சமஸ்கிருதமாயிற்றே. சூத்திரத் தமிழிலே என்ன இருக்கிறது ? கீர்த்தனமுண்டா ? சங்கீதமுண்டா ? சாஸ்திரமுண்டா ? நீர் தமிழ்ப் பாட்டு கற்க விடலாமா சுசீலாவை ? இதனால் மட்டுமல்ல, பக்தி மார்க்கத்தையே அவமதித்து விட்டீர் ? ''

இவ்வாறு தமிழையும் தமிழிசையையும் பழிக்கிறார் கீதானந்தர். சங்கரன் தமிழ்ப் பாட்டு பாடியபோது கீதானந்தரின் ஆட்கள் அவனை அடிக்கின்றனர்; தெலுங்கில் பாடச் சொல்கின்றனர். இறுதியில் அடிபட்ட காயத்தோடு அவன் பேசுவதில் ஒரு பகுதி :

''பாட்டின் பொருள் உங்களுக்கும் தெரியாது. எனக்கும் தெரியாது. இதைப் பாடிக் காசு பறிக்கின்ற பாகவதருக்கும் தெரியாது. ஆனாலும் பாடுகின்றார்கள். தலையாட்டுகின்றீர்கள். நீங்களும் வெட்க

> மில்லாமல் !.... பாத்திரம் சிறந்தது என்பதற்காக, விஷமா, மதுவா என்று பாராமல் எதையும் குடிக்கலாமா நீங்கள் ? இப்படி இரத்தம் வர அடிக்கலாமா என்னை ? தமிழனை, தமிழில் பாடாதே என்று தடுக்கலாமா தமிழன் ? தாய்மொழி கெடுக்கும் விபீஷணத் தமிழனே ! விபரீதத்தோடு விளையாடுகிறாய் நீ ! புரோகிதன் சொல்லும் மந்திரம் இசையிலுமா நிலைக்க வேண்டுமென்கிறாய் ? தன்மானமற்ற தமிழனே ! சிந்தித்தாயா நீ ? அருந்தமிழ்ப் புலவர்கள் போற்றிய பசுந் தமிழ் — சிங்க ஏறுகளைப் பெற்றெடுத்த செந்தமிழ் பாட்டுக்குத் தகுதியற்ற மொழியா ? இதைக் கேட்டும் பொறுக்கலாமா நீ ? இருக்கலாமா உயிரோடு ? தாயைக் கொன்றுவிட்டு சொர்க்கத்தை நாடும் தன்னலக்கரனே. .... என்றுதான் முன்னேறுவாயோ என்னருந் தமிழனே ! ''

என்று சங்கரன் எழுப்பும் வினாக்கள் தமிழிசையின்பால் அவன் கொண்ட—ஆசிரியர் கொண்ட பற்றின் வெளிப்பாடாகும்.

சங்கரன் செல்லம் என்னும் நடிப்பரசியைக் காதலிக்கிறான். அப்போது,

> ''காதலி மட்டுமல்ல, என் கலை வாழ்வின் உயிர் நரம்பு. கற்பனையின் ஒளிச் சிறகு. இசைப் பாட்டின் இனிய சுருதி. இன்ப லயம். இதய பாவம். இழைகின்ற கமகம். சுவையுள்ள சாகித்யம். சுகந்த ராகம். அமைந்த தாளம் — அருமையான ஆலாபரணம். எல்லாம் நீயே தான் ''

என்று சங்கீத உணர்வோடு பேசுகிறான்.

நாடகத்துள் நாடகமாக ஒரு 'புதுமைக் கூத்து' நடை பெறுகிறது.

'புரட்சிப் பாடகன்' நாடகம் ஆசிரமத்துள் நடக்கும் அலங் கோலங்களைக் காட்டுகிறது. பக்திப் போர்வையில் துறவி கள் நடத்தும் காதல் நாடகங்களைக் காட்டுகிறது, காவியு டையில் கயவர்கள் செய்யும் கொலை பாதகங்களை விளக்கு கிறது. சுசீலாவின் தந்தையைக் கொலை செய்தான் சங்கரன் என்று தொடுக்கப்பட்ட வழக்கில், கீதானந்தரே கொலைகாரன் என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது. சுசீலா நீதிமன்றத்தில் உண்மைகளைச் சொல்லி மரண மடைகிறாள். சங்கரன் விடுவிக்கப்படுகிறான். செல்லத்தோடு 'தமிழிசை இயக்கத்தைத்' தொடருகிறான்.

கண்ணன் இயற்றிய மற்றொரு நாடகம், 'தமிழ் வாழத் தலை கொடுத்தான்' என்பது. கடையெழு வள்ளல்களை அடுத்து வந்த குமணனின் வரலாற்றைச் சொல்வது இது.

திராவிட இயக்க நாடகாசிரியர்களுள் ப. கண்ணனுக்குத் தலைசிறந்த இடமுண்டு. மற்றவர்கள் நாடகங்களைவிட இவரது நாடகங்களில் கதைச் செறிவு மிகுதி, கலை நயமும் மிகுதி !

திராவிட இயக்க எழுத்தாளர்களுள் குறிப்பிடத் தக்க மற்றோர் ஆசிரியர் புலவர் ஏ. கே. வேலன் அவர். இவர் பதின்மூன்று நாடகங்களை இயற்றியிருக்கிறார். அவை :

> இராவணன், எரிமலை, கங்கைக்கு அப்பால், கம்சன், காவேரிக் கரையினிலே, கும்பகர்ணன், கைதி, சாம்பாஜி, சிலம்பு, சூறாவளி, பகைவனின் காதலி, மேகலை.

என்பன.

தஞ்சை மாவட்டம் ஆலங்குடியில் 1921இல் பிறந்தவர் ஏ. கே. வேலன். இவரது இயற்பெயர் அ. குழந்தை வேலன் என்பது. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் பயின்று புலவர் பட்டம் பெற்றவர்.

'எரிமலை' என்னும் இதழையும், பின் 'ஞாயிறு' என்னும் இதழையும் நடத்தியவர். ஏடு நடத்தப் பணம் தேவைப் பட்டதால் எரிமலை, சூறாவளி, கைதி ஆகிய நாடகங்களை எழுதினார்,

> ''ஏ. கே. வேலன் அவர்கள் செந்தமிழ்ப் புலவர். நாட்டுத் தொண்டே நற்றொண்டெனக் கருதி இருப்பவர். அவரது எழுத்துக்கள் எழில் தமிழால் ஆனவை, கனல் தெறிக்கக் கூடியவை, கருத்து நிரம்பியவை ! இதனை அவரது பல நாடக நூல்களும், இயங்கிவரும் 'ஞாயிறு' இதழும் திராவிடத்தார்க்கு எடுத்துக் காட்டி நிற்கின்றன ''

என்று தந்தை பெரியார் 'இராவணன்' நாடகத்து முன்னுரையில் இவரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

புரட்சிக் கவிஞரின் இரணியன் நாடகத்தைத் பின் தொடர்ந்து எழுதப்பட்ட ஒரு சிறந்த நாடகம் 'இராவ ணன்'. இராவணனது மாட்சியினை வெளிப்படுத்துவது இது. திராவிட இயக்கம் ஆரியரை எதிர்த்துத் திராவிட வீரர்களின் பெருமைகளைப் பாடிவந்த காலத்தில் அவர் களுக்குப் படைக்கலனாகக் கிடைத்தவன் இராவணன்.

> ''இராவணன் — ஆம். அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத் தமிழ் மன்னன் — தமிழ் மானத்திற்குப் போராடிய தன்மானச் சிம்மம் — எதிரிகளால் இழி வாகச் சித்திரிக்கப்பட்ட இலங்கையர்கோன் — வால் மீகிக்கு வால்பிடித்த கண்மூடிக் கம்பனின் வம்பக் கருத்துகளுக்கு இரையான ஏந்தல் — என் தமிழர் பெருமான்.
>
> அவன் பண்பாட்டில் பூசிய களங்கத்தினை, வர லாற்றில் கலந்த மாசினைத் துடைக்க முயன்றேன் — அவன் வாழ்வின் உண்மையொளி மறைய இடப்பட்ட திரையை விலக்க முயன்றேன் — அதன் விளைவே இந்நூல் ''

என்று ஏ. கே. வேலன் தம் முன்னுரையில் நாடகம் பிறந்த கதையைக் குறிப்பிட்டுள்ளார்.

இதில் இராவணன் மாவீரனாக வருகிறான், இராம இலக்குவர் இழிகுணம் படைத்த ஆரியர்கள் — கோழைகள் ஆக விளங்குகின்றனர். அகத்தியன் ஆரிய சூழ்ச்சிகளுக்குத் துணை நிற்கும் முனிவன், சீதையோ காமவெறி பிடித்தவள்.

> ''இராவணன் ஆரியக் கருத்தைப் பரப்பும் நோக்கத் துடன் காவியம் இயற்றியவரால் எப்படிச் சித்திரித்துக் காட்டப்படுகிறானோ, அந்தச் சிறையிலிருந்து, இரா

வணன் எனும் கற்பனை வீரனை இந்த இளைஞர் விடுவிக்கிறார். எப்படி இருந்திருக்கும் அப்படியொரு வீரனுடைய வாழ்க்கை என்பதனைக் கற்பனை அழகுடன் தீட்டிக் காட்டுவதன் மூலம்.''

என்று அறிஞர் அண்ணா அவர்கள் வேலனின் 'இராவணன்' நாடகத்தைப் பாராட்டிச் சிறப்பிக்கிறார். இந்த நாடகம் பெரியார், அண்ணா, புரட்சிக் கவிஞர், கலைவாணர், பாகவதர் முதலான பெருமக்களின் தலைமையில் நடைபெற்றுள்ளது.

வசதி படைத்தவர்கள் சமுதாயத்தில் எளியவர்களை ஏமாற்றி வாழ்வர், சுரண்டிக் கொள்ளையடித்துத் தாம் கொழுப்பர். ஆனால், எளியவரில் உள்ளம் கொந்தளித்தால், மான உணர்வு சீறியெழுந்தால் புரட்சி வெடிக்கும், நிலைமை மாறும் என்பதை உணர்த்துவது, ஏ. கே. வேலனின் 'சூறாவளி' என்னும் நாடகம்.

சூறாவளி ஒரு புரட்சித் தலைவன், சமுதாய விழிப்புணர்ச்சிக்குப் பாடுபடுபவன். ஒரு ஜமீன்தாரின் தோட்டத்தில் வேலை செய்த அமரன் என்னும் தொழிலாளி — ஜமீன்தாரைக் கொன்றவன் என்று சிறையில் வைக்கப்படுகிறான். உண்மையில் ஜமீன்தாரின் வஞ்சனைக்குப் பலியான ஒருத்தியின் தந்தையே கொலை செய்தவன்.

குற்றமற்றவன் என்பதுணர்ந்த கன்னி என்பவள் அமரனை விடுவிக்கிறாள், எங்கெங்கோ அலைந்தவன் ஒரு வேதியன் இல்லத்தில் அடைக்கலம் புக, அவன் விதவை மகள் கமலம் காமத்தீ பொறுக்காமல் அமரனை நாடுகிறாள். அவளுக்கு அறிவுரை புகட்டுகிறான் அமரன். பின், சூறாவளியை அடைகிறான். அங்கே, கன்னி வளர்ப்பு மகளாக அவனிடம் இருப்பதைக் காண்கிறான்; இருவரும் காதலர்கள் ஆகின்றனர்.

சூறாவளியும் அமரனுமாக இணைந்து சமுதாயச் சீர் திருத்தம் செய்கின்றனர். இவர்கள் தளபதியின் சூழ்ச்சி களை அரசனுக்கு உணர்த்தி அவனைத் திருத்துகின்றனர். உண்மைகள் வெளிப்பட்டவுடன் அரசன் திருந்துகிறான், முடியாட்சி நீங்கி மக்களாட்சி மலர்கிறது. காதலர்களின் திருமணமும் நடக்கிறது.

'கைதி' என்னும் நாடகத்தின் அடிப்படை வறுமை நிலை. வேலனின் மிகச் சிறந்த நாடகங்களுள் இதுவும் ஒன்று.

ஏழை வீரப்பன் தாய், தங்கை ஆகியோரைக் காப்பாற்ற வழியின்றிக் கோயில் தட்டைத் திருடுகின்றான், அவன் கூறிய 'வறுமை'க் கதையைக் கேட்டும் அவனைச் சிறைக் குள் தள்ளுகின்றனர். சிறையிலிருந்து தப்பி வெளியில் வந்தவன் தாய் தங்கையரைக் காண முடியவில்லை.

தமிழானந்தர் வழி வீரப்பன் நல்லநாயகம் என்னும் பணக் காரனாக, நகரத் தந்தையாக உயர்கிறான். காவல்துறை அவனை அறிந்து கொள்கிறது. மீண்டும் தப்புகிறான். தன் தங்கையைச் சந்திக்கிறான். ஆனால், அவள் கண வனோ 'போலீஸ் இன்ஸ்பெக்டர்'. அவன் வீரப்பனை மீண்டும் சிறைக்கனுப்புகிறான். மனம் உடைந்த அன்புத் தங்கை முல்லை உயிர் துறக்கிறாள். வீரப்பன் பழைய குற்றத்திற்காக மீண்டும் 'கைதி' ஆவதோடு கதை முடி கிறது. கிளைக் கதையாக, கைதி ரங்கனின் மகள் ஆனந்தியும் முல்லையின் மகன் அழகப்பனும் காதல் கொள் வது அமைகிறது.

தன் தங்கை வாழ வேண்டும் என்பதற்காகக் கடல்கடந்து பொருள் திரட்டச் செல்லும் ஓர் இளைஞனைக் காட்டு கிறது ஏ. கே. வேலனின் 'எரிமலை' நாடகம். அவன் ஊர் திரும்பியபின் நாட்டின் ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு

குமுறுகிறான். அவன் மனம் எரிமலை ஆகிறது. சமுதாயத்தைச் சாடுகிறான். இதுவே கதை.

இந்த நாடகங்களின் வழி அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய மூன்று துறைகளிலும் புரட்சியை உருவாக்கிக் காட்டுகிறார் ஆசிரியர் வேலன்.

மதுவெறியும் மங்கையர்பால் கொள்ளும் மயக்கமும் எத்தகைய மாவீரனையும் சாய்த்துவிடும் என்பதை உணர்த்துவது 'சாம்பாஜி' நாடகம். மராட்டிய மாவீரன் சிவாஜியின் மகன் சாம்பாஜி. தன் காமவெறி சிறிதும் மாறாத நிலையில் மன்னனாகிறான்; அவனை முழுவதும் கெடுப்பவன் கவிகுலேஷன் என்பவன்! ஔரங்கசீபின் ஆத்திரம் சாம்பாஜியைத் துரத்துகிறது. சிவாஜி இந்த நாடகத்தில் மனைவியின் கைப்பாவையாக இருப்பது படிப்பவரை வியப்புக்கு உள்ளாக்குகிறது. சிர்கே என்பவன் சாம்பாஜியைக் காட்டிக் கொடுக்கிறான். ஔரங்கசீப்பின் முன் நிறுத்தப்படும் சாம்பாஜி மாவீரனாகத் திகழ்கிறான்; அவன் வீரம் கண்டு மன்னன் மகள் காதலிக்கிறாள். சாம்பாஜி இறந்தவுடன் அவள் 'விதவை' நிலை அடைகிறாள்.

இராசேந்திர சோழனின் வடநாட்டுப் படையெடுப்பையும் அவன் கங்கை கொண்ட சோழனாக வெற்றியுடன் திரும்பி வருவதையும் விளக்குவது 'கங்கைக்கு அப்பால்' என்னும் ஏ. கே. வேலனின் மற்றொரு நாடகம்.

குலோத்துங்க சோழனின் தலைக்காட்டுப் போரை விளக்கும் நாடகம் ''காவேரிக் கரையினிலே'' என்பது.

> ''காவிரி காலத்தை வென்று 'நடந்தாய் வாழி காவேரி' என்று நடந்து கொண்டே இருக்கிறது !

அந்த ஆற்றின் ஓரத்திலே நடந்த வல்லரசுகள் எத்தனை! வானுயர்ந்த கோட்டைகள் எத்தனை, எத்தனை? வளர்ந்த கலைகளின் செழுமைக்கும் சிறப்புக்கும் எல்லை ஏது?

அந்த ஆற்றின் ஓட்டத்துடன் போட்டியிட்டபடி வரலாற்றின் ஏடுகள் புரண்டு வருகிறபோது ஒருசில பக்கங்களில் காணப் பெறும் சில குறிப்புகளின் விளக்கமே இந்த நாடகம்..''

என்று ஆசிரியர் இந் நாடகம் பற்றிக் கூறுகிறார். கங்க நாட்டு மங்கை கன்னரதேவி 'பைரவி' என்னும் நடன மகளாக வந்து சோழனைப் பழிவாங்க முயல்கிறாள். கொல்லிமலைக் கள்ளர்தலைவன் இருளப்பன் அவள் முயற்சிக்குத் துணை நிற்கிறான். அவள் விருப்பப்படி புலிக் கொடியை அறுக்கிறான், சோழன் கடகத்தைக் கவர்ந்து தருகிறான்; பல சூழ்ச்சிகளுக்கும் திருப்பங்களுக்கும் காரணமாகிறான். இறுதியில் இருளப்பனே குலோத்துங்கன் என்பது புலப்படுகிறது. அவன் — தலைக்காட்டு நங்கை — கன்னர தேவி என்னும் பைரவியை மணக்கிறான்.

கரிகாலன் தன் பகைவன் இருங்கோவேளோடு மோதி வெற்றி பெற்ற கதையே 'பகைவனின் காதலி' என்பது.

கும்பகர்ணன், மாவீரன் கம்சன் ஆகிய நாடகங்கள் அண்மையில் — இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் — நேஷனல் தியேட்டர்ஸ் ஆர். எஸ். மனோகர் நடிப்பதற்காக எழுதித் தரப்பட்டவை. பிற நாடகங்கள் குறிப்பிடத்தக்கன அல்ல.

ஏ. கே. வேலனின் உரையாடல் வளத்திற்கு ஓர் எடுத்துக் காட்டு :

''உன்போன்ற ஒடுக்கப்பட்ட உத்தமிகட்கு, நசுக்கப் பட்ட நங்கையர்க்கு, வாழ்வு பாழாக்கப் பட்ட வனிதா மணிகளுக்குமீட்சியுண்டா ? உரிமை கிடைக்குமா ? ஆளுக்கு ஒரு அமரன் கிடைப்பானா ? சிந்தித்துப் பார் !

விலங்கினும் கேடாய்த் தெருவில் அலையும் நாடோடிகளை எண்ணிப் பார். வாழ்க்கைச் சோதனையால் சாதலுடன் போராடும் நாட்டில் காதலா ? தன்னலத்திற்கு உழைத்தால் பொதுநலம் புகைந்து போகும். உன்போன்ற எண்ணற்ற பெண்களின் மீட்சிக்காகப் போராடு. உன் தனி இன்பத்தை, பலர் இன்பம் பெறும் முயற்சிக்காகத் தியாகம் செய் ! உன் காதல் மாசற்றதானால், வலிமையுள்ளதானால், தியாகத் தீயில் குதி, தயங்காதே !''

அமரன் இவ்வாறு தன்னைக் காமவுணர்வோடு நெருங்கிய கைம்பெண் கமலத்திற்கு அறிவுரை தருகிறான். சமுதாயப் பணியில் தேவையினை இது காட்டுகிறது,

''திருடும் திட்டத்தோடு செல்லவில்லை ஆலயத்திற்கு ! மழைக்கு ஒதுங்கினேன். அங்கு நடத்திய ஆழ்வாருடைய கதைதான் எனக்கு அந்த ஆசையை எழுப்பி விட்டது ! அதிலும் கன்னம் வைத்தோ கண்ணில் மண்ணைத் தூவிவிட்டோ களவாடவில்லை! கவனிப்பாரற்றுக் கிடந்த தாம்பாளத்தைத் தான் கைப்பற்றினேன், ஆண்டவனே அளித்ததாக எண்ணி!'

என்று குற்றம் சாட்டப்பட்ட வீரப்பனின் குரலில் புராணத்தின் தீய விளைவு புலப்படுத்தப்படுவதுடன் எள்ளலும் இயலாமையும் ஒலிக்கின்றன.

சாம்பாஜியில் ஒரு காட்சி. கொலை மேடையில் அவன் நிறுத்தப்படுகிறான். மதம் மாறினால் அவனுக்கு விடுதலை கிடைக்கும் என்ற நிலை. சாம்பாஜி பேசுகிறான் :

''இஸ்லாத்தை எதிர்த்து இந்து சாம்ராஜ்யம் நிறுவிய சிவாஜி மைந்தனிடம் மதமாற்றத்தை எதிர்பார்க்கிறீர்......

என்ன துணிவு ? வாளால் மதத்தைப் பரப்பும் உங்கள் வைராக்கியம் என்னிடம் செல்லாது. என்னை நீ அணு அணுவாய்ச் சிதைத்தாலும் என் மரபின் பெருமையை விட்டுக் கொடுக்க மாட்டேன். நீங்கள் செய்த சதியைவிடச் சாவு ஒன்றும் பயங்கரமானதல்ல. சிர்கேயின் துரோகத்தால் தான் நீங்கள் சிந்து பாடுகிறீர்கள். இது சதமல்ல. என் மரண மூச்சு, மராட்டியப் புயலை எழுப்பும். ஒரு மராட்டியனாகப் பிறந்தேன், ஒரு மராட்டியனாகவே மடியத் தயார் ''

என்று முழங்குகிறான் சிவாஜி மைந்தன் சாம்பாஜி. மதுவும் மங்கையும் அவனது வாழ்க்கையின் போக்கை மாற்றினாலும், மானமும் மறமும் அவனை விட்டு நீங்க வில்லை. வரலாற்று நாடகத்துக்கேற்ற உணர்ச்சி மிக்க உரை நடை.

அறிஞர் அண்ணாவின் 'சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' என்னும் நாடகத்தின் தொடர்ச்சியாக 'சாம்பாஜி' அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

ஆசிரியர் ஏ. கே. வேலனின் பகுத்தறிவுச் சிந்தனைக்கு ஓர் உரையாடல் காட்சி.

''எலி ஏறி இறங்கலாம், பெருச்சாளி சுரண்டலாம், கரப்பான், வண்டு மொய்க்கலாம், பூச்சி, புழு நெளியலாம், வௌவால் புழுக்கை போடலாம்.......

ஆறறிவு படைத்த மனிதன் உள்ளே வந்தாலாகாதோ? அதிலும் பக்தியால் வந்தால் பாதகமா ? ''

இது 'சூறாவளி' நாடகத்தில் இடம் பெறுவது. திராவிட இயக்க நாடகாசிரியர்களுள் புரட்சிக் கவிஞரையும், பேரறிஞர் அண்ணாவையும் பின்பற்றி எழுதி வெற்றிப் படைப்புகளைத் தந்தவர் ஏ. கே. வேலன் எனலாம்.

சி. பி. சிற்றரசு

திராவிட இயக்கத் தலைவர்களுள் மிகவும் குறிப்பிடத் தக்க ஒருவர் 'சிந்தனைச் சிற்பி' சி. பி. சிற்றரசு அவர்கள் ஆவார். சிறந்த பேச்சாளராகிய இவர் நிறைய நூல்களை எழுதியுள்ளார். சாக்ரடீசு, டெமாஸ்தனீசு, நெப்போலியன், வால்டேர், மாஜினி, கமால் பாஷா, ரூசோ முதலானவர்களின் கருத்துக்கள் இவரது நகையிழையோடும் பேச்சுகளிலும் எழுத்துகளிலும் எதிரொலிக்கும். திராவிட இயக்கத்தவருள் பிறருக்கு வழிகாட்டியாக விளங்கிய இவர் மேலவைத் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

இவர் தீட்டிய நாடகங்களுள் ஒன்று 'தங்க விலங்கு' என்பது. முப்பத்தேழு காட்சிகளைக் கொண்ட இந்தத் தொண்ணூற்றாறு பக்க நாடக நூல் 1951இல் திருச்சி தமிழ் மன்றத்தின் வெளியீடாக வந்தது.

'திராவிட நாடு' விடுதலை வேண்டிப் போராடிக் கொண்டிருந்த காலகட்டத்தில், இயக்கம் தோன்றிய மூன்றாவது ஆண்டுக் காலத்தில் இந்த நூல் வெளி வந்தது,

> ''தேர்னாஜி என்ற விலங்கு, தேவிகா என்ற தங்கத்தால் மெருகிடப்பட்டு, சமத்துவங் கண்ட சமுதாயத்திற்குப் பூட்டப்படும் நேரம் விழிப்பெய்தி வீராவேசங் கொண்டு விலங்கைத் தூள்தூளாக்குகிறது .... சில சரியப்போகும் சாம்ராஜ்யங்கள் சமாளித்து நிற்கின்றன, சரித்திரங் கண்டிராத புதுமைதான் எனினும் வெற்றித் தொடக்கம் .... ''

என்னும் முன்னுரையோடு நாடகம் தொடங்குகிறது.

மார்த்தாண்ட புரத்து மன்னன் மாபலி கண் இழந்தான். தளபதி தர்க்கசிம்மன் மகிழ்ச்சியோடு காட்சியளிக்கிறான். மன்னன் தன் மனைவியிடம்,

> "நினைவில் வைத்துக் கொள். நான் இருந்த இடத்தில் நீ, அவ்வளவுதானே, யோசனை சொல்ல நான், படைகளை நடத்த தளபதி. சட்டம் செய்ய மந்திரி. தகுந்த யோசனைகள் சொல்ல தேர்னாஜி. சொற்படி கேட்க மக்கள். இவ்வளவு போதாதா — ஒரு நாட்டை ஆள !"

என்று நாட்டாட்சி பற்றிப் பேசுகிறான்.

தன் கை ஓங்க வேண்டும் என்பதற்காகத் தங்கை தேவி காவை நடனமாடச் செய்கிறான் தேர்னாஜி. தளபதியோடு சதிகள் பல செய்ய முற்படுகிறான்,

> "போரில் கிடைக்கும் வெற்றியே வீரர்கள் சிந்தும் ரத்தத்தால் அல்லவே ! நீங்கள் தெளிக்கும் கமண்டல நீரால் தானே ! வெற்றி ஓடும் குதிரை வீரர்கள் சுழற்றும் வாளால் அல்லவே, நீங்கள் செய்யும் ஓம குண்டத்தால் தானே"

என்று தளபதி வழி ஆசிரியர் ஆரியரின் புரட்டுக்கள் வேரூன்றிக் கிடக்கும் நிலையைக் காட்டுகிறார்.

மறவர்கோட்டை மன்னனும் தளபதி வீரசிம்மனும் சிறையிடப் படுகின்றனர். அப்போது மாற்றானிடம் சென்று திரும்பிய தங்கையை நோக்கி,

> "இருந்தா என்னடி. இந்த தேசத்திலே நான், அந்த தேசத்திலே நீ, நம்மவா தேசத்துக் கொருத்தரா இருக்க வேண்டாமோ ? வீணா காரியத்தே

> கெடுத்துட்டையே ! பஞ்சுக்கு அனல் பரிதாபப் படுமோ ? யார் எப்படிப் போனா நமக்கென்னடி ? நம்ம காரியத்தைக் கவனிக்க வேணாமோ ?

என்று தேர்னாஜி பேசுவது ஆரியர்களின் வஞ்சக மனப் போக்கைக் காட்டுகிறது.

காங்கிரசார் காலத்தில் மதுவிலக்கு இருந்ததை நையாண்டி செய்கிறது ஓர் உரையாடல்,

> ''ராணி : இப்போதுதான் கடைகள் எல்லாம் மூடி விட்டோமே !
>
> ஒருவன் : நெம்பர் போட்ட கடைகளை ! இப்போது நெம்பர் போடாத கடைகள் ஏராளம்''

ராணி நாட்டினர்க்கு எச்சரிக்கை விடுகிறாள், ஆரியர்களை நம்பாதீர்கள், என்று !

> '' இனியாவது தமிழக வீழ்ச்சியின் கதையைப் படித்துப் பாருங்கள்...
>
> நாடு கெடுவதற்கு எதிரிகள் மாத்திரம் காரணமில்லை. உள்நாட்டானும் இனக்காரனும்தான் முதல் காரணம்...
>
> சூழ்ச்சி என்பது ஒரு தங்க விலங்கு ... அறியாமை, மடமை, பழமை, ஆதிக்கம் இவையெல்லாம் தமிழர் சமூகத்துக்குப் போடப்பட்டிருக்கும் தங்க விலங்கு !
>
> ... தங்கம் ஒரு ஆசை ! விலங்கு ஓர் அடிமைச் சின்னம் ! அடிமைச் சின்னம் அறுபட வேண்டுமா ? அப்படியானால் சுக்குநூறாக்கித் தூள் தூளாக்குங்கள்

> நமது சமுதாயக் கொள்கைகளைப் பிணைத்திருக்கும் தங்க விலங்கை !
>
> தேர்னாஜி ஒரு விலங்கு ! அது தேவிகா என்ற தங்கத்தால் செய்யப்பட்டது ! ''

என்று நாடகம் முடிகிறது. ஆரியர்கள் யாகம், வேதம், சாஸ்திரம் என்னும் பொய் புரட்டுகளோடு நில்லாமல் சூழ்ச்சி வலை செய்து நாட்டைக் கெடுக்கின்றனர் ; மகளிரையும் அதற்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை இந்த நாடகமும் நன்கு காட்டுகிறது — இரணியன் நாடகம் போல !

''விதியா, மதியா எது ?'' என்னும் வினாவினை எழுப்பி விடை காட்டுவது சி. பி. சிற்றரசுவின் மற்றொரு நாடகமான 'மதி' என்பது.

ஆளியூர் ஜமீன்தார் அமரநாதனின் மகள் சுகுணா. இவள் மதியே வெல்லும் என்னும் கொள்கையுடையவள். முன்னாள் படைத் தலைவர் கருணாகரன் மகள் மல்லிகா, இவள் விதிப்படி அனைத்தும் நடக்கும் என்பவள். இவ்விருவருக்கும் இடையே நடக்கும் கருத்து மோதலை நாடக வடிவில் தருகிறார் ஆசிரியர்.

ஆசிரியரது உரையாடல் நடைபற்றி அறிவதற்கு இந்த 'மதி' நாடகத்திலிருந்து ஒரு பகுதி.

> ''அம்மா, நான் பாவி. பெண் இனத்துக்குத் துரோகம் செய்த பேதை. வாடாமலரைக் காலடியில் மிதித்த கசடன். திக்கற்ற நிலையிலே ஒருத்தியை நட்டாற்றிலே விட்ட நயவஞ்சகன் — கூரிய வாளுக் கஞ்சி என் கோமளத்தைக் கைவிட்ட கோழை. ஆண் இனத்துக்குத் தீராப் பழியைத் தேடித் தந்த அயோக்

> கியன். நான் துரோகத்தின் இருப்பிடம். நய வஞ்சகத்தின் நங்கூரம் ! நம்பிக்கை மோசத்தின் தாயகம் ! என் நேசத்துக்காகத் தன் தந்தையேயே பகைத்துக் கொண்ட ஒரு தரும உருவத்தின் வாழ்க்கையைச் சிதைத்த சித்ரவதைக்காரன் ! கொலைகாரனினும் கொடியவன் !''

என்று தவறிழைத்த பின் திருந்திய நிலையில் குலசேகரன் என்பவன் பேசுகிறான். அடுக்கிவரும் இந்தத் தற்குற்றச் சாட்டு வேகமும் விளக்கமும் கொண்டதாக அமையக் காணலாம்.

சி. பி. சிற்றரசு போர்வாள், இரக்கத் தடாகம், விஷக் கோப்பை, சாய்ந்த கோபுரம், சேரனாட்டதிபதி, கௌரி வாணன், கணவனல்ல முதலான வேறு பிற நூல்களையும் இயற்றியுள்ளார்.

> ''வீரத் தமிழ் மரபில் தோன்றி மதுரையம்பதியை மாண்புற ஆண்டுவந்தோன் மன்னன் நின்றசீர் நெடுமாற பாண்டியன். அவனுக்குக் குலத்தைக்கெடுக்க வந்த கோடரிக் காம்புபோலக் குலச்சிறை அமைச்சரானான். அவன் அரசனுக்கும் ஆரியத்திற்கும் இச்சகம் பேசும் கொச்சைச் சிறுவன் திருஞானசம்பந்தனுக்கும் அடிமையானான். செய்ந் நன்றி மறந்து, உண்ட வீட்டிற்கிரண்டகம் நினைத்து மன்னனுக்கு இயல்பாக உற்ற சூலையைப் போக்க நினையாது பெருக்கமுனைந்தான். இயல்பாகப் போக்க முனைந்த சமணர் எண்ணாயிரவரைப் பழிக்குள்ளாக்கி அவர்கள் அளித்த மருந்தையே சம்பந்தன் கையதாக்கி நோயைக் குணப்படுத்தியதாகச் சாதனை செய்தான். சைவபோதை தலைக்கேறி சம்பந்தன் வீசிய வலையில் வீழ்ந்து அச் சமணர்கள் அனைவரையும் கழுவிலேற்றினான்''[74]

இஃது 'இரத்தத் தடாகம்' நாடகத்தின் கதைக் குறிப்பு.

இந்த நாடகத்தின் இறுதிக் காட்சியில் பவணந்தி முனிவர் பேசுகிறார் :

> ''சொல்லிக் கொள்வதென்ன ? வஞ்சனை விஷத்தில் விழுந்துவிட்ட வீணன் என் உயிர் குடிக்கத் தயாராகிவிட்டான் ! தமிழகமே ! உன்னையே கேட்கிறேன். தமிழே ! உன்தாள் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். உன்மேல் எனக்கு எவ்வளவு அபிமானம் இருந்திருந்தால் நன்னூல் செய்திருப்பேன் ! தமிழர்களே ! இனியாவது நீங்கள் காட்டிக் கொடுக்கும் கயமைக் குணத்தை விட்டுவிடுங்கள், உங்கள் பிரிந்த வாழ்வு என் இரத்தாபிஷேகத்தால் ஒன்று சேரட்டும் ! . . .
>
> எந்த நேரத்திலும் கொடிய குலச்சிறைகள் இருக்க மாட்டார்கள். என்றாவது ஒரு நாள் ஒரு நல்லவன் தோன்றுவான். அந்த மூதறிஞனை நீங்கள் மன்னன் என்று அழைக்க வேண்டாம். அல்லது ஆசை மிகுதியால் கண்ணா என்றும் அழைக்க வேண்டாம். உடன் பிறந்த இரத்த பாசத்தால் 'அண்ணா' என்று அழைத்தால் போதும் ! நீங்கள் திருந்த, முன்னேற, கவலையில்லாமல் வாழ, என் உயிரை அர்ப்பணிக்கிறேன் !''

என்னும் இந்தப் பேச்சு சி. பி. சிற்றரசு அவர்களின் நாடக பாணிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இந்த நாடகத்திலும், இது போன்ற வேறு சில நாடகங்களிலும் சில கால முரண்பாடுகள் இருக்கும், ஆனால் அவை வேண்டுமென்றே, அறிந்து தெரிந்தே நாடகாசிரியர்களால் மாற்றிப் படைக்கப்பட்டவை. திருஞானசம்பந்தர் காலத்தில் பவணந்தி எங்கு வந்தார் ? என்ற வினா எழலாம். அவரது காலம் ஆறாம் நூற்றாண்டு, இவரது காலம் 12ஆம் நூற்றாண்டு !

சி. பி. சிற்றரசுவின் 'போர்வாள்' முதலான நாடகங்கள் ஆய்விற்குக் கிடைக்கவில்லை.

தில்லை வில்லாலன்

திராவிட இயக்கத்தில் முன்னணியில் நின்றவர்களுள் ஒருவர் தில்லை வில்லாளன். இவர் 'தம்பி' என்னும் ஏடு நடத்தியவர். இவரும் பல நாடகங்களை இயற்றியிருக்கிறார். இவரது ''முதல் விசாரணை'' 1946இல் வெளிவந்தது. அடுத்துப் ''பேசும் ஓவியம்'' என்னும் நாடகம் 1957இல் அச்சிடப்பட்டது.

இயக்கத்தைச் சார்ந்த மற்றவர்களைப் போலவே இவரும் ஆரியர்தம் வஞ்சகம் பற்றியும், தமிழர் எழுச்சிபெற வேண்டியதன் இன்றியமையாமை பற்றியும் தம் நாடகங்களில் புனைந்து எழுதியுள்ளார்.

பேசும் ஓவியம் என்னும் நாடகம் 68 காட்சிகளைக் கொண்டது. 96 பக்கங்களில் அமைந்தது.

மன்னன் மகேந்திரன் அரசி மரகதவல்லியை மறந்து, மோகினி தேவி என்பாளிடம் மயங்கிக் கிடக்கிறாள். குலகுரு கோவிந்தானந்தர் அரசனை ஆட்டிப் படைக்கிறார். ஆணைகள் அனைத்திலும் தம் ஒப்பம் இருக்க வேண்டும் என்னும் உத்தரவினை அரசன் பிறப்பிக்குமாறு செய்தான். நாட்டில், ஓவியன் குமணன் புகழோடு இருக்கிறான், மோகினி இவனை விரும்பியும் அவன் வெறுத்து ஒதுக்குகிறான். முருகப்பர் மகள் குமணனை விரும்பினாள்,

''என்னிடம் அதிகாரம் இருக்கிறது !

''அவரிடம் அற்புதம், அரசே !

''என் கையில், செங்கோல் !

''அவர் கையில் யோகதண்டு !

''என்னிடம் ஆட்சிக் குழு !

''அவரிடம் சூழ்ச்சித் திறன் !
'' கோட்டைகள் எனக்கு !
''கோவில்கள் அவருக்கு !
''சட்டங்கள் நம்பக்கம் !
''வேதங்கள் அவர்பக்கம் !
''பரிவாரங்கள் பல உண்டு என்னிடம் !
''பக்தர்கள் கோடி கோடி அவருக்கு ! ''

இந்தத் தொடர் உரையாடல் அரசனுக்கும் ஆரியத் துறவிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குகின்றது. எவ்வாறு ஆரிய மரபு அதிகாரம் மிகுந்த அரசையே ஆட்டிப் படைக்கிறது என்பதை இந்த உரையாடல் தெளிவுபடுத்துகிறது.

குமுதாவிற்குத் தோஷம் ஆகையால் அவள் நாள் தோறும் அனுமனை வணங்க வேண்டும் என்கிறார் குரு.

நாடக உத்தி முறைகளுள் ஒன்றனை ஆசிரியர் சிறப்பாக இதில் கையாண்டுள்ளார். குரு கோவிந்தானந்தன் காலட்சேபம் செய்யும் அதே நேரத்தில் குமுதாவைத் தூக்கிச் செல்லும் நிகழ்ச்சி சேர்ந்து நடக்கிறது.

''குரு, வனத்திலே சீதை தனித்திருந்தாள் (குமுதா வந்து சேர்கிறாள்.)

வான்விட் டிறங்கி வந்ததேவர்போல்
முனிவர் வடிவம் கொண்டுவந்து
நின்றான் இராவணன்
(குரங்கு வேட ஆட்கள் வருதல்)
கோட்டைத்தாண்டினாள் சீதை
கொண்டு போனான் இராவணன் !
(அப்பா என்று குமுதா அலறத் தூக்கிச் செல்லல்.)
பட்சி ராஜா சடாயு பாய்ந்தான்
சிறகொடிந்து அவனும் சாய்ந்தான் ! ''

(தந்தை முருகப்பர் தடுக்க, அவர் அடிபட்டு வீழ்ந்தார்.)

இவ்வாறு காலட்சேபத்தின் வழியே நடந்த கதையும் சொல்லப்படுகிறது.

குருவின் மாளிகை கொடுமைகளின் இருப்பிடம். இதனைப் பற்றிக் குமணன் பேசுகிறான் :

> ''இது சூதுக்கோட்டை ! அக்கிரம அரண்மனை ! அநீதியின் கூடாரம் ! பாதகர்களின் பாசறை ! நய வஞ்சகர்களின் நடனசாலை ! நரித்தனங்களின் அரங்கம் ! நாசகாரர்கள் கூடிப் பேசும் நச்சுக் கூடம் ! எத்தர்களின் சத்திரம்.... ஐயோ, இது அரக்கு மாளிகையடா ! ஓடிப்போய் விடுங்கள் !''

இவ்வாறு செல்கிறது வில்லாளனின் உரையாடல் நடை.

தப்பி வந்த குமுதா, குமணனைச் சந்தித்து, நாட்டைத் திருத்தி விடுதலைக்குப் போராடச் சபதம் செய்கிறாள்.

ஓவியக் காட்சி ஒன்று நடைபெறுகிறது. பலப்பல மாஜி கடவுள்களின் ஓவியங்கள் பலவும் அதில் உள்ளன. மக்களாட்சி பற்றிக் குமணன், குமுதா, நல்லப்பர் ஆகியோர் பேசுகின்றனர்.

அரசன் குமணனது நாவைத் துண்டித்த பின்பும் ஓவியங்கள் மூலம் புரட்சி செய்து விடுகிறான் :

> ''நாக்கை அறுத்துவிட்டாய், காவலா !
> கரமிருக்கிறதே !
> கரமிருக்கும்வரை எழுதுவேன் !
> உன் ஆணவம் ஒழியும்வரை எழுதுவேன் !

அந்தக் குருவின் கொட்டம் அடங்கும் வரை எழுதுவேன் !'' என்று பாடுகிறான் ஓவியன் குமணன். மக்கள் புரட்சி வெடிக்கிறது ! இறுதிக் காட்சியில் குமுதா,

''அதோ பாருங்கள் !
மக்களை மதியாத மமதையாளர்களின் கதியை !
அந்தக் கதியை இதோ பெற்றுவிட்டீர்கள் !
இந்தக் கதி உங்களுக்கு வர வழிவகுத்தது
இந்தப் பேசும் ஓவியங்கள்தான் ! மன்னா ! நீ
பேசாமல் செய்தாயே—அந்தப் பேசாத ஓவியம் தீட்டிய
பேசும் ஓவியங்கள்தான் !
மக்களாட்சி மலர்க !''

என்று முழங்குகிறாள்.

நாட்டு விடுதலை, மக்களாட்சியின் மலர்ச்சி, ஆள்வோரின் ஆணவப் போக்கு, ஆரியர்களின் நரித்தனம், ஆரிய மகளிரின் வஞ்சக ஒழுக்கம் — இவை இவரது நாடகங்களில் காணப்படும் செய்திகளாகும்.

'திரை' என்பது தில்லை வில்லாளனின் ஓரங்க நாடகங்களின் தொகுப்பு. இதில் இளங்கோவின் சபதம், விடியற்காலை, தங்கத்துளிகள், இருட்டறை, எத்தன் திருவிளையாடல், அம்மன்களின் அங்கலாய்ப்பு, திரை என்னும் ஏழு ஓரங்க நாடகங்கள் உள்ளன.

நிமித்திகனின் கூற்றைப் பொய்யாக்கும் இளங்கோவடிகளின் செயலைப் பற்றியது ''இளங்கோவின் சபதம்'' என்னும் முதல் நாடகம்.

''இவர்களின் சாத்திரம் எனக்குத் தெரியும் — அது
கூவிடும் சேவலுடைய கொக்கரிப்புகளின் தொகுப்பு —
இவர்களின் வேதம் — ஒரு வரட்டு வாய்ப்பாட்டு ''

என்பது இளங்கோவின் கணிப்பு !

'விடியற்காலை' என்னும் நாடகம் அங்கதமும் நையாண்டியும் கலந்தது. பூவிற்கும் பெரியாழ்வார் என்னும் மலர் வணிகரின் வளர்ப்பு மகள் ஆண்டாள். அவள் வளர்ந்து பெரியவளாகி, கோயில் டிரஸ்டியின் குமரன் ரங்கநாதன் என்பவனைக் காதலிக்கிறாள். விடியற்காலையில் தந்தைக்கு உதவுவது போல் நாள்தோறும் தோட்டத்திற்குச் சென்று பூப்பறிப்பாள். அங்கு அவனைச் சந்திப்பாள். இது ஆழ்வாருக்குத் தெரியாது. அவளின் பக்தியை மட்டுமே அவர் மெச்சினார். நாள் தோறும் அவள் தொடுத்துத் தரும் பூமாலையில் ஒரு காதற்கடிதம் மறைந்திருக்கும். தந்தையே அதை எடுத்துச் சென்று ரங்கநாதனுக்குத் தருவார் ! அரங்கனையே மணப்பேன் என்று பிடிவாதம் செய்த அவளை, கோயில் அறப்பணிக்கு ஒப்படைக்கிறார் ஆழ்வார், விடியற்காலையில் அவள் ஜோதியில் கலந்து விட்டதாகக் குரலெழுப்பும்படி அரங்கநாதன் காவலாளியிடம் சொல்லி வைத்தான். அவனும் அவ்வாறே சத்தம் போடுகிறான். ஆண்டாளும் ரங்கநாதனும் கோயிலின் பின்பக்க வழியாக வெளியேறிச் சென்னைக்குச் செல்லும் ரயிலைப் பிடிக்கின்றனர். அங்கே சென்று திரைப்படம் எடுக்க ! ஆழ்வார் நாயன்மார்கள் கதைகள் நம்புதற்குரியன அல்ல என்னும் கருத்தை உணர்த்துவதற்கு இந்தக் கதை எழுதப்பட்டது.

இத் தொகுப்பில் உள்ள கடைசி நாடகம், 'திரை'. இராஜா தேசிங் அவன் மனைவியை மூன்றாண்டுகள் பார்க்கக்கூடாது என்று சாத்திரத்தை வைத்துச் சொல்கிறான் சோதிடன் பையராமகிருஷ்ணய்யர். ''பார்த்தால் நல்வாழ்வு நசித்து விடும், குடிமக்கள் வறுமையால் வாடுவார் ...... பஞ்சம் வரும்'' என்கிறான்.

ஒரு நாள் போர் வருகிறபோது, அரசன் ஆரியனின் ஆணையை மீறித் தன் வாளால் இடையில் போடப்பட்ட திரையைக் கீறீ, அவளது கரத்தில் முத்தமிடுகிறான், பின்

விடை பெறுகிறான். போர் நடக்கிறது ; அதில் தேசிங் இறந்து போகிறான். ராணி,

''சோதிடம் ஒரு சூது !
சாத்திரம் சிலரின் உளறல் !

வேதம் வேண்டுமென்றே கட்டிக்கொண்ட ஏற்பாடு என்றுதானே தெரிகிறது. இல்லாவிட்டால்,

ஆண்டவன் பக்தி அதிகமுள்ள என் காதலர் சாவானேன் !''

என்று கேட்டு தீயில் விழுந்து இறக்கிறாள்.

அடுத்த சில நொடிகளில், ஆத்திரத்தோடு தோழி அங்கு வருகிறாள். சோதிடனைத் தோழி பல வினாக்கள் தொடுத்து மடக்குகிறாள். ராணியின் கையை அரசன் தொட்டதால்தான் தேசிங் கரமிழந்து செத்தான் என்கிறான். தோழி சினந்து,

''சாத்திரப் பித்தரே ! உமது நாற்றவாயை மூடும். சாத்திரம் சாத்திரம் என்று கூறி ஒரு நாட்டையே பிணக்காடாக்கி விட்டீரே ! உமது சோதிட அறிவு இந்த அழிவை முன்கூட்டியே ஏன் சொல்லக் கூடாது ?''

என்று கேட்கிறாள். கடைசியாக அவனைப் பார்த்து,

''உங்கள் எதிர்காலம் உங்களுக்குத் தெரியுமா ?'' என்று கேட்க, அதற்கு அவன்,

''நவாபிடம் செல்லப் போகிறேன்'' என்கிறான். அவள் மறுத்து,

''நீரும் இப்படித் தீயில்தான் சாகப் போகிறீர் ''

என்று கூறி, திடீரென்று அவன்மீது பாய்ந்து அவனைத் தீயில் தள்ளி விடுகிறாள். அவன் சோதிடத்தைப் பொய்யாக்கு கிறாள், தானும் சாகிறாள்.

தில்லை வில்லாளன், 'பாவம்', 'தந்தையும் மகனும்', 'தை பிறக்காமலே வழிபிறந்தது' என்னும் ஓரங்க நாடகங் களை எழுதியுள்ளார். இவரது இன்னொரு நாடகம் 'காலேஜ் காதல்'.

எஸ். எஸ். தென்னரசு

திராவிட முன்னேற்றக் கழகத்தில் முக்கியமான எழுத்தாளர்களில் எஸ். எஸ். தென்னரசுவும் ஒருவராவர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான இவர் பல புதினங்களையும், சிறுகதைகளையும் எழுதியுள்ளார். பல்லாண்டுகளாகப் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பி வரும் இவர் சில நாடகங்களையும் இயற்றியுள்ளார். இவரது முதல் நாடகம் ‘ அத்தான் ’ என்பது. 1955இல் வெளியான இந்த நாடகத்தை நடித்தும் இருக்கின்றனர்.

மதுரை மிட்டாதார் தனிக்கோடி முதலியாரின் மகன் அகிலாண்டம். அவன் மனைவி மரகதம் நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் காட்சியோடு நாடகம் தொடங்குகிறது.

அகிலாண்டம் கண்ட பெண்டிரோடு சுற்றுகிறான், சென்னையில் அவன் இருக்கும்போது, மனமும் அறிவும் அவனை அலைக்கழிப்பதாக ஒரு காட்சி. அதில்,

> “ மனம் : மகனே ! மரகதமிருக்க மற்றொரு பெண்ணை மணக்கலாமா என்ன எண்ணுகிறாயா ? கேள். தசரதன் தரணி போற்றிய நல்வேந்தன். அவனுக்கு மனைவிமார் அறுபதினாயிரம் ஏன் ?
>
> வில்வீரன் விஜயன் — களம்பல கண்ட காண்டீபன் — குத்துக்கும் வெட்டுக்கும் அஞ்சாமல் குருதிக் குளத்திலே கும்மாளம் போட்ட கட்டிளங்காளை என்றெல்லாம் புகழப்படும் அர்ச்சுனனுக்கு மனைவிமார் ஆயிரமாயிரம், ஏன் ?

அவர்கள் படங்களுக்கு பூஜை ! பூமாலை ! ''

என்று மனம் கூறுகிறது. அறியாமை புராணத்தைத் துணைக்கு அழைக்கிறது.

மனைவியை விட்டு வேறொரு பெண்ணை மணந்து குழந்தையும் பெறுகிறான், எதிர்பாராத விதமாக அவருடைய அண்ணன் வக்கீல் சம்பத் மரகதத்தைக் காப்பாற்ற, அவளிடம் அந்தக் குழந்தை ஒப்படைக்கப் படுகிறது. செய்தியறிந்த அகிலன் குழந்தையைக் கொல்கிறான். மரகதம் பொறாமையினால் இதனைச்செய்ததாகக் கொலைக் குற்றம் சாட்டி, நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்படும் நேரத்தில், திருந்திய அகிலன் தோன்றி, அவளை விடுவிக்கிறான். நீதிபதி, அறியாமையினால் குற்றம் செய்து, பின் திருந்தி வந்ததனால் அவனை விடுதலை செய்வதாகக் கூறி, மரகதத்தோடு வாழும்படி அறிவுறுத்துகிறார்.

முப்பத்தேழு காட்சிகள் கொண்டது இந்த நாடகம்.

தென்னரசுவின் இன்னொரு நாடகம், ''சந்தன மழை'' என்பது. இருபத்தைந்து காட்சிகள் கொண்ட இது புத்த பெருமானின் வாழ்க்கையை விளக்குகிறது. நாடகம் ஆரியத்தைத் தாக்குவதாக அமைந்தது,

> ''அரசே, அறிவின் கேள்வி ஆத்திரத்தைத் தான் எழுப்பும். அல்லும் பகலும் ஆராய்ந்து சொல்லுக்குச் சொல் சிந்தித்து நான் கண்ட முடிவு — ஆரியம் பகுத்தறிவின் பரம்பரை வைரி ! பிராமணர்களாம் பிராமணர்கள், எவன் பிராமணன் ? பாவத்தை ஒழித்தவன், பற்றை அறுத்தவன், காமத்தைக் கடந்தவன், பிராமணன், கோசலத்தில் இருப்பவர்களா, பிராம

> ணர்கள் ? பிறப்பிலே பேதம் கற்பித்துப் பிழைப் புக்கு வழி அமைத்துக் கொண்ட பித்தலாட்டக்காரர் கள் ! ''

என்று இவ்வாறு சிந்திக்கிறான் சித்தார்த்தன்.

இத்தகைய புரட்சிக் கருத்துக்களைக் கொள்கை முழக்க மாகத் தன் சீடர்களுக்கு எல்லாம் சித்தார்த்தன் சொல்லி வந்ததனால், அவனை அழிக்கப் பல முயற்சிகளில் ஈடு படுத்தினர் ஆரியர்கள் :

> ''வளர்ந்து வரும் அறிவுலகம் அவர்களுக்குப் புத்தி புகட்டட்டும். உங்கள் பணி தொடரட்டும் ! ஆரியம் உங்களின் நிரந்தர எதிரி. உலகின் வைரி ! ஆரியத் தின் சமாதியிலேதான் அகிலத்தின் நல்வாழ்வு மலர முடியும் ! வேதச் சாம்பலின் புகைமூட்டத்திலேதான் வளர்கின்ற விஷ அணுக்கள் பொசுங்கி மடிய வழி பிறக்கும் ! ''

என்று முழங்குகிறான் சித்தார்த்தன்.

தென்னரசுவின் மற்றொரு நாடகம், 'தேவாலயம்' என் பது.

கே. ஜி. இராதாமணாளன்

திராவிட இயக்கத்தின் இன்னொரு நாடகாசிரியர் கே. ஜி. இராதாமணாளன் என்பவர். ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிறையப் புதினங்களையும் நாடகங்களையும் சிறு கதைகளையும் தீட்டிய முன்னணி எழுத்தாளர் இவர்.

இராதாமணாளன் எழுதிய ஒரு சிறந்த நாடகம் "அரக்கு மாளிகை" என்பது.

மௌரிய வம்சம் தழைக்க வழி வகுத்தவர் சாணக்கியன். ஆரிய அரசு நிலைக்க வேண்டும் என்று அவர் வழிவந்தவர் கள் பலரும் நினைத்தனர். ஆனால், மௌரிய வம்சத்தில் தோன்றிய அசோகன் பௌத்தனானான். அவனுக்குப் பின் அறுபதாண்டுகள் கழித்து ஆட்சிக்கு வந்தவன் பிருகத் ரதன். அந்த மன்னனைப் பட்டப் பகலிலேயே கொன்ற அக்னிமித்திரன் அரசனாகிறான். இந்த வரலாற்றுச் செய்தியை அடிப்படைக் கருவாகக் கொண்ட நாடகம் 'அரக்கு மாளிகை'. வரலாற்றாசிரியர்கள் இந்த நிகழ்ச் சியை "ஒரு பிராம்மணர் சூழ்ச்சி" (A Brahminical Conspiracy) என்றே கூறுகின்றனர். சமணபுத்த மதங்களைச் சேர்ந்தவர்களின் தலைகளை வெட்டிக் கொணர்ந்தால் தலையொன்றுக்கு நூறு பொன் பரிசு அளிக்கப்படும் என்று பிரகடனம் செய்யும்படி பதஞ்சலி அக்னிமித்திரனுக்கு உபதேசம் செய்த காலம், இந்த நாடகத்தின் காலம்.

எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் இந்த அரக்கு மாளிகை நாடகத்தினை அரங்கேற்றியுள்ளார்.

முதற்காட்சியில் பகுத்தறிவு வாதம் பேசுகிறான் மகத நாட்டின் படைத் தலைவன் அக்னிமித்திரன். ஆனால்,

பதஞ்சலி அவ்வனைப் படிப்படியே மாற்றுகிறான். இறுதியில், ஆரியர் சூழ்ச்சியினால் அக்னிமித்திரன் அரசனையே கொன்றுவிட்டுத் தான் அரியணை ஏறுகிறான். ''அரக்கு மாளிகை.... அதில்தான் நீயும் குடிபுகுகிறாய் !'' என்று சொல்லி மன்னன் மடிகிறான். அவன் கூறுவது வரலாற்றில் உண்மையாகிறது.

ஆரிய எதிர்ப்புக் கருத்துக்கள் நாடகத்தில் எல்லாக் காட்சிகளிலும் காணப்படுகின்றன.

> ''குட்டிச் சுவரிலே கழுதை தங்குவதும் சேற்றிலே எருமை புரளுவதும் பிணத்தை நரி புசிப்பதும் நாற்றமெடுத்ததை நாய் தின்பதும் — எப்படி அதனதன் இயற்கைக் குணமோ அப்படியே பார்ப்பனர் வேதம் ஓதுவதும் அவர்களின் பிறவிக் குணம்''

என்கிறாள் மாலினி.

> ''இந்தக் காலத்தில் அந்த மனு இருந்திருந்தால், குலத்திற்கொரு நீதி வகுத்த அந்த வஞ்சகனின் மண்டையை உடைத்து, மார்பைப் பிளந்து, குடலைப் பிடுங்கிக் குருதியைக் குடித்திருப்பேன் ! அவன் இல்லை''

என்று பேசுகிறான் அக்னிமித்திரன் தொடக்கத்தில்.

பௌத்த மன்னன் பிருகத்ரதனிடமிருந்து பதஞ்சலிக்கு அழைப்பு வருகிறது. அப்போது அவன்,

> ''சிங்கத்திற்கு ஆடு, வரவேற்பளிக்கப்போகிறதாம்! ராஜாளிக்குப் புறா, ராஜோபசாரம் செய்யப் போகிறதாம் ! ...... பாரடா, வேதஸ்ரீ, பார்ப்பனனுக்கு பௌத்தன் விடுத்திருக்கும் அழைப்பை !....ஆந்திரம் அசட்டை செய்தால், மகதம் மண்டியிட்டு அழைக்கிறது ! ஆரியத்தின் அபூர்வ சக்தியே சக்தி !''

பதஞ்சலியை அரசன் பிருகத்ரதனும், தந்தை அமைச்சன் புஷ்யமித்ரனும் வரவேற்று உபசரிப்பதைக் கண்டு பொரு கிறான், பொங்குகிறான் அக்னிமித்திரன். வாள் உருவிய அவனைப் பார்த்துப் பதஞ்சலி பேசுகிறான் :

> ''தென்றலின் மீது கத்தியை வீசப் பார்க்கிறாய் ! காற்று கண்ணீர்விட்டுக் கதறாது — செந்நீர் கொட்டி மடியாது ! தெரியுமா ! அக்னிமித்திரா ! தென்றல் புயலானால் என்ன நேரும் ? யோசித்துப் பார் !''

அக்னிமித்திரன்,

> ''சிரித்திடும் கருநாகமே, சிந்தித்துப் பார் நீயே ! நாடோடி புயலானால் நாடாள்வோன் என்னஆவான்? எரிமலை கக்கும், பூகம்பம் வெடிக்கும் !''

என்கிறான். பதஞ்சலி விடவில்லை.

> ''அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது, அக்னிமித்ரா ! .... பேர் இல்லாச் சந்நதி பாழ், பிள்ளையில்லாச் செல்வம் பாழ்! சுவையில்லாக் கனி பாழ்.... ஆரியமில்லா அரசு பாழ் ! புரிகிறதா ?''

என்று பதஞ்சலி கூற.

> ''ஏன் தெரியாது ? அறுபது அடி கம்பத்திலேறி நீ ஆடினாலும் அடியில் இறங்கிவந்து தானே பல்லி ளித்துப் பிச்சை கேட்க வேண்டும் !''

என்று அக்னிமித்திரன் பதில் கூறுகிறான்.

குருவின் மனைவி வேதத்தின் வலையில் விழுகிறான் பானு, தோழனுக்கு அறிவுரை கூறுகிறான் அக்னிமித்திரன்.

> ''ஆபத்தானவன் — அவனை மறந்துவிடு, பானு! .... சிலந்தி சிரிப்பில் சிக்கி, சுயமரியாதையை மறக்காதே! பாகு மொழியில் சொக்கி, பகுத்தறிவை இழக்காதே !''

இந்த அறிவுரை கூறிய அக்னிமித்திரனே பதஞ்சலி சூழ்ச்சியால் ஆரியப்பெண் தரணியின் காலடியில் வீழ்கிறான். அவள் தூண்டவே, அவள்மீது கொண்ட காதலால் —மோகத்தால் அரசனையே குத்திக் கொன்று தான் மன்னனாகின்றான் அக்னிமித்திரன்.

ஆரியத்தின் கொடுமையைச் சித்திரிக்கும் ஓர் அற்புதமான வரலாற்றுக் கருத்தோவியம், ஒப்பற்ற சீர்திருத்தக் காவியம் இராதாமணாளனின் 'அரக்கு மாளிகை'.

பாரதி தாசனின் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்னும் நாடகத்திலிருந்து இராதாமணாளனின் 'அரக்கு மாளிகை' என்னும் இந்த நாடகம் வரை பெரும்பாலான நாடகங்களில் ஆரியத்தின் வஞ்சகமும், வக்கிர புத்தியும், கொடுமையுமே அடிப்படைக் கருத்துக்களாக அமைந்திருத்தலைக் கருத்திற் கொள்ள வேண்டும். இந்த நாடகாசிரியர்கள் அனைவரும் 'பார்ப்பனரல்லாதார்' அல்லது 'திராவிடர்' இயக்க வழிவந்தவர் என்பதை இவர்கள் எடுத்துக் கொண்ட நாடகக் கருவே காட்டியிருக்கிறது.

இராதாமணாளனின் இன்னொரு நாடகம், 'நீலமணி',

திராவிட இயக்க நாடக வளர்ச்சி வரலாற்றில் கதிரொளி வீசிப் புகழ்பெற்ற இவர்களே யன்றி, வேறு பலரும் சிறந்த நாடகங்களை இயற்றி நாடகமேடைக்கு ஒளி சேர்த்திருக் கிறார்கள். அவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர் திரு வாரூர் கே. தங்கராசு.

திராவிட இயக்க நாடகங்களுள் மிகவும் அதிகமான முறை நடிக்கப்பெற்ற 'இரத்தக் கண்ணீர்' நாடகத்தை எழுதிய வர் இவரே! ஏறத்தாழ இரண்டாயிரம் முறை நடிக்கப் பெற்றது இது. இந்த நாடகம் நாகபூஷணம் என்னும் நடிகரால் தெலுங்கிலும் ஆயிரம் முறை நடத்தப்பெற்ற தாகச் சொல்லுவர். நடிகவேள் எம். ஆர். இராதாவின் அற்புதமான நடிப்பினால் எண்ணற்றவர்களின் நெஞ்சில் இடம் பிடித்துக் கொண்ட நாடகம் இது.

எம். ஆர். இராதாவிற்காக இவர் எழுதித்தந்த மற் றொரு நாடகம் 'இராமாயணம்'. இது கம்பராமாயணம் காட்டும் இராமன் வேறு, வால்மீகி காட்டும் இராமன் வேறு என்பதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. அது மட்டுமல்ல, இராமன் இழிந்தவன் என்பதை எடுத்துக் காட்டுவது.

திருவாரூர் தங்கராசு 'திருஞானசம்பந்தர்', 'திருநாவுக் கரசன்', 'சிவன்-விஷ்ணு' ஆகிய சீர்திருத்த நாடகங்களையும் இயற்றியிருக்கிறார்.

திராவிட இயக்கத் தலைவருள் ஒருவரான ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என் னும் நாடகத்தை இயற்றினார். 'சர்வாதிகாரி' முதலான திரைப் படங்களுக்குக் கதையும் உரையாடலும் தீட்டிய

இவர் கிழக்கும் மேற்கும், பிணங்கள், பராசக்தியின் தொடர்ச்சியான கசந்த கரும்பு ஆகியவற்றை எழுதியவர் ஆவார்.

அண்ணாவோடு நெருங்கிப் பழகிய இராம. அரங்கண்ணல் 'ரஸ்புடீன்' முதலான நாடகங்களைத் தீட்டியிருக்கிறார்.

'தென்னகம்' இதழ் நடத்திய கே. ஏ. மதியழகன் 'பவள நாட்டு எல்லை' என்னும் நாடகத்தை எழுதினார்.

தமிழக அமைச்சராயிருந்த டாக்டர் கா. காளிமுத்து 'மன்னர் திருமலை' என்னும் சீரிய வரலாற்று நாடகத்தை இயற்றியுள்ளார்.

கவியரசு கண்ணதாசன் கம்பரது வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு 'ராஜதண்டனை' என்னும் சிறந்த நாடகத்தை இலக்கிய நாடகத்தை-எழுதியிருக்கிறார். மருது சகோதரர்களின் வாழ்க்கை வரலாற்றைச் 'சிவ் கெங்கைச் சீமை' என்னும் நாடகமாக எழுதினார், இது திரைப்படமாகவும் வெளிவந்தது.

இன்றைய மத்திய அமைச்சரும், பன்முறை நாடாளுமன்ற, பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்த முரசொலி மாறன் 'நாளை நமதே', 'ஊஞ்சல் மனம்', 'அபாய விளக்கு' முதலிய நாடகங்களை எழுதியுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா. செழியன் அவர்கள் 'காணிக்கை', 'போராட்டம்', 'சமீன் மாளிகை' ஆகிய நாடகங்களை இயற்றியிருக்கிறார்.

தமிழகச் சட்டமன்றத் தலைவர் பேராசிரியர் டாக்டர் தமிழ்க்குடிமகன் 'மனமாற்றம்' என்னும் நாடகம்செய்துள்ளார்; கோவி மணிசேகரன் எழுதிய 'செம்பியன் செல்வி' என்னும் புதினத்தின் நாடக வடிவமே இது.

பேராசிரியர் டாக்டர் நா. பாண்டுரங்கன் 'சித்தர் மகள்' என்னும் நாடகத்தை எழுதினார். இதனை டி. கே. எஸ். குழு நடித்தது. இவர் எம். ஜி. ஆர். நாடக மன்றத்தினருக்காக வேறு ஒரு நாடகத்தையும் தந்திருக்கிறார்.

மா. தங்கவேலர் 'அஞ்சனா' என்னும் நாடகத்தையும், கரந்தை கணேசன் 'ஆயுள் தண்டனை' என்னும் நாடகத்தையும், ஏ. எஸ். வேணு 'இருதுருவங்கள்' என்னும் நாடகத்தையும் இயற்றியுள்ளனர்.

பி. சி. கணேசன் 'சோமநாதபுரத்துச் சிலை', 'எழுத்தாளன் காதலி', 'திருவாளர் பிரபலம்' ஆகிய நாடகங்களைப் படைத்துள்ளார்.

முரசொலி சொர்ணம் 'விடை கொடு தாயே' என்னும் நாடகத்தையும், அருணமொழி 'மன்னிப்பு' என்னும் நாடகத்தையும் இயற்றியிருக்கின்றனர்.

தோப்பூர் திருவேங்கடம் 'அறுசுவை விருந்து' என்னும் தொகுப்பில் ஆறு ஓரங்க நாடகங்களைப் படைத்துள்ளார்.

முரசொலி அடியார் 'அண்ணா ஒரு காவியம்', 'இரண்டாவது பாரதம்', 'தங்கவங்கம்', 'தமிழ் எங்கள் உயிர்' 'தென்திசை தீபம்' முதலான பல நாடகங்களை எழுதியுள்ளார். இவற்றுள் சில மேடையில் பெருவெற்றி பெற்றிருக்கின்றன.

இங்கே குறிக்கப்பட்டவர்களே அன்றி வேறு பலரும் நாடகங்களை இயற்றித் திராவிட இயக்கக் கொள்கைகளைப் பரப்பியிருக்கின்றனர்.

திராவிட இயக்கத்தோடு சேர்ந்தும் விலகியும் நாடகங் களிற் பங்குகொண்டு பேரும் புகழும் பெற்ற கலைஞர்கள் பலர்.

தெரிந்தும் தெரியாமலும், அறிந்தும் அறியாமலும், விரும் பியும் விரும்பாமலும் திராவிட இயக்க நாடகங்களில் சிலர் பங்குகொண்டு நடித்துள்ளனர்.

இயக்கத்திற்கெனவே தம் உடல், பொருள், மூச்சு என அனைத்தையும் தந்த நடிகர்களும் உண்டு.

கலைவாணர் என். எஸ். கே.
நடிகவேள் எம். ஆர். இராதா.
நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி.
புரட்சி நடிகர் எம். ஜி. இராச்சந்திரன்.
நடிகர் திலகம் சிவாஜி கணேசன்.
இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்.
நடிகமணி டி. வி. நாராயணசாமி.
கே. ஆர். சீதாராமன்.
டி. என். கிருஷ்ணன்.
கலையரசி சந்திரகாந்தா.
ஜி. சகுந்தலா.
ஆர். மனோரமா.

முதலான பலர் திராவிட இயக்க நாடகங்களில் நடித்து ஆற்றியுள்ள சிறப்பான பணிகளை மறந்து விடுதற்கில்லை. சமுதாயத்தில் திராவிட இயக்கத்திற்கு எதிர்ப்புகள் இருந்த காலங்களில் இவர்கள் துணிச்சலோடு கழக முன்னணியி னரின் நாடகங்களை நடத்தியிருக்கின்றனர். மிக நீண்ட காலம் கலைப்பணி ஆற்றியவர்கள் பலர்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தம் நகைச்சுவை நடிப்பினூடே பல்வேறு சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளை மக்களுக்குச் சொல்லியிருக்கிறார். அவர் எழுதி நடித்த 'ஐம்பதும் அறுபதும்', 'கித்தனார்' முதலான நாடகங்கள் குறிப்பிடத்தக்கன.

நடிகவேள் எம். ஆர். இராதா தம் நடிப்பாலும் கருத்தாலும் துணிவாலும் எதிர்நீச்சல் போட்டவர், சமய எதிர்ப்பைத் தம் இராமாயண நாடகத்தின் மூலம் சந்தித்தவர். எதற்கும் அஞ்சாமல் தடைகளை எல்லாம் மீறி நாடகங்களை நடத்திக் காட்டிப் பிறருக்கு வழிகாட்டியாக விளங்கியவர். 'இரத்தக் கண்ணீர்' மூலம் சிறந்த நடிப்புக்கு இலக்கணம் வகுத்தவர் இவர்.

பேரறிஞர் அண்ணாவின் 'சந்திரமோகன்' நாடகத்தில் சிவாஜி வேடம் புனைந்து நடித்து அதனால் பெரியாரால் 'சிவாஜி' என்னும் பட்டம் பெற்றுச் சிறந்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன். ஆனால், மிகக் குறுகிய காலத்தில் இவர் திராவிட இயக்கத்தை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்.

அண்ணாவின் அன்பினைப் பெற்றுத் தமக்கென்று 'வேலைக்காரி', 'ஓர் இரவு' ஆகிய நாடகங்களைப் படைத்துத் தரும்படிச் செய்து வெற்றி கண்டவர் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி. அண்ணாவின் நாடகங்கள் திரைப் படங்கள் ஆனபோது அவற்றிலும் இவர் நடித்துப் பெருமை பெற்றார்.

அண்ணாவின் நாடகத்தில் சந்திர மோகனாகவும், கலைஞரின் மணிமகுடத்தில் கதாநாயகனாகவும் நடித்துப் புகழ் பெற்றவர் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன். 'அரக்கு மாளிகை' நாடகத்தில் அக்னிபுத்திரனாக நடித்

திருக்கிறார். ப. கண்ணன் முதலான பல நாடகாசிரியர்களின் நாடகங்களை மேடையில் அரங்கேற்றியவர் எஸ். எஸ். ஆர். திராவிட இயக்கக் கொள்கைப் பிடிப்போடு அன்றும் இன்றும் இருப்பவர் ஆதலால் இவர் 'இலட்சிய நடிகர்' என்று பெயர் பெற்றவர். நடிகமணி டி. வி. நாராயணசாமி இவரோடு சேர்ந்து ஒரே குழு நடிகராக இருந்து நடித்தவர் ஆவார்.

கலைஞரின் 'காகிதப்பூ' நாடகத்தில் நடித்தவர் நகைச்சுவை நடிகை மனோரமா. வெள்ளிக்கிழமை, சிலப்பதிகாரம் ஆகியவற்றை மேடையேற்றியவர் ஜி. சகுந்தலா. திராவிட இயக்க நாடகங்களில் பெண்பாத்திரங்களைஏற்றுப் பலமுறை நடித்தவர் சந்திரகாந்தா.

இங்ஙனம் தமிழ் நாடக வளர்ச்சியில் திராவிட இயக்கத்தினர் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர்.

1. 1938 முதல் 1967இல் ஆட்சியினைப் பிடிக்கும்வரை திராவிட இயக்கத்தினர் நாடக மேடையில் ஒரு சிறப்பான இடத்தினைப் பெற்றிருந்தனர். எண்ணற்ற நாடகங்களை எழுதி வெளியிட்டனர்.

2. சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளையும், நாட்டுப் பிரிவினைக் கருத்துக்களையும் தம் நாடகங்களின் வழி தெரிவித்திருக்கின்றனர்.

3. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் திராவிட நாட்டுப் பிரிவினையை நாடகங்களில் எழுதாமல் கைவிட்டனர்.

4. பாரதிதாசன், அண்ணா, கலைஞர் உள்ளிட்ட பல நாடகாசிரியர்கள் ஆரிய–பார்ப்பன எதிர்ப்பைத் தம் நாடகங்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

5. பாரதிதாசன் தொடங்கி அனைவரும் தமிழ் மீது துணியாப் பற்றுடையவர்களாக இருந்தனர், அதனால் திராவிட இயக்கத்தவர் அழகிய தமிழில் தம் நாடகங்களை இயற்றினர்.

6. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் எடுத்துரைத்த பகுத்தறிவுக் கொள்கைகளை இவர்கள் தங்கள் நாடகங்களில் பயன்படுத்திக் கொண்டு பரப்பவும் செய்தனர்.

7. தெலுங்கு, சமஸ்கிருதம், இந்தி முதலான பிறமொழிகளை நீக்கித் தமிழே தனிச் சிறப்பான இடம் பெறவேண்டும் என்னும் கொள்கை உடையவர்களாக இந்த நாடகாசிரியர்கள் இருந்தனர். ப. கண்ணனின் 'புரட்சிப் பாடகன்' தமிழிசை வளரப் பாடுபடும் ஒரு கலைஞனாக வருகிறான்.

8. திராவிட இயக்க எழுத்தாளர்கள் உரையாடலில் புதுமை செய்தனர். கனல் தெறிக்கும் வசனங்கள் மிக இயல்பாக இவர்களது நாடகங்களில் இடம் பெற்றன. எதுகையும் மோனையும் இயைபும் இவர்களது உரையாடல்களில் சிறப்புப் பெற்றன. சிலர் கவிதை நடை கலந்துவர நாடகங்களைத் தீட்டியிருக்கின்றனர். உரைநடையைப் பொறுத்தவரை தமக்கென ஒரு பாணியினைத் திராவிட இயக்க நாடகாசிரியர்கள் பெற்றிருந்தனர் என்று சொல்லலாம்.

9. அரசியல் பிரசார நாடகங்களை இயற்றுவதில் திராவிட இயக்கத்தினர் தேர்ந்தவர்களாக இருந்தனர். காகிதப்பூ, உதயசூரியன், திருவாளர் தேசியம் பிள்ளை, புனித ராஜ்யம் முதலான பல நாடகங்கள் கலைஞரால் தீட்டப்பட்டன. வேறு எந்த இயக்கத்தவரும் சாதிக்க இயலாத துறை இது.

10. இதிகாசங்கள், புராணங்கள், சாதிகள், சமயங்கள், சடங்குகள், மூடநம்பிக்கைகள், சோதிடப் புளுகுகள் முதலானவற்றை இவர்கள் நாடகங்கள் வாயிலாகக் கடுமையாக எதிர்த்தனர். மக்களை அறிவு நெறியில் செலுத்தினர்.

11. திராவிட இயக்கத்தினர் தம் அரசியல் மாநாடுகளின் வழி நாடகக் கலைவளர்ச்சியை மேற்கொண்டனர்.

12. திராவிட இயக்கத்தினரால் கலைஞர்கள் முன்னிருந்ததை விடப் பெருமதிப்பும் மரியாதையும் சமுதாயத்தில் பெற்றனர்.

13. திராவிட இயக்க நாடகங்களில் நடித்தவர்களும், நாடகங்களைப் படைத்தவர்களும் சட்ட மன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆயினர். இந்தப் பதவிகளே அன்றி

வேறு பதவிகளையும் பெற்றனர். சிலர் வாரியத் தலைவர்கள் ஆயினர். கட்சிப் பொறுப்புகளையும் ஏற்றனர்.

14. நாடகம்/திரைப் படம் ஆகியவற்றின் மூலமாக ஆட்சியைப் பிடிக்க முடியும் என்பதை உலகிற்கு இவர்கள் அறிவித்தனர். பிற மாநிலத்தவர்களுக்கு இது வழிகாட்டுவதாகவும் இருந்தது.

15. தமிழகத்தில் 1967 முதல் – காங்கிரசல்லாத – திராவிடர் இயக்க ஆட்சியில் முதல்வராக வந்து கடந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக ஆள்பவர்கள் நாடகத்தோடு தொடர்புடையவர்களாகவே விளங்குவது தமிழ் நாடக வளர்ச்சியில் திராவிட இயக்கத்தாரின் பங்கினைத் தெளிவாகக் காட்டுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் விடுதலை இயக்கமும், இடைப் பகுதியில் திராவிட இயக்கமும் தமிழ் நாடக மேடையில் பெருத்த ஈடுபாடு காட்டியதனால்தான் தமிழ் நாடகம் நன்கு வளர்ந்தது, அதன்வழி, திரைக் கலையும் வளர்ந்தது.

புராண மாந்தரையும், இதிகாச மாந்தரையும் தெய்வீக நோக்கில் கண்ட நிலையை மாற்றி, அவர்களையும் சமுதாய நோக்கில் பல்வேறு கோணங்களில் அணுகும் நிலையை உருவாக்கினர் திராவிட இயக்கத்தார்.

திராவிட இயக்கத்தினர் சட்ட மன்றப் பணியில் – ஆட்சி நிருவாகப் பணியில் ஈடுபட்டபின் நாடகாசிரியர்கள், எழுத்தாளர்கள், நடிகர்கள் ஆகியோரின் நோக்கமும் மாறின. நாடகமேடையை அனைவரும் கைவிட்டனர். தேசிய விடுதலை இயக்கத்தினரும். தமிழ்த் தேசியத் திராவிட இயக்கத்தினரும் தமிழ் நாடக மேடையை மறந்தனர்.

தமிழ் நாடக வளர்ச்சி வரலாற்றில் இதுபோன்ற செயலற்ற நிலை இருப்பது இயல்பான ஒன்றாக அமைந்துவிட்டது. இன்று ஒரு தேக்க நிலை !

இனி,
தமிழ் நாடக வளர்ச்சி வரலாற்றில் புதியதோர்
விழிப்புணர்ச்சி விரைவில் மலரும் என்று
கருதுவோமாக !

சிறப்புப் பெயர் அகர நிரல்

(எண்கள் : பக்கங்கள்)

அஞ்சனா 187
அடியார், முரசொலி 187
அண்ணா, பேரறிஞர் 106, 110,121-137,158,189
அத்தான் 178, 179
அபாய விளக்கு 186
அப்பாசு நாடகம் 39
அய்யாமுத்து 95
அரக்கு மாளிகை 181-184
அரங்கண்ணல் 186
அரிச்சந்திரன் 67
அருண் மொழி 187
அலிபாதுஷா நாடகம் 39
அனார்கலி 139
ஆசைத்தம்பி 185
ஆரியசபா 47
ஆரிய பத்தினி மாரிஷை 119
ஆறாதார விலாசம் 38
இரணியன் 112
இரணியன் (அ) இணையற்ற வீரன் 112, 157, 184
இரத்தக் கண்ணீர் (கலைஞர்) 138, 141
இரத்தக்கண்ணீர் (தங்கராசு) 185
இரத்தத் தடாகம் 169-170
இராசமாணிக்கம் பிள்ளை, நவாப் 112, 113
இராசேந்தரன், எஸ். எஸ். 137, 139, 181, 189
இராதா, எம். ஆர். 139, 185, 189
இராதாமணாளன், கே. ஜி. 181-184, 189
இராமசாமி, கே. ஆர். 125, 137, 189
இராமசாமி ராஜு, ப. வ. 30
இராமச்சந்திரன் எம். ஜி. 146, 187
இராமர் இளங்கோ, ச. சு. 119
இராவணன் 156, 157
இன்பசாகரன் 95
உதயசூரியன் 138, 144
ஊஞ்சல் மனம் 186
ஊதாரிப்பிள்ளை விலாசம் 28-30
எதையும் தாங்கும் இதயம் 136
எரிமலை 156, 159
ஒட்ட நாடகம் 39

ஒரே முத்தம் 138, 143
ஓர் இரவு 121, 130–133
கங்கைக்கு அப்பால்
156, 160
கட்டபொம்மன் 39,41,95
கட்டபொம்மு கூத்து 43
கணவனல்ல 169
கணேசன், சிவாஜி 127,189
கணேசன், பி. சி. 187
கண்ணதாசன் 95, 186
கண்ணன், ப. 148–155
கதரின் வெற்றி 65,67,
72,73
கதர் பக்தி 65–73
கமலசேகரன் 81
கமலேசன் 82
கம்சன் 156, 161
கருணாநிதி, கலைஞர் மு.
139–147
கலைவாணர் 88,188,189
கல்கி 136, 137
கல் சுமந்த கசடர் 136
கவர்னர்ஸ் கப் 67, 81
கவியின் கனவு 90–94
கழைக் கூத்தியன் காதல்
119
கள்வர் தலைவன் 39
கன்னியின் சபதம் 149
காகிதப்பூ 138, 144
காங்கிரஸ் 3, 52
காசி விசுவநாத முதலியார்
9–28
காணிக்கை 186
காதல் ஜோதி 121
காந்தியடிகள்
வில்லுப்பாட்டு 87
கார்காத்த நாடகம் 39
காவேரிக் கரையில் 156,161
காளிமுத்து, கா. 186
கிருட்டினசாமி, தெ. 64-83
கும்பகர்ணன் 156, 161
குருசாமி, குத்தூசி 113
கூலிக்கு மாரடிக்கும்
கூத்தாடிச்சி நடிப்பு 10
கைதி 156, 159
கோபாலாசார்யன் 49
கோவலன் 67
கௌரிவாணன் 169
சங்கத்தமிழ் 139, 141
சங்கரதாசு சுவாமிகள்
67, 112
சச்சிதானந்தம் பிள்ளை 67
சண்முகம், தி.க. 68,84,87
சண்முகம், ஆர். கே.
108, 109
சந்தனமழை 17, 90
சந்திரமோகன்
121, 134–136, 163
சந்திரோதயம் 121
சம்பந்த முதலியார் 2,25,83

சமீன் மாளிகை 186
சாக்ரடீஸ் 139
சாந்தா (அ) பழனியப்பன் 138
சாமண்ணா 16
சாமிநாத சர்மா 84
சாம்பாஜி 156, 160, 163
சாய்ந்த கோபுரம் 169
சாவித்திரி 82
சிலம்பு 156
சிலப்பதிகாரம் 139, 141
சிவகெங்கைச்சீமை 95, 186
சிவசண்முகம் பிள்ளை, ஏகை 38
சிவஞானம், ம. பொ. 67
சிற்றரசு, சி. பி. 165–170
சுகுண விலாச சபை 39
சுதந்தர தீபம் 95
சுத்தானந்த பாரதி 95
சுந்தரம், எஸ். டி. 90, 95
சூறாவளி 156, 158, 164
செழியன், இரா. 186
சேர தாண்டவம் 119
சேரன் செங்குட்டுவன் 139
சேரனாட்டதிபதி 169
சொர்ணம் 187
சோகி நாடகம் 39
சௌமியன் 119
ஞான சௌந்தரி 39
டம்பாச்சாரி விலாசம் 9–16, 24–28, 29
தங்கராசு, திருவாரூர் 185
தங்கவிலங்கு 164
தங்கவேலன், மா. 187
தடை 72, 89, 112, 189
தண்ணீர் விட்டோ வளர்த்தோம் 95
தந்தை பெரியார் 104, 113, 119, 156
தமிழ்வாணன் 95
தமிழ்வாழத் தலைகொடுத்தான் 155
தாசில்தார் நாடகம் 9, 17-20
திராவிட இயக்கம் 101-108
திராவிட மாணவர் விடுதி 102
திராவிடர் கழகம் 105
திராவிட முன்னேற்றக் கழகம் 106
திருவாளர் தேசியம் பிள்ளை 139, 144
திருவேங்கடம், தோப்பூர் 187
திரை 174
தில்லை வில்லாளன் 171-177
தூக்குமேடை 139
தெருக்கூத்து 41

தென்னரசு, எஸ். எஸ். 178–180
தென்னிந்திய நல உரிமைச் சங்கம் 101
தேசபக்தி 81, 84, 87
தேசியக்கொடி 67, 81
தேவாலயம் 180
தையார் சுல்தான் நாடகம் 39
நச்சுக்கோப்பை 139
நந்திவர்மன் 149
நல்லதங்காள் 67
நல்ல தீர்ப்பு 119
நாராயணசாமி, டி. வி. 190
நாளை நமதே 186
நானே அறிவாளி 139, 144, 146
நீதிக்கட்சி 102, 103, 104
நீதிதேவன் மயக்கம் 121, 136, 147
நீலமணி 184
பகைமை வென்றான் 151
பகைவனின் காதலி 156, 161
பச்சையப்ப முதலியார் 21, 22, 68
பஞ்சாப் கேசரி 81
படித்த பெண்கள் 119
பதிபக்தி 67, 74–80
பம்பாய் மெயில் 67, 81
பரதாயணம் 139, 147
பரப்பிரம்மம் 138, 144, 145
பர்த்ருஹரி 67
பவளநாட்டு எல்லை 186
பாணபுரத்து வீரன் 84
பாண்டிய மகுடம் 151
பாண்டுரங்கன், நா. 187
பாரதிதாசன் 112–120
பாரதியார் 87
பாலசஞ்சீவி 95
பாலசுப்பிரமணியம், கே.எம். 113
பாலமனோகர நாடக சபை 67
பாலாமணி 25
பாவலர், டி. கே. 65, 66, 74
பாவலர் பாய்ஸ் கம்பெனி 67
பாவையின் பயணம் 136
பிசிராந்தையார் 119
பிரகலாதன் 82
பிரதாப சந்திர விலாசம் 30–36
பிரபோத சந்திரோதயம் 38
பிரம்ம சமாஜ நாடகம் 9, 21–23
புரட்சிப் பாடகன் 152–155, 191

புனித ராஜ்யம் 139, 144, 146
பூம்புகார் 141
பூலித்தேவன் 95
பெருமாள், தே. ப. 95
பேசும் ஓவியம் 171–174
பொன்னம்பலனார், அ. 111
போர்வாள் 169
போராட்டம் 186
மகான் பெற்ற மகன் 141
மணிமகுடம் 139
மதி 168
மதியழகன் 186
மரியதாஸ் 28
மருதுபாண்டியர் 39
மனமாற்றம் 186
மன்னன் திருமலை 186
மின்னொளி 148
மாறன், முரசொலி 186
மானமறவன் 148
மீனாட்சிசுந்தரனார், தெ.பொ. 66
முகமது இபுராகிம் 39
முதல் முழக்கம் 95
முதல் விசாரணை 171
மேகலை 156
மேடைப் பாடல்கள் 59–63
மேடைப் பாடகர்கள் 64
ரகுநாதன் 16
ரஸ்புடீன் 186
ராஜதண்டனை 186
ராஜா தேசிங்கு 39, 43
ரா. வே. 95
வண்ணக்களஞ்சியப் புலவர் 39
வள்ளி திருமணம் 67
வாழ்க்கை வாழ்வதற்கே 185
விக்டோரியா 55, 56
விடுதலை இயக்கம் 1–8
விடைகொடு தாயே 187
விஜய விலோசனை 82–83
விஷக்கோப்பை 169
வீரசுதந்தரம் 94
வீரத்தாய் 112
வீரவாலி 152
வீராசாமி, தா. வே. 119
வேணு, ஏ. எஸ். 187
வேதசாட்சியாகிய தேவசகாயம் பிள்ளை வாசகப்பா 39
வேலன், ஏ. கே. 156–164
வேலைக்காரி 125–130
ஜீவா 80

பயன்பட்ட நூல்கள்

1. ப. சம்பந்த முதலியார், 'நாடகத் தமிழ்'.
2. ப. சம்பந்த முதலியார், 'நாடக மேடை நினைவுகள்'.
3. ப. சம்பந்த முதலியார், 'யான் கண்ட புலவர்கள்'.
4. ப. சம்பந்த முதலியார், 'யான் கண்ட நாடகக் கலைஞர்கள்'.
5. விபுலானந்த அடிகள், 'மதங்க சூளாமணி'.
6. கா. திரவியம், 'தேசியம் வளர்த்த தமிழ்'.
7. இராசம் மங்கள முருகேசன், 'தமிழக வரலாறும் பண்பாடும்'.
8. ம. பொ. சிவஞானம், 'தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர் வாழ்க்கை வரலாறு'.
9. ரகுநாதன், 'சமுதாய இலக்கியம்'.
10. கு. சா. கிருஷ்ணமூர்த்தி, 'தமிழ் நாடக வரலாறு'.
11. அவ்வை தி.க. சண்முகம், 'எனது நாடக வாழ்க்கை'.
12. ஈரோடு தமிழ் மாகாண கலை அபிவிருத்தி மாநாட்டு மலர்.
13. தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றாண்டு விழா மலர்.
14. ச.சு. இராமர் இளங்கோ, 'பாரதிதான் நாடகங்கள்'.
15. மு. தங்கராசு, 'தமிழில் மேடை நாடகம்'.
16. இரா. குமரவேலன், 'தமிழ் நாடக ஆய்வு'.

மேலும் பல நாடக நூல்கள்.

இரா. குமரவேலன்

இவர்,

ஆன்ற தமிழ்ப்புலமை —
ஆராய்ச்சி நுண்ணறிவு
கொண்டவர் !

தமிழ் நாடக ஆய்வின்
முன்னோடி !

பொலிவு பூக்கும்
'பூங்குன்றன்'
என்ற பெயரில்
எழுபதுகளில் கவிவானில்
ஒளி வீசியவர் !

பச்சையப்பன்
பாட்டுப் பறவைகளில்
ஒருவர் !
உற்று நோக்கியும்
ஒப்பு நோக்கியும்
இலக்கியத்தை
கற்பதிலும்
கற்பிப்பதிலும்
திறனுடையவர் !

தமிழ் இலக்கிய
ஆராய்ச்சி உலகில்
முத்திரை பதித்தவர் !

நாடக ஆய்வாளரான
இவருக்குத்
தமிழக அரசு

'கலைமாமணி' பட்டம் தந்து
பெருமை தேடிக்கொண்டது !

அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை-600014.